# இஸ்லாம்

## அல்குர்ஆன், ஸுன்னாவின் ஒளியில் இஸ்லாம் ஓர் அறிமுகம்.

இஸ்லாத்தின் அடிப்படைகள், போதனைகள், சிறப்பம்சங்களை அதன் பிரதான மூலாதாரங்களாகிய அல்குர்ஆன் ஸுன்னாவிலிருந்து தெளிவுபடுத்தக்கூடிய முக்கியமான ஒரு நூலாக இது உள்ளது. இந்நூல் பல மொழிகளைப் பேசும் பலதரப்பட்ட கால, சூழல்களில் வாழும் முஸ்லிம், முஸ்லிமல்லாதோர் அனைவரையும் இலக்காகக் கொண்டு தொகுக்கப்பட்டதாகும்.

(இது அல்குர்ஆன், ஸுன்னாவின் ஆதாரங்களை உள்ளடக்கிய ஒரு பிரதியாகும்).

## 1. இஸ்லாம் தான் அனைத்து மக்களுக்குமான அல்லாஹ்வின் தூதாகும், இது அவனது தூதுத்துவங்களின் முத்திரையாக, நிரந்தரமான இறைத்தூதாக உள்ளது :

இஸ்லாம் தான் அனைத்து மக்களுக்குமான அல்லாஹ்வின் தூதாகும். அல்லாஹ் கூறுகின்றான் : "இன்னும், (நபியே!) நாம் உம்மை மனித குலம் முழுமைக்கும் நன்மாராயங் கூறுபவராகவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவுமேயன்றி (வேறெவ்வாறும்) அனுப்பவில்லை. ஆனால் மனிதர்களில் பெரும்பாலோர் (இதை) அறியமாட்டார்கள்". (ஸபஃ : 28) மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "மனிதர்களே! நிச்சயமாக நான் உங்கள் அனைவருக்குமான அல்லாஹ்வின் தூதராவேன் என்று (நபியே) நீர் கூறுவீராக!". (அஃராப் : 158) மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "மனிதர்களே! உங்கள் இறைவனிடமிருந்து சத்தியத்துடன் இத்தூதர் உங்களிடம் வந்துள்ளார். ஆகவே, நீங்கள் அவரை நம்பிக்கைகொள்ளுங்கள். (அது) உங்களுக்கே மிக்க நன்று. நீங்கள் (அவரை) நிராகரித்துவிட்டால்,வானங்களிலும், பூமியிலுமுள்ள அனைத்தும் நிச்சயமாக அல்லாஹ்வுக்கே உரியன. அல்லாஹ் (அனைவரையும்) நன்கறிந்தவனாக, ஞானமுடையவனாக இருக்கிறான்". (நிஸாஃ : 170)

இஸ்லாம் அல்லாஹ்வின் நிரந்தரமான இறைத்தூதாகவும், அவனது தூதுத்துவங்களின் முத்திரையாகவும் உள்ளது. அல்லாஹ் கூறுகின்றான் : "உங்களிலுள்ள ஆண்களில் எவருக்கும் முஹம்மது (நபி அவர்கள்) தந்தையாக இருக்கவில்லை.எனினும், அவர் அல்லாஹ்வுடைய தூதராகவும், நபிமார்களுக்கு (இறுதி) முத்திரையாகவும் இருக்கிறார்.அல்லாஹ் அனைத்தையும் நன்கறிந்தவனாக இருக்கிறான்". (அல்அஹ்ஸாப் : 40)

## 2. இஸ்லாம் குறிப்பிட்ட ஒரு இனத்திற்கோ, சமூகத்திற்கோ உரிய ஒரு மார்க்கமல்ல. மாறாக அது அனைத்து மக்களுக்குமான அல்லாஹ்வின் மார்க்கமாகும் :

இஸ்லாம் குறிப்பிட்ட ஒரு இனத்திற்கோ, சமூகத்திற்கோ உரிய ஒரு மார்க்கமல்ல. மாறாக அது அனைத்து மக்களுக்குமான அல்லாஹ்வின் மார்க்கமாகும். அல்குர்ஆனின் முதல் ஏவலே இது பற்றிய பின்வரும் வசனம்தான் : "மனிதர்களே! உங்களையும், உங்களுக்கு முன்னிருந்தவர்களையும் படைத்த உங்கள் இறைவனையே வணங்குங்கள். (அதனால்) நீங்கள் இறை அச்சமுடையவர்களாக ஆகலாம்". (அல்பகரா : 21) மேலும் அல்லாஹ் கூறுகின்றான்: "மனிதர்களே! உங்களை ஒரே ஆத்மாவிலிருந்து படைத்த உங்கள் இரட்சகனை அஞ்சிக்கொள்ளுங்கள். அவன் அதிலிருந்து அதன் துணைவியைப் படைத்து, அவையிரண்டிலிருந்தும் அதிகமான ஆண்களையும், பெண்களையும் பரவச் செய்தான்". (அன்நிஸாஃ : 1) இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் கூறுகிறார்கள் : நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்கா வெற்றி

தினத்தில் பின்வருமாறு உரை நிகழ்த்தினார்கள் : மக்களே நிச்சயமாக அல்லாஹ் உங்களிடமிருந்து அறியாமைக் கால குலப்பெருமை, குடும்பப் பெருமை அனைத்தையும் நீக்கிவிட்டான். எனவே மக்கள் இருவகையினர் தான். ஒன்றோ நல்லவன், இறையச்சமுள்ளவன், அல்லாஹ்விடம் கண்ணியமானவன். அல்லது கெட்டவன், துர்ப்பாக்கியமுள்ளவன், அல்லாஹ்விடம் இழிவானவன். மனிதர்கள் அனைவரும் ஆதமுடைய பிள்ளைகளாவர். ஆதமை அல்லாஹ் மண்ணினால் படைத்தான். அல்லாஹ் கூறுகின்றான் : “மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஓர் பெண்ணிலிருந்தே படைத்தோம். நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு, பின்னர் உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம். உங்களில் இறையச்சமுள்ளவர்கள் தான் அல்லாஹ்விடத்தில் மிக்க கண்ணியமானவர்கள். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்”. (அல்ஹுஜுராத் : 13). ஆதாரம் : திர்மிதீ (3270) அல்லாஹ், மற்றும் அவனது தூதரின் ஏவல்களில் குறிப்பிட்ட ஒரு கூட்டத்தின் வம்சத்தையோ, கோத்திரத்தையோ, இனத்தையோ கருத்திற்க் கொண்டு பிரத்தியேகமான சட்டங்கள் இருப்பதை ஒரு போதும் நீர் காணமாட்டீர்.

# 3. முன்னைய சமூகங்களுக்கு அனுப்பப்பட்ட நபிமார்கள், இறைத்தூதர்களுடைய தூதுத்துவங்களைப் பரிபூரணப் படுத்த வந்த இறைத்தூதே இஸ்லாமாகும்.

முன்னைய சமூகங்களுக்கு அனுப்பப்பட்ட நபிமார்கள், இறைத்தூதர்களுடைய தூதுத்துவங்களைப் பரிபூரணப் படுத்த வந்த இறைத்தூதே இஸ்லாமாகும். அல்லாஹ் கூறுகின்றான் : "(நபியே!) நூஹுக்கும், அவருக்குப் பின்னர் வந்த நபிமார்களுக்கும் நாம் வஹி அறிவித்தது போன்றே உமக்கும் வஹி அறிவித்தோம். மேலும், இப்றாஹீம், இஸ்மாஈல், இஸ்ஹாக், யஃகூப் (அவர்களுடைய) சந்ததிகள், மற்றும் ஈஸா, ஐயூப், யூனுஸ், ஹாரூன், ஸுலைமான் ஆகியவர்களுக்கும் (இவ்வாறே) நாம் வஹி அறிவித்தோம். தாவூதுக்கு ஸபூரையும் வழங்கினோம்". (அன்நிஸாஃ : 163) முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அல்லாஹ் வஹியாக அறிவித்த இதே மார்க்கம்தான் இதற்கு முன்னர் அனுப்பப்பட்ட நபிமார்களுக்கும் அல்லாஹ் சட்டமாக்கி உபதேசித்த மார்க்கமாகும். அல்லாஹ் கூறுகின்றான் : "நூஹுக்கு எதனை அவன் உபதேசித்தானோ, அதனையே உங்களுக்கும் அவன் மார்க்கமாக்கியிருக்கின்றான். ஆகவே (நபியே) நாம் உமக்கு வஹீ மூலம் அறிவிப்பதும், இப்றாஹீமுக்கும், மூஸாவுக்கும் , ஈஸாவுக்கும் நாம் உபதேசித்ததும் என்னவென்றால்; "நீங்கள் (அனைவரும்) சன்மார்க்கத்தை நிலை நிறுத்துங்கள், நீங்கள் அதில் பிரிந்து விடாதீர்கள்' என்பதே - இணைவைப்போரை நீங்கள் எதன் பக்கம் அழைக்கின்றீர்களோ, அது அவர்களுக்குப் பெரும் சுமையாகத் தெரிகிறது - தான் நாடியவர்களை அல்லாஹ் தன் பால் தேர்ந்தெடுத்துக் கொள்கிறான் - (அவனை) முன்னோக்குபவரை அவன் தன்பால் நேர்வழி காட்டுகிறான்". (அஷ்ஷூரா : 13) முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அல்லாஹ் வஹியாக அறிவித்த இச்செய்தி இதற்கு முன்னர் அருளப்பப்பட்ட, திரிபுபடுத்தப்படுவதற்கு முன்னரான தௌராத், இன்ஜீல் போன்ற வேதங்களை உண்மைப்படுத்தக் கூடியதாக இருக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான் : "(நபியே!) நாம் உமக்கு வஹி மூலம் அறிவித்த இவ்வேதமே உண்மையானது. அது தனக்கு முன்னுள்ளவற்றை உண்மைப்படுத்துகின்றது. நிச்சயமாக அல்லாஹ், தன் அடியார்களை நன்கறிந்தவன், உற்று நோக்குபவன் ஆவான்". (பாதிர் : 31)

# 4. நபிமார்களின் அடிப்படை மார்க்கம் ஒன்றே, கிளைச் சட்டங்கள் தான் வேறுபடுகின்றன;

நபிமார்களின் அடிப்படை மார்க்கம் ஒன்றே, கிளைச் சட்டங்கள்தான் வேறுபடுகின்றன. அல்லாஹ் கூறுகின்றான் : "(நபியே! முற்றிலும்) சத்தியத்தைக் கொண்டு இவ்வேதத்தை உமக்கு நாம் இறக்கினோம். இது தனக்கு முன்னுள்ள (மற்ற) வேதங்களையும் உண்மையாக்கி, அவற்றை மிகைக்கக் கூடியதாகவும் இருக்கிறது. ஆகவே, (நபியே!) நீர்

அல்லாஹ் (உமக்கு) இறக்கிய இதைக்கொண்டே அவர்களுக்கிடையில் தீர்ப்பளிப்பீராக. உமக்கு வந்த உண்மையைப் புறக்கணித்துவிட்டு அவர்களுடைய மண விருப்பங்களை நீர் பின்பற்றாதீர். உங்களில் ஒவ்வொரு (சமூகத்த)வருக்கும் ஒவ்வொரு சட்டத்தையும், வழிமுறையையும் நாமே ஏற்படுத்தியிருக்கின்றோம். அல்லாஹ் நாடியிருந்தால் உங்களை ஒரே சமூகமாக ஆக்கியிருப்பான். எனினும், உங்களுக்கு அவன் கொடுத்தவற்றில் உங்களைச் சோதிப்பதற்காகவே (இவ்வாறு செய்திருக்கிறான்). ஆகவே, நன்மைகளுக்கு விரைந்து செல்லுங்கள். அல்லாஹ்விடமே உங்கள் அனைவரினதும் மீளுதல் உள்ளது. பின்னர் நீங்கள் எதில் முரண்பட்டுக் கொண்டிருந்தீர்களோ அதைப் பற்றி அவன் உங்களுக்கு அறிவிப்பான்". (அல்மாஇதா : 48) நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : "மர்யமின் புதல்வர் ஈஸா (அலை) அவர்களை நேசிக்க நான் தான் இம்மையிலும் மறுமையிலும் மிகத்தகுதியானவன். நபிமார்கள் அனைவரும் தந்தைவழிச் சகோதரர்கள் போன்றாவர், அவர்களுடைய தாய்மார்கள் வேறுபடினும் அவர்களுடைய மார்க்கம் ஒன்றுதான்". ஆதாரம் : புஹாரி (3443)

# 5. நூஹ், இப்ராஹீம், மூஸா, ஸுலைமான், தாவூத், ஈஸா அலைஹிமுஸ்ஸலாம் போன்ற அனைத்து நபிமார்களும் அழைப்பு விடுத்த : படைப்பாளன், வாழ்வாதாரமளிப்பவன், உயிர்கொடுப்பவன், மரணிக்கச் செய்பவன், மற்றும் மன்னருக்கெல்லாம் மன்னராகிய அந்த அல்லாஹ்தான் உண்மையான இரட்சகன் என நம்பிக்கை கொள்வதின் பக்கமே இஸ்லாமும் அழைக்கின்றது. அவன்தான் அனைத்து விடயங்களையும் நிர்வகிக்கக் கூடிய கருணையாளன், இரக்கமுள்ளவன்

நூஹ், இப்ராஹீம்,மூஸா, ஸுலைமான், தாவூத், ஈஸா அலைஹிமுஸ்ஸலாம் போன்ற அனைத்து நபிமார்களும் அழைப்புவிடுத்தது போல், படைப்பாளன், வாழ்வாதாரமளிப்பவன், உயிர்கொடுப்பவன், மரணிக்கச்செய்பவன், மற்றும் மன்னருக்கெல்லாம் மன்னராகிய அந்த அல்லாஹ்தான் உண்மையான இரட்சகன் என நம்பிக்கை கொள்வதின் பக்கமே இஸ்லாமும் அழைக்கின்றது. அவன்தான் அனைத்து விடயங்களையும் நிர்வகிக்கக் கூடிய கருணையாளன், இரக்கமுள்ளவன். அல்லாஹ் கூறுகின்றான்: "மனிதர்களே! உங்கள் மீதுள்ள அல்லாஹ்வுடைய அருட்கொடையை நினைத்துப் பாருங்கள். வானத்திலிருந்தும் பூமியிலிருந்தும்உங்களுக்கு உணவளிக்கின்ற அல்லாஹ்வையன்றி வேறொரு படைப்பவன் இருக்கிறானா? அவனைத் தவிர உண்மையான வணக்கத்திற்குரிய வேறொரு இறைவன் இல்லவே இல்லை. ஆகவே, (அவனை விட்டு) நீங்கள் எவ்வாறு திசைதிருப்பப்படுகிறீர்கள்?". (பாதிர் : 03) மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "(நபியே!) நீர் (அவர்களை நோக்கி) “வானத்திலிருந்தும் பூமியில் இருந்தும் உங்களுக்கு உணவளிப்பவன் யார்? (உங்கள்) செவிக்கும் பார்வைகளுக்கும் உரிமையாளன் யார்? இறந்தவற்றிலிருந்து உயிருள்ளவற்றையும், உயிருள்ள வற்றிலிருந்து இறந்தவற்றையும் வெளிப்படுத்துபவன் யார்? (உலகின்) எல்லாக் காரியங்களையும் திட்டமிட்டு நிர்வகித்து நிகழ்த்துபவன் யார்?" என்று கேட்பீராக! அதற்கவர்கள் “அல்லாஹ்தான்" என்று கூறுவார்கள். அவ்வாறாயின் (அவனுக்கு) நீங்கள் பயப்பட வேண்டாமா?" என்று கேட்பீராக". (யூனுஸ் : 31) மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : முதன் முதலில் படைப்பைத் துவங்குபவனும், பின்னர் அதனை மீண்டும் (மருமையில்) உண்டாக்கி வைப்பவனும் யார்? வானத்திலிருந்தும்,

பூமியிலிருந்தும் உங்களுக்கு ஆகாரம் அளிப்பவன் யார்? அல்லாஹ்வுடன் (வேறு) இறைவன் இருக்கின்றானா? (நபியே!) நீர் கூறுவீராக "நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், உங்களுடைய ஆதாரங்களைக் கொண்டு வாருங்கள்." (அன்நம்லு : 64)
அனைத்து நபிமார்கள், இறைத்தூதர்களும் அல்லாஹ்வை மாத்திரம் வணங்குவதன் பால் அழைப்புவிடுக்கவே அனுப்பப்பட்டார்கள். அல்லாஹ் கூறுகின்றான் : "மெய்யாகவே நாம் ஒவ்வொரு சமூகத்தாரிடத்திலும், "அல்லாஹ்வையே நீங்கள் வணங்குங்கள்; ஷைத்தான்களை விட்டும் நீங்கள் விலகிச் செல்லுங்கள்" என்று (போதிக்குமாறு) நம் தூதர்களை அனுப்பி வைத்தோம்; எனவே அ(ந்த சமூகத்த)வர்களில் அல்லாஹ் நேர்வழி காட்டியோரும் இருக்கிறார்கள்; வழிகேடு விதிக்கப்பெற்றோரும் அவர்களில் இருக்கிறார்கள்; ஆகவே நீங்கள் பூமியில் சுற்றுப்பயணம் செய்து, பொய்யர்களின் முடிவு என்ன ஆயிற்று என்பதைக் கவனியுங்கள். (அன்நஹ்லு : 36) மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "(நபியே!) உமக்கு முன்னர் நாம் அனுப்பிய ஒவ்வொரு தூதரிடமும்; "நிச்சயமாக (வணக்கத்திற்குரிய) நாயன் என்னைத் தவிர வேறு எவருமில்லை எனவே, என்னையே நீங்கள் வணங்குங்கள்" என்று நாம் வஹீ அறிவிக்காமலில்லை. (அல்அன்பியா ஃ : 25) நபி நூஹ் அலைஹிஸ்ஸலாம் கூறியதாக அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் : "என் மக்களே! நீங்கள் அல்லாஹ் ஒருவனையே வணங்குங்கள். அவனைத் தவிர வேறு இறைவன் உங்களுக்கில்லை. (இதற்கு நீங்கள் மாறு செய்தால்) உங்களுக்கு (வரக்கூடிய) மகத்தானதொரு நாளின் வேதனையை நான் பயப்படுகிறேன்" என்று கூறினார். (அல்அஃராப் : 59) நபி இப்ராஹீம்அலைஹிஸ்ஸலாம் கூறியதாக பின்வருமாறு கூறுகின்றான் : "இன்னும் இப்றாஹீமையும் (தூதராக நாம் அனுப்பினோம்); அவர் தம் சமூகத்தாரிடம்; "அல்லாஹ்வை நீங்கள் வணங்குங்கள்; அவனிடம் பயபக்தியுடன் இருங்கள்; நீங்கள் அறிந்தவர்களாக இருந்தால், இதுவே உங்களுக்கு நன்மையுடையதாக இருக்கும்" என்று கூறிய வேளையை (நபியே! நினைவூட்டுவீராக)". (அல்அன்கபூத் : 16) நபி ஸாலிஹ் அலைஹிஸ்ஸலாம் கூறியதாக பின்வருமாறு கூறுகின்றான் : "அவர் (அவர்களை நோக்கி) "என் மக்களே! அல்லாஹ் ஒருவனையே வணங்குங்கள். உங்களுக்கு அவனைத்தவிர வணக்கத்திற்குரிய வேறு இறைவனில்லை. (இதற்காக) உங்கள் இறைவனிடம் இருந்து தெளிவான ஓர் அத்தாட்சியும் உங்களிடம் வந்திருக்கிறது. இது அல்லாஹ்வுடைய ஒட்டகமாகும். (இது) உங்களுக்கோர் அத்தாட்சியாகவும் இருக்கிறது. ஆகவே, அதை அல்லாஹ்வுடைய பூமியில் (எங்கும் தடையின்றி தாராளமாக) மேய விடுங்கள். அதற்கு எத்தகைய தீங்கும் செய்யாதீர்கள். (அவ்வாறு செய்தால்) துன்புறுத்தும் வேதனை உங்களைப் பிடித்துக்கொள்ளும்" என்று கூறினார்". (அல்அஃராப் : 73) நபி ஷுஐப்அலைஹிஸ்ஸலாம் கூறியதாக பின்வருமாறு கூறுகின்றான் : " என் மக்களே! அல்லாஹ் ஒருவனையே வணங்குங்கள். அவனைத் தவிர உங்களுக்கு வணக்கத்திற்குரிய வேறு இறைவனில்லை. உங்கள் இறைவனிடமிருந்து நிச்சயமாக உங்களுக்குத் தெளிவான அத்தாட்சி வந்திருக்கிறது. ஆகவே, அளவை முழுமையாக அளந்து எடையை சரியாக நிறுங்கள். (நீங்கள் கொடுக்க வேண்டிய) மனிதர்களுடைய பொருள்களில் எதையும் குறைத்து விடாதீர்கள். பூமியில் (சமாதானமும் அமைதியும் ஏற்பட்டு) சீர்திருந்திய பின்னர் அதில் குழப்பமும் கலகமும் செய்யாதீர்கள். மெய்யாகவே நீங்கள் (என் வார்த்தையை) நம்புபவர்களாக இருந்தால் இவைதான் உங்களுக்கு நன்மை பயக்கும்" என்று கூறினார்". (அல்அஃராப் : 85)
அல்லாஹ் நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுடன் முதன்முதலில் பேசிய வார்த்தை,அல்லாஹ் அவருக்கு கூறுகின்றான் : "நான் உம்மை (என் தூதராகத்) தேர்ந்தெடுத்துக் கொண்டேன். ஆதலால், வஹி மூலம் (உமக்கு) அறிவிக்கப்படுவதற்கு செவிசாய்ப்பீராக. "நிச்சயமாக நான்தான் அல்லாஹ். என்னைத் தவிர உண்மையான வணக்கத்திற்குரிய இறைவன் அறவே இல்லை. என்னையே வணங்குவீராக. என்னை நினைவுகூரும் பொருட்டு தொழுகையைக் கடைப்பிடிப்பீராக". (தாஹா : 13,14) மேலும்,நபி மூஸாஅலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹ்வின் மூலம் பாதுகாப்புக் கோரிய செய்தியைப் பின்வருமாறு கூறுகின்றான் : "அதற்கு மூஸா, (அவனை நோக்கி) "கேள்வி கணக்கு(க் கேட்கப்படும்) நாளை நம்பாது, கர்வம்கொண்ட (உங்கள்) அனைவருடைய தீங்கை விட்டும், என் இறைவனும், உங்கள் இறைவனுமாகிய அவனிடமே நிச்சயமாக நான் பாதுகாவல் தேடுகிறேன்" என்று கூறினார்". (gஃகாபிர் : 27) நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் கூறியதாக அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் : "நிச்சயமாக அல்லாஹ்தான் என் இறைவனும், உங்கள் இறைவனும் ஆவான். ஆகவே, அவனையே வணங்குங்கள். இதுதான் நேரான வழி" (என்றும் கூறினார்.)". (ஆல இம்ரான் : 51) மேலும் நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் கூறியதாக அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் : "'இஸ்ராஈலின் சந்ததியினரே ! எனது இறைவனும் உங்களது

இறைவனுமாகிய அல்லாஹ்வையே நீங்கள் வணங்குங்கள்' என்று கூறினார். நிச்சயமாக யார் அல்லாஹ்வுக்கு இணைவைக்கின்றானோ அவனுக்கு அல்லாஹ் சுவனத்தைத் தடுத்து விடுவான். அவனது ஒதுங்குமிடம் நரகமே, அநியாயக்காரர்களுக்கு எந்த உதவியாளனும் இல்லை". (அல்மாஇதா : 72)
ஏன், தௌராத், இன்ஜீலில் (பைபிளின் பழைய, புதிய ஏற்பாடுகள்) கூட அல்லாஹ்வை மாத்திரம் வணங்குவதை வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் கூறியதாக உபாகமத்தில் பின்வருமாறு உள்ளது : (ஏ இஸ்ராஈலே! நீ கேட்டுக்கொள்! எங்களுடைய வணக்கத்திற்குரிய ஒரே இறைவன் அல்லாஹ் மாத்திரம் தான்.) ஓரிறைக் கொள்கையை வலியுறுத்தி நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் கூறியதாக 'மார்கு' நற்செய்தியில் பின்வருமாறு உள்ளது : ((முதலாவது உபதேசம் 'இஸ்ராஈலே! நீ கேட்டுக்கொள்! எங்களுடைய வணக்கத்திற்குரிய ஒரே இறைவன் அல்லாஹ் மாத்திரம் தான்' என்பதாகும்.)

ஓரிறைக் கொள்கைக்கான இப்பாரிய பொறுப்பு கொடுக்கப்பட்டுத் தான் அனைத்து நபிமார்களும் அனுப்பப்பட்டதாக அல்லாஹ் தெளிவுபடுத்துகின்றான். அவன் கூறுகின்றான் : "மெய்யாகவே நாம் ஒவ்வொரு சமூகத்தாரிடத்திலும், "அல்லாஹ்வையே நீங்கள் வணங்குங்கள்; ஷைத்தான்களை விட்டும் நீங்கள் விலகிச் செல்லுங்கள்" என்று (போதிக்குமாறு) நம் தூதர்களை அனுப்பி வைத்தோம்; எனவே அ(ந்த சமூகத்த)வர்களில் அல்லாஹ் நேர்வழி காட்டியோரும் இருக்கிறார்கள்; வழிகேடே விதிக்கப்பெற்றோரும் அவர்களில் இருக்கிறார்கள்". (அந்நஹ்லு : 36) மேலும் அல்லாஹ் கூறினான் : "நீங்கள் அழைக்கும் அல்லாஹ் அல்லாதவற்றை கவனித்தீர்களா? பூமியிலுள்ள எதை அவை படைத்துள்ளன அல்லது அவற்றுக்கு வானங்களில் ஏதாவது பங்கு உண்டா? என்பதை எனக்குக் காண்பியுங்கள்! நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், இதற்கு, முன்னேயுள்ள ஒரு வேதத்தையோ அல்லது (முன்னோர்களின்) அறிவு ஞானங்களில் மிஞ்சிய ஏதேனும் பகுதியையோ (உங்கள் கூற்றுக்கு ஆதாரமாக) என்னிடம் கொண்டு வாருங்கள்! என்று (நபியே!) நீர் கூறுவீராக (அல்அஹ்காப் : 4) அஷ்ஷேக் அப்துர்ரஹ்மான் அஸ்ஸஃதீ (ரஹ்) கூறுகின்றார் : இணைவைப்பாளர்கள் தமது இணைவைப்பில் ஏற்கமுடியுமான எந்த அத்தாட்சியையோ, ஆதாரத்தையோ சார்ந்திருக்கவில்லை, மாறாக பொய்யான ஊகங்கள், வலுவற்ற கருத்துக்கள், தவறான பகுத்தறிவுகளையே சார்ந்துள்ளனர் என்பது உறுதியாகி விட்டது. அவர்களது நிலைமைகளைத் தேடிப்பார்த்து, அவர்களது அறிவு, செயற்பாடுகளைத் துருவி ஆராய்ந்து, காலம் முழுதும் வணங்குவதிலேயே அவர்கள் கழித்த அச்சிலைகளுடைய நிலை, அவை ஈருலகிலும் ஏதாவது பயனளித்தார்களா என்பதை நோட்டமிட்டாலே அவர்களுடைய இச்செயல் தவறானது என்பதைப் புரிந்து கொள்ளலாம். தய்ஸீருல் கரீமில் மன்னான் (பக் : 779)

# 6. அல்லாஹ்தான் உண்மையான படைப்பாளன், கூடவே யாரும் வணங்கப்படாமல், தனித்து வணங்கப்படத் தகுதியானவன் அவன் ஒருவன் மாத்திரமே.

அல்லாஹ்தான்,கூடவே யாரும் வணங்கப்படாமல், தனித்து அவன் ஒருவன் மாத்திரமே வணங்கப்படத் தகுதியானவன்.அல்லாஹ் கூறுகின்றான் : "மனிதர்களே! நீங்கள் இறை அச்சமுடையவர்களாக ஆகும் பொருட்டு, உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தவர்களையும் படைத்த உங்கள் இறைவனையே வணங்குங்கள். அவனே பூமியை நீங்கள் வசிக்கும் இடமாகவும், வானத்தை ஒரு முகடாகவும் அமைத்து, மேகத்திலிருந்து மழையைப் பொழிவித்து, அதைக் கொண்டு (நீங்கள்) புசிக்கக்கூடிய கனிவர்க்கங்களையும் உங்களுக்கு வெளியாக்குகிறான். ஆகவே, (இவற்றையெல்லாம்) நீங்கள் தெளிவாக அறிந்துகொண்டே அல்லாஹ்வுக்கு இணைகளை ஆக்காதீர்கள்". (அல்பகரா : 21,22) எனவே எம்மையும், எமக்கு முன் சென்ற சமூகங்களையும் படைத்து, இப்பூமியை நாம் வசிக்கும் இடமாகவும், வானத்தை ஒரு முகடாகவும் அமைத்து, மேகத்திலிருந்து மழையைப் பொழிவித்து, அதைக் கொண்டு நாம் புசிக்கக்கூடிய கனிவர்க்கங்களையும் எமக்கு வெளிப்படுத்திய அந்த அல்லாஹ் மாத்திரமே உண்மையாக வணங்கப்படத் தகுதியானவனாகும். அல்லாஹ் கூறுகின்றான் : "மனிதர்களே! உங்கள் மீதுள்ள அல்லாஹ்வுடைய அருட்கொடையை நினைத்துப் பாருங்கள். வானத்திலிருந்தும் பூமியிலிருந்தும்உங்களுக்கு உணவளிக்கின்ற அல்லாஹ்வையன்றி வேறொரு படைப்பவன் இருக்கிறானா? அவனைத் தவிர

உண்மையான வணக்கத்திற்குரிய வேறொரு இறைவன் இல்லவே இல்லை. ஆகவே, (அவனை விட்டு) நீங்கள் எவ்வாறு திசைதிருப்பப்படுகிறீர்கள்?". (பாதிர் : 03) எனவே படைத்து, வாழ்வாதாரம் அளிப்பவன் மாத்திரம்தான் உண்மையாக வணங்கப்படத் தகுதியானவன். அல்லாஹ் கூறுகிறான் : "அவனே உங்கள் இரட்சகனாகிய அல்லாஹ். (உண்மையாக) வணங்கப்படத் தகுதியானவன் அவனைத் தவிர வேறு யாருமில்லை. அவனே யாவற்றையும் படைத்தவன். எனவே அவனையே நீங்கள் வணங்குங்கள். அவன் யாவற்றின் மீதும் பொறுப்பாளன்". (அல்அன்ஆம் : 102)

அல்லாஹ்வன்றி வணங்கப்படும் அனைத்துமே உண்மையாக வணங்கப்படத் தகுதியானவையல்ல. ஏனெனில் வானம், பூமியில் அணுவளவேனும் அவற்றுக்கு உரிமை கிடையாது. எந்தவொன்றிலும் அவை அல்லாஹ்வுடன் பங்குதாரராகவோ, அவனுடைய உதவியாளராகவோ இல்லை. அவ்வாறிருக்க, எவ்வாறு அல்லாஹ்வுடன் சேர்த்து அவை அழைக்கப்பட முடியும்? எவ்வாறு அவனுக்கு இணையாக ஆக்கப்பட முடியும்?. அல்லாஹ் கூறுகின்றான் : "(நபியே!) கூறுவீராக: அல்லாஹ்வையன்றி எவர்களை நீங்கள் (தெய்வங்களென) எண்ணிக் கொண்டீர்களோ அவர்களை நீங்கள் அழைத்துப் பாருங்கள். வானங்களிலோ பூமியிலோ அவர்களுக்கு ஓர் அணுவளவும் உரிமை இல்லை. மேலும், அவ்விரண்டிலும் அவர்களுக்கு எந்தப் பங்கும் இல்லை. (அவற்றை படைப்பதில்) அவை அவனுக்கு உதவி செய்யவுமில்லை". (ஸபஃ : 22)

அல்லாஹ்தான் இப்படைப்புக்களை இல்லாமையிலிருந்து உண்டுபண்ணினான். இப்படைப்பினங்களின் உருவாக்கம் அவனது உள்ளமை, பரிபாலனம், இறைமை ஆகியவற்றை அறிவிக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான் : "மேலும், அவன் உங்களை மண்ணிலிருந்து படைத்திருப்பதும், பின்பு நீங்கள் மனிதர்களாக (பூமியின் பல பாகங்களில்) பரவியதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும். இன்னும், நீங்கள் அவர்களிடம் ஆறுதல் பெறுதற்குரிய (உங்கள்) மனைவியரை உங்களிலிருந்தே உங்களுக்காக அவன் படைத்திருப்பதும்; உங்களுக்கிடையே அன்பையும்,கருணையையும் உண்டாக்கியிருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும்; சிந்தித்து உணரக்கூடிய சமூகத்திற்கு நிச்சயமாக, இதில் (பல) அத்தாட்சிகள் இருக்கின்றன. வானங்களையும் பூமியையும் படைத்திருப்பதும், உங்கள் மொழிகளும், நிறங்களும் வெவ்வேறாக இருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளவையாகும். இதிலும் அறிவுடையோருக்கு நிச்சயமாகப் பல அத்தாட்சிகள் இருக்கின்றன. இரவிலும் பகலிலும் நீங்கள் நித்திரை செய்து இளைப்பாறிக் கொள்வதும் (பூமியின் பல பாகங்களிலும் சென்று) நீங்கள் அவனுடைய அருளைத் தேடிக் கொள்வதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளவையாகும். (நல்லுபதேசத்தைச்) செவியுறும் மக்களுக்கு இதில் நிச்சயமாகப் பல அத்தாட்சிகள் இருக்கின்றன. அச்சத்தையும் ஆதரவையும் ஏற்படுத்தும் மின்னலை அவன் உங்களுக்குக் காண்பிப்பதும், மேகத்திலிருந்து மழையை பொழியச் செய்து இறந்த பூமியை செழிக்கச் செய்வதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளனவாகும். அறிவுடைய மக்களுக்கு நிச்சயமாக இதில் பல அத்தாட்சிகள் இருக்கின்றன. வானமும் பூமியும் அவன் கட்டளைப்படி நிலை பெற்றிருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் ஒன்றாகும். பின்னர் அவன் உங்களை அழைக்கும்போது ஒரே அழைப்பில் நீங்கள் பூமியில் இருந்து வெளிப்பட்டு விடுவீர்கள். வானங்களிலும் பூமியிலும் உள்ளவை அனைத்தும் அவனுக்குரியனவே. இவை அனைத்தும் அவனுக்கே அடிபணிந்து நடக்கின்றன. அவனே படைப்பைத் துவங்குகின்றான்; பின்னர் அவனே அதை மீட்டுகிறான்; மேலும், இது அவனுக்கு மிகவும் எளிதேயாகும்". (அர்ரூம்: 27)

நும்ரூத் இரட்சகன் இருப்பதை மறுத்த போது அவனுக்கு நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறியதை அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் : "(அதற்கு) இப்ராஹீம், 'அப்படியானால் நிச்சயமாக அல்லாஹ் சூரியனைக் கிழக்கிலிருந்து உதிக்கச் செய்கிறான், ஆகவே நீ அதனை மேற்கிலிருந்து உதிக்கச் செய் (பார்க்கலாம்)' என்றார். உடனே நிராகரித்த அவன் வாயடைத்துப் போனான். அல்லாஹ் அநியாயக்காரக் கூட்டத்தை நேர்வழியில் செலுத்த மாட்டான்". (அல்பகரா : 258) அதேபோன்று தான் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம், தனக்கு அல்லாஹ்தான் நேர்வழி காட்டினான், தனக்கு உணவு, பானங்கள் அளித்ததும் அவன்தான், தான் நோயுற்றால் குணப்படுத்துவதும் அவன்தான், தன்னை மரணிக்கச் செய்து மீண்டும் உயிர்ப்பிப்பதும் அவன்தான் என தனது சமூகத்திற்கு ஆதாரங்களை முன்வைத்தார்கள். அதனை அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் : "அவன்தான் என்னைப் படைத்தான். அவனே என்னை நேரான வழியில் நடத்துகிறான். அவனே எனக்கு உண்ணவும் பருகவும் தருகிறான். நான் நோயுற்ற தருணத்தில் அவனே என்னை குணப்படுத்துகிறான். அவனே என்னை மரணிக்கச் செய்வான்; பின்னர் அவனே என்னை (மறுமையில்) உயிர்ப்பிப்பான்". (அஷ் ஷுஅராஃ : 78 -81) நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் பிர்அவ்னுடன் தர்க்கித்ததைப் பற்றி அல்லாஹ்

பின்வருமாறு கூறுகின்றான் : "'ஒவ்வொன்றுக்கும் அதற்குரிய தோற்றத்தைக் கொடுத்து, பின்னர் அதற்கு சரியான வழியைக் காட்டியவனே எமது இரட்சகனாவான்' என்றார்". (தாஹா : 50)

மனிதன் அல்லாஹ்வை நிராகரிக்காமல் அவனை மாத்திரம் வணங்க வேண்டும் என்பதற்காகவே வானங்கள் பூமியிலுள்ள அனைத்தையும் அவனுக்கு வசப்படுத்தி, பல அருட்கொடைகளை நிறைவாக வழங்கியுள்ளான். "(மனிதர்களே!) வானங்களிலும் பூமியிலும் உள்ளவற்றை நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு வசப்படுத்தித் தந்திருக்கிறான் என்பதையும், அவன் தன் அருட் கொடைகளை மறைவாகவும், வெளிப்படையாகவும் உங்கள் மீது நிறைவாகவே சொரிந்திருக்கிறான் என்பதையும் நீங்கள் பார்க்கவில்லையா? அல்லாஹ்வின் விடயத்தில் எவ்வித அறிவோ, வழிகாட்டலோ, ஒளி பொருந்திய வேதமோ இன்றி தர்க்கிப்போரும் மனிதர்களில் உள்ளனர்". (லுக்மான் : 20) வானங்கள், பூமியிலுள்ளவற்றை அல்லாஹ் மனிதனுக்கு வசப்படுத்திக் கொடுத்தைப் போன்றே, அவனைப் படைத்த எஜமானை அறிந்து கொள்ளப் பயன்படும் செவிப்புலன், பார்வை, உள்ளம் போன்றவற்றையும் மனிதனுக்கு வழங்கியே அவனைப் படைத்துத் தயார் படுத்தியுள்ளான். "உங்கள் தாய்மார்களின் வயிறுகளிலிருந்து நீங்கள் ஒன்றுமே அறியாதவர்களாக இருந்த நிலையில் உங்களை அல்லாஹ் வெளிப்படுத்தினான்; அன்றியும் உங்களுக்குச் செவிப்புலனையும், பார்வைகளையும், இதயங்களையும் - நீங்கள் நன்றி செலுத்தும் பொருட்டு - அவனே அமைத்தான். (அன்நஹ்லு : 78)

எனவே அல்லாஹ்தான் இப்பிரபஞ்சங்கள் அனைத்தையும் படைத்தான். மனிதனைப் படைத்து, அவனுக்குத் தேவையான உறுப்புக்கள், ஆற்றல்கள் மூலம் அவனைத் தயார்படுத்தி, அல்லாஹ்வை வணங்கி, இப்பூமியை நிர்வகிக்கத் துணைபுரியும் அனைத்தையும் அவனுக்கு வழங்கியுள்ளான். பின்பு வானங்கள், பூமியிலுள்ள அனைத்தையும் அவனுக்கு வசப்படுத்தியும் கொடுத்துள்ளான்.

இப்பிரமாண்டமான படைப்பினங்களைப் படைத்ததையே தனது இறைமையை வலியுறுத்தும் பரிபாலனக் கோட்பாட்டிற்கு ஆதாரமாக அல்லாஹ் ஆக்கியுள்ளான். அவன் கூறுகின்றான் : "(நபியே!) நீர் (அவர்களை நோக்கி) "வானத்திலிருந்தும் பூமியில் இருந்தும் உங்களுக்கு உணவளிப்பவன் யார்? (உங்கள்) செவிக்கும் பார்வைகளுக்கும் உரிமையாளன் யார்? இறந்தவற்றிலிருந்து உயிருள்ளவற்றையும், உயிருள்ளவற்றிலிருந்து இறந்தவற்றையும் வெளிப்படுத்துபவன் யார்? (உலகின்) எல்லாக் காரியங்களையும் திட்டமிட்டு நிர்வகித்து நிகழ்த்துபவன் யார்?" என்று கேட்பீராக! அதற்கவர்கள் "அல்லாஹ்தான்" என்று கூறுவார்கள். அவ்வாறாயின் (அவனுக்கு) நீங்கள் பயப்பட வேண்டாமா?" என்று கேட்பீராக". (யூனுஸ் : 31) மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "நீங்கள் அழைக்கும் அல்லாஹ் அல்லாதவற்றை கவனித்தீர்களா? பூமியிலுள்ள எதை அவை படைத்துள்ளன அல்லது அவற்றுக்கு வானங்களில் ஏதாவது பங்கு உண்டா? என்பதை எனக்குக் காண்பியுங்கள்! நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், இதற்கு, முன்னேயுள்ள ஒரு வேதத்தையோ அல்லது (முன்னோர்களின்) அறிவு ஞானங்களில் மிஞ்சிய ஏதேனும் பகுதியையோ (உங்கள் கூற்றுக்கு ஆதாரமாக) என்னிடம் கொண்டு வாருங்கள்! என்று (நபியே!) நீர் கூறுவீராக". (அல்அஹ்காப் : 4) மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "அவனே வானங்களை நீங்கள் பார்க்கக் கூடிய தூண்களின்றிப் படைத்து, பூமி உங்களை சரித்து விடாதிருக்க மலைகளை அதில் நட்டினான். மேலும் அதில் எல்லா விதமான உயிரினங்களையும் பரவச் செய்தான். இன்னும் நாம் வானத்திலிருந்து மழையை இறக்கி, (தாவரங்களில்) தரத்தில் உயர்ந்த ஒவ்வொரு வகையையும் அதில் முளைக்கச் செய்தோம். இது அல்லாஹ்வின் படைப்பாகும். அவனல்லாதோர் எதைப் படைத்தனர்? என எனக்குக் காட்டுங்கள். எனினும் அநியாயக்காரர்கள் தெளிவான வழிகேட்டிலேயே இருக்கின்றனர்". (லுக்மான் : 10,11) மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "அல்லது இவர்கள் எவருடைய படைப்பும் இல்லாமல் தாமாகவே உண்டாகி விட்டனரா? அல்லது இவர்கள் தம்மைத்தாமே படைத்துக் கொண்டனரா? அல்லது வானங்களையும் பூமியையும் இவர்கள் படைத்தார்களா? மாறாக, (இவற்றை எல்லாம் படைத்தவன் அல்லாஹ்தான். அவனை) இவர்கள் நம்புவதில்லை. அல்லது அவர்களிடம் உமது இறைவனின் பொக்கிஷங்கள் அனைத்தும் இருக்கின்றனவா? அல்லது (அவற்றை) அவர்களே ஆதிக்கம் செலுத்துபவர்களா?". (அத்தூர் : 35-37) அஷ்ஷேக் அப்துர்ரஹ்மான் அஸ்ஸஃதீ (ரஹ்) கூறுகின்றார் : இது ஒன்றோ சத்தியத்தை ஏற்க வேண்டும், அல்லது சரியான பகுத்தறிவு, மார்க்கத்தை விட்டும் வெளியேற வேண்டும் என்ற கட்டாயத்திற்கு தள்ளக்கூடிய ஒரு விடயத்தை வைத்தே அவர்களுக்கு எதிராக முன்வைக்கப்படும் ஆதாரமாகும். தப்ஸீர் இப்னு ஸஃதீ (பக் : 816)

# 7. இப்பிரபஞ்சத்தில் நாம் காணக்கூடிய, காணாத அனைத்தையும் படைத்தவன் அல்லாஹ்தான். அவனன்றி அனைத்தும் அவனால் படைக்கப்பட்டவையே. வானங்களையும் பூமியையும் ஆறு நாட்களில் அவன் படைத்தான்.

இப்பிரபஞ்சத்தில் நாம் காணக்கூடிய, காணாத அனைத்தையும் படைத்தவன் அல்லாஹ்தான். அவனன்றி அனைத்தும் அவனால் படைக்கப்பட்டவையே.அல்லாஹ் கூறுகின்றான் : "'வானங்கள் மற்றும் பூமியின் இரட்சகன் யார்?' என்று நீர் கேட்டு, அல்லாஹ் என்று நீரே கூறுவீராக. அவனையன்றி தமக்குத்தாமே எந்தவொரு நன்மையையோ தீமையையோ செய்ய ஆற்றல் பெறாதவர்களைப் பாதுகாவலர்களாக நீங்கள் எடுத்துக் கொண்டீர்களா? என்றும் கேட்பீராக! பார்வை அற்றவனும் பார்வையுடையவனும் சமமாவார்களா? அல்லது இருள்களும் ஒளியும் சமமாகுமா? அல்லது அவர்கள் அல்லாஹ்வுக்கு ஏற்படுத்திய இணை தெய்வங்கள் அவன் படைப்பது போன்று படைத்து, அப்படைப்புக்கள் இவர்களுக்குக் குழப்பத்தை ஏற்படுத்தி விட்டதா? என்று கேட்டு, 'அல்லாஹ்வே யாவற்றையும் படைத்தவன், அவனே தனித்தவனும் அடக்கியாள்பவனும் ஆவான்' என்று கூறுவீராக". (அர்ர. ்த் : 16). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "நீங்கள் அறியாதவற்றையும் அவன் படைப்பான்". (அந்நஹ்லு : 8).

வானங்களையும் பூமியையும் ஆறு நாட்களில் அவன் படைத்தான். அல்லாஹ் கூறுகின்றான் : "அவன்தான் வானங்களையும் பூமியையும் ஆறு நாள்களில் படைத்தான். பின்னர், அர்ஷின் மீது (தன் மகிமைக்குத் தகுந்தாற்போல்) உயர்ந்து நிலைபெற்றுவிட்டான் விட்டான். (வித்து முதலியவை) பூமியில் விதைக்கப்படுவதையும் அவை முளைத்து வெளிப்படுவதையும், வானத்தில் இருந்து இறங்குபவற்றையும், (பூமியிலிருந்து) ஏறுபவற்றையும் அவன் நன்கறிவான். நீங்கள் எங்கிருந்த போதிலும், அவன் உங்களுடன் இருக்கிறான். நீங்கள் செய்பவற்றையும் அல்லாஹ் உற்று நோக்கியவனாக இருக்கிறான்". (அல்ஹதீத் : 4). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "நிச்சயமாக நாம்தான் வானங்களையும், பூமியையும் அதற்கு மத்தியில் உள்ளவற்றையும் ஆறே நாட்களில் படைத்தோம். அதனால் நமக்கு ஒரு களைப்பும் (சோர்வும்) ஏற்பட்டு விடவில்லை". (கா. ்ப் : 38).

# 8. அல்லாஹ்வின் அதிகாரம், படைப்பாற்றல், நிர்வகித்தல், அவனை வணங்குதல் இவை எதிலும் அவனுக்கு நிகரேதும் இல்லை.

அல்லாஹ்தான் அரசனுக்கெல்லாம் அரசன், அவனது படைப்பாற்றல், ஆட்சியதிகாரம், நிர்வாகம் ஆகியவற்றில் அவனுக்கு நிகராக யாருமில்லை. அல்லாஹ் கூறுகின்றான் : "நீங்கள் அழைக்கும் அல்லாஹ் அல்லாதவற்றை கவனித்தீர்களா? பூமியிலுள்ள எதை அவை படைத்துள்ளன அல்லது அவற்றுக்கு வானங்களில் ஏதாவது பங்கு உண்டா? என்பதை எனக்குக் காண்பியுங்கள்! நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், இதற்கு, முன்னேயுள்ள ஒரு வேதத்தையோ அல்லது (முன்னோர்களின்) அறிவு ஞானங்களில் மிஞ்சிய ஏதேனும் பகுதியையோ (உங்கள் கூற்றுக்கு ஆதாரமாக) என்னிடம் கொண்டு வாருங்கள்! என்று (நபியே!) நீர் கூறுவீராக".". (அல்அஹ்காப் : 4) அஷ்ஷேக் அப்துர்ரஹ்மான் அஸ்ஸ. ்தீ (ரஹ்) கூறுகின்றார் : (அதாவது : எதுவித நன்மையோ, தீமையோ, மரணமோ, வாழ்வோ, மீளெழுப்பலோ எதற்கும் சக்திபெறாத சிலைகளை அல்லாஹ்விற்கு இணையாக வைத்தவர்களிடம், அச்சிலைகளின் இயலாமையையும், வணக்கத்திற்குத் தகுதியற்ற செய்தியையும் நபியே நீர் அவர்களுக்குத் தெளிவுபடுத்திக் கூறுங்கள் : "அவை பூமியில் எதைத்தான் படைத்திருக்கின்றன? அதை நீங்கள் எனக்குக் காண்பியுங்கள் அல்லது வானங்களில் (அவற்றின் ஆட்சியிலோ அல்லது அவற்றை

படைத்ததிலோ) அவற்றுக்குப் பங்குண்டா?", வானங்கள், பூமியில் ஏதாவதொரு பகுதியை இவர்கள் படைத்தார்களா? மலைகளைப் படைத்தார்களா? ஆறுகளை ஓடச் செய்தார்களா? விலங்கினங்களை விருத்தி செய்தார்களா? மரங்களை முளைக்கச் செய்தார்களா? குறைந்த பட்சமாக இவற்றைப் படைக்கும் போது இவர்களிடமிருந்து அல்லாஹ்விற்கு சிறு உதவியாவது கிடைத்ததா? இவற்றில் எதுவுமில்லை என்பதை பிறருக்கு முன்னர் அவர்களே ஏற்றுக் கொண்டுள்ளனர். இது அல்லாஹ்வன்றி வணங்கப்படும் அனைத்தும் பொய்யானவையே என்பதற்கு பலமான அறிவியல் ஆதாரமாக உள்ளது.

அறிவியல் சான்றுகளைப் பற்றிக் கூறியதன் பின், இவர்களது இணைவைப்பிற்கு எழுத்து ரீதியான எவ்வித சான்றுகளும் இல்லையென்பதையும் தொடர்ந்து கூறுகின்றான் : "இதற்கு (ஆதாரமாக) முன்னுள்ள ஒரு வேதத்தை" (அதாவது இணைவைப்பின் பால் அழைக்கக் கூடிய வேதம்), "அல்லது (இது சம்பந்தமான) ஞானமுடையவர்களின் ஒரு வாக்கியத்தைக் கொண்டு வாருங்கள்" (அதாவது இதனை ஏவக்கூடிய முன்னைய தூதர்களின் வார்த்தைகளைக் கொண்டு வாருங்கள்.) அவ்வாறு எந்தத்தூதரிடமிருந்தும் இணைவைப்பை ஏவும் எந்த வார்த்தையையும் அவர்களால் கொண்டு வர முடியாது என்பது அறியப்பட்ட விடயம்தான். மாறாக, அத்தூதர்கள் அனைவரும் ஓரிறைக் கொள்கையின் பக்கம் அழைத்து, இணைவைப்பைத் தடுத்துள்ளார்கள் என்பதையே எம்மால் உறுதியாகக் கூறமுடியும். அவர்களிடமிருந்து அறிவிக்கப்பட்டுள்ள மகத்தான செய்தி இதுவே.) தப்ஸீர் இப்னு ஸஃதீ (பக் : 779)

அல்லாஹ்தான் அரசனுக்கெல்லாம் அரசனாவான். அவனது ஆட்சியதிகாரத்தில் அவனுக்கு நிகராக யாருமில்லை. அல்லாஹ் கூறுகின்றான் : "அல்லாஹ்வே! ஆட்சியின் அதிபதியே! நீ விரும்பியவர்களுக்கு ஆட்சியைக் கொடுக்கிறாய். நீ விரும்பியவர்களிடமிருந்து ஆட்சியை பறிக்கிறாய். நீ விரும்பியவர்களை கண்ணியப்படுத்துகிறாய். நீ விரும்பியவர்களை இழிவுபடுத்துகிறாய். நன்மைகள் அனைத்தும் உன் கையில்தான் இருக்கின்றன. நிச்சயமாக நீ அனைத்தின் மீதும் பேராற்றலுடையவன் ஆவாய்". (ஆல இம்ரான் : 26) மறுமையிலும் முழு ஆட்சியதிகாரமும் அவனுக்குத் தான் என்பதை அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் : "அவர்கள் மண்ணறைகளில் இருந்து வெளிவரும் நாளில் அவர்கள் குறித்த எதுவும் அல்லாஹ்வுக்கு மறைந்து விடாது. இன்றைய நாளில், "ஆட்சி யாருக்குரியது?" (என்று கேட்டு, அனைவரையும்) அடக்கி ஆளும் ஒருவனாகிய அந்த அல்லாஹ்வுக்குரியதே!" (என்று அவனே கூறுவான்)". (ஃகாபிர் : 16)

அல்லாஹ்வின் அதிகாரம், படைப்பாற்றல், நிர்வகித்தல், அவனை வணங்குதல் இவை எதிலும் அவனுக்கு நிகரேதும் இல்லை. அல்லாஹ் கூறுகின்றான் : "(நபியே!) கூறுவீராக: "புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்குரியதே! அவனுக்கு ஒரு சந்ததியுமில்லை. அவனுடைய ஆட்சியில் அவனுக்குக் கூட்டாளி ஒருவருமில்லை. அவனுக்கு பலவீனம் இல்லை என்பதால் அவனுக்கு உதவியாளன் ஒருவனுமில்லை." ஆகவே, அவனை மிக மிகப் பெருமைப்படுத்திக் கூறுவீராக!". (அல்இஸ்ராஃ : 111) மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "வானங்கள், பூமியின் ஆட்சி அவனுக்குரியதே! அவன் எவரையும் பிள்ளையாக எடுத்துக் கொள்ளவில்லை; ஆட்சியில் அவனுக்கு ஒரு இணையுமில்லை. அவனே அனைத்தையும் படைத்து, பின்னர் அவற்றை முறைப்படி நிர்ணயித்தான்". (அல்ஃபுர்கான் : 2) அவன்தான் ஆள்பவன், அவனல்லாதோர் ஆளப்படுவோர். அவன் படைப்பாளன், அவனல்லாதோர் படைப்பினங்கள். அவன்தான் சகல காரியங்களையும் திட்டமிட்டு நிர்வகிப்பவன். இத்தரத்தில் யார் உள்ளானோ அவன்தான் உண்மையாக வணங்கப்படத் தகுதியானவன். அவனல்லாதோரை வணங்குவதானது புத்தியில் ஏற்பட்டுள்ள குறைபாடாகவும், ஈருலக வாழ்வையும் அழிக்கும் இணைவைப்பாகவும் உள்ளது. அல்லாஹ் கூறுகின்றான் : "(நம்பிக்கையாளர்களை நோக்கி) "நீங்கள் யூதர்களாக அல்லது கிறிஸ்தவர்களாக ஆகிவிடுங்கள். நேரானவழியை அடைந்து விடுவீர்கள்" என அவர்கள் கூறுகிறார்கள். அதற்கு, "இல்லை! நேரான வழியைச் சார்ந்த இப்றாஹீமின் மார்க்கத்தையே (பின்பற்றுவோம்). அவர் (உங்களைப்போல்) இணைவைத்து வணங்கியவர்களில்" இல்லை என்று (நபியே!) கூறுவீராக". (அல்பகரா : 135) மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "எவர் அல்லாஹ்வுக்கு முற்றிலும் தன்முகத்தை பணியவைத்து இஸ்லாமில் உறுதியானவராக இருந்து, நன்மையும்செய்து, இப்றாஹீமுடைய (நேரான) மார்க்கத்தையும் பின்பற்றுகிறாரோ அவரைவிட அழகான மார்க்கத்தை உடையவர் யார்? அல்லாஹ் இப்றாஹீமை(த் தன்) உண்மை நண்பராக எடுத்துக் கொண்டிருக்கிறான்". (அந்நிஸாஃ : 125) நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் மார்க்கமல்லாத வேறொன்றைப் பின்பற்றியவன் தன்னைத் தானே மடையனாக்கிக் கொண்டவன் என அல்லாஹ் தெளிவாகக் கூறுகின்றான் : "தன்னைத்

தானே மடையனாக்கிக் கொண்டவனைத் தவிர வேறு யார்தான் இப்ராஹீமுடைய மார்க்கத்தைப் புறக்கணிப்பான்? நிச்சயமாக நாம் அவரை இவ்வுலகில் தேர்ந்தெடுத்தோம்;. நிச்சயமாக அவர் மறுமையிலும் நல்லடியார் கூட்டத்திலேயே இருப்பார்". அல்பகரா : 130)

# 9. அல்லாஹ் எவரையும் பெறவுமில்லை, எவருக்கும் பிறக்கவும் இல்லை. அவனுக்கு நிகராகவோ, அவனைப் போன்றோ யாருமில்லை.

அல்லாஹ் எவரையும் பெறவுமில்லை, எவருக்கும் பிறக்கவும் இல்லை. அவனுக்கு நிகராகவோ, அவனைப் போன்றோ யாருமில்லை. அல்லாஹ் கூறுகின்றான் : "(நபியே! மனிதர்களை நோக்கி) கூறுவீராக: அல்லாஹ் ஒருவன்தான். அல்லாஹ் எவ்விதத் தேவையுமற்றவன். அவன் (எவரையும்) பெறவுமில்லை; (எவருக்கும்) பிறக்கவுமில்லை. (தவிர) அவனுக்கு ஒப்பாகவும் (நிகராகவும்) ஒன்றுமில்லை". (அல்இஃலாஸ் : 1- 4) மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "வானங்களையும், பூமியையும், இவற்றிற்கு மத்தியில் உள்ளவற்றையும் படைத்த இறைவன் அவனே! ஆதலால், அவன் ஒருவனையே வணங்குவீராக. அவனை வணங்குவதில் (உமக்கு ஏற்படும் சிரமங்களை) சகித்துக் கொள்வீராக. அவனுடைய தன்மைக்கு ஒப்பான எவரையும் நீர் அறிவீரா?". (மர்யம் : 65) மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "அவனே வானங்களையும் பூமியையும் படைத்தவன். உங்களிலிருந்தே (உங்கள்) மனைவிகளையும் அவன் உங்களுக்காக படைக்கிறான். (ஆடு, மாடு, ஒட்டகம் முதலிய) கால்நடைகளையும் ஜோடி ஜோடியாக படைத்து, உங்களைப் பூமியின் பல பாகங்களிலும் பரவிப் பெருகச் செய்கிறான். அவனுக்கு ஒப்பானது ஒன்றுமில்லை. அவன் (அனைத்தையும்) செவியுறுபவன், பார்ப்பவன் ஆவான்". (அஷ்ஷூரா : 11).

# அல்லாஹ் எப்பொருளிலும் இறங்க மாட்டான். தனது படைப்பினங்களில் எந்த உடலிலும் சங்கமிக்க மாட்டான் :

அல்லாஹ் எப்பொருளிலும் இறங்க மாட்டான். தனது படைப்பினங்களில் எந்த உடலிலும் சங்கமிக்க மாட்டான். எப்பொருளுடனும் ஒன்றறக் கலக்கவும் மாட்டான். ஏனெனில் அவன்தான் படைப்பாளன். ஏனையோர் படைப்பினங்கள். அவன்தான் என்றும் நிலைத்திருப்பவன். ஏனையோர் என்றோ அழியக்கூடியவர்கள். அனைத்துப் பொருட்களும் அவனுக்குரியவை, அவன்தான் அவற்றிற்கதிபதி. எனவே அவன் எதிலும் இறங்கவும் மாட்டான். எப்பொருளும் அவனில் இறங்கவும் மாட்டாது. அனைத்தையும் விட தூய்மையான அல்லாஹ் மிகப் பெரியவன். மகத்தானவன். அல்லாஹ் நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுள் இறங்கிவிட்டான் என வாதிட்ட மக்களை மறுதலித்து பின்வருமாறு கூறுகின்றான் : "எவர்கள், மர்யமுடைய மகன் மஸீஹை அல்லாஹ்தான் என்று கூறுகின்றனரோ அவர்கள் நிச்சயமாக நிராகரிப்பவர்களாகவே இருக்கின்றனர். ஆகவே, (நபியே!) நீர் கூறுவீராக: “மர்யமுடைய மகன் மஸீஹையும், அவருடைய தாயையும், உலகத்திலுள்ள (மற்ற) அனைவரையும் அல்லாஹ் அழித்துவிடக் கருதினால் (அவனைத் தடுக்க) எவன்தான் சிறிதேனும் சக்தி பெறுவான்? (ஏனென்றால்,) வானங்கள், பூமி இன்னும் இவற்றுக்கு மத்தியிலுள்ள அனைத்தின் ஆட்சி அல்லாஹ்வுக்குரியதே! அவன் விரும்பியதை (விரும்பியபடி) படைக்கிறான். அல்லாஹ் அனைத்தின் மீதும் மிக பேராற்றலுடையவன்". (அல்மாஇதா : 17). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "கிழக்கு திசையும் மேற்கு திசையும் அல்லாஹ்வுக்கே (உரியன). ஆதலால், நீங்கள் எத்திசையை நோக்கினும் அங்கு அல்லாஹ்வின் முகம் இருக்கிறது. நிச்சயமாக அல்லாஹ் விசாலமானவன்; மிக அறிந்தவன். “அல்லாஹ் (தனக்கு) பிள்ளை எடுத்துக் கொண்டான்" என்றும் கூறுகின்றனர். அவ்வாறல்ல; அவனோ மிக்க பரிசுத்தமானவன். வானங்களிலும் பூமியிலும் உள்ளவை அனைத்தும் அவனுக்குரியனவே! இவை அனைத்தும் அவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கின்றன. அவனே வானங்களையும் பூமியையும் முன்மாதிரியின்றியே படைத்தவன். அவன் ஒரு காரியத்தை முடிவு செய்துவிட்டால் அதை ‘ஆகுக!' எனக் கூறிய மாத்திரத்தில் உடனே அது ஆகிவிடும்". (அல்பகரா : 115- 117). மேலும் அல்லாஹ்

கூறுகின்றான் "இன்னும் 'அர்ரஹ்மான் (தனக்கென) ஒரு பிள்ளையை எடுத்துக் கொண்டான்' என அவர்கள் கூறுகின்றனர். நிச்சயமாக நீங்கள் பெரியதோர் அபாண்டத்தைக் கொண்டு வந்து விட்டீர்கள். இதனால் வானங்கள் வெடித்து, பூமி பிளந்து, மலைகள் இடிந்து சிதறுண்டு விழப் பார்க்கின்றன. அர்ரஹ்மானுக்கு பிள்ளைகள் இருப்பதாக வாதிட்டதே (இதற்குக் காரணமாகும்). ஒரு பிள்ளையை எடுத்துக் கொள்ள ரஹ்மானுக்கு எந்த அவசியமுமில்லை. ஏனென்றால், நிச்சயமாக வானங்களிலும் பூமியிலும் உள்ள ஒவ்வொருவரும் ரஹ்மானிடம் அடிமையாகவே வருவர். நிச்சயமாக அவர்களை அவன் மதிப்பிட்டு, மேலும் அவர்களைக் கணக்கிட்டும் வைத்துள்ளான். அவர்கள் அனைவரும் மறுமை நாளில் அவனிடம் தன்னந்தனியாகவே வருவார்கள்". (மர்யம் : 88- 95). மேலும் அல்லாஹ் கூறினான் : "அல்லாஹ்-அவனைத்தவிர (வணக்கத்திற்குரிய) நாயன் வேறு இல்லை. அவன் என்றென்றும் ஜீவித்திருப்பவன், என்றென்றும் நிலைத்திருப்பவன்; அவனை ;சிறு தூக்கமோ, பெருந் தூக்கமோ பீடிக்கமாட்டாது, வானங்களிலுள்ளவையும், பூமியிலுள்ளவையும் அவனுக்கே உரியன, அவன் அனுமதியின்றி அவனிடம் யார் பரிந்துரை செய்ய முடியும்? (படைப்பினங்களுக்கு) முன்னுள்ளவற்றையும், அவற்றுக்குப் பின்னுள்ளவற்றையும் அவன் நன்கறிவான்;. அவன் ஞானத்திலிருந்து எதனையும், அவன் நாட்டமின்றி, எவரும் அறிந்துகொள்ள முடியாது. அவனுடைய 'குர்ஸி' வானங்களையும், பூமியையும் வியாபித்திருக்கின்றது. அவ்விரண்டையும் காப்பது அவனுக்குச் சிரமத்தை உண்டாக்குவதில்லை - அவன் மிக உயர்ந்தவன்; மகிமை மிக்கவன்". (அல்பகரா : 255). படைத்தவனின் நிலை இவ்வாறிருக்க, படைப்பினங்களின் நிலை அவ்வாறிருக்க எவ்வாறு ஒருவர் மற்றவரில் இறங்க முடியும்? அல்லது தனக்கென பிள்ளை எடுத்துக் கொள்ள முடியும்? அல்லது தன்னுடன் பிற கடவுள்களை ஆக்கிக் கொள்ள முடியும்?

# 11. அல்லாஹ் தனது அடியார்களுடன் கருணையுள்ளவன், இரக்கமுள்ளவன். இதனால்தான் தூதர்களை அனுப்பி, அவர்களுக்கு வேதங்களையும் அருளியுள்ளான்.

அல்லாஹ் தனது அடியார்களுடன் கருணையுள்ளவன், இரக்கமுள்ளவன். இணைவைப்பு, இறைநிராகரிப்பு போன்ற இருள்களில் இருந்து ஓரிறைக் கொள்கை எனும் ஒளியின் பக்கம் அவர்களை வெளியேற்ற துதர்களை அனுப்பி, வேதங்களை இறக்கியதும் அவன் அடியார்கள் மீது கொண்டுள்ள இரக்கத்திலுள்ளதாகும். அல்லாஹ் கூறுகின்றான் : "உங்களை(ப் பாவத்தின்) இருள்களிலிருந்து ஒளியின் பக்கம் கொண்டு வரும் பொருட்டே, அவன் தனது அடியார் மீது தெளிவான வசனங்களை இறக்கி வைத்திருக்கிறான். நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது மிக இரக்கமுடையவனும் மகா கருணையுடையவனும் ஆவான்". (அல்ஹதீத் : 9).
மேலும் அல்லாஹ் கூறுகின்றான்: "(நபியே!) நாம் உம்மை அகிலத்தாருக்கு எல்லாம் ரஹ்மத்தாக - ஓர் அருட் கொடையாகவேயன்றி அனுப்பவில்லை". (அல்அன்பியா:ஃ : 107). தான் பாவங்களை மன்னிக்கும் இரக்கமுள்ளவன் என அடியார்களுக்கு அறிவிக்குமாறு தனது நபிக்குப் பணித்துள்ளான். அல்லாஹ் கூறுகின்றான் : "(நபியே!) நீர் என் அடியார்களுக்கு அறிவிப்பீராக: “நிச்சயமாக நான் மிக்க மன்னிப்பவன், மிகக் கருணையுடையவன் ஆவேன்". (அல்ஹிஜ்ர் : 49). துன்பங்களை நீக்கி, நலவுகளை அடியார்கள் மீது இறக்குவதும் அவனது இரக்கம், கருணையிலுள்ளதே. அல்லாஹ் கூறுகின்றான் : "அல்லாஹ் உங்களுக்கு ஒரு தீங்கிழைக்கும் பட்சத்தில் அதை நீக்க அவனைத் தவிர மற்றெவராலும் முடியாது. அவன் உங்களுக்கு ஒரு நன்மையை நாடினால் அவனுடைய அக்கருணையைத் தடைசெய்ய எவராலும் முடியாது. அவன் அடியார்களில் அவன் விரும்பியவர்களுக்கே அதை அளிக்கிறான். அவன் மிக்க மன்னிப்பவன், மிகக் கருணையுடையவன் ஆவான்". (யூனுஸ் : 107).

# 12. அல்லாஹ் ஒருவன்தான் படைத்துப் பரிபாலித்து கருணை காட்டுபவன். அவன்

மாத்திரம்தான் படைப்பினங்கள் மறுமையில் மண்ணறைகளை விட்டும் எழுப்பப்படும் போது அவர்களை விசாரணை செய்யக்கூடியவன். ஒவ்வொருவரும் செய்த நலவு, கெடுதிகளுக்கேற்ப கூலி வழங்குவான். எனவே, அவனை விசுவாசித்த நிலையில் நல்லறங்கள் புரிந்தோருக்கு நிலையான இன்பங்கள் உண்டு. அவனை மறுத்து, தீமைகள் செய்தவனுக்கு மறுமையில் பாரிய வேதனை உண்டு.

அல்லாஹ் ஒருவன்தான் படைத்துப் பரிபாலித்து கருணை காட்டுபவன். அவன் மாத்திரம்தான் படைப்பினங்கள் மறுமையில் மண்ணறைகளை விட்டும் எழுப்பப்படும் போது அவர்களை விசாரணை செய்யக்கூடியவன். ஒவ்வொருவரும் செய்த நலவு, கெடுதிகளுக்கேற்ப கூலி வழங்குவான். எனவே, அவனை விசுவாசித்த நிலையில் நல்லறங்கள் புரிந்தோருக்கு நிலையான இன்பங்கள் உண்டு. அவனை மறுத்து, தீமைகள் செய்தவனுக்கு மறுமையில் பாரிய வேதனை உண்டு. இவ்வுலகை செயல்களுக்குரிய இடமாகவும், அச்செயல்களை விசாரித்து அதற்கேற்ப கூலி வழங்கவென மற்றுமொரு உலகை வைத்திருப்பது அல்லாஹ்வுடைய பரிபூரண நீதி, மதிநுட்பத்திலுள்ளதுடன், தனது அடியார்கள் மீது கொண்ட கருணையின் வெளிப்பாடாகவும் உள்ளது. இதன் மூலம் நல்லவர்கள் தமது நற்செயல்களுக்குரிய கூலியையும், தீயவர்கள் அநியாயக்காரர்கள், பாவிகள் தமது தீமை, அநியாயத்திற்குரிய தண்டனையையும் பெறுவர். சிலர் இதனை ஏற்க மறுத்தாலும் அல்லாஹ் மறுமையில் படைப்பினங்களை மீளெழுப்பி, விசாரணை செய்வது எவ்வித ஐயமுமற்ற உண்மை என்பதற்கான பல ஆதாரங்களை நிலைநாட்டியுள்ளான். அல்லாஹ் கூறுகின்றான் : "(நபியே! பயிர்கள் கருகி) பூமி வெட்ட வெளியாக இருப்பதை நீர்காண்பதும் மெய்யாகவே அவனுடைய அத்தாட்சிகளில் ஒன்றாகும். அதன் மீது நாம் மழையை இறக்கினால், அது (செடி கொடிகளால்) பசுமையாகி வளர்கிறது. (இவ்வாறு இறந்து போன) பூமியை எவன் உயிர்ப்பிக்கிறானோ அவன்தான் மரணித்தவர்களையும் மெய்யாகவே உயிர்ப்பிப்பான். நிச்சயமாக அவன் (அனைத்தின் மீதும்) பேராற்றலுடையவன்". (ஃபுஸ்ஸிலத் : 39). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "மனிதர்களே! (மறுமையில் உங்களுக்கு உயிர் கொடுத்து) எழுப்புவதைப் பற்றி நீங்கள் சந்தேகம் கொண்டால், (உங்களை முதலில் எவ்வாறு படைத்தோம் என்பதைக் கவனியுங்கள்.) நிச்சயமாக நாம் உங்களை (உங்கள் மூலப் பிதாவாகிய ஆதமை) மண்ணில் இருந்து (படைத்துப்) பின்னர் இந்திரியத் துளியிலிருந்து, பின்னர் அதை ஓர் இரத்தக் கட்டியாகவும், பின்னர் (அதை) குறை வடிவ அல்லது முழு வடிவ மாமிசப் பிண்டமாகவும் (நாம் உற்பத்தி செய்கிறோம். நம் வல்லமையை) உங்களுக்குத் தெளிவாக்கும் பொருட்டே (இவ்வாறு படிப்படியாகப் பல மாறுதல்களை அடைய) ஒரு குறிப்பிட்ட காலம் வரை தங்கி இருக்கும்படி செய்கிறோம். பின்னர், உங்களைச் சிசுக்களாக வெளிப்படுத்தி நீங்கள் உங்கள் வாலிபத்தை அடையும்படிச் செய்கிறோம். (இதற்கிடையில்) இறந்துவிடுபவர்களும் உங்களில் பலர் இருக்கின்றனர். (அல்லது வாழ்ந்து) அனைத்தையும் அறிந்த பின்னர் ஒன்றுமே அறியாதவர்களைப்போல் ஆகிவிடக்கூடிய தள்ளாத வயது வரை விட்டு வைக்கப்படுபவர்களும் உங்களில் இருக்கின்றனர். (மனிதனே!) பூமி (புற்பூண்டு ஏதுமின்றி) வறண்டு இருப்பதை நீ காணவில்லையா? அதன் மீது நாம் மழையை பொழியச் செய்தால், அது பசுமையாகி வளர்ந்து அழகான பற்பல வகை (ஜோடி ஜோடி)யான உயர்ந்த புற்பூண்டுகளை

முளைப்பிக்கிறது". (அல்ஹஜ் : 05). மறுமையில் எழுப்பப்படுவதற்கான மூன்று அறிவியல் சான்றுகளை அல்லாஹ் இங்கு கூறியுள்ளான். அவை :
1. ஆரம்பத்தில் மனிதனை அல்லாஹ் மண்ணினால்தான் படைத்துள்ளான். மண்ணினால் அவனைப் படைத்த அந்த அல்லாஹ் மரணித்து மண்ணாக இருக்கும் போது மீண்டும் அவனை உயிர்பிக்க ஆற்றலுள்ளவன்.
2. ஓர் இந்திரியத் துளியை மனிதனாக சிருஷ்டித்த அல்லாஹ்விற்கு அம்மனிதன் மரணித்த பிறகும் மீண்டும் அவனை உயிர்ப்பிக்க முடியும்.
3. வரண்ட நிலத்தை மழை மூலம் உயிர்ப்பித்த அல்லாஹ்விற்கு மரணித்த மனிதர்களை மீண்டும் உயிர்ப்பிக்கவும் முடியும். அல்குர்ஆனின் அற்புதத் தன்மைக்கு இவ்வசனத்தில் பாரிய சான்று ஒன்றுள்ளது. சாதாரண ஒரு வசனத்தில் பாரிய ஒரு விடயம் தொடர்பாக மூன்று உறுதியான அறிவியல் ஆதாரங்களை எவ்வாறு ஒருங்கிணைத்துக் கூற முடியும்? இது ஒரு நீண்ட வசனமும் அல்ல.
மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "எழுதப்பட்ட ஏடுகளைச் சுருட்டுவதைப் போல் நாம் வானத்தைச் சுருட்டும் நாளை (நபியே!) நீர் அவர்களுக்கு ஞாபகமூட்டுவீராக. முதல் தடவை நாம் அவர்களை படைத்தது போன்றே (அந்நாளில்) நாம் (அவர்களுக்கு உயிர் கொடுத்து) அவர்களை மீள்வைப்போம். இது நம்மீது கடமையானதொரு வாக்குறுதியாகும். நிச்சயமாக நாம் இதைச் செய்தே தீருவோம்". (அல்அன்பியா.ஃ : 104).
மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "அவன், தான் படைக்கப்பட்ட (விதத்)தை மறந்துவிட்டுஓர் உதாரணத்தை நம்மிடம் எடுத்துக் காட்டுகிறான். "உக்கி மண்ணாகிப் போன இந்த எலும்பை உயிர்ப்பிப்பவன் யார்?" என்று அவன் கேட்கிறான். (நபியே!) அதற்கு நீர் கூறுவீராக: "முதல் முறையில் அதைப் படைத்தவன் எவனோ அவனே அதை உயிர்ப்பிப்பான். அவனோ எல்லா படைப்பினத்தையும் மிக அறிந்தவன்". (யாஸீன் : 78,79).
மேலும் அல்லாஹ் கூறுகின்றான்: "படைப்பால் நீங்கள் கடினமானவர்களா? அல்லது வானமா? அதை அவனே அமைத்தான். அவனே அதன் முகட்டை உயர்த்தி, அதை ஒழுங்குபடுத்தினான். அவனே, அதன் இரவை (இருளால்) மூடி, அதன் பகலை வெளிப்படுத்தினான். இதன் பின்னர் பூமியை அவன் விரித்தான். அவனே அதிலிருந்து நீரையும், மேய்ச்சல் பொருள்களையும் வெளியாக்கினான். மேலும் மலைகளை (முளைகளாக அதில்) நாட்டினான்". (அந்நாஸிஆத் : 27- 32). வானம், பூமி மற்றும் அதிலுள்ளவற்றைப் படைப்பதை விட மனிதனைப் படைப்பது கடினமானதல்ல என்பதை அல்லாஹ் தெளிவுபடுத்தியுள்ளான். வானங்கள், பூமியைப் படைக்க சக்தி பெற்றவனுக்கு மனிதனை இரண்டாவது தடவையாக மீளெழுப்பவது இயலாத காரியமன்று.

# 13. அல்லாஹ் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை மண்ணினால் படைத்து, அவருக்குப் பின் அவரது சந்ததிகள் பெருகுமாறு செய்துள்ளான். அனைத்து மனிதர்களும் அவர்களது அடிப்படையில் சமமானவர்களே. இறையச்சம் ஒன்றைத் தவிர வேறு எவ்விதத்திலும் ஓர் இனத்தை விட மற்ற இனத்திற்கோ, ஒரு சமூகத்தை விட மற்ற சமூகத்திற்கோ எவ்வித சிறப்பும் கிடையாது.

அல்லாஹ் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை மண்ணினால் படைத்து, அவருக்குப் பின் அவரது சந்ததிகள் பெருகுமாறு செய்துள்ளான். அனைத்து மனிதர்களும் அவர்களது அடிப்படையில் சமமானவர்களே. இறையச்சம் ஒன்றைத் தவிர வேறு எவ்விதத்திலும் ஓர் இனத்தை விட மற்ற இனத்திற்கோ, ஒரு சமூகத்தை விட மற்ற சமூகத்திற்கோ எவ்வித சிறப்பும் கிடையாது. அல்லாஹ் கூறுகின்றான் : "மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஓர் பெண்ணிலிருந்தே படைத்தோம். நீங்கள் ஒருவரை ஒருவர்

அறிந்து கொள்ளும் பொருட்டு, பின்னர் உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம். உங்களில் இறையச்சமுள்ளவர்கள் தான் அல்லாஹ்விடத்தில் மிக்க கண்ணியமானவர்கள். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்". (அல்ஹுஜுராத் : 13). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "அல்லாஹ்தான் உங்களை (முதலில்) மண்ணால் படைத்தான்; பின்னர் ஒரு துளி இந்திரியத்திலிருந்து - பின் உங்களை (ஆண், பெண்) ஜோடியாக அவன் ஆக்கினான், அவன் அறியாமல் எந்தப் பெண்ணும் கர்ப்பம் தரிப்பதுமில்லை பிரசவிப்பதுமில்லை. இவ்வாறே ஒருவருடைய வயது அதிகமாக்கப்படுவதும், அவருடைய வயதிலிருந்து குறைப்பதும் (லவ்ஹுல் மஹ்ஃபூள் என்னும்) ஏட்டில் இல்லாமலில்லை நிச்சயமாக இது அல்லாஹ்வுக்கு எளிதானதேயாகும்". (பாதிர் : 11). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் "அவன்தான் உங்களை (ஆரம்பத்தில்) மண்ணிலிருந்தும் பின்னர், இந்திரியத்துளியிலிருந்தும், பின்னர், (கருவறைச் சுவரில்) ஒட்டிக் கொள்ளக் கூடியதிலிருந்தும் படைத்தான். பிறகு, அவனே உங்களை ஒரு சிசுவாகவும் வெளிப்படுத்துகிறான். பின்னர், (படிப்படியாக) நீங்கள் உங்கள் வாலிபத்தை அடைந்து, பின்னர் நீங்கள் முதியவர்களாக ஆகிறீர்கள். அதற்கு முன்னரும் உங்களில் பலர் இறந்து விடுகின்றனர். குறிப்பிட்ட தவணையை நீங்கள் அடைவதற்காகவும், நீங்கள் விளங்கிக் கொள்வதற்காகவும் (இவ்வாறு செய்தான்)". (ƒகாபிர் : 67). உலக நியதியின் படி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை மண்ணிலிருந்து எவ்வாறு படைத்தானோ, அவ்வாறே ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் உலக நியதியின் படியே தான் படைத்ததாக அல்லாஹ் பின்வருமாறு தெளிவுபடுத்திக் கூறுகின்றான்: "அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக ஈஸாவின் உதாரணம் ஆதமின் உதாரணம் போன்றதே. அவன் அவரை மண்ணிலிருந்து படைத்துப்பின் "குன்" (ஆகுக) எனக் கூறினான்;. அவர் (மனிதர்) ஆகிவிட்டார்". (ஆல இம்ரான் : 59) இறையச்சம் ஒன்றைத் தவிர மனிதர்களில் எவருக்கு மத்தியிலும் பாகுபாடில்லை, அனைவரும் சமமானவர்கள் என நபியவர்கள் தெளிவுபடுத்தியதை ஏற்கனவே இரண்டாம் இலக்கத்தில் கூறியுள்ளேன்.

# 14. பிறக்கும் அனைத்துப் பிள்ளைகளும் ஓரிறைக் கொள்கையை ஏற்கும் சுபாவத்துடனேயே பிறக்கின்றன.

பிறக்கும் அனைத்துப் பிள்ளைகளும் ஓரிறைக் கொள்கையை ஏற்கும் சுபாவத்துடனேயே பிறக்கின்றன. அல்லாஹ் கூறுகின்றான் : "(நபியே! இப்ராஹீமுடைய) நேரான மார்க்கத்தை நோக்கி நீர் உமது முகத்தை உறுதியான ஓர்மைப்பாட்டுடன் திருப்புவீராக. (அதுவே) மனிதர்களுக்காக அல்லாஹ் ஏற்படுத்திய இயற்கை மார்க்கமாகும். அவன் படைத்த (மார்க்கத்)தை (எவராலும்) மாற்றிவிட முடியாது. இதுதான் நிலையான (நேர்மையான) மார்க்கம். எனினும், மனிதரில் பெரும்பாலானவர்கள் (இதை) அறிந்துகொள்ளவே மாட்டார்கள்". (அர்ரூம் : 30). 'ஹனீபிய்யத்' என்ற நேரான மார்க்கம் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது வழிமுறையையே குறிக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான் : "பின்னர், நேரிய வழியில் நின்ற இப்ராஹீமின் மார்க்கத்தைப் பின்பற்றுமாறு உமக்கு நாம் வஹி அறிவித்தோம். அவர் இணைவைப்போரில் இருக்கவில்லை". (அந்நஹ்லு : 123). மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : "ஒரு விலங்கு எப்படி முழு வளர்ச்சி பெற்ற விலங்கைப் பெற்றெடுக்கிறதோ அதைப்போல, எல்லாக் குழந்தைகளுமே இயற்கையான (மார்க்கத்)தில்தான் பிறக்கின்றன. விலங்குகள் அங்கக் குறைவுடன் பிறப்பதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? (முழுமையான விலங்கை அங்க சேதப்படுத்துவது போல்) பெற்றோர்கள் தாம் குழந்தைகளை யூதர்களாகவோ கிறித்தவர்களாகவோ நெருப்பு வணங்கிகளாகவோ ஆக்கிவிடுகின்றனர்". பின்பு அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள் : "(அதுவே) மனிதர்களுக்காக அல்லாஹ் ஏற்படுத்திய இயற்கை மார்க்கமாகும். அவன் படைத்த (மார்க்கத்)தை (எவராலும்) மாற்றிவிட முடியாது. இதுதான் நிலையான (நேர்மையான) மார்க்கம். எனினும், மனிதரில் பெரும்பாலானவர்கள் (இதை) அறிந்துகொள்ளவே மாட்டார்கள்". (அர்ரூம் : 30). ஆதாரம் : புஹாரி 4775. மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : "என் இறைவன் இன்றைய தினம் எனக்குக் கற்றுத் தந்தவற்றிலிருந்து நீங்கள் அறியாதவற்றை உங்களுக்குக் கற்றுத்தருமாறு எனக்குக் கட்டளையிட்டான்.(இறைவன் கூறினான்:) நான் ஓர் அடியானுக்கு வெகுமதியாக வழங்கியுள்ள அனைத்துப் பொருட்களும் அவனுக்கு அனுமதிக்கப்பட்டவையே ஆகும். நான் என் அடியார்கள்

அனைவரையும் (இயற்கையிலேயே) உண்மை வழி நின்றவர்களாகவே படைத்தேன். (ஆயினும்) அவர்களிடம் ஷைத்தான் வந்து அவர்களது இயற்கை நெறியிலிருந்து அவர்களைப் பிறழச்செய்துவிட்டான். நான் அவர்களுக்கு அனுமதித்துள்ளவற்றைத் தடைசெய்யப் பட்டவையாக ஆக்கிவிட்டான்; நான் எனக்கு இணை கற்பிப்பதற்கு எந்தச் சான்றையும் இறக்காத நிலையில் எனக்கு இணை கற்பிக்குமாறு அவர்களுக்குக் கட்டளையிட்டுவிட்டான்". ஆதாரம் : முஸ்லிம் 2865.

# 15. மனிதர்கள் யாரும் பிறக்கும் போதே தவறிழைத்தவர்களாகவோ, பிறரின் தவறுக்கு வாரிசுக் காரராகவோ பிறப்பதில்லை :

மனிதர்கள் யாரும் பிறக்கும் போதே தவறிழைத்தவர்களாகவோ, பிறரின் தவறுக்கு வாரிசுக் காரராகவோ பிறப்பதில்லை. ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறைக்கட்டளைக்கு மாறு செய்து, அவரும் மனைவி ஹவ்வாவும் அந்த மரத்திலிருந்து உண்ட வேளை அதை நினைத்து கவலைப்பட்டு, அல்லாஹ்விடம் மீண்டு பாவமன்னிப்புக் கோரியதாக அல்லாஹ் கூறுகின்றான். சில வார்த்தைகளைக் கூறும்படி அல்லாஹ் அன்னாருக்குக் கற்றுக் கொடுத்து, அதை அவர் கூறியதும் அல்லாஹ் அவரை மன்னித்து விட்டான். அல்லாஹ் கூறுகின்றான் : "பின்னர், நாம் “ஆதமே! நீர் உமது மனைவியுடன் சொர்க்கத்தில் வசித்திருப்பீராக. நீங்கள் இருவரும் இதில் விரும்பும் இடத்தில் (விரும்பியவற்றைத்) தாராளமாகப் புசியுங்கள். ஆனால், இந்த மரத்தை நெருங்காதீர்கள். நெருங்கினால் நீங்கள் இருவரும் (உங்களுக்குத்) தீங்கிழைத்துக் கொண்டவர்களாவீர்கள்" என்று கூறினோம். எனினும், (இப்லீஸாகிய) ஷைத்தான் அதை காரணமாக வைத்து, அவ்விருவரையும் தவறிழைக்கும்படிச் செய்து, (சொர்க்கத்திலிருந்தும்) அவ்விருவரும் இருந்த (மேலான) நிலைமையிலிருந்தும் அவர்களை வெளியேறும்படி செய்துவிட்டான். ஆகவே, (அவர்களை நோக்கி) “உங்களில் சிலர் சிலருக்கு எதிரியாவர். (சொர்க்கத்திலிருந்து) நீங்கள் இறங்கிவிடுங்கள். உங்களுக்கு பூமியில் குறிப்பிட்ட காலம் வாழ்விடமும், வாழ்க்கை வசதியும் உண்டு" என நாம் கூறினோம். பின்னர் ஆதம் தனது இரட்சகனிடமிருந்து சில வார்த்தைகளைப் பெற்று அதன் மூலம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். அதனால் அவன் அவரை மன்னித்தான். நிச்சயமாக அவன்தான் மிக்க மன்னிப்பவனாகவும் நிகரற்ற அன்புடையோனுமாவான். (பின்னர்) நாம் கூறினோம்:- “நீங்கள் அனைவரும் இதிலிருந்து இறங்கிவிடுங்கள். என்னிடமிருந்து உங்களுக்கு (என் தூதர்கள் மூலம்) நேர்வழி நிச்சயமாக வரும். (உங்களில்) எவர்கள் என் நேர்வழியைப் பின்பற்றுகிறார்களோ அவர்களுக்கு ஒரு பயமுமில்லை; அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்". (அல்பகரா : 35- 38). அல்லாஹ் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை மன்னித்ததால் அவர் பிறகும் அப்பாவத்தை சுமந்தவராகக் கருதப்படவில்லை. அதே போன்றுதான் அவருடைய சந்ததியினரும் ஏற்கனவே மன்னிக்கப்பட்ட பாவத்திற்கு வாரிசாக்கப்பட மாட்டார்கள். எந்தவொரு மனிதனும் பிறருடைய குற்றத்தை சுமக்க மாட்டார் என்பதே அடிப்படை விதியாகும். அல்லாஹ் கூறுகின்றான் : "ஒவ்வொரு ஆன்மாவும் தீமையை தனக்கு எதிராகவே சம்பாதித்துக் கொள்கின்றது. எந்தவொரு ஆன்மாவும் மற்றதன் பாவச்சுமையை சுமக்காது. பின்னர், உங்கள் மீளுதல் உங்கள் இரட்சகனிடமே உள்ளது. அப்போது நீங்கள் முரண்பட்டுக் கொண்டிருந்தவை பற்றி அவன் உங்களுக்கு அறிவிப்பான்". (அல்அன்ஆம் : 164).

மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "எவர் நேர்வழியில் செல்கின்றாரோ, அவர் தனக்காகவே நேர் வழியில் செல்கிறார்; எவன் வழி கேட்டில் செல்கின்றானோ, அவன் தனக்கே கேடு செய்து கொண்டான்; எந்தவொரு ஆன்மாவும் மற்றதன் பாவச்சுமையை சுமக்காது.; (நம்) தூதரை அனுப்பாத வரையில் (எவரையும்) நாம் வேதனை செய்வதில்லை". (அல்இஸ்ரா.ஃ : 15). மேலும் அல்லாஹ் கூறுகின்றான்: "எந்தவொரு ஆன்மாவும் மற்றதன் பாவச்சுமையை சுமக்காது. பாவச் சுமை கனத்த ஆன்மா அதைச் சுமக்க எவரையேனும் அழைத்தபோதிலும், அழைக்கப்பட்டவன் இவனுடைய சொந்தக்காரனாக இருந்த போதிலும், அதிலிருந்து எதையும் அவன் மீது சுமத்தப்பட மாட்டாது. எவர்கள் தமது இரட்சகனை மறைவிலும் அஞ்சி, தொழுகையையும் நிலைநாட்டுகிறார்களோ அவர்களுக்கே நீர் எச்சரிக்கை செய்கின்றீர். எவர் பரிசுத்தமாக

இருக்கிறாரோ அவர் தனக்காகவே பரிசுத்தமாய் இருக்கிறார். அல்லாஹ்விடமே மீளுதல் உள்ளது". (பாதிர் : 18).

# 16. மனிதர்களைப் படைத்ததன் பிரதான நோக்கம் அல்லாஹ்வை மாத்திரம் வணங்குவதாகும் :

மனிதர்களைப் படைத்ததன் பிரதான நோக்கம் அல்லாஹ்வை மாத்திரம் வணங்குவதாகும். அல்லாஹ் கூறுகின்றான் : "மனு ஜின் ஆகியோரை என்னை வணங்குவதற்கன்றி நான் படைக்கவில்லை". (அத்ஸாரியாத் : 56).

# 17. இஸ்லாம் மனிதனை -ஆண், பெண் அனைவரையும்- கண்ணியப்படுத்தி, அவனது அனைத்து உரிமைகளையும் பொறுப்பேற்றுள்ளது. அவனது சுயவிருப்புக்கள், செயற்பாடுகள், நடவடிக்கைகளுக்கு அவனையே பொறுப்பாக்கியுள்ளது. தனக்கோ, பிறருக்கோ ஏற்படுத்தும் எந்தத் தீங்கிற்கும் அவனையே பொறுப்பாக்கியுள்ளது.

இஸ்லாம் மனிதனை -ஆண், பெண் அனைவரையும்- கண்ணியப்படுத்தியுள்ளது. பூமியில் தனது பிரதிநிதியாக செயற்படுவதற்காகவே அல்லாஹ் மனிதனைப் படைத்துள்ளான். அல்லாஹ் கூறுகின்றான் : "(நபியே!) இன்னும் உமது இரட்சகன் வானவர்களிடம் 'நிச்சயமாக பூமியில் நான் ஒரு தலைமுறையை (பிரதிநிதியாக)த் தோற்றுவிக்கப் போகிறேன்' என்று கூறிய போது". (அல்பகரா : 30).

இந்த கண்ணியம் அனைத்து மனிதர்களுக்குமானதாகும். அல்லாஹ் கூறுகின்றான் : "ஆதமுடைய சந்ததியை நிச்சயமாக நாம் கண்ணியப்படுத்தினோம். இன்னும் தரையிலும் கடலிலும் அவர்களை நாம் சுமந்து சென்றோம். மேலும் நல்ல உணவுகளையும் நாமே அவர்களுக்கு அளித்தோம். நாம் படைத்த பலவற்றை விடவும் இவர்களை மிக்க மேன்மையாக்கி வைத்திருக்கிறோம்". (அல்இஸ்ரா ஃ : 70). மேலும் அல்லாஹ் கூறுகின்றான்: "நிச்சயமாக நாம் மனிதனை மிக்க அழகான அமைப்பில் படைத்திருக்கிறோம்". (அத்தீன் : 4).

அல்லாஹ் அல்லாத எந்த சிலைகளுக்கோ, பின்பற்றப்படுபவருக்கோ, தலைவருக்கோ தன்னைத் தானே தாழ்த்திக் கொண்டு பின்பற்றுவதை மனிதனுக்கு அல்லாஹ் தடை செய்துள்ளான். அல்லாஹ் கூறுகின்றான் : "மேலும், அல்லாஹ் அல்லாதவற்றை அவனுக்கு நிகரானவைகளாக எடுத்துக் கொண்டு, அல்லாஹ்வை நேசிப்பது போல அவற்றை நேசிப்பவர்களும் மனிதர்களில் பலர் இருக்கின்றனர். எனினும், இறை நம்பிக்கையாளர்கள் (இவர்களைவிட) அல்லாஹ்வை நேசிப்பதில் மிக உறுதியானவர்கள். அநியாயம் செய்தோர் (மறுமையின்) வேதனையைக் காணும்போது நிச்சயமாக வல்லமை அனைத்தும் அல்லாஹ்வுக்கே என்பதையும், அல்லாஹ் கடுமையாகத் தண்டிப்பவன் என்பதையும் அறிந்து கொள்வார்கள்.வேதனையைக் காணும் வேளை பின்பற்றப்பட்டோர், பின்பற்றியோரை விட்டும் விலகி விடுவர். அவர்களுக்கிடையே இருந்த தொடர்புகளும் அறுபட்டு விடும்". (அல்பகரா : 165,166). மறுமையில் அசத்தியத்தை பின்பற்றியோர், பின்பற்றப்பட்டோரின் நிலை பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் : "அதற்கு (அவர்களில்) கர்வம் கொண்டிருந்தவர்கள் பலவீனமாக இருந்தவர்களை நோக்கி “உங்களிடம் நேரான வழி வந்ததன் பின்னர் (நீங்கள் அதில் செல்லாது) நாங்களா உங்களைத் தடுத்தோம்? (அவ்வாறு) இல்லை; நீங்கள்தான் (அதில் செல்லாது) குற்றவாளிகளாக ஆனீர்கள்" என்று

கூறுவார்கள்". "'அவ்வாறன்று. நாம் அல்லாஹ்வை நிராகரிக்குமாறும் அவனுக்கு இணையாளர்களை ஏற்படுத்துமாறும் நீங்கள் எங்களுக்குக் கட்டளையிட்ட போது, (நாங்கள் வழிப்பட்டது நீங்கள்) இரவிலும், பகலிலும் செய்த சூழ்ச்சியாகும்' எனப் பலவீனப்படுத்தப்பட்டவர்கள் பெருமையடித்தோரிடம் கூறுவர். வேதனையை அவர்கள் காணும்போது தமது கைசேதத்தை மறைத்துக் கொள்வார்கள். நிராகரித்தோரின் கழுத்துகளில் நாம் விலங்கிட்டு விடுவோம். அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றுக்கேயன்றி வேறெதெற்கும் கூலி வழங்கப்படுவார்களா?". (ஸபஃ : 32,33).

மறுமை நாளில் வழிகெடுத்த அழைப்பாளர்கள், தலைவர்கள் மீது அவர்களது பாவங்களும், அவர்கள் அறிவின்றி வழிகெடுத்தவர்களுடைய பாவங்களும் சேர்த்தே சுமத்தப்படுவது அல்லாஹ்வின் பரிபூரண் நீதமாகும். அல்லாஹ் கூறுகின்றான் : "மறுமை நாளில் தங்கள் பாவச்சுமைகளை இவர்கள் சுமப்பதுடன், அறிவின்றி இவர்கள் வழிகெடுத்த மற்றவர்களின் பாவச்சுமைகளையும் இவர்களே சுமப்பார்கள். (இவ்வாறு இருவரின் பாவச்சுமையை) இவர்களே சுமப்பது மிகக் கெட்டதாகும்". (அந்நஹ்லு : 25).

இஸ்லாம் மனிதனுடைய ஈருலக உரிமைகளையும் பொறுப்பேற்றுள்ளது. அவ்வாறு இஸ்லாம் பொறுப்பேற்று மக்களுக்குத் தெளிவுபடுத்திய உரிமை, கடமைகளில் அல்லாஹ்விற்கு மனிதன் செய்ய வேண்டியதும், மனிதனுக்கு அல்லாஹ் செய்வதாகத் தனக்குத் தானே பொறுப்பேற்றுள்ளதுமான உரிமை, கடமைகள்தான் மிக மகத்தானதாகும். முஆத் பின் ஜபல் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள்:"(ஒரு முறை) நான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பின்னால் (வாகனத்தில்) இருந்தேன். அப்போது நபியவர்கள், "முஆத்" என்று அழைத்தார்கள். நான், "அல்லாஹ்வின் தூதரே! இதோ கீழ்ப்படியக் காத்திருக்கிறேன்(கூறுங்கள்)" என்றேன். இவ்வாறு மூன்று முறை அழைத்தார்கள். பின்பு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "அடியார்கள் மீது அல்லாஹ்வுக்குள்ள உரிமை என்ன என்பதை நீர் அறிவீரா?" என்று கேட்டார்கள். நான், "அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே நன்கறிந்தவர்கள்" என்று பதிலளித்தேன். நபியவர்கள், "அடியார்கள் மீது அல்லாஹ்வுக்குள்ள உரிமை என்னவென்றால், அவர்கள் அவனையே வழிபட வேண்டும்; அவனுக்கு எதையும் இணை கற்பிக்கக் கூடாது" என்றார்கள். இன்னும் சிறிது தூரம் சென்ற பின் "முஆத்" என்று அழைத்தார்கள். நான், "அல்லாஹ்வின் தூதரே! இதோ கீழ்ப்படியக் காத்திருக்கிறேன்(கூறுங்கள்)" என்றேன். அவர்கள், "அவ்வாறு (அல்லாஹ்வையே வழிபட்டு அவனுக்கு இணைவைக்காமல்) செயல்பட்டுவரும் அடியார்களுக்கு அல்லாஹ்வின் மீதுள்ள உரிமை என்ன என்பதை நீர் அறிவீரா?" என்று கேட்டார்கள். நான், "அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே நன்கறிந்தவர்கள்" என்று பதிலளித்தேன். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "(இத்தகைய) அடியார்களை அவன் (மறுமையில்) வேதனை செய்யாமல் இருப்பது தான்" என்று சொன்னார்கள்". ஆதாரம் : புஹாரி 6840.

மேலும் இஸ்லாம் மனிதனுடைய சத்திய மார்க்கம், அவனது சந்ததி, உடமை, மானம் ஆகியவற்றையும் பாதுகாப்பதைப் பொறுப்பெடுத்துள்ளது. நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் கூறினார்கள் : "இந்த நாளும், இந்த மாதமும், இந்த இடமும் எவ்வாறு புனிதமானதோ அதேபோன்று உங்களது உயிர், உடமைகள், மானங்களையும் அல்லாஹ் உங்கள் மீது புனிதமாக்கி ஹராமாக்கியுள்ளான்". ஆதாரம் : புஹாரி 6501. இப்பாரிய உறுதிமொழியை நபியவர்கள் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் ஒன்றுகூடிய அந்த இறுதி ஹஜ் மாநாட்டிலேயே பிரகடனம் செய்தார்கள். இதே விடயத்தை பெருநாள் தினத்திலும் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறினார்கள்.

இஸ்லாம் மனிதனது சுயவிருப்புக்கள், செயற்பாடுகள், நடவடிக்கைகளுக்கு அவனையே பொறுப்பாக்கியுள்ளது. அல்லாஹ் கூறுகின்றான் : " ஒவ்வொரு மனிதனின் (செயலைப் பற்றிய விரிவான தினசரிக்) குறிப்பை அவனுடைய கழுத்தில் மாட்டியிருக்கிறோம். மறுமை நாளில் அதை அவனுக்கு ஒரு புத்தகமாக எடுத்துக் கொடுப்போம். அவன் அதை விரிக்கப்பட்டதாகப் பார்ப்பான்(அச்சமயம் அவனை நோக்கி) “இன்றைய தினம் உன் கணக்கைப் பார்க்க நீயே போதுமானவன். ஆகவே, உன் (குறிப்புப்) புத்தகத்தை நீ படித்துப் பார்" (என்று கூறுவோம்.). (அல்இஸ்ராஃ : 13). அதாவது; இவன் நன்மையோ தீமையோ எதைச் செய்தாலும் அதை பிறருக்கு சுமத்தாமல் அவனுடனேயே இருக்கச் செய்வான். பிறருடைய செயலுக்காக இவன் விசாரிக்கப்படவும் மாட்டான். இவனுடைய செயலுக்காக பிறர் விசாரிக்கப்படவும் மாட்டார்கள். அல்லாஹ் கூறுகின்றான் : "மனிதனே! நீ உன் இறைவனிடம் செல்லும் வரை (நன்மையோ தீமையோ பல வேலைகளில் ஈடுபட்டு) சிரமத்துடன் முயற்சி செய்துகொண்டே இருக்கிறாய். (பின்னர், மறுமையில்) அவனை நீ சந்திக்கிறாய்". (அல்இன்ஷிகாக் : 6). மேலும் அல்லாஹ்

கூறினான் : "எவர் ஸாலிஹான (நல்ல) அமல் செய்கிறாரோ (அது) அவருக்கே நன்மையாகும், எவர் பாவம் செய்கிறாரோ (அது) அவருக்கே கேடாகும் - அன்றியும் உம்முடைய இறைவன் (தன்) அடியார்களுக்குச் சிறிதும் அநியாயம் செய்பவன் அல்லன்". (புஸ்ஸிலத் : 46).
இஸ்லாம், ஒரு மனிதன் தனக்கோ, பிறருக்கோ ஏற்படுத்தும் எந்தத் தீங்கிற்கும் அவனையே பொறுப்பாக்கியுள்ளது. அல்லாஹ் கூறினான் : "எவன் பாவத்தைச் சம்பாதிக்கிறானோ அவன் நிச்சயமாகத் தனக்குக் கேடாகவே அதைச் சம்பாதிக்கிறான். அல்லாஹ் (அனைத்தையும்) மிக அறிந்தவனாக, ஞானமுடையவனாக இருக்கிறான்". (அல்நிஸா.ஃ : 111). மேலும் அல்லாஹ் கூறுகின்றான்: "இதன் காரணமாகவே, 'நிச்சயமாக எவன் கொலைக்குப் பகரமாகவோ அல்லது பூமியில் குழப்பம் விளைவித்தற்காகவோ அன்றி மற்றொரு ஆன்மாவைக் கொலை செய்கிறானோ அவன் மனிதர்கள் அனைவரையும் கொலை செய்தவன் போன்றாவான்' என்றும், 'எவன் ஒருவன் அதை வாழவைக்கின்றானோ அவன் மனிதர்கள் அனைவரையும் வாழவைத்தவன் போலாவான்' என்றும் இஸ்ராஈலின் சந்ததியினர் மீது நாம் விதித்தோம். (அல்மாஇதா : 32). மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "அநியாயமாக எந்தவொரு ஆத்மா கொலை செய்யப்பட்டாலும் அப்பாவத்தின் ஒரு பங்கு ஆதமுடைய முதல் மகனைச்சேராமல் இருப்பதில்லை. ஏனெனில் அவன்தான் முதலில் கொலையை அறிமுகப்படுத்தியவனாவான்". ஆதாரம் : முஸ்லிம் 5150.

## 18. நற்செயல், பொறுப்பு, கூலி, நன்மைகளில் இஸ்லாம் ஆண், பெண் இரு பாலரையும் சமமாகவே வைத்துள்ளது.

நற்செயல், பொறுப்பு, கூலி, நன்மைகளில் இஸ்லாம் ஆண், பெண் இரு பாலரையும் சமமாகவே வைத்துள்ளது. அல்லாஹ் கூறுகின்றான் : "ஆகவே, ஆணாயினும் பெண்ணாயினும் எவர்கள் மெய்யாகவே நம்பிக்கை கொண்டு நற்செயல்களைச் செய்கிறார்களோ அவர்கள்தான் சொர்க்கம் செல்வார்கள். அவர்கள் அற்ப அளவும் அநீதி இழைக்கப்பட மாட்டார்கள்". (அந்நிஸா.ஃ : 124). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "ஆணாயினும், பெண்ணாயினும் நம்பிக்கை கொண்டு நற்செயல்களை எவர் செய்தாலும் நிச்சயமாக நாம் அவர்களை (இம்மையில்) நல்ல வாழ்க்கையாக வாழச் செய்வோம். மேலும், (மறுமையிலோ) அவர்கள் செய்து கொண்டிருந்ததைவிட மிக்க அழகான கூலியையே நிச்சயமாக நாம் அவர்களுக்குக் கொடுப்போம்". (அந்நஹ்லு : 97). மேலும் அல்லாஹ் கூறுகின்றான்: "எவனேனும் தீங்கு செய்தால், அதைப் போன்ற தீங்கே தவிர (அதற்கதிகமாய்) அவனுக்குக் கூலியாகக் கொடுக்கப்பட மாட்டாது. ஆணோ பெண்ணோ எவர்கள் நம்பிக்கை கொண்டு நற்செயல்களைச் செய்கிறார்களோ, அவர்கள் சொர்க்கத்தில் நுழைந்து விடுவார்கள். அதில் கணக்கின்றி (அதிகமாகவும்) கொடுக்கப்படுவார்கள்". (ஃகாபிர் : 40). மேலும் அல்லாஹ் கூறுகின்றான்: "நிச்சயமாக முஸ்லிம் ஆண்களும் பெண்களும், நம்பிக்கையுடைய ஆண்களும் பெண்களும், (இறைவனுக்கும் அவனுடைய தூதருக்கும்) கீழ்ப்படியும் ஆண்களும் பெண்களும், உண்மையே கூறும் ஆண்களும் பெண்களும், பொறுமையுள்ள ஆண்களும் பெண்களும், (அல்லாஹ்வுக்குப்) பயந்து நடக்கும் ஆண்களும் பெண்களும், தானம் செய்யும் ஆண்களும் பெண்களும், நோன்பு நோற்கும் ஆண்களும் பெண்களும், தமது கற்புகளைக் காத்துக் கொள்ளும் ஆண்களும் பெண்களும், அல்லாஹ்வுடைய திருப்பெயரை அதிகமாக நினைவுகூரும் ஆண்களும் பெண்களும் ஆகிய இவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான கூலியையும் தயார்படுத்தி வைத்திருக்கிறான்". (அல்அஹ்ஸாப் : 35).

## 19. இஸ்லாம் பெண்களை கௌரவப்படுத்தி, அவர்களை ஆண்களுடைய உடன்பிறந்த சகோதரிகளைப் போன்று ஆக்கியுள்ளது. வசதியிருக்கும் போது அவர்களுக்கு செலவளிப்பதைக் கடமையாக்கியுள்ளது.

# எனவே பெண்பிள்ளைக்குத் தந்தையும், தாய்க்கு பருவமடைந்த வசதியுள்ள மகனும், மனைவிக்கு கணவனும் செலவு செய்தல் அவசியமாகும்.

இஸ்லாம் பெண்களை ஆண்களைப் போன்று அவர்களுடைய உடன்பிறந்த சகோதரிகளாக ஆக்கியுள்ளது. நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் கூறினார்கள்: "நிச்சயமாக பெண்கள் ஆண்களின் உடன்பிறந்த சகோதரிகளைப் போன்றாகும்." ஆதாரம் : திர்மிதீ(113)

வசதியிருக்கும் போது தாய்க்கு செலவு செய்வதை மகன் மீது கடமையாக்கி இருப்பதும் இஸ்லாம் பெண்களை கௌரவப்படுத்தியதன் ஓர் அம்சமாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் கூறினார்கள்: "உயர்ந்த கொடுக்கும் கரத்தால் உனது தாய், தந்தை, சகோதரி, சகோதரன், பின்னர் உனக்கு நெருக்கமானவர்களையும் தர்மத்தில் முற்படுத்துவீராக". ஆதாரம் : அஹ்மத் (7105). பெற்றோருக்கு இஸ்லாம் வழங்கியுள்ள இடம் பற்றி 29ம் இலக்கத்தில் கூறப்படும் இன்ஷா அல்லாஹ்.

அதே போன்று தான் வசதியிருக்கும் போது மனைவிக்கு செலவு செய்வதை கணவன் மீது கடமையாக்கி இருப்பதும் இஸ்லாம் பெண்களை கௌரவப்படுத்தியதன் ஓர் அம்சமாகும். அல்லாஹ் கூறுகின்றான்: "வசதியுள்ளவர் தமது வசதிக்கேற்ப செலவிடட்டும். யாருக்கு வாழ்வாதாரம் அளவோடு வழங்கப்பட்டுள்ளதோ அவர் அல்லாஹ் தனக்கு வழங்கியவற்றிலிருந்து செலவிட்டும். அல்லாஹ் தான் வழங்கியதற்கு மேல் எந்தவோர் ஆத்மாவையும் சிரமப்படுத்த மாட்டான். அல்லாஹ் கஷ்டத்தின் பின் இலகுவை விரைவில் ஏற்படுத்துவான்". (அத்தலாக் : 7). கணவன் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமை என்ன? என ஒரு மனிதர் நபியவர்களிடம் வினவிய போது "நீ உணவருந்தும் போது அவளுக்கும் உணவளிக்க வேண்டும், நீ அணியும் போது அவளுக்கும் ஆடை அணியக் கொடுக்க வேண்டும். முகத்தில் அடிக்கக் கூடாது. அவளை அசிங்கப்படுத்தவும் கூடாது" என்றார்கள். ஆதாரம் : அஹ்மத் (20013). கணவன்மார் மனைவியருக்குச் செய்ய வேண்டிய சில கடமைகளைத் தெளிவுபடுத்தும் போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வரும் கூறினார்கள் : "அவர்களுக்கு முறைப்படி உணவும், ஆடையும் கொடுப்பது உங்கள் மீது கடமையாகும்". ஆதாரம் : முஸ்லிம் (1218). மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் கூறினார்கள் : "தனது செலவுக்குக் கீழ் இருப்பவர்களை (முறைப்படி கவனிக்காமல்) வீணடிப்பதே ஒரு மனிதனுக்கு பாவத்தால் போதுமானது". ஆதாரம் : அஹ்மத் (6495). இமாம் கத்தாபீ (ரஹ்) கூறுகின்றார் : (இதன் அர்த்தம் என்னவெனில் உனது குடும்பச் செலவு போக மீதமில்லாத நிலையில் நன்மை எதிர்பார்த்து நீ தர்மம் செய்யாதே என்று தர்மம் செய்பவரைப் பார்த்து நபியவர்கள் கூறியதைப் போன்றாகும். அவ்வாறு இவர்களுக்கே போதாமலிருக்க, இவர்களை வீணடித்து விட்டு தர்மம் செய்வதால் அது பாவமாகவே மாறிவிடுகின்றது).

அதேபோன்று தான் பெண்பிள்ளைக்கு செலவு செய்வதை தந்தை மீது கடமையாக்கி இருப்பதும் இஸ்லாம் பெண்களை கௌரவப்படுத்தியதன் ஓர் அம்சமாகும். அல்லாஹ் கூறுகின்றான்: "பால்குடியை நிறைவு செய்ய விரும்புகின்ற (கண)வருக்காக (தலாக் விடப்பட்ட) தாய்மார்கள் தம் குழந்தைகளுக்கு இரண்டு வருடங்கள் பூரணமாகப் பாலூட்ட வேண்டும். (பாலூட்டும் தாய்மார்களாகிய) அவர்களுக்கு முறைப்படி உணவளிப்பதும், அவர்களுக்கு உடையளிப்பதும் பிள்ளையின் தந்தை மீது கடமையாகும்". (அல்பகரா : 233). பிள்ளையின் தந்தை அப்பிள்ளையின் வளர்ச்சியுடன் தொடர்புடையவர்களுக்கு உணவு, உடைகள் அளிப்பது கடமை என்பதை அல்லாஹ் தெளிவு படுத்தியுள்ளான். மேலும் கூறுகின்றான் : "அவர்கள் உங்களுக்காக (உங்கள் குழந்தைகளுக்குப்) பாலூட்டினால் அவர்களுக்குரிய கூலிகளை அவர்களுக்கு நீங்கள் வழங்கி விடுங்கள்". (அத்தலாக் : 6). பாலூட்டுவதற்கான கூலியை அல்லாஹ் தந்தை மீது கடமையாக்கியிருப்பது அவர் பிள்ளைகளுக்கு செலவு செய்ய வேண்டும் என்பதையே அறிவிக்கின்றது. பிள்ளை எனும் போது ஆண், பெண் இரு பாலரும் உள்ளடங்குவர். மனைவி, குழந்தைகள் அனைவருக்கும் செலவளிப்பது தந்தை மீது கடமை என்பதை பின்வரும் நபிமொழியில் காணலாம் : ஆஇஷா ரலியல்லாஹு அன்ஹா கூறுகின்றார் : அபூ ஸுப்யான் கஞ்சத்தனமுடையவர், அவருடைய பணத்திலிருந்து எடுக்கும் தேவை எனக்குள்ளது என அவரது மனைவி ஹின்து நபியவர்களிடம் முறைப்பட்டார்கள். அப்போது நபியவர்கள் : "உனக்கும், உனது பிள்ளைக்கும் தேவையானதை முறைப்படி எடுத்துக் கொள்" என்று

கூறினார்கள். ஆதாரம் : புஹாரி (5364). பெண்பிள்ளைகள், சகோதரிகளுக்கு செலவு செய்வதன் சிறப்பையும் நபியவர்கள் கூறியுள்ளர்கள் : "யார் இரண்டு அல்லது மூன்று பெண்பிள்ளைகள், அல்லது சகோதரிகளை அவர்கள் (திருமணம் செய்து) தனியாகும் வரை, அல்லது இவர் மரணிக்கும் வரை பராமரிக்கின்றாரோ நானும் அவரும் மறுமையில் இவ்வாறிருப்போம்" எனக்கூறி தனது ஆள்காட்டி விரலையும், நடுவிரலையும் சுட்டிக்காட்டினார்கள்". ஆதாரம் : அஹ்மத் (12498), ஸில்ஸிலா ஸஹீஹா (296).

## 20. மரணம் ஒரு நிரந்தரமான அழிவல்ல, மாறாக அது செயல் உலகிலிருந்து கூலி வழங்கும் உலகிற்கான ஒரு நகர்வாகும். மரணம் உடல், உயிர் இரண்டையும் ஆட்கொள்கின்றது. உயிரின் மரணம் என்பது அவ்வுயிர் உடலை விட்டும் பிரிவதாகும். பின்பு மறுமையில் மீளெழுப்பட்டதும் அதே உடலுக்குஅது மீண்டுவிடும். மரணத்தின் பின் அவ் உயிர் இன்னொரு உடலுக்கு நகர மாட்டாது, இவ்வுலகிலேயே பிறிதொரு உடலில் மறு ஜென்மமெடுக்கவும் மாட்டாது.

மரணம் ஒரு நிரந்தரமான அழிவல்ல. அல்லாஹ் கூறுகின்றான் : "(நபியே!) கூறுவீராக: “உங்கள் மீது (உங்கள் இறைவனால்) சாட்டப்பட்டிருக்கும் ‘மலக்குல் மவ்த்து' தான் உங்கள் உயிரைக் கைப்பற்றுவார். பின்னர், உங்கள் இறைவனிடமே நீங்கள் கொண்டு வரப்படுவீர்கள்". (அஸ்ஸஜ்தா : 11). மரணம் உடல், உயிர் இரண்டையும் ஆட்கொள்கின்றது. உயிரின் மரணம் என்பது அவ்வுயிர் உடலை விட்டும் பிரிவதாகும். பின்பு மறுமையில் மீளெழுப்பட்டதும் அதே உடலுக்குஅது மீண்டுவிடும். அல்லாஹ் கூறுகின்றான் : "மனிதர்கள் இறக்கும்பொழுதும், இறக்காமல் நித்திரையில் இருக்கும் பொழுதும் அல்லாஹ்வே அவர்களுடைய உயிரைக் கைப்பற்றுகிறான். பின்னர், எவர்கள் மீது மரணம் விதிக்கப்பட்டதோ அவர்களுடைய உயிரை(த் தன்னிடமே) நிறுத்திக் கொள்கிறான். மற்றவர்க(ளின் உயிர்க)ளை, குறிப்பிடப்பட்ட காலம்வரை வாழ அவன் அவர்களிடமே அனுப்பிவிடுகிறான். சிந்திக்கக்கூடிய மக்களுக்கு, நிச்சயமாக இதில் பல படிப்பினைகள் இருக்கின்றன". (அஸ்ஸுமர் : 42). மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "உயிர் கைப்பற்றப்படும் போது பார்வையும் அதனைத் துயர்கின்றது". ஆதாரம் : முஸ்லிம் 920. மரணத்தின் பின் மனிதன் செயல் உலகிலிருந்து கூலி வழங்கும் உலகிற்கு நகர்கின்றான். அல்லாஹ் கூறுகின்றான் : "இறந்த பின்னர் நீங்கள் அனைவரும் அவனிடமே செல்ல வேண்டியதிருக்கிறது. அல்லாஹ்வுடைய இவ்வாக்குறுதி உண்மையானதே! நிச்சயமாக அவன்தான் படைப்புகளை முதல் தடவையும் உற்பத்தி செய்கிறான். அவர்களில் நம்பிக்கைகொண்டு நற்செயல்களை செய்தவர்களுக்கு நீதமாக (நற்)கூலி கொடுப்பதற்காக (இறந்த பின் மறுமுறையும்) அவர்களை உயிர்ப்பிக்கிறான். நிராகரித்தோருக்கு அவர்கள் நிராகரித்துக் கொண்டிருந்ததன் காரணமாக கொதித்த பானமும், நோவினை தரும் வேதனையும் உண்டு." (யூனுஸ் : 4).

மரணத்தின் பின் அவ் உயிர் இன்னொரு உடலுக்கு நகர மாட்டாது. மறுபிறவிக் கோட்பாட்டிற்கு பகுத்தறிவு ரீதியாகவோ, உணர்வு ரீதியாகவோ எவ்வித சான்றுமில்லை. நபிமார்களுடைய வார்த்தைகளில் கூட இக்கோட்பாட்டிற்கு எவ்வித சான்றுமில்லை.

# 21. இறைநம்பிக்கையின் பிரதான அம்சங்களை விசுவாசிக்கும் படி இஸ்லாம் அழைக்கின்றது. அவை : அல்லாஹ்வை விசுவாசித்தல், அவனது வானவர்களை விசுவாசித்தல், தௌராத், இன்ஜீல், ஸபூர்- (இவை மாற்றப்பட முன்னால்), குர்ஆன் போன்ற வேதங்களை விசுவாசித்தல், இறுதித் தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கடைசி தூதர்என்பது உட்பட அனைத்து நபிமார்கள், இறைத்தூதர்களை விசுவாசித்தல், மறுமை நாளை விசுவாசித்தல், விதியை விசுவாசித்தல். மறுமையில்லாமல் இவ்வுலக வாழ்க்கைதான் இறுதி முடிவென்றால் வாழ்க்கை வெறும் வீணாகவும், விளையாட்டாகவும் தான் இருக்கும் என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

அனைத்து நபிமார்களும், இறைத்தூதர்களும் அழைப்பு விடுத்த இறைநம்பிக்கையின் பிரதான அடிப்படைகளை விசுவாசிக்கும் படி இஸ்லாம் அழைக்கின்றது. அவை :
முதலாவது : அல்லாஹ்தான் இரட்சகன், படைப்பாளன், வாழ்வாதாரம் அளிப்பவன், திட்டமிட்டு நிர்வகிப்பவன் என விசுவாசித்தல், மேலும் அவன் மாத்திரம் தான் உண்மையாக வணங்கப்படத் தகுதியானவன். அவனல்லாது வணங்கப்படும் அனைத்தும் பொய்யானவையாகும். வணக்கத்திற்கு அவன்தான் தகுதியானவன். அவனுக்கு செலுத்தப்படும் வணக்கம் மாத்திரம்தான் செல்லுபடியாகும். இதன் தெளிவான ஆதாரங்கள் 8ம் இலக்கத்தில் கூறப்பட்டுள்ளன.
இப்பிரதான அடிப்படைகளை அல்குர்ஆனின் பலதரப்பட்ட வசனங்களில் அல்லாஹ் கூறியுள்ளான் : "(மனிதர்களே! நம்) தூதர், தம் இறைவனிடமிருந்து தமக்கு அருளப்பட்ட (வேதத்)தை மெய்யாகவே நம்பிக்கை கொள்கிறார். (அவ்வாறே மற்ற) நம்பிக்கையாளர்களும் (நம்பிக்கை கொள்கின்றனர். இவர்கள்) அனைவரும் அல்லாஹ்வையும், அவனுடைய வானவர்களையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும் நம்பிக்கை கொள்கின்றனர். தவிர, “அவனுடைய தூதர்களில் எவரையும் (தூதர் அல்ல என்று) நாங்கள் பிரித்து (நிராகரித்து)விட மாட்டோம்" என்றும், “(இறைவனே! உன் வேத வசனங்களை) நாங்கள் செவியுற்றோம். (உன் கட்டளைக்கு) நாங்கள் கீழ்ப்படிந்தோம். எங்கள் இறைவனே! நாங்கள் உனது மன்னிப்பைக் கோருகிறோம். உன்னிடம்தான் நாங்கள் சேர வேண்டியதிருக்கிறது" என்றும் கூறுகிறார்கள்". (அல்பகரா : 285). மேலும் அல்லாஹ் கூறுகின்றான்: "மேற்கிலோ கிழக்கிலோ உங்கள் முகங்களை நீங்கள் திருப்பி விடுவதனால் மட்டும் நன்மை செய்தவர்களாக ஆகிவிடமாட்டீர்கள். (உங்களில்) எவர் அல்லாஹ்வையும், இறுதி

நாளையும் (மறுமை நாளையும்), வானவர்களையும், வேதங்களையும், நபிமார்களையும், நிச்சயமாக நம்பிக்கை கொண்டு தனக்கு விருப்பமுள்ள பொருளை அல்லாஹ்வுக்காக உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், வழிப் போக்கர்களுக்கும், யாசகர்களுக்கும், விடுதலையை விரும்பிய (அடிமைகள், கடன்காரர்கள் ஆகிய)வர்களுக்கும் கொடுத்து (உதவி செய்து,) தொழுகையையும் கடைப்பிடித்து தொழுது, ஸகாத்தும் கொடுத்து வருகிறாரோ அவரும்; வாக்குறுதி செய்த சமயத்தில் தங்கள் வாக்குறுதியை(ச் சரிவர) நிறைவேற்றுபவர்களும்; கடினமான வறுமையிலும், நோய் நொடிகளிலும், கடுமையான போர் நேரத்திலும் பொறுமையைக் கைக்கொண்டவர்களும் ஆகிய (இவர்கள்தான் நல்லோர்கள்.) இவர்கள்தான் (அல்லாஹ்வை நம்பிக்கை கொள்வதில்) உண்மையானவர்கள். இவர்கள்தான் இறையச்சமுடையவர்கள்!". (அல்பகரா : 177). இவ் அடிப்படைகளை ஏற்கும்படி அழைப்பு விடுத்த அல்லாஹ் அவற்றை நிராகரிப்போர் வெகுதூரமான வழிகேட்டில்சென்று விட்டதாகவும் தெளிவாகக் கூறியுள்ளான் : "நம்பிக்கையாளர்களே! நீங்கள் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும், அவன் தன்தூதர் மீது அருளிய இவ்வேதத்தையும், இதற்கு முன்னர் அவன் அருளிய வேதங்களையும் நம்பிக்கை கொள்ளுங்கள். எவன் அல்லாஹ்வையும், அவனுடைய வானவர்களையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும், இறுதி நாளையும் நிராகரிக்கிறானோ அவன் நிச்சயமாக வெகு தூரமான வழிகேட்டில்தான் செல்கிறான்". (அல்நிஸா ஃ : 136). உமர் பின் அல்கத்தாப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் நபிமொழியில் பின்வருமாறு உள்ளது : "ஒரு நாள் நாங்கள் எல்லோரும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் உட்கார்ந்திருந்தோம். அப்போது எங்கள் முன் ஒருவர் வந்து நின்றார். அவருடைய ஆடைகள் மிகைத்த வெளுமையுடன் காணப்பட்டன. அவருடைய தலைமுடி மிகைத்த கருமை நிறத்துடன் காணப்பட்டது. பயணம் செய்ததற்கான அறிகுறிகள் எதுவும் அவரிடம் காணப்படவில்லை. எங்களில் யாருக்கும் அவரைத் தெரியாது. அவர் நடந்து சென்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முன் அமர்ந்தார். அவரது முழங்கால்களை நபியவர்களின் முழங்கால்களுடன் சேர்த்தும் இரு கைகளைக் தனது கால்களின் மீது வைத்தும் அமர்ந்தார். பின்னர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி 'முஹம்மதே, இஸ்லாத்தைப் பற்றி எனக்குச் சொல்லுங்கள்" என்றார். நபியவர்கள் 'இஸ்லாம் என்பது உண்மையாக வணங்கப்படத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லையென்றும், முஹம்மது இறைவனின் தூதர் என்றும் சாட்சியம் கூறுவது, தொழுகையை நிறை வேற்றுவது, ஸகாத் கொடுப்பது, ரமழான் மாதத்தில் நோன்பு நோற்பது, உங்களால் முடிந்தால் ஹஜ் செய்வது இவைகளாகும் என்றார்கள். இதற்கு அவர் நீங்கள் சரியாகவே சொன்னீர்கள் என்றார். நாங்கள் அவர் அப்படி வினவியது குறித்தும் அவரே உண்மைப்படுத்தியது குறித்தும் ஆச்சரியம் கொண்டோம். பின்னரவர் 'ஈமான் குறித்து எனக்குச் சொல்லுங்கள்' என்றார். 'அது அல்லாஹ்வின் மீதும் அவனது வானவர்கள், அவனது வேதங்கள், அவனது தூதர்கள், இறுதி நாள் மீதும் நம்பிக்கை கொள்வதும், நல்லவைகளும் தீயவைகளும் அல்லாஹ்வின் நாட்டப்படியே நடக்கும் என்றும் நம்புவதுமாகும்" என்பதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பதில் அளித்தார்கள். இதைக் கேட்ட அவர் நீங்கள் சரியாகவே சொன்னீர்கள் என்றார். தொடர்ந்து அவர் 'இஹ்ஸான் (உளத்தூய்மை) பற்றி எனக்குச் சொல்லுங்கள்' என்றார். 'நீங்கள் அல்லாஹ்வை பார்க்காத போதும் அவனை நேரில் பார்ப்பது போன்று வணங்குவதாகும். நீங்கள் அவனைப் பார்க்காத போதிலும் அவன் மெய்யாகவே உங்களைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றான்" எனச் சொன்னார்கள்". ஆதாரம் : முஸ்லிம் 8. இந்நபிமொழியில் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் நபியவர்களிடம் வந்து மார்க்கத்தின் படித்தரங்களாகிய இஸ்லாம், ஈமான், இஹ்ஸான் என்பன பற்றி வினவிய போது நபியவர்கள் அதற்குரிய பதில்களை வழங்கினார்கள். பின்னர் நபியவர்கள் தனது தோழர்களைப் பார்த்து, வந்தவர் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் என்றும், அவர் இவர்களுக்கு மார்க்கத்தைக் கற்றுக்கொடுக்க வந்தார் என்றும் கூறினார்கள். இதுதான் இஸ்லாமாகும். இது இறைத்தூதாகும், இதனை ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு எத்திவைக்க, அதனை நபியவர்கள் தமது தோழர்களுக்கு எத்தி வைக்க, தோழர்கள் அதனைப் பாதுகாத்து பின்னால் வருவோருக்கு எத்திவைத்தார்கள்.

இரண்டாவது : வானவர்களை விசுவாசித்தல், இவர்கள் நமது கண்ணுக்குப் புலப்படாத ஒரு படைப்பினம், அல்லாஹ் அவர்களை குறிப்பிட்ட ஒரு தோற்றத்தில் படைத்து, பாரிய பொறுப்புக்களையும் கொடுத்துள்ளான். நபிமார்கள், இறைத்தூதர்களுக்கு இறைச்செய்திகளை எத்திவைப்பதே இவர்கள் செய்யும் மகத்தான பணியாகும்.

வானவர்களில் (மலக்குகள்) மிக கண்ணியத்திற்குரிய உயர்ந்தவர் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களாகும். இறைத்தூதர்களுக்கு அன்னார் இறைச்செய்திகளைக் கொண்டுவருவதற்குப் பின்வரும் வசனம் சான்று பகர்கின்றது : "'நிச்சயமாக (உண்மையான) வணக்கத்திற்குரியவன் என்னைத் தவிர வேறெவனுமில்லை; நீங்கள் எனக்கே பயப்படுங்கள் என்று எச்சரிக்கை செய்யுங்கள்' என தனது கட்டளையை வஹி மூலம் கொடுத்து தன் அடியார்களில் தான் விரும்பியவர்களிடம் வானவர்களை அவன் இறக்கி வைக்கிறான்". (அந்நஹ்லு : 2). மேலும் அல்லாஹ் கூறுகின்றான்: "நிச்சயமாக இது அகிலத்தாரின் இறைவனால்தான் அருளப்பட்டது. (இறை கட்டளைப் பிரகாரம்)ரூஹுல் அமீன் (எனும் ஜிப்ரயீல்) இதைக் கொண்டு இறங்கினார் (மனிதர்களுக்கு) நீர் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காக உமது உள்ளத்தில் (இறக்கிவைத்தார்), தெளிவான அரபி மொழியில் (இது இறக்கப்பட்டுள்ளது). நிச்சயமாக இதைப் பற்றிய முன்னறிவிப்பு முன்னுள்ள வேதங்களிலும் இருக்கிறது". (அஷ்ஷுஅரா ஃ : 192- 196).

மூன்றாவது : தௌராத், இன்ஜீல், ஸபூர்- இவை மாற்றப்பட முன்னால்- குர்ஆன் போன்ற இறை வேதங்களை விசுவாசித்தல். அல்லாஹ் கூறுகின்றான் : "நம்பிக்கையாளர்களே! நீங்கள் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும், அவன் தன்தூதர் மீது அருளிய இவ்வேதத்தையும், இதற்கு முன்னர் அவன் அருளிய வேதங்களையும் நம்பிக்கை கொள்ளுங்கள். எவன் அல்லாஹ்வையும், அவனுடைய வானவர்களையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும், இறுதி நாளையும் நிராகரிக்கிறானோ அவன் நிச்சயமாக வெகு தூரமான வழிகேட்டில்தான் செல்கிறான்". (அந்நிஸா : 136). மேலும் அல்லாஹ் கூறுகின்றான்: "(நபியே!) இதற்கு முன்னுள்ள (வேதங்கள் யா)வற்றையும் உறுதிப்படுத்துகின்ற (முற்றிலும்) உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தை அவன்தான் உம்மீது இறக்கிவைத்தான். தௌராத்தையும் இன்ஜீலையும் அவனே இறக்கிவைத்தான். முன்னர் மனிதர்களுக்கு நேர்வழி காட்டுவதற்காக (வேதங்களை அவனே இறக்கிவைத்தான்). மேலும் (சத்தியத்தையும் அசத்தியத்தையும்) பிரித்தறிவிக்கக்கூடிய வழிமுறையையும் இறக்கியுள்ளான். ஆகவே, எவர்கள் அல்லாஹ்வுடைய (அவ்)வசனங்களை நிராகரிக்கிறார்களோ அவர்களுக்கு நிச்சயமாக கடினமான வேதனையுண்டு. அல்லாஹ் (அனைவரையும்) மிகைத்தவன், (தீயவர்களைத்) தண்டிப்பவன்". (ஆல இம்ரான் : 3,4). மேலும் அல்லாஹ் கூறுகின்றான்: "(மனிதர்களே! நம்) தூதர், தம் இறைவனிடமிருந்து தமக்கு அருளப்பட்ட (வேதத்)தை மெய்யாகவே நம்பிக்கை கொள்கிறார். (அவ்வாறே மற்ற) நம்பிக்கையாளர்களும் (நம்பிக்கை கொள்கின்றனர். இவர்கள்) அனைவரும் அல்லாஹ்வையும், அவனுடைய வானவர்களையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும் நம்பிக்கை கொள்கின்றனர். தவிர, “அவனுடைய தூதர்களில் எவரையும் (தூதர் அல்ல என்று) நாங்கள் பிரித்து (நிராகரித்து)விட மாட்டோம்" என்றும், “(இறைவனே! உன் வேத வசனங்களை) நாங்கள் செவியுற்றோம். (உன் கட்டளைக்கு) நாங்கள் கீழ்ப்படிந்தோம். எங்கள் இறைவனே! நாங்கள் உனது மன்னிப்பைக் கோருகிறோம். உன்னிடம்தான் நாங்கள் சேர வேண்டியதிருக்கிறது" என்றும் கூறுகிறார்கள்". (அல்பகரா : 285). மேலும் அல்லாஹ் கூறினான் : ""அல்லாஹ்வையும், எங்கள் மீது அருளப்பட்ட (வேதத்)தையும், இன்னும் இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், யஃகூப், அவர்களின் சந்ததியர் ஆகியோர் மீது அருளப்பட்டவற்றையும், இன்னும் மூஸா, ஈஸா இன்னும் மற்ற நபிமார்களுக்கு அவர்களுடைய இறைவனிடமிருந்து அருளப்பட்டவற்றையும் நாங்கள் விசவாசங் கொள்கிறோம். அவர்களில் எவரொருவரையும் பிரித்து வேற்றுமை பாராட்டமாட்டோம்;. நாங்கள் அவனுக்கே (முற்றிலும் சரணடையும்) முஸ்லிம்கள் ஆவோம்" என்று (நபியே!) நீர் கூறுவீராக". (ஆல இம்ரான் : 84).

நான்காவது : அனைத்து நபிமார்கள், இறைத்தூதர்களையும் விசுவாசித்தல். எனவே அவர்கள் அனைவரையும் விசுவாசித்து, அனைவரும் அல்லாஹ்வினால் அவரவர் சமூகத்திற்கு அவனது தூதுத்துவத்தையும், மார்க்கத்தையும், சட்டதிட்டங்களையும் எத்திவைப்பதற்காக அனுப்பப்பட்டவர்கள் என்பதை உறுதியாக நம்பிக்கை கொள்ளல் வேண்டும். அல்லாஹ் கூறுகின்றான் : "(நம்பிக்கையாளர்களே!) நீங்களும் கூறுங்கள்: "அல்லாஹ்வையும், எங்கள் மீது அருளப்பட்ட (வேதத்)தையும், இன்னும் இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், யஃகூப், அவர்களின் சந்ததியர் ஆகியோர் மீது அருளப்பட்டவற்றையும், இன்னும் மூஸா, ஈஸா இன்னும் மற்ற நபிமார்களுக்கு அவர்களுடைய இறைவனிடமிருந்து அருளப்பட்டவற்றையும் நாங்கள் விசவாசங் கொள்கிறோம். அவர்களில் எவரொருவரையும் பிரித்து வேற்றுமை பாராட்டமாட்டோம்;. நாங்கள் அவனுக்கே (முற்றிலும் சரணடையும்) முஸ்லிம்கள் ஆவோம்"". (அல்பகரா : 136). மேலும் அல்லாஹ் கூறுகின்றான்: "(மனிதர்களே! நம்) தூதர், தம்

இறைவனிடமிருந்து தமக்கு அருளப்பட்ட (வேதத்)தை மெய்யாகவே நம்பிக்கை கொள்கிறார். (அவ்வாறே மற்ற) நம்பிக்கையாளர்களும் (நம்பிக்கை கொள்கின்றனர். இவர்கள்) அனைவரும் அல்லாஹ்வையும், அவனுடைய வானவர்களையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும் நம்பிக்கை கொள்கின்றனர். தவிர, ‘‘அவனுடைய தூதர்களில் எவரையும் (தூதர் அல்ல என்று) நாங்கள் பிரித்து (நிராகரித்து)விட மாட்டோம்" என்றும், ‘‘(இறைவனே! உன் வேத வசனங்களை) நாங்கள் செவியுற்றோம். (உன் கட்டளைக்கு) நாங்கள் கீழ்ப்படிந்தோம். எங்கள் இறைவனே! நாங்கள் உனது மன்னிப்பைக் கோருகிறோம். உன்னிடம்தான் நாங்கள் சேர வேண்டியதிருக்கிறது" என்றும் கூறுகிறார்கள்". (அல்பகரா : 285). மேலும் அல்லாஹ் கூறுகின்றான்: ""அல்லாஹ்வையும், எங்கள் மீது அருளப்பட்ட (வேதத்)தையும், இன்னும் இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், யஃகூப், அவர்களின் சந்ததியர் ஆகியோர் மீது அருளப்பட்டவற்றையும், இன்னும் மூஸா, ஈஸா இன்னும் மற்ற நபிமார்களுக்கு அவர்களுடைய இறைவனிடமிருந்து அருளப்பட்டவற்றையும் நாங்கள் விசவாசங் கொள்கிறோம். அவர்களில் எவரொருவரையும் பிரித்து வேற்றுமை பாராட்டமாட்டோம்;. நாங்கள் அவனுக்கே (முற்றிலும் சரணடையும்) முஸ்லிம்கள் ஆவோம்" என்று (நபியே!) நீர் கூறுவீராக". (ஆல இம்ரான் : 84).

நபிமார்கள், இறைத்தூதர்களின் முத்திரையான இறுதித் தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் குறிப்பாக விசுவாசித்தல் வேண்டும். அல்லாஹ் கூறுகின்றான் : "நான் உங்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் அருளிய பின் உங்களிடம் இருப்பதை மெய்ப்பிக்கும் ஒரு ரஸூல் (இறைதூதர்) உங்களிடம் வந்தால், 'அவரை நீங்கள் ஈமான் கொண்டு அவருக்கு நீங்கள் உதவி செய்வீர்களா?' என அல்லாஹ் நபிமார்களிடம் உறுதிமொழி வாங்கி, நீங்கள் இதை ஏற்றுக் கொண்டு எனது பலமான உடன்படிக்கையை எடுத்துக் கொண்டீர்களா? எனக் கேட்ட போது, 'நாம் ஏற்றுக் கொண்டோம்' என அவர்கள் கூறினர். அ(தற்க)வன், 'நீங்களே (இதற்கு) சாட்சியாக இருங்கள். உங்களுடன் நானும் சாட்சியாளர்களில் உள்ளவனாவேன்' என்று கூறியதை எண்ணிப் பாருங்கள்". (ஆல இம்ரான் : 81).

இஸ்லாம் அனைத்து நபிமார்கள், இறைத்தூதர்களைப் பொதுவாகவும், இறுதித்தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் குறிப்பாகவும் விசுவாசிக்கக் கட்டாயப்படுத்துகின்றது. அல்லாஹ் கூறுகின்றான் : "வேதத்துடையோரே! தௌராத்தையும், இன்ஜீலையும், உங்கள் இரட்சகனிடமிருந்து உங்களுக்கு இறக்கிவைக்கப் பட்டதையும் நீங்கள் நிலைநாட்டுகின்ற வரையில் நீங்கள் எ(ச்சத்தியத்)திலும் இல்லை என்று (நபியே) நீர் கூறுவீராக!". (அல்மாஇதா : 68) மேலும் அல்லாஹ் கூறுகின்றான்: "'வேதத்தை உடையவர்களே! நாம் அல்லாஹ்வைத் தவிர வேறொன்றையும் வணங்கமாட்டோம். நாம் அவனுக்கு எதையும் இணையாக்கமாட்டோம். நம்மில் ஒருவரும் அல்லாஹ்வைத் தவிர எவரையும் இறைவனாக எடுத்துக் கொள்ளமாட்டோம்' என்ற எங்களுக்கும் உங்களுக்குமிடையில் சரியானதொரு கொள்கையின் பக்கம் வாருங்கள் என்று (நபியே) நீர் கூறுங்கள்! எனினும் அவர்கள் புறக்கணித்தால் 'நிச்சயமாக நாங்கள் முஸ்லிம்கள் என்பதற்கு நீங்கள் சாட்சியாக இருங்கள்' என்று நீங்கள் கூறுங்கள்". (ஆல இம்ரான் : 64).

இந்நபிமார்களில் ஒருவரை மறுத்தாலும் அனைவரையும் மறுத்தவனாகின்றான். இதனால்தான் அல்லாஹ் நூஹ் நபியின் கூட்டத்திற்கான தனது தீர்ப்பைக் கூறும்போது பின்வருமாறு கூறுகின்றான் : "நூஹ்வுடைய மக்கள் (நம்) தூதர்களைப் பொய்யாக்கினார்கள்". (அஷ்ஷுஅராஃ : 105). நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு முன் எந்த இறைத்தூதரும் வரவில்லை என்பது அறியப்பட்ட விடயமாகும். அவ்வாறிருந்தும் அச்சமூகம் நூஹ் நபியைப் பொய்ப்பித்த போது ஒட்டுமொத்த நபிமார்களையும் பொய்ப்பித்தவர்களாகின்றனர். ஏனெனில் அவர்கள் அனைவருடைய பிரச்சாரமும் ஒன்றுதான். குறிக்கோளும் ஒன்றுதான்.

ஐந்தாவது : இறுதி நாளை விசுவாசித்தல். அதுதான் மறுமை நாள் எனப்படுகின்றது. இவ்வுலக வாழ்வின் இறுதித் தருணத்தில் அல்லாஹ் வானவர் இஸ்ராபீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு மூர்ச்சையுடைய முதலாவது குழலை ஊதப் பணிப்பான். அவர்கள் ஊதியதும் அல்லாஹ் நாடிய அனைத்துப் படைப்பினங்களும் மூர்ச்சையுற்று விழுந்து மரணித்து விடுவார்கள். அல்லாஹ் கூறுகின்றான் : "ஸூர் (எக்காளம்) ஊதப்பட்டால் உடன் வானங்களில் உள்ளவர்களும், பூமியில் உள்ளவர்களும் - அல்லாஹ் நாடியவர்களைத் தவிர - மூர்ச்சித்து விடுவார்கள்; பிறகு அதில் மறு தடவை ஊதப்பட்டதும் உடன் அவர்கள் யாவரும் எழுந்து, எதிர் நோக்கி நிற்பார்கள்". (அஸ்ஸுமர் : 68). அல்லாஹ் நாடியவர்களைத் தவிர்ந்த வானம், பூமியிலுள்ள மற்ற அனைவரும் மரணித்ததன் பின் அல்லாஹ் வானங்கள், பூமியை சுருட்டிவிடுவான். அல்லாஹ்

கூறுகின்றான் : "எழுதப்பட்ட ஏடுகளைச் சுருட்டுவதைப் போல் நாம் வானத்தைச் சுருட்டும் நாளை (நபியே!) நீர் அவர்களுக்கு ஞாபகமூட்டுவீராக. முதல் தடவை நாம் அவர்களை படைத்தது போன்றே (அந்நாளில்) நாம் (அவர்களுக்கு உயிர் கொடுத்து) அவர்களை மீளவைப்போம். இது நம்மீது கடமையானதொரு வாக்குறுதியாகும். நிச்சயமாக நாம் இதைச் செய்தே தீருவோம்". (அல்அன்பியா.ஃ : 104). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "அல்லாஹ்வின் (மேலான) தகுதிக்குத் தக்கவாறு அவனை அவர்கள் கண்ணியப்படுத்துவதில்லை. பூமி முழுவதும் மறுமையில் அவனுடைய ஒரு கைப்பிடியில் இருக்கும். மேலும், வானங்கள் அனைத்தும் சுருட்டப்பட்டு அவனுடைய வலது கையில் இருக்கும். இவர்கள் இணைவைப்பதை விட்டு அவன் மிக மேலானவன்; அவன் மிக பரிசுத்தமானவன்". (அஸ்ஸுமர் : 67). மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ் மறுமைநாளில் வானங்களைச் சுருட்டுவான். பிறகு அவற்றைத் தனது வலக் கரத்தில் எடுத்துக்கொள்வான். பிறகு "நானே அரசன். அடக்குமுறையாளர்கள் எங்கே? ஆணவம் கொண்டவர்கள் எங்கே?" என்று கேட்பான். பிறகு பூமிகளைத் தனது இடக் கரத்தில் சுருட்டிக்கொள்வான். பிறகு "நானே அரசன். அடக்கு முறையாளர்கள் எங்கே? ஆணவம் கொண்டவர்கள் எங்கே?" என்று கேட்பான்". ஆதாரம் : முஸ்லிம் 2788.

பிறகு அல்லாஹ்வின் கட்டளைப் பிரகாரம் அந்த வானவர் மீண்டும் குழல் ஊத அனைவரும் எழுந்து பார்ப்பார்கள். அல்லாஹ் கூறுகின்றான் : "பின்னர் அதில் மறுமுறையும் ஊதப்படும். அப்போது அவர்கள் எழுந்து பார்ப்பார்கள்". (அஸ்ஸுமர் : 68). படைப்பினங்களை அல்லாஹ் மறுமையில் எழுப்பியதும் விசாரணைக்காக ஒன்று சேர்ப்பான். அல்லாஹ் கூறுகின்றான் : "(மரணித்தவர்களை மூடிக்கொண்டிருக்கும்) பூமி வெகு தீவிரமாக (வெடித்து) அவர்களை விட்டு விலகும் நாளை (நினைவு கூருவீராக). அதுதான் (விசாரணைக்காக அனைவரையும்) ஒன்று சேர்க்கும் நாள். இ(வ்வாறு செய்வ)து நமக்கு மிக்க எளிதானதே". (கா.ஃப் : 44). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "அவர்கள் மண்ணறைகளில் இருந்து வெளிவரும் நாளில் அவர்கள் குறித்த எதுவும் அல்லாஹ்வுக்கு மறைந்து விடாது. இன்றைய நாளில், "ஆட்சி யாருக்குரியது?" (என்று கேட்டு, அனைவரையும்) அடக்கி ஆளும் ஒருவனாகிய அந்த அல்லாஹ்வுக்குரியதே!" (என்று அவனே கூறுவான்)". (g.ஃகாபிர் : 16). இத்தினத்தில் அல்லாஹ் அனைத்து மக்களிடமும் விசாரணை மேற்கொள்வான். அநீதியிழைத்தவனிடம் இருந்து அநீதியிழைக்கப்படவனுக்கு நீதி பெற்றுக் கொடுக்கப்படும், ஒவ்வொரு மனிதனும் தான் செய்த செயலுக்கேற்ப கூலி வழங்கப்படுவான். அல்லாஹ் கூறுகின்றான் : "இன்றைய தினம் ஒவ்வொரு ஆத்மாவுக்கும், அவை செய்த செயல்களுக்குத் தக்க கூலி கொடுக்கப்படும். இன்றைய தினம் ஒரு அநியாயமும் நடைபெறாது. அல்லாஹ் கேள்வி கணக்குக் கேட்(டுத் தீர்ப்பளிப்)பதில் மிகத் தீவிரமானவன்". (g.ஃகாபிர் : 17). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "நிச்சயமாக அல்லாஹ் அணுவளவும் அநியாயம் செய்யமாட்டான். அது நன்மையாக இருந்தால் அதனைப் பன்மடங்காகப் பெருக்குவான். மேலும் அவன் தன்னிடமிருந்து மகத்தான கூலியையும் கொடுக்கிறான்". (அந்நிஸா.ஃ : 40). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "எனவே எவர் அணுவளவேனும் நன்மை செய்தாலும் அவர் அதனைக் கண்டுகொள்வார்". (அவ்வாறே) எவன் ஓர் அணுவளவு தீமை செய்திருந்தானோ, அதையும் அவன் (அங்கு) கண்டு கொள்வான். (அஸ்ஸல்ஸலாஹ் : 7,8). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "மறுமை நாளில் நீதமான தராசுகளையே நாம் நிறுத்துவோம். எந்த ஓர் ஆத்மாவும் சிறிதளவும் அநியாயம் செய்யப்பட மாட்டாது. (நன்மையோ தீமையோ) ஒரு கடுகின் வித்தளவு இருந்தபோதிலும் அதையும் கொண்டு வருவோம். கணக்கெடுக்க நாமே போதுமானவர்கள்". (அல்அன்பியா.ஃ : 47).

மீளெழுப்பப்பட்டு, விசாரணையும் முடிந்த பின் கூலி வழங்கல் நிகழ்வு இடம்பெறும். நன்மை செய்தவனுக்கு என்றும் நீங்காத நிரந்தர இன்பமும், இறைநிராகரிப்பு, தீமை செய்தோருக்கு தண்டனையும் உண்டு. அல்லாஹ் கூறுகின்றான் : "அந்நாளில், ஆட்சி, அதிகாரம் அல்லாஹ்வுக்கே உரியன. அவனே அவர்களுக்குத் தீர்ப்பளிப்பான். ஆகவே, எவர்கள் நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் செய்கிறார்களோ அவர்கள் மிக்க சுகமளிக்கும் சொர்க்கங்களில் தங்கி விடுவார்கள். எவர்கள் (நம் வேதத்தை) நிராகரித்து, நம் வசனங்களை பொய்யாக்குகிறார்களோ அவர்களுக்கு கண்டிப்பாக இழிவு தரும் வேதனை உண்டு". (அல்ஹஜ் : 56,57). மறுமையில்லாமல் இவ்வுலக வாழ்க்கைதான் இறுதி முடிவென்றால் வாழ்க்கை வெறும் வீணாகவும், விளையாட்டாகவும் தான் இருக்கும் என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். அல்லாஹ் கூறுகின்றான் : ""நாம் உங்களை படைத்ததெல்லாம் வீணுக்காக என்றும், நீங்கள் நம்மிடம் கொண்டு வரப்பட மாட்டீர்கள் என்றும் எண்ணிக் கொண்டிருந்தீர்களா?" (என்று கேட்பான்.)". (அல்மு.ஃமினூன் : 115).

ஆறாவது : விதியை நம்புதல். இது பிரபஞ்சத்தில் நடந்த, நடக்கின்ற, நடக்கப் போகின்ற அனைத்தையும் அல்லாஹ் அறிந்து, வானங்கள் பூமியைப் படைப்பதற்கு முன்னாலேயே அவற்றை எழுதிவைத்து விட்டதாக விசுவாசிப்பதாகும். அல்லாஹ் கூறுகின்றான் : "மறைவானவற்றின் சாவிகள் அவனிடமே இருக்கின்றன. அவற்(றில் உள்ளவற்)றை அவனைத் தவிர வேறெவரும் அறியமாட்டார். தரையிலும், கடலிலும் உள்ளவற்றையும் அவன் நன்கறிவான். எந்த ஓர் இலையும் அதை அவன் அறியாமல் உதிருவதில்லை. பூமியின் இருள்களில் உள்ள விதையோ, பசுமையானதோ, உலர்ந்ததோ எதுவாயினும் அவனுடைய தெளிவான ஏட்டில் இல்லாமலில்லை". (அல் அன்ஆம் : 59). மேலும் அல்லாஹ் அனைத்தையும் சூழ்ந்தறிந்துள்ளான். அல்லாஹ் கூறுகிறான் : "ஏழு வானங்களையும், அவற்றைப்போல் பூமியையும் அல்லாஹ்தான் படைத்தான். இவற்றில் (தினசரி நிகழக்கூடிய) எல்லா விஷயங்களைப் பற்றிய கட்டளை இறங்கிக்கொண்டே இருக்கிறது. (ஆகவே, நம்பிக்கையாளர்களே!) நிச்சயமாக அல்லாஹ் சகலவற்றின் மீதும் ஆற்றலுடையவன் என்பதையும், நிச்சயமாக அல்லாஹ் தன் ஞானத்தால், எல்லாவற்றையும் ஆழமாக அறிந்துகொண்டிருக்கிறான் என்பதையும் நீங்கள் திட்டமாக அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக இவற்றைப் படைத்தான்". (அத்தலாக் : 12). இப்பிரபஞ்சத்தில் நிகழும் எதையும் அல்லாஹ் நாடி, அவற்றைப் படைத்து, அவற்றின் காரணகாரியங்களை இலகுவாக்கி வைக்காமல் நிகழ்வதில்லை. அல்லாஹ் கூறுகின்றான் : "வானங்கள், பூமியின் ஆட்சி அவனுக்குரியதே! அவன் எவரையும் பிள்ளையாக எடுத்துக் கொள்ளவில்லை; ஆட்சியில் அவனுக்கு ஒரு இணையுமில்லை. அவனே அனைத்தையும் படைத்து, பின்னர் அவற்றை முறைப்படி நிர்ணயித்தான்". (அல்ஃபுர்கான் : 2) இவையனைத்திலும் மக்கள் சூழ்ந்தறியாத நிறைவான ஞானம் அல்லாஹ்வுக்கு மாத்திரமே உள்ளது. அல்லாஹ் கூறுகின்றான் : "(குர்ஆனாகிய இது) நிறைவான ஞானமுடையதாகும். எனினும், எச்சரிக்கைகள் (அவர்களுக்குப்) பயனளிக்கவில்லை". (அல்கமர் : 5) மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "அவன்தான் படைப்புகளை ஆரம்பத்தில் உற்பத்தி செய்பவன். அவனே (அவை மரணித்த பின்னரும் உயிர் கொடுத்து) அவற்றை மீளவைக்கிறவன். இது அவனுக்கு மிக்க எளிது. வானங்களிலும் பூமியிலும் அவனுடைய (உதாரணமும் பரிசுத்தத்) தன்மை(யும்)தான் மிக்க மேலானதாகும். அவன் (அனைத்தையும்) மிகைத்தவனும் ஞானமுடையவனும் ஆவான்". (அர்ரூம் : 27) அல்லாஹ் தனக்கு ஞானமுள்ளதாகக் கூறியுள்ளான். தனக்கு 'ஹகீம்' ஞானி எனப் பெயரும் வைத்துக் கொண்டுள்ளான் அல்லாஹ் கூறுகின்றான் : (நபியே! நீதவானாகிய) அல்லாஹ் சாட்சி கூறுகிறான்: "நிச்சயமாக அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குத் தகுதியான இறைவன் வேறுயாரும் (இல்லவே) இல்லை." அப்படியே வானவர்களும் (வேதத்தை கற்றுத் தேர்ந்த) கல்வியாளர்களும் சாட்சி கூறுகின்றனர்; (அனைவரையும்) மிகைத்தவனும் ஞானமுடையவனுமான அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறுயாருமில்லை. (ஆல இம்ரான் : 18). மறுமையில் ஈஸா அலைஹிஸ்ஸலாம் இப்பெயர் கொண்டு அல்லாஹ்வுடன் பேசுவார்கள் என அவன் கூறுகின்றான் : "அவர்களை நீ வேதனை செய்தால் நிச்சயமாக அவர்கள் உன் அடியார்களே! அவர்களை நீ மன்னித்துவிட்டாலோ நிச்சயமாக நீதான் (அனைவரையும்) மிகைத்தவன், மிக்க ஞானமுடையவன்" (என்று கூறுவார்.) (அல்மாஇதா : 118). மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுடன் தூர்ஸீனா மலைக்கருகில் அல்லாஹ் அழைத்துப் பேசும் போது பின்வருமாறு கூறுகின்றான் : "(மேலும்,) " மூஸாவே! நிச்சயமாக நான்தான் அல்லாஹ். நான் அனைவரையும் மிகைத்தவன்; (அனைத்தையும் நன்கறிந்த) ஞானமுடையவன்". (அந்நம்லு : 9).

இதே ஞானத்தைக் கொண்டு புனித அல்குர்ஆனையும் அல்லாஹ் வர்ணித்து, பின்வருமாறு கூறுகின்றான் : "அலிஃப் லாம் றா. (இது) வேத நூல். அனைத்தையும் நன்கறிந்த ஞானமிக்கவனால் இதன் வசனங்கள் (பல அத்தாட்சிகளைக் கொண்டு) உறுதி செய்யப்பட்ட பின்னர் (தெளிவாக) விவரிக்கப்பட்டுள்ளன". (ஹூத் : 1). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "(நபியே!) இவை உமது இறைவனால் உமக்கு வஹி மூலம் அறிவிக்கப்பட்ட ஞான (உபதேச)ங்களாகும். ஆகவே, அல்லாஹ்வுடன் மற்றொருவனை வணக்கத்திற்குரியவனாக ஆக்காதீர். (அவ்வாறு செய்தால்) நீர் நிந்திக்கப்பட்டவராகவும், சபிக்கப்பட்டவராகவும் நரகத்தில் எறியப்படுவீர்". (அல்இஸ்ராஃ : 39).

# 22. நபிமார்கள் தாம் எத்திவைக்கும் பிரச்சாரத்தில் தவறிழைக்க மாட்டார்கள். அதேபோன்று பகுத்தறிவுக்கோ, நல்ல

பண்பாடுகளுக்கோ முரண்பாடாக நடப்பதிலிருந்தும் பாதுகாக்கப்பட்டவர்கள். அல்லாஹ்வுடைய கட்டளைகளை மக்களுக்கு எத்திவைக்க அவர்களே நியமிக்கப்பட்டுள்ளனர். நபிமார்களுக்கு அல்லாஹ்வின் பரிபாலனத் தன்மையிலோ, இறைத்தன்மையிலோ எவ்விதப் பங்குமில்லை. மாறாக அல்லாஹ்அவர்களுக்கு தனது தூதுத்துவம் மூலம் இறைச்செய்தியை அறிவிக்கின்றான் என்பதைத் தவிர அவர்களும் ஏனையோரைப் போன்ற மனிதர்கள்தான்.

நபிமார்கள் தாம் எத்திவைக்கும் பிரச்சாரத்தில் தவறுகளிலிருந்து பாதுகாக்கப்பட்டவர்கள். ஏனெனில் அல்லாஹ் தனது தூதுத்துவத்தை எத்திவைக்க அவனது படைப்புக்களில் மிகச்சிறந்தவர்களையே தெரிவு செய்கின்றான். அல்லாஹ் கூறுகின்றான் : "வானவர்களிலிருந்தும் மனிதர்களிலிருந்தும் அல்லாஹ் (தன்) தூதர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறான். நிச்சயமாக அல்லாஹ் செவியுறுபவனும் பார்ப்பவனும் ஆவான். (அல் ஹஜ் : 75). மேலும் அல்லாஹ் கூறினான் : "ஆதமையும், நூஹையும், இப்றாஹீமின் சந்ததியரையும், இம்ரானின் சந்ததியரையும் நிச்சயமாக அல்லாஹ் அகிலத்தாரை விட மேலாக தேர்ந்தெடுத்தான்". (ஆல இம்ரான் : 33). மேலும் அல்லாஹ் கூறினான் : "அதற்கு அவன், "மூஸாவே! நிச்சயமாக நான் உம்மை என் தூதுவத்தைக் கொண்டும் (உம்முடன்) நான் பேசியதைக் கொண்டும், மனிதர்களிலிருந்து (மேலானவராக) தேர்ந்து எடுத்துள்ளேன் - ஆகவே நான் உமக்குக் கொடுத்ததை (உறுதியாகப்) பிடித்துக் கொள்ளும்; (எனக்கு) நன்றி செலுத்துபவர்களில் (ஒருவராகவும்) இருப்பீராக" என்று கூறினான்". (அல்அ்ஃராப் : 144). இறைத்தூதர்கள் தமக்கு அருளப்படுவது இறைச் செய்திதான் என்பதை நன்கறிந்துள்ளனர். அதனைக் கொண்டுவரும் வானவர்களையும் அவர்கள் காண்கின்றனர். அல்லாஹ் கூறுகின்றான் : "அவன்தான் மறைவான இவ்விஷயங்களையெல்லாம் நன்கறிந்தவன் ஆவான். மறைவாக உள்ள இவ்விஷயங்களை அவன் ஒருவருக்கும் வெளிப்படுத்துவது இல்லை. ஆயினும், தன் தூதர்களில் எவர்களைத் தேர்ந்தெடுத்தானோ அவர்களுக்கு அதை அவன் அறிவிக்கக் கூடும். (அதை அவன் அவர்களுக்கு அறிவித்த சமயத்தில்) நிச்சயமாக அவன் அவர்களுக்கு முன்னும் பின்னும் (ஒரு மலக்கைப்) பாதுகாப்பவராக அனுப்பிவைக்கிறான். (அத்தூதர்கள்) தங்கள் இறைவனின் தூதுகளை மெய்யாகவே எடுத்துரைத்தார்கள் என்பதை, தான் அறிந்து கொள்வதற்காக (அவ்வாறு பாதுகாப்பாளரை அனுப்புகிறான்). அவர்களிடம் உள்ளவற்றை அவன் தன் ஞானத்தால் சூழ்ந்தறிந்து கொண்டிருப்பதுடன், ஒவ்வொரு பொருளின் கணக்கையும் முழுமையாக அறிந்தவனாக இருக்கிறான்". (அல்ஜின் : 26- 28). தனது தூதுத்துவத்தை எத்திவைக்குமாறு அல்லாஹ் அவர்களுக்குப் பணித்துள்ளான். அல்லாஹ் கூறுகின்றான் : "(நம்) தூதரே! உமது இறைவனிடமிருந்து உமக்கு இறக்கப்பட்டதை எல்லாம் எடுத்துரைப்பீராக!. நீர் அவ்வாறு செய்யாவிடில் அவனுடைய தூதை நீர் நிறைவேற்றியவராக ஆக மாட்டீர். மனிதர்(களின் தீங்கு)களில் இருந்து, அல்லாஹ் உம்மைப் பாதுகாப்பான். நிச்சயமாக அல்லாஹ் நிராகரிக்கும் மக்களை நேரான வழியில் செலுத்த மாட்டான்". (அல்மாஇதா : 67). மேலும் அல்லாஹ் கூறினான் : "தூதர்கள் வந்தபின் அல்லாஹ்வுக்கு எதிராக மக்களுக்கு (சாதகமாக) ஆதாரம் எதுவும் ஏற்படாமல் இருக்கும் பொருட்டு, தூதர்கள் (பலரையும்) நன்மாராயங் கூறுபவர்களாகவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர்களாகவும்

(அல்லாஹ் அனுப்பினான்). மேலும் அல்லாஹ் (யாவரையும்) மிகைத்தவனாகவும், பேரறிவாளனாகவும் இருக்கின்றான்". (அந்நிஸாஃ : 165).
இறைத்தூதர்கள் அல்லாஹ்வை அதிகம் அஞ்சக்கூடியவர்கள். எனவே அவனுடைய தூதுச் செய்திகளில் எதனையும் கூட்டவோ, குறைக்கவோ மாட்டார்கள். அல்லாஹ் கூறுகின்றான் : "ஒரு சில வார்த்தைகளை அவர் நம்மீது கற்பனை செய்து பொய்யாகக் கூறினாலும், அவருடைய வலது கரத்தை நாம் (பலமாகப்) பிடித்துக் கொண்டு, பிறகு, அவருடைய உயிர் நாடியை நாம் தறித்து விடுவோம். உங்களில் எவருமே அவரை விட்டும் அதைத் தடுத்துவிட முடியாது". (அல்ஹாக்கா : 44- 47). இமாம் இப்னு கஸீர் ரஹிமஹுல்லாஹ் கூறுகின்றார் : "ஒரு சில வார்த்தைகளை அவர் நம்மீது கற்பனை செய்து பொய்யாகக் கூறினாலும்" என அல்லாஹ் கூறுகின்றான். அதாவது குரைஷிக் காபிர்கள் வாதாடுவது போன்று முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் நம் மீது இட்டுக்கட்டி, தூதுச் செய்தியில் கூடுதல், குறைத்தல் செய்தால், அல்லது தானாக ஒரு விடயத்தை உருவாக்கி அல்லாஹ்வின்பால் சேர்த்தினால் உடனடியாக நாம் அவரைத் தண்டிப்போம். இதனால்தான் "அவருடைய வலது கரத்தை நாம் (பலமாகப்) பிடிப்போம்" என்று கூறுகின்றான். இதற்கு இரு விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன : 1. எமது வலக்கரத்தால் அவரைப் பிடித்துத் தண்டிப்போம். ஏனெனில் பலமாகப் பிடிக்க வலக்கரமே உகந்தது. 2. அவரை அவருடைய வலக்கரத்தால் பிடிப்போம். மேலும் அல்லாஹ் கூறினான் : "மர்யமின் மகன் ஈஸாவே! 'அல்லாஹ்வையன்றி என்னையும் எனது தாயையும் இரு கடவுள்களாக எடுத்துக் கொள்ளுங்கள்' என்று மனிதர்களுக்கு நீர் கூறினீரா? என அல்லாஹ் கேட்கும் போது, அ(தற்க)வர், 'நீ மிகத்தூய்மையானவன். எனக்கு உரிமையில்லாதவற்றை நான் சொல்வதற்கு எனக்கு எந்த அதிகாரமும் இல்லை. நான் அவ்வாறு கூறியிருந்தால் நிச்சயமாக நீ அதை அறிந்திருப்பாய். என் உள்ளத்தில் இருப்பதை நீ அறிவாய், ஆனால் உன் உள்ளத்தில் இருப்பதை நான் அறிய மாட்டேன். நிச்சயமாக நீயே மறைவானவற்றை நன்கறிந்தவன்' என்று கூறுவார். 'எனது இரட்சகனும் உங்கள் இரட்சகனுமாகிய அல்லாஹ்வையே நீங்கள் வணங்குங்கள், என்று (கூறும்படி) நீ என்னை ஏவியதைத் தவிர வேறு எதனையும் நான் அவர்களுக்குக் கூறவில்லை. நான் அவர்களுடன் இருந்த போது அவர்களை அவதானித்துக் கொண்டிருந்தேன். நீ என்னைக் கைப்பற்றியதும், நீயே அவர்களைக் கண்காணிப்பவனாக இருந்தாய். நீ தான் யாவற்றையும் கண்காணிப்பவனாக இருக்கின்றாய்' என்றும் கூறுவார்". (அல்மாஇதா : 116, 117).
பிரச்சாரப் பணியின் போது நபிமார்களை ஸ்திரப்படுத்தி நிலைத்திருக்க வைப்பதும் அல்லாஹ் அவர்களுக்குச் செய்த அருள்களில் உள்ளதாகும். அல்லாஹ் கூறுகின்றான் : "'நிச்சயமாக நான் அல்லாஹ்வையே சாட்சியாக ஆக்குகின்றேன். அவனையன்றி நீங்கள் இணைவைத்துக் கொண்டிருப்பதை விட்டும் நிச்சயமாக நான் நீங்கியவன் என்பதற்கு நீங்களும் சாட்சியாக இருங்கள். நீங்கள் அனைவரும் எனக்கு சூழ்ச்சி செய்யுங்கள். பின்னர்(இதில்) எனக்கு நீங்கள் அவகாசம் வழங்க வேண்டாம்' என்று கூறினார். நிச்சயமாக நான் என் காரியங்கள் அனைத்தையும் என் இறைவனும் உங்கள் இறைவனுமாகிய அல்லாஹ்விடமே ஒப்படைத்து விட்டேன். ஒவ்வொரு உயிருள்ளவற்றின் முன்நெற்றி முடியையும் அவனே பிடித்துக் கொண்டிருக்கிறான். நிச்சயமாக என் இறைவன் நேரான வழியில் இருக்கிறான" என்றும் கூறினார். (ஹூத் : 54-56). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "நாம் உமக்கு வஹி மூலம் அறிவித்ததை நீர் விட்டு(விட்டு) அதல்லாததை நம்மீது நீர் பொய்யாகக் கற்பனை செய்து கூறும்படி உம்மை அவர்கள் திருப்பிவிடவே இருந்தார்கள். (அவ்வாறு நீர் செய்திருந்தால்) உம்மை அவர்கள் தங்கள் நண்பராகவும் எடுத்துக் கொண்டிருப்பார்கள். உம்மை நாம் உறுதியாக்கி வைக்காவிடில் நீர் ஒரு சிறிதேனும் அவர்கள் பக்கம் சாய்ந்துவிட நெருங்கி இருப்பீர். (அவ்வாறு நீர் சாய்ந்திருந்தால்) அந்நேரத்தில் நீர் உயிராக இருக்கும் போதும் நீர் மரணித்த பின்னரும் இரு மடங்கு (வேதனையைச்) சுவைக்கும்படி நாம் செய்திருப்போம். அதன் பின்னர், நமக்கு எதிராக உமக்கு உதவி செய்பவர்கள் ஒருவரையும் நீர் காணமாட்டீர்". (அல்இஸ்ராஃ : 73- 75). மேற்கண்ட வசனங்கள் அனைத்தும் அல்குர்ஆன் அல்லாஹ்விடமிருந்தே அருளப்பட்டது என்பதற்கான சான்றாக உள்ளது. இது முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடமிருந்து வந்திருந்தால் அவரையே விமர்சித்து வந்திருக்கும் இது போன்ற வசனங்களை உள்ளடக்கியிருக்க மாட்டார்.
மேலும் அல்லாஹ் இறைத்தூதர்களை மக்களிடமிருந்து பாதுகாக்கின்றான். அல்லாஹ் கூறுகின்றான் : "(நம்) தூதரே! உமது இறைவனிடமிருந்து உமக்கு இறக்கப்பட்டதை எல்லாம் எடுத்துரைப்பீராக!. நீர் அவ்வாறு செய்யாவிடில் அவனுடைய தூதை நீர் நிறைவேற்றியவராக ஆக மாட்டீர். மனிதர்(களின் தீங்கு)களில் இருந்து, அல்லாஹ் உம்மைப் பாதுகாப்பான். நிச்சயமாக அல்லாஹ் நிராகரிக்கும் மக்களை நேரான வழியில்

செலுத்த மாட்டான்". (அல்மாஇதா : 67). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "மேலும் (நபியே!) நீர் அவர்களுக்கு நூஹ்வின் சரித்திரத்தை ஓதிக்காண்பிப்பீராக! அவர் தம் சமூகத்தாதை நோக்கி, "என் சமூகத்தாரே! நான் (உங்களிடையே) இருப்பதும் நான் (உங்களுக்கு) அல்லாஹ்வின் அத்தாட்சிகளை நினைவூட்டுவதும் உங்களுக்குப் பளுவாக இருக்குமானால் - நான் அல்லாஹ்வின் மீதே முழு நம்பிக்கை வைத்துள்ளேன்; (உங்கள் முயற்சியில் ஏதேனும்) குறைவு செய்து விட்டதாகப் பின்னர் உங்களுக்கு ஐயம் ஏற்படாதவாறு, நீங்கள் இணை வைப்பவற்றையும் ஒன்று சேர்த்துக் கொண்டு, நீங்கள் யாவரும் சேர்ந்து உங்கள் காரியத்தை முடிவு செய்யுங்கள் - பின்னர் (எனக்கெதிராக) நீங்கள் திட்டமிடுவதை என்னில் நிறைவேற்றுங்கள்; இதில் நீங்கள் தாமதம்செய்ய வேண்டாம்" என்று கூறினாரர்". (யூனுஸ் : 71). மூஸா அலைஹிஸ்ஸலாம் பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் : "'எங்கள் இரட்சகனே! நிச்சயமாக அவன் (தண்டிப்பதில்) எம்மீது அளவு கடப்பதை அல்லது வரம்பு மீறுவதை நாம் அஞ்சுகின்றோம்' என அவர்கள் இருவரும் கூறினர். அ(தற்க)வன் 'நீங்களிருவரும் அஞ்ச வேண்டாம். நிச்சயமாக நான் செவியேற்பவனாகவும், பார்ப்பவனாகவும் உங்களிருவருடனும் இருக்கின்றேன்' என்று கூறினான்". (தாஹா : 45, 46). எனவே அல்லாஹ் தனது தூதர்களை எதிரிகள் நெருங்கவிடாமல், அவர்களின் தீங்கிலிருந்து பாதுகாப்பதாகக் கூறியுள்ளான். அத்துடன் தனது இறைச்செய்தியையும் பாதுகாப்பதாகவும், அதில் கூட்டல், குறைத்தல் ஏதும் இடம்பெறாது என்றும் அறிவித்துள்ளான். அல்லாஹ் கூறுகின்றான் : "நிச்சயமாக இந்த வேதத்தை நாமே இறக்கினோம், இன்னும் இதனை நாமே பாதுகாப்போம்". (அல்ஹிஜ்ர் : 9).

நபிமார்கள் பகுத்தறிவுக்கோ, நல்ல பண்பாடுகளுக்கோ முரண்பாடாக நடப்பதிலிருந்தும் பாதுகாக்கப்பட்டவர்கள். அல்லாஹ் தனது நபியாகிய முஹம்மதைத் தூய்மைப் படுத்திப் பின்வருமாறு கூறுகின்றான்: "நிச்சயமாக நீர் மகத்தான நற்குணமுடையவராகவே இருக்கிறீர்". (அல்கலம் : 4). அன்னாரைப் பற்றி மேலும் கூறுகின்றான் : "மேலும் உங்கள் தோழர் பைத்தியக்காரர் அல்லர்". (அத்தக்வீர் : 22). தமது பிரச்சாரப் பணியை சரிவர நிறைவேற்றுவதற்காகவே அல்லாஹ் அவர்களைப் பாதுகாக்கின்றான். மேலும் அல்லாஹ்வுடைய கட்டளைகளை மக்களுக்கு எத்திவைக்க அவர்களே நியமிக்கப்பட்டுள்ளனர். நபிமார்களுக்கு அல்லாஹ்வின் பரிபாலனத் தன்மையிலோ, இறைத்தன்மையிலோ எவ்விதப் பங்குமில்லை. மாறாக அல்லாஹ் அவர்களுக்கு தனது தூதுத்துவம் மூலம் இறைச்செய்தி அறிவிக்கின்றான் என்பதைத் தவிர அவர்களும் ஏனையோரைப் போன்ற மனிதர்கள்தான். அல்லாஹ் கூறுகின்றான் : "அதற்கு அவர்களிடம் வந்த தூதர்கள் அவர்களை நோக்கி, 'நாங்கள் உங்களைப் போன்ற மனிதர்கள்தான். எனினும், அல்லாஹ் தன் அடியார்களில் தான் விரும்பியவர்கள் மீது அருள் புரிகிறான். அல்லாஹ்வுடைய அனுமதியின்றி (உங்கள் விருப்பப்படி) ஓர் ஆதாரத்தை நாம் உங்களிடம் கொண்டு வருவதற்கில்லை. நம்பிக்கையாளர்கள் (அனைவரும்) அல்லாஹ்வின் மீதே நம்பிக்கை வைக்கவும்' என்று கூறினர். (இப்ராஹீம் : 11). தனது சமூகத்தவரிடம் கூறுமாறு அல்லாஹ் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் பின்வருமாறு கூறுகின்றான் : (நபியே!) கூறுவீராக: "நிச்சயமாக நானும் உங்களைப் போன்ற ஒரு மனிதன்தான். நிச்சயமாக உங்கள் இறைவன் ஒரே ஓர் இறைவன்தான் என்று எனக்கு வஹி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, எவர் தன் இறைவனைச் சந்திக்க விரும்புகிறாரோ அவர் நற்செயல்களைச் செய்து தன்தொழுகைறைவனுக்கு ஒருவரையும் இணையாக்காது (அவனையே) வணங்கி வருவாராக!". (அல்கஹ்ஃப் : 110).

# 23. இஸ்லாம் பிரதான அடிப்படை வணக்கங்கள் மூலம் அல்லாஹ்வை மாத்திரம் வணங்குவதன் பால் அழைக்கின்றது. அவை : 1.தொழுகை; இது தினமும் ஐவேளை நிறைவேற்றப்படும். நிலை, ருகூஃ, ஸுஜூத், அல்லாஹ்வை நினைவுகூர்தல், பிரார்த்தனை

அனைத்தையும் உள்ளடக்கியுள்ள ஒரு வணக்கமாகும். வறியவர், செல்வந்தர், தலைவர், பிரஜை அனைவரும் ஒரே வரிசையில் நின்று தொழுகை நிறைவேற்றுவதால் இன, நிற, தராதர வேறுபாடுகள் நீங்குகின்றன. 2. ஸகாத், இது அல்லாஹ் விதித்த நிபந்தனைகள், அளவீடுகளுக்கமைய செல்வந்தர்கள் ஏழைகள் மற்றும் தேவையுடையவர்களுக்கு வருடத்தில் ஒரு தடவை வழங்க வேண்டிய சிறிய ஒரு தொகைப்பணமாகும். 3. நோன்பு, இது ரமழான் மாதத்தில் பகல்வேளையில் குறிப்பிட்ட சில செயல்களைத் தவிர்ந்து கொள்ளல். இது உள்ளத்தில் கட்டுப்பாடு, பொறுமை ஆகியவற்றை வளர்க்கின்றது. 4. ஹஜ், இது உடல், பொருளாதார ரீதியில் சக்திபெற்ற ஒருவர் வாழ்நாளில் ஒரு தடவை புனித மக்காச் சென்று குறிப்பிட்ட சில வணக்கங்களை நிறைவேற்றுவதாகும். இந்த ஹஜ் வணக்கத்திலும் அல்லாஹ்வை முன்னோக்குவதில் அனைத்து வர்க்கத்தினரும் சமமாகவே இருப்பதுடன் பிரிவினை, தராதர வேற்றுமைகள் நீங்கி விடுகின்றன.

இஸ்லாம் பிரதான அடிப்படை வணக்கங்கள் மூலம் அல்லாஹ்வை மாத்திரம் வணங்குவதன் பால் அழைக்கின்றது.இப்பாரிய வணக்கங்களை அல்லாஹ் முன்னைய நபிமார்களுக்கும் கடமையாக்கியுள்ளான். இவ்வணக்கங்களில் பிரதானமானவை :

முதலாவது : தொழுகை, ஏனைய நபிமார்களுக்கு விதியாக்கியதைப் போன்றே அல்லாஹ் இதனை முஸ்லிம்களுக்கும் விதியாக்கியுள்ளான். தனது மாளிகையை தவாப் (புனித கஃபா மாளிகையை வலம் வருதல்) செய்வோருக்கும், ருகூஃ, ஸுஜூத் செய்யக்கூடிய தொழுகையாளிகளுக்கும் சுத்தப்படுத்துமாறு அல்லாஹ் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குக் கட்டளையிட்டான். அல்லாஹ் கூறுகின்றான் : "(மக்காவில் இப்றாஹீம் கட்டிய 'கஃபா' என்னும்) வீட்டை மனிதர்கள் ஒதுங்கும்

இடமாகவும், (அவர்களுக்கு) பாதுகாப்பு அளிக்கக்கூடியதாகவும் நாம் ஆக்கியிருக்கிறோம். (அதில்) இப்றாஹீம் நின்ற இடத்தை (நம்பிக்கையாளர்களே!) நீங்கள் தொழும் இடமாக வைத்துக் கொள்ளுங்கள். "(ஹஜ்ஜூ செய்ய அங்கு வந்து) அதை சுற்றுபவர்களுக்கும், தியானம் புரிய (அதில்) தங்குபவர்களுக்கும், குனிந்து சிரம் பணி(ந்து அதில் தொழு)பவர்களுக்கும் எனது அந்த வீட்டை சுத்தமானதாக ஆக்கி வையுங்கள்" என்று இப்றாஹீமிடத்திலும், இஸ்மாயீலிடத்திலும் நாம் வாக்குறுதி வாங்கியிருக்கிறோம்". (அல்பகரா : 125). மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அல்லாஹ் விடுத்த முதல் அழைப்பிலேயே (தொழுகையைத்) தான் விதியாக்கினான். அல்லாஹ் கூறுகின்றான் : "நிச்சயமாக நான்தான் உமது இறைவன். உமது காலணிகள் இரண்டையும் கழற்றி விடுவீராக. நிச்சயமாக நீர் 'துவா' என்னும் பரிசுத்த இடத்தில் இருக்கிறீர். நான் உம்மை (என் தூதராகத்) தேர்ந்தெடுத்துக் கொண்டேன். ஆதலால், வஹி மூலம் (உமக்கு) அறிவிக்கப்படுவதற்கு செவிசாய்ப்பீராக. நிச்சயமாக நான்தான் அல்லாஹ். என்னைத் தவிர உண்மையான வணக்கத்திற்குரிய இறைவன் அறவே இல்லை. என்னையே வணங்குவீராக. என்னை நினைவுகூரும் பொருட்டு தொழுகையைக் கடைப்பிடிப்பீராக". (தாஹா : 12-14). அல்லாஹ் தனக்கு தொழுகை, ஸகாத் ஆகிய வணக்கங்களை விதியாக்கியதாக ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறியதை அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் : "நான் எங்கிருந்தபோதிலும் அவன் என்னை மிக்க பாக்கியவானாகவே ஆக்குவான். நான் வாழும்வரை தொழுகையைக் கடைப்பிடித் தொழுகும்படியும், ஸகாத்து கொடுத்து வரும்படியும் அவன் எனக்கு உபதேசித்திருக்கிறான்". (மர்யம் : 31). இஸ்லாத்தில் தொழுகை என்பது நிலை, குனிதல், சிரம் பணிதல், அல்லாஹ்வை நினைவுகூர்தல், அவனைப் புகழ்தல், பிரார்த்தனை அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு வணக்கமாகும். ஒரு மனிதன் தினமும் ஐந்து நேரம் இதனை கட்டாயம் நிறைவேற்ற வேண்டும். அல்லாஹ் கூறுகின்றான் : "(நம்பிக்கையாளர்களே!) அனைத்து தொழுகைகளையும் (குறிப்பாக நடுத் தொழுகையையும் (நேரம் தவறாமல்) பேணி(த் தொழுது) கொள்ளுங்கள். மேலும், (தொழுகையில்) அல்லாஹ்வுக்குப் பயந்து மிக்க உள்ளச்சத்தோடு நில்லுங்கள்". (அல்பகரா : 238). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "(நபியே!) சூரியன் (உச்சியில்) சாய்ந்ததிலிருந்து இரவின் இருள் சூழும் வரை (ளுஹ்ரு, அஸ்ரு, மஃரிப், இஷா) தொழுகையை நிலை நிறுத்துவீராக இன்னும் ஃபஜ்ருடைய தொழுகையையும் (நிலைநிறுத்துவீராக); நிச்சயமாக ஃபஜ்ர் தொழுகையானது சாட்சிக்கூறத்தக்கதாகும்". (அல்இஸ்ராஃ : 78). மேலும் நபி ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம் கூறினார்கள் : "ருகூஃவில் இரட்சகனை மகத்துவப்படுத்துங்கள், ஸுஜூதில் பிரார்த்தனையில் முயற்சியுங்கள், உங்களுக்குப் பதிலளிக்கப்பட அவ்விடம் மிகப் பொருத்தமானதாகும்". ஆதாரம் : முஸ்லிம் (1218).

இரண்டாவது : ஸகாத், ஏனைய நபிமார்களுக்கு விதியாக்கியதைப் போன்றே அல்லாஹ் இதனை முஸ்லிம்களுக்கும் விதியாக்கியுள்ளான். இது அல்லாஹ் விதித்த நிபந்தனைகள், அளவீடுகளுக்கமைய செல்வந்தர்கள் ஏழைகள் மற்றும் தேவையுடையவர்களுக்கு வருடத்தில் ஒரு தடவை வழங்க வேண்டிய சிறிய ஒரு தொகைப்பணமாகும். அல்லாஹ் கூறுகின்றான் : "(நபியே!) அவர்களுடைய பொருள்களிலிருந்து தர்மத்தை நீர் எடுத்துக் கொண்டு அவர்களை (உள்ளும் புறமும்) பரிசுத்தமாக்கி வைத்து அவர்களுக்காக (துஆ) பிரார்த்தனை செய்வீராக. உங்கள் (துஆ) பிரார்த்தனை நிச்சயமாக அவர்களுக்கு ஆறுதலளிக்கும். அல்லாஹ் நன்கு செவியுறுபவன், நன்கறிபவன் ஆவான்". (அத்தௌபா : 103). நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் முஆத் ரலியல்லாஹூ அன்ஹூ அவர்களை யமன் நாட்டிற்கு ஆளுநராக அனுப்பிய போது பின்வருமாறு கூறினார்கள் : "நீர் வேதக்காரர்கள் வாழும் சமூகத்திற்குச் செல்கின்றீர். 'உண்மையாக வணங்கப்படத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, நான் அல்லாஹ்வின் தூதர்' என்ற உறுதிமொழியின் பால் அவர்களை அழையுங்கள், அதற்கு அவர்கள் கட்டுப்பட்டால் அல்லாஹ் அவர்களுக்கு தினமும் ஐவேளைத் தொழுகைகளை விதியாக்கியுள்ளான் என்பதை அறிவியும். அதற்கும் அவர்கள் கட்டுப்பட்டால் அவர்களில் செல்வந்தர்களிடம் பெற்று, ஏழைகளுக்கு வழங்கவதற்காக செல்வத்தில் அல்லாஹ் ஸகாதை கடமையாக்கியுள்ளான் என்பதை அறிவியும். அவர்கள் இதற்கும் (இசைந்து) உமக்குக் கட்டுப்பட்டால் அவர்களின் பொருட்களில் சிறந்த வற்றை வசூலிப்பது குறித்து உம்மை எச்சரிக்கிறேன். அநீதி இழைக்கப்பட்டவனின் பிரார்த்தனைக்கு பயந்து கொள்ளும். ஏனெனில் அவனுக்கும் இறைவனுக்கும் மத்தியில் எந்தத் திரையுமில்லை." என்றார்கள். ஆதாரம் : திர்மிதீ (625).

மூன்றாவது : நோன்பு, ஏனைய நபிமார்களுக்கு விதியாக்கியதைப் போன்றே அல்லாஹ் இதனை முஸ்லிம்களுக்கும் விதியாக்கியுள்ளான். அல்லாஹ் கூறுகின்றான் : "நம்பிக்கையாளர்களே! நீங்கள் இறையச்சமுடையவர்களாக ஆகிவிடுவதற்காக உங்களுக்கு முன்னுள்ளவர்கள் மீது கடமையாக்கப்பட்டிருந்தது போல் உங்கள் மீதும் நோன்பு நோற்பது கடமையாக்கப்பட்டுள்ளது". (அல் பகரா : 183). இது ரமழான் மாதத்தில் பகல்வேளையில் குறிப்பிட்ட சில செயல்களைத் தவிர்ந்து கொள்வதைக் குறிக்கும். இது உள்ளத்தில் கட்டுப்பாடு, பொறுமை ஆகியவற்றை வளர்க்கின்றது. நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் கூறினார்கள் : "அல்லாஹ் கூறுகின்றான் : நோன்பு எனக்குரியது, அதற்கு நானே கூலி வழங்குவேன், தனது இச்சை, உணவு, பானம் அனைத்தையும் எனக்காகவே விடுகின்றான். நோன்பு ஒரு கேடயமாகும், மேலும் நோன்பாளிக்கு இரு சந்தோசங்கள் உண்டு, ஒன்று நோன்பு திறக்கும் போது, மற்றது தனது இரட்சகனை சந்திக்கும் போதாகும்". ஆதாரம் : புஹாரி 7492.

நான்காவது : ஹஜ், ஏனைய நபிமார்களுக்கு விதியாக்கியதைப் போன்றே அல்லாஹ் இதனை முஸ்லிம்களுக்கும் விதியாக்கியுள்ளான். ஹஜ்ஜுக்காக அழைப்பு விடுக்குமாறு இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை அல்லாஹ் பணித்தான். அல்லாஹ் கூறுகின்றான் : "ஹஜ்ஜை பற்றி மக்களுக்கு அறிவிப்பீராக! அவர்கள் நடந்தும், வெகு தொலைவிலிருந்து வரும் மெலிந்த ஒட்டகங்களின் மீதும் உம்மிடம் வருவார்கள் (எனக் கூறினோம்". (அல் ஹஜ் : 27). ஹஜ் செய்வோருக்காக புனித மாளிகையை சுத்தப்படுத்துமாறு அல்லாஹ் அவர்களுக்கு ஏவினான். அல்லாஹ் கூறுகின்றான் : "(நபியே!) இப்றாஹீமை நம் வீட்டின் சமீபமாக வசிக்கும்படிச் செய்து (அவரை நோக்கி) “நீர் எனக்கு எவரையும் இணையாக்காதீர். என் (இந்த) வீட்டை (தவா.்ப்) சுற்றி வருபவர்களுக்கும், அதில் நின்று, குனிந்து, சிரம் பணிந்து தொழுபவர்களுக்கும் அதைப் பரிசுத்தமாக்கி வைப்பீராக" என்று நாம் கூறிய சமயத்தில்". (அல் ஹஜ் : 26).

ஹஜ் என்பது உடல், பொருளாதார ரீதியில் சக்திபெற்ற ஒருவர் வாழ்நாளில் ஒரு தடவை புனித மக்காச் சென்று குறிப்பிட்ட சில வணக்கங்களை நிறைவேற்றுவதாகும். அல்லாஹ் கூறுகின்றான் : "மனிதர்களில் அதற்குச் சென்று வர சக்திபெற்றவர்கள் மீது அல்லாஹ்வுக்காக அவ்வீட்டை ஹஜ் செய்வது கடமையாகும். எவர் நிராகரிக்கின்றாரோ நிச்சயமாக அல்லாஹ் அகிலத்தாரை விட்டும் தேவையற்றவன்". (ஆல இம்ரான் : 97). ஹஜ் வணக்கத்தில் முஸ்லிம்கள் அல்லாஹ்வை மாத்திரம் வணங்க வேண்டும் என்ற நோக்கில் ஒரு இடத்தில் குழுமுகின்றனர். சுற்றுச் சூழல், கலாச்சாரம், வாழ்க்கைத் தர வேறுபாடுகள் அனைத்தும் நீங்கும் வகையில் அனைத்து ஹாஜிகளும் தமது ஹஜ் வணக்கத்தை ஒரு முன்னுதாரண அமைப்பில் நிறைவேற்றுகின்றனர்.

# 24. இஸ்லாத்தில் வணக்க வழிபாடுகள் தனித்து விளங்குவதற்கான பிரதான அடையாளம் என்னவெனில் அவ்வணக்கங்களின் செயல்முறைகள், நிறைவேற்றும் நேரங்கள், நிபந்தனைகள் அனைத்தும் அல்லாஹ் நிர்ணயித்து, அவனது தூதர் எத்திவைத்தவையாகும். அவற்றில் இன்று வரை கூட்டல், குறைத்தல் மூலம் எவ்வித மனிதத் தலையீடுகளும் இல்லை. இப்பிரதான வணக்கங்களின் பால் அனைத்து நபிமார்களும் அழைப்பு விடுத்துள்ளனர்.

இஸ்லாத்தில் வணக்க வழிபாடுகள் தனித்து விளங்குவதற்கான பிரதான அடையாளம் என்னவெனில் அவ்வணக்களின் செயல்முறைகள், நிறைவேற்றும் நேரங்கள், நிபந்தனைகள் அனைத்தும் அல்லாஹ் நிர்ணயித்து, அவனது தூதர் எத்திவைத்தவையாகும். அவற்றில் இன்று வரை கூட்டல், குறைத்தல் மூலம் எவ்வித மனிதத் தலையீடுகளும் இல்லை. அல்லாஹ் கூறுகின்றான் : "இன்றைய தினம் உங்களது மார்க்கத்தை உங்களுக்கு நான் முழுமைப்படுத்தி விட்டேன். எனது அருட்கொடைகளையும் உங்கள் மீது பூரணப்படுத்தி விட்டேன். மேலும் இஸ்லாத்தையே நான் உங்களுக்கு மார்க்கமாகப் பொருந்திக் கொண்டேன்". (அல் மாஇதா : 3). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "(நபியே!) உமக்கு வஹி அறிவிக்கப்பட்டதை பலமாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளும்; நிச்சயமாக நீர் நேரான பாதையின் மீதே இருக்கின்றீர்". (அஸ்ஸுஃக்ருப் : 43). தொழுகையைப் பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் : "(நம்பிக்கையாளர்களே!) நீங்கள் தொழுகையை முடித்துக் கொண்டால் உங்கள் நிலையிலும், இருப்பிலும், படுக்கையிலும் அல்லாஹ்வின் பெயரைக் கூறி 'திக்ரு' செய்துகொண்டே இருங்கள். (எதிரியின் தாக்குதலிலிருந்து) நீங்கள் அச்சமற்றவர்களாகி விட்டால் (முறைப்படி) தொழுகையை நிலைநிறுத்துங்கள். ஏனென்றால், நிச்சயமாகத் தொழுகையோ குறிப்பிட்ட நேரத்தில் (தவறாமல்) நம்பிக்கையாளர்கள் நிறைவேற்ற வேண்டிய கடமையாகவே இருக்கிறது". (அந்நிஸாஃ : 103). ஸகாத் விநியோகத்தைப் பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் : "(ஸகாத் என்னும்) தானங்கள் வறியவர்களுக்கும், ஏழைகளுக்கும், தானத்தை வசூல் செய்யும் ஊழியர்களுக்கும், இஸ்லாத்தின் பால் அவர்கள் உள்ளங்கள் ஈர்க்கப்படுவதற்காகவும், அடிமைகளை விடுதலை செய்வதற்காகவும், கடன் பட்டிருப்பவர்களுக்கும், அல்லாஹ்வின் பாதையில் (போர் புரிவோருக்கும்), வழிப்போக்கர்களுக்குமே உரியவை. (இது) அல்லாஹ் விதித்த கடமையாகும் - அல்லாஹ் (யாவும்) அறிபவன், மிக்க ஞானமுடையோன்". (அத்தௌபா : 60). நோன்பைப் பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் : "ரமழான் மாதம் எத்தகையதென்றால் அதில் தான் மனிதர்களுக்கு ((முழுமையான வழிகாட்டியாகவும், தெளிவான சான்றுகளைக் கொண்டதாகவும்; (சத்தியம் - அசத்தியத்தைப்) பிரித்தறிவிப்பதுமான அல் குர்ஆன் இறக்கியருளப் பெற்றது. ஆகவே, உங்களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ, அவர் அம்மாதம் நோன்பு நோற்க வேண்டும்;. எனினும் எவர் நோயாளியாகவோ அல்லது பயணத்திலோ இருக்கிறாரோ (அவர் அக்குறிப்பிட்ட நாட்களின் நோன்பை) மற்ற நாட்களில் நோற்க வேண்டும்;. அல்லாஹ் உங்களுக்கு இலகுவானதை நாடுகிறானே தவிர, உங்களுக்கு சிரமமானதை அவன் நாடவில்லை. குறிப்பிட்ட நாட்கள் (நோன்பில் விடுபட்டுப் போனதைப்) பூர்த்தி செய்யவும், உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக அல்லாஹ்வின் மகத்துவத்தை நீங்கள் போற்றி நன்றி செலுத்துவதற்காகவுமே (அல்லாஹ் இதன் மூலம் நாடுகிறான்)". (அல் பகரா : 185). ஹஜ்ஜைப்பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் : ஹஜ்ஜுக்குரிய காலம் குறிப்பிடப்பட்ட மாதங்களாகும்; எனவே, அவற்றில் எவரேனும் (இஹ்ராம் அணிந்து) ஹஜ்ஜை தம் மீது கடமையாக்கிக் கொண்டால், ஹஜ்ஜின் காலத்தில் உடலுறவு கொள்வதும், பாவங்கள் செய்வதும், வீண் தர்க்கம்- ஆகியவை செய்தல் கூடாது. நீங்கள் செய்யும் ஒவ்வொரு நன்மையையும் அல்லாஹ் அறிந்தவனாகவே இருக்கிறான்;. மேலும் ஹஜ்ஜுக்குத் தேவையான பொருட்களைத் தயார்படுத்தி வைத்துக் கொள்ளுங்கள்;. நிச்சயமாக இவ்வாறு தயார்படுத்தி வைப்பவற்றுள் மிகவும் சிறந்தது, தக்வா(என்னும் பயபக்தியே) ஆகும்; எனவே நல்லறிவுடையோரே! என்னையே அஞ்சிக் கொள்ளுங்கள்". (அல் பகரா : 197). இப்பாரிய வணக்கங்கள் அனைத்தின்பாலும் அனைத்து நபிமார்களும் அழைத்துள்ளனர்.

# 25. இஸ்லாத்தின் இறைத்தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இஸ்மாஈல் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் சந்ததியில் தோன்றிய அப்துல்லாஹ்வின் புதல்வர் ஆவார். கி. பி. 571ம் ஆண்டு மக்காவில் பிறந்து, அங்கேயே

நபியாகவும் அனுப்பப்பட்டு, மதீனாவிற்கு இடம்பெயர்ந்து சென்றார்கள். சிலைவணக்க வழிபாடுகளில் தனது சமூகத்துடன் பங்கெடுக்கவில்லை, எனினும் நல்ல பணிகளில் அவர்களுடன் பங்கெடுப்பார்கள். நபித்துவத்திற்கு முன்னரே நற்குணங்களுடையவராகத் திகழ்ந்தார்கள். அச்சமூகம் இவர்களை நம்பிக்கையாளர் என்று கூட அழைத்தனர். அன்னாரது 40வது வயதில் அல்லாஹ் நபியாக அனுப்பி, பாரிய அற்புதங்களைக் கொடுத்து அன்னாரை வலுப்படுத்தினான். அவற்றில் மிக மகத்தானது அல்குர்ஆனாகும். இதுதான் நபிமார்களுக்கு வழங்கப்பட்ட அத்தாட்சிகளில் மகத்தானதும், இன்றுவரை நிலைத்திருப்பதுமாகும். அல்லாஹ் அவனது மார்க்கத்தைப் பூரணப்படுத்திய பின், நபியவர்களும் அதனைப் பூரணமாக எத்திவைத்ததும் தனது 63வது வயதில் மதீனாவில் மரணித்து அங்கேயே அடக்கம் செய்யப்பட்டார்கள். முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தான் அனைத்து நபிமார்களுக்கும் முத்திரையாக உள்ளார்கள். சிலைவணக்கம், இறைநிராகரிப்பு, அறியாமை போன்ற இருள்களிலிருந்து ஓரிறைக் கொள்கை, இறைநம்பிக்கையின்பால் மக்களை வெளியேற்றுவதற்காக அல்லாஹ்

அன்னாருக்கு நேர்வழியையும், சத்திய மார்க்கத்தையும் கொடுத்து அனுப்பினான். தனது அனுமதியின் பிரகாரம்தான் அன்னாரை தன்பால் அழைப்பதற்கு அனுப்பியதாக அவனே சாட்சி கூறியுள்ளான்.

இஸ்லாத்தின் இறைத்தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இஸ்மாஈல் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் சந்ததியில் தோன்றிய அப்துல்லாஹ்வின் புதல்வர் ஆவார். கி. பி. 571ம் ஆண்டு மக்காவில் பிறந்து, அங்கேயே நபியாகவும் அனுப்பப்பட்டு, மதீனாவிற்கு இடம்பெயர்ந்து சென்றார்கள். அச்சமூகம் இவர்களை நம்பிக்கையாளர் என்று கூட அழைத்தனர். சிலைவணக்க வழிபாடுகளில் தனது சமூகத்துடன் பங்கெடுக்கவில்லை, எனினும் நல்ல பணிகளில் அவர்களுடன் பங்கெடுப்பார்கள். நபித்துவத்திற்கு முன்னரே நற்குணங்களுடையவராகத் திகழ்ந்தார்கள். மகத்தான குணத்தில் இருப்பதாக அல்லாஹ்வும் இவர்களை வர்ணித்துள்ளான். அல்லாஹ் கூறுகின்றான் : "நிச்சயமாக நீர் மகத்தான நற்குணமுடையவராகவே இருக்கிறீர்". (அல் கலம் : 4). அன்னாரது 40வது வயதில் அல்லாஹ் நபியாக அனுப்பி, பாரிய அற்புதங்களைக் கொடுத்து அன்னாரை வலுப்படுத்தினான். அவற்றில் மிக மகத்தானது அல்குர்ஆனாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : "ஒவ்வோர் இறைத்தூதருக்கும் சில அற்புதங்கள் வழங்கப்பட்டே இருந்தன. அவற்றைக் காணும் மக்கள் நம்பித்தான் ஆகவேண்டிய நிலை இருந்தது. எனக்கு வழங்கப்பெற்ற அற்புதமெல்லாம், அல்லாஹ் எனக்கு அருளிய வேத அறிவிப்பு (வஹீ) தான். எனவே, நபிமார்களிலேயே மறுமை நாளில், பின்பற்றுவோர் அதிகம் உள்ள நபியாக நான் இருக்கவேண்டும் என எதிர்பார்க்கிறேன்". ஆதாரம் : புஹாரி 4981. புனித அல்குர்ஆன் அல்லாஹ் தனது இறுதித்தூதருக்கு அறிவித்த இறைச்செய்தியாகும். அது பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் : "இதுதான் வேதநூல். இதில் சந்தேகமேயில்லை. இறையச்சம் உடையவர்களுக்கு (இது) நேரான வழியைக் காட்டும்". (அல் பகரா : 2). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "இந்த குர்ஆனை அவர்கள் சிந்தித்துணர வேண்டாமா? இது அல்லாஹ் அல்லாதவரிடமிருந்து வந்திருந்தால் இதில் பல (தவறுகளையும்) முரண்பாடுகளை(யும்) அவர்கள் கண்டிருப்பார்கள்". (அந்நிஸா஼ : 82). இது போன்ற ஒரு வேதத்தை முடியுமானால் கொண்டு வரும்படி அல்லாஹ் மனிதர்களுக்கும், ஜின்களுக்கும் சவால் விடுத்துள்ளான். அல்லாஹ் கூறுகின்றான் : "(நபியே!) நீர் கூறுவீராக: மனிதர்களும் ஜின்களும் ஒன்று சேர்ந்து, சிலர் சிலருக்கு உதவியாக இருந்து இதைப்போன்ற ஒரு குர்ஆனைக் கொண்டுவர முயற்சித்தபோதிலும் இதைப்போல் கொண்டு வர அவர்களால் (முடியவே) முடியாது". (அல்இஸ்ரா஼ : 88). மேலும் இதில் உள்ளது போன்ற 10 அத்தியாயங்களைக் கொண்டு வரும்படியும் சவால் விட்டான். அல்லாஹ் கூறுகின்றான் : "இதனை இவரே இட்டுக் கட்டினார் என அவர்கள் கூறுகின்றனரா? நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், இட்டுக்கட்டப்பட்ட இது போன்ற பத்து அத்தியாயங்களைக் கொண்டுவாருங்கள். (இதற்காக) அல்லாஹ்வையன்றி உங்களால் முடிந்தவர்களை எல்லாம் அழைத்துக் கொள்ளுங்கள் என்று (நபியே) நீர் கூறுவீராக!". (ஹூத் : 13). மேலும் இதில் உள்ளது போன்ற ஒரு அத்தியாயத்தையாயினும் கொண்டு வரும்படியும் சவால் விட்டான். அல்லாஹ் கூறுகின்றான் : "நமது அடியார் (முஹம்மத்) மீது நாம் இறக்கிய(வேதத்)தில் நீங்கள் சந்தேகத்திலிருந்தால் அது போன்றதோர் அத்தியாயத்தைக் கொண்டு வாருங்கள். நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் (இதற்காக) அல்லாஹ்வைத் தவிர உங்கள் உதவியாளர்களை அழைத்துக் கொள்ளுங்கள்". (அல்பகரா : 23).

புனித குர்ஆன்தான் நபிமார்களுக்கு வழங்கப்பட்ட அத்தாட்சிகளில் இன்றுவரை நிலைத்திருக்கும் ஒரேயொரு அத்தாட்சியாகும். அல்லாஹ் அவனது மார்க்கத்தைப் பூரணப்படுத்திய பின், நபியவர்களும் அதனைப் பூரணமாக எத்திவைத்ததும் தனது 63வது வயதில் மதீனாவில் மரணித்து அங்கேயே அடக்கம் செய்யப்பட்டார்கள்.

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அனைத்து நபிமார்கள், இறைத்தூதர்களுக்கும் முத்திரையாகும். அல்லாஹ் கூறுகின்றான் : "உங்களிலுள்ள

ஆண்களில் எவருக்கும் முஹம்மது (நபி அவர்கள்) தந்தையாக இருக்கவில்லை.எனினும், அவர் அல்லாஹ்வுடைய தூதராகவும், நபிமார்களுக்கு (இறுதி) முத்திரையாகவும் இருக்கிறார்.அல்லாஹ் அனைத்தையும் நன்கறிந்தவனாக இருக்கிறான்". (அல்அஹ்ஸாப் : 40). முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு கூறினார்கள் : "என்னுடைய நிலையும் எனக்கு முன்பிருந்த இறைத்தூதர்களின் நிலையும் ஒரு வீட்டைக் கட்டி அதை அழகாக அலங்கரித்து, ஒரு மூலையில் ஒரு செங்கல் அளவிற்குள்ள இடத்தை மட்டும் விட்டுவிட்ட ஒரு மனிதரின் நிலை போன்றதாகும். மக்கள் அதைச் சுற்றிப் பார்த்துவிட்டு ஆச்சரியமடைந்து, 'இச்செங்கல் (இங்கே) வைக்கப்பட்டிருக்கக் கூடாதா?' என்று கேட்கலானார்கள். நானே அச்செங்கல். மேலும், நானே இறைத் தூதர்களில் இறுதியானவன்". ஆதாரம் : புஹாரி 3534. இன்ஜீல் வேதத்தில் (பைபிளின் புதிய ஏற்பாட்டில்) முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய வருகை பற்றிய நற்செய்தியை ஈஸா அலைஹிஸ்ஸலாம் பின்வருமாறு கூறுகின்றார் : "இயேசு அவர்களை நோக்கி வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத்தலைக்கல்லாயிற்று, அது கார்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறதுஎன்று நீங்கள் வேதத்தில் ஒருக்காலும் வாசிக்க வில்லையா?" (மத்தேயு 21 : 42). மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைப்பார்த்து அல்லாஹ் கூறயதாக உபாகமத்தில் பின்வரும் வசனம் இடம்பெற்றுள்ளது : "உன்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணி, என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன், நான் அவருக்குக் கற்பிப்பதையெல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார்". (உபாகமம் 18 : 18)

அல்லாஹ் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு நேர்வழியையும், சத்திய மார்க்கத்தையும் கொடுத்து அனுப்பினான். தனது அனுமதியின் பிரகாரம்தான் அன்னாரை தன்பால் அழைப்பதற்காக அனுப்பியதாக அவனே சாட்சி கூறியுள்ளான். அல்லாஹ் கூறுகின்றான் : "(நபியே!) உம்மீது அருளப்பட்ட வேதம் உண்மையானதென்றும் (உமது மேலான தகுதியை) அறிந்தே அதை (உம்மீது அவன்) இறக்கிவைத்தான் என்றும் அல்லாஹ்வே சாட்சியம் கூறுகிறான். (அவ்வாறே) வானவர்களும் சாட்சி கூறுகின்றனர். அல்லாஹ்வே போதுமான சாட்சி ஆவான்". (அந்நிஸாஃ : 166). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "அவனே,தன் தூதரை நேரானவழியைக்கொண்டும்,சத்தியமான மார்க்கத்தைக் கொண்டும் அதை எல்லாமார்க்கங்களைவிடமேலோங்க வைப்பதற்காக அனுப்பி வைத்தான்.இதற்கு அல்லாஹ்வே போதுமான சாட்சியாவான்" (அல் பத்ஹ் : 28). சிலைவணக்கம், இறைநிராகரிப்பு, அறியாமை போன்ற இருள்களிலிருந்து ஓரிறைக் கொள்கை, இறைநம்பிக்கையின்பால் மக்களை வெளியேற்றுவதற்காக அல்லாஹ் அன்னாருக்கு நேர்வழியைக் கொடுத்து அனுப்பினான். அல்லாஹ் கூறுகின்றான் : "(உங்களில்) எவர்கள் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தைப் பின்பற்றுகிறார்களோ அவர்களை அதன் மூலமாக அல்லாஹ் சமாதானத்திற்குரிய வழியில் செலுத்துகிறான். இன்னும், இருள்களில் இருந்தும் வெளியேற்றித் தன் அருளைக் கொண்டு ஒளியின் பக்கம் கொண்டு வருகிறான். மேலும், அவர்களை நேரான வழியில் செல்லும்படியும் செய்கிறான்". (அல் மாஇதா : 16). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "அலிஃப், லாம், றா. (நபியே! இது) வேதமாகும்; மனிதர்களை அவர்களுடைய இறைவனின் அனுமதியைக் கொண்டு இருள்களிலிருந்து வெளியேற்றிப் பிரகாசத்தின் பால் நீர் கொண்டுவருவதற்காக இ(வ் வேதத்)தை நாமே உம்மீது இறக்கியிருக்கின்றோம்; புகழுக்குரியவனும், வல்லமை மிக்கோனுமாகிய (அல்லாஹ்வின்) பாதையில் (அவர்களை நீர் கொண்டுவருவீராக!". (இப்ராஹீம் : 1).

# 26. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கொண்டு வந்த இஸ்லாமிய சட்டதிட்டங்கள்தான் இறுதி இறைத்தூதாகவும், இறைச் சட்டமாகவும் உள்ளது. இது பரிமபூரணமானதாகவும், மக்களின்

ஈருலகத் தேவைகளுக்கு உகந்ததாகவும் உள்ளது. முதற்தரமாக இது மக்களின் மார்க்கம், உயிர், புத்தி, சந்ததி என்பவற்றைப் பாதுகாக்கின்றது. முன்னைய ஷரீ அத் சட்டங்கள் ஒன்றையொன்று மாற்றியதைப் போன்று இந்த ஷரீ அத் முன்னைய அனைத்து ஷரீ அத்தையும் மாற்றியமைத்து விட்டது.

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கொண்டு வந்த இஸ்லாமிய சட்டதிட்டங்கள்தான் இறுதி இறைத்தூதாகவும், இறைச் சட்டமாகவும் உள்ளது. இத்தூதுத்துவத்தின் மூலம் அல்லாஹ் மார்க்கத்தைப் முழுமைப்படுத்தி விட்டான். முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை நபியாக அனுப்புவதன் மூலம் மக்களுக்கு தனது அருட்கொடையைப் பூர்த்தி செய்து விட்டான். அல்லாஹ் கூறுகின்றான் : "இன்றைய தினம் உங்களது மார்க்கத்தை உங்களுக்கு நான் முழுமைப்படுத்தி விட்டேன். எனது அருட்கொடைகளையும் உங்கள் மீது பூரணப்படுத்தி விட்டேன். மேலும் இஸ்லாத்தையே நான் உங்களுக்கு மார்க்கமாகப் பொருந்திக் கொண்டேன்". (அல் மாஇதா : 3).

இஸ்லாமிய ஷரீ அத் சட்டம் பரிபூரணமானதாகவும், மக்களின் ஈருலகத் தேவைகளுக்கு உகந்ததாகவும் உள்ளது. ஏனெனில் இது முன்னைய அனைத்து சட்டங்களையும் உள்ளடக்கியதாகவும், பூரணப்படுத்தியதாகவும் திகழ்கின்றது. அல்லாஹ் கூறுகிறான் : "நிச்சயமாக இந்த குர்ஆன் மிக நேரான, நீதமான பாதைக்கு வழி காட்டுகிறது; மேலும், (உங்களில்) நம்பிக்கை கொண்டு நற்செயல்களைச் செய்பவர்களுக்கு நிச்சயமாக மிகப் பெரிய கூலி உண்டு என்றும் நற்செய்தி கூறுகிறது". (அல் இஸ்ரா ஃ : 9). முன்னைய சமூகங்கிளில் இருந்த பல சுமைகளை இஸ்லாமிய சட்டங்கள் தளர்த்தியுள்ளன. அல்லாஹ் கூறுகின்றான் : "(ஆகவே, அவர்களில்) எவர்கள் எழுதப் படிக்கத் தெரியாத (நம்) தூதராகிய இந்த நபியைப் பின்பற்றுகிறார்களோ அவர்கள் தங்களிடமுள்ள தௌறாத்திலும், இன்ஜீலிலும் இவருடைய பெயர் எழுதப்பட்டிருப்பதைக் காண்பார்கள். (இத்தூதரோ) அவர்களை நன்மையான காரியங்களைச் செய்யும்படி ஏவி, பாவமான காரியங்களிலிருந்து விலக்குவார். நல்லவற்றையே அவர்களுக்கு ஆகுமாக்கி வைப்பார். கெட்டவற்றை அவர்களுக்குத் தடுத்து விடுவார். மேலும், அவர்களது சுமையையும் அவர்கள் மீதிருந்த (கடினமான சட்ட) விலங்குகளையும் (இறைவனின் அனுமதி கொண்டு) நீக்கிவிடுவார். ஆகவே, எவர்கள் அவரை உண்மையாகவே நம்பிக்கை கொண்டு, அவரை பலப்படுத்தி அவருக்கு உதவி செய்து, அவருக்கு இறக்கப்பட்ட பிரகாசமான (இவ்வேதத்)தைப் பின்பற்றுகிறார்களோ அவர்கள்தான் வெற்றி பெற்றவர்கள்". (அல் அஃராப் : 157).

இஸ்லாமிய ஷரீ அத் சட்டம் முன்னைய அனைத்து ஷரீ அத்தையும் மாற்றியமைத்து விட்டது. அல்லாஹ் கூறுகின்றான் : "(நபியே! முற்றிலும்) சத்தியத்தைக் கொண்டு இவ்வேதத்தை உமக்கு நாம் இறக்கினோம். இது தனக்கு முன்னுள்ள (மற்ற) வேதங்களையும் உண்மையாக்கி, அவற்றை மிகைக்கக் கூடியதாகவும் இருக்கிறது. ஆகவே, (நபியே!) நீர் அல்லாஹ் (உமக்கு) இறக்கிய இதைக்கொண்டே அவர்களுக்கிடையில் தீர்ப்பளிப்பீராக. உமக்கு வந்த உண்மையைப் புறக்கணித்துவிட்டு அவர்களுடைய மன விருப்பங்களை நீர் பின்பற்றாதீர். உங்களில் ஒவ்வொரு (சமூகத்த)வருக்கும் ஒவ்வொரு சட்டத்தையும், வழிமுறையையும் நாமே ஏற்படுத்தியிருக்கின்றோம். அல்லாஹ் நாடியிருந்தால் உங்களை ஒரே சமூகமாக ஆக்கியிருப்பான். எனினும், உங்களுக்கு அவன் கொடுத்தவற்றில் உங்களைச் சோதிப்பதற்காகவே (இவ்வாறு செய்திருக்கிறான்). ஆகவே, நன்மைகளுக்கு விரைந்து செல்லுங்கள். அல்லாஹ்விடமே உங்கள் அனைவரினதும் மீளுதல் உள்ளது. பின்னர் நீங்கள் எதில் முரண்பட்டுக் கொண்டிருந்தீர்களோ அதைப் பற்றி அவன் உங்களுக்கு அறிவிப்பான்". (அல் மாஇதா : 48). எனவே ஷரீ அத் சட்டத்தை உள்ளடக்கியுள்ள

அல்குர்ஆன் இதற்கு முன் வந்த இறைவேதங்களை உண்மைப் படுத்தவும், அவற்றுக்குத் தீர்ப்பு வழங்கவும், அவற்றை மாற்றியமைக்கவுமே வந்தது.

## 27. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கொண்டு வந்த இஸ்லாத்தைத் தவிர வேறு எந்த மார்க்கத்தையும் அல்லாஹ் ஏற்கமாட்டான். இஸ்லாம் அல்லாத மார்க்கத்தை யார் பின்பற்றுகின்றாரோ அது அவரிடம் இருந்து ஏற்கப்பட மாட்டாது.

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களது வருகைக்குப் பின் அன்னார் கொண்டு வந்த இஸ்லாத்தைத் தவிர வேறு எந்த மார்க்கத்தையும் அல்லாஹ் ஏற்கமாட்டான். இஸ்லாம் அல்லாத மார்க்கத்தை யார் தேடுகின்றாரோ அது அவரிடம் இருந்து ஏற்கப்பட மாட்டாது. அல்லாஹ் கூறினான் : "இஸ்லாமையன்றி (வேறொரு) மார்க்கத்தை எவரேனும் விரும்பினால் நிச்சயமாக அவரிடமிருந்து (அது) அங்கீகரிக்கப்படவே மாட்டாது. மறுமையில் அவர் நஷ்டமடைந்தவராகவே இருப்பார்". (ஆல இம்ரான் : 85). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் (அங்கீகரிக்கப்பட்ட) மார்க்கம் இஸ்லாம்தான். வேதம் அளிக்கப்பட்டவர்கள் ('இதுதான் உண்மையான வேதம்' என்ற) ஞானம் அவர்களுக்கு கிடைத்த பின்னர் தங்களுக்கிடையே உள்ள பொறாமையின் காரணமாகவே (இதற்கு) மாறுபட்டனர். ஆகவே, எவர்கள் அல்லாஹ்வுடைய வசனங்களை நிராகரிக்கிறார்களோ அவர்களுடைய கணக்கை நிச்சயமாக அல்லாஹ் விரைவாக விசாரிப்பான்". (ஆல இம்ரான் : 19). இந்த இஸ்லாம்தான் நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது மார்க்கமாகும். அல்லாஹ் கூறுகின்றான் : "தன்னைத் தானே மடையனாக்கிக் கொண்டவனைத் தவிர வேறு யார்தான் இப்ராஹீமுடைய மார்க்கத்தைப் புறக்கணிப்பான்? நிச்சயமாக நாம் அவரை இவ்வுலகில் தேர்ந்தெடுத்தோம்;. நிச்சயமாக அவர் மறுமையிலும் நல்லடியார் கூட்டத்திலேயே இருப்பார்". (அல் பகரா : 130). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "எவர் அல்லாஹ்வுக்கு முற்றிலும் தன்முகத்தை பணியவைத்து இஸ்லாமில் உறுதியானவராக இருந்து, நன்மையும்செய்து, இப்றாஹீமுடைய (நேரான) மார்க்கத்தையும் பின்பற்றுகிறாரோ அவரைவிட அழகான மார்க்கத்தை உடையவர் யார்? அல்லாஹ் இப்றாஹீமை(த் தன்) உண்மை நண்பராக எடுத்துக் கொண்டிருக்கிறான்". (அந்நிஸா: : 125). தனது சமூகத்தவரிடம் கூறுமாறு அல்லாஹ் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் பின்வருமாறு கூறுகின்றான் : "நிச்சயமாக என் இறைவன் எனக்கு நேரான பாதையை அறிவித்து விட்டான். (அது) மிக்க உறுதியான மார்க்கமாகும், இப்றாஹீமுடைய நேரான மார்க்கமாகும். அவர் இணைவைத்து வணங்குபவர்களில் (ஒருவராக) இருக்கவில்லை" என்று (நபியே!) கூறுவீராக. (அல் அன்ஆம் : 161).

## 28. புனித அல்குர்ஆன் அல்லாஹ் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இறக்கிய வேதமாகும். இது படைத்துப் பரிபாலிக்கும் இரட்சகனின் பேச்சாகும். இது போன்ற ஒன்றையோ, அல்லது இதிலுள்ள அத்தியாயத்தைப் போன்ற ஒன்றையோ

கொண்டு வரும்படி அல்லாஹ் மனிதர்களுக்கும் ஜின்களுக்கும் சவால் விட்டுள்ளான். அச்சவால் இன்றுவரை இருந்து கொண்டுதான் உள்ளது. பல மில்லியன் மக்கள் தடுமாறிய பல முக்கிய வினாக்களுக்கு அல்குர்ஆன் பதிலளிக்கின்றது. இதன் மூலமொழி அரபியிலேயே ஓர் எழுத்துக்கூட குறையாமல் இன்றுவரை இது பாதுகாக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றது. இது அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டுள்ளது. இது மகத்தான அற்புதமான ஒரு வேதமாகும். இதனையோ, இதன் மொழிபெயர்ப்பையோ வாசிக்க மிக உகந்த நூலாகும். அதேபோன்று தான் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய வழிமுறை, போதனைகள், சரிதை, அனைத்தும் நம்பத்தகுந்த உறுதியான அறிவிப்பாளர் வரிசைத் தொடர் மூலம் அறிவிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டுள்ளன. அவை முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பேசிய அரபுமொழியிலேயே அச்சிடப்பட்டும், பல மொழிகளுக்கு மொழிமாற்றம் செய்யப்பட்டும் உள்ளன. அல்குர்ஆனும் நபிமொழிகளும் (ஸூன்னா) தான் இஸ்லாமியப் போதனைகள், சட்டதிட்டங்களின் பிரதான

மூலாதாரமாகும். இஸ்லாமியப் போதனைகள் முஸ்லிம்களின் செயற்பாட்டிலிருந்து எடுக்கப்படமாட்டாது. மாறாக அல்குர்ஆன், ஸுன்னாவிலிருந்துதான் எடுக்கப்படுகின்றன.

புனித அல்குர்ஆன் அல்லாஹ் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அரபு மொழியில் இறக்கிய வேதமாகும். இது படைத்துப் பரிபாலிக்கும் இரட்சகனின் பேச்சாகும். அல்லாஹ் கூறுகின்றான் : "நிச்சயமாக இது அகிலத்தாரின் இறைவனால்தான் அருளப்பட்டது. (இறை கட்டளைப் பிரகாரம்) ரூஹுல் அமீன் (என்னும் ஜிப்ரீல்) இதைக் கொண்டு இறங்கினார். (மனிதர்களுக்கு) நீர் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காக உமது உள்ளத்தில் (இறக்கிவைத்தார்), தெளிவான அரபி மொழியில் (இது இறக்கப்பட்டுள்ளது)". (அஷ்ஷுஅரா.ஃ : 192- 195). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "(நபியே!) நிச்சயமாக மிக்க ஞானமுடைய (யாவற்றையும்) நன்கறிந்தவனிடமிருந்து இந்த குர்ஆன் உமக்குக் கொடுக்கப் பட்டுள்ளது". (அந் நம்லு : 6). இக்குர்ஆன் அல்லாஹ்விடமிருந்து இறக்கப்பட்டதும், முன்னைய வேதங்களை உண்மைப்படுத்தக் கூடியதுமாகும். அல்லாஹ் கூறுகின்றான் : "இந்தக் குர்ஆன் அல்லாஹ்வினால் (அருளப்பட்டதே) தவிர (மற்ற எவராலும்) பொய்யாகக் கற்பனை செய்யப்பட்டதல்ல. மேலும், இதற்கு முன்னுள்ள வேதங்களை இது உண்மையாக்கி வைத்து அவற்றில் உள்ளவற்றை விவரித்துக் கூறுவதாகவும் இருக்கிறது. ஆகவே, (இது) உலகத்தாரின் இறைவனிடமிருந்து வந்தது என்பதில் அறவே சந்தேகமில்லை". (யூனுஸ் : 37). அல் குர்ஆன் யூத, கிறிஸ்தவர்கள் அவர்களின் மதத்தில் கருத்து வேறுபாடுபட்ட பல பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான் : "நிச்சயமாக இந்த குர்ஆன், இஸ்ராயீலின் சந்ததிகள் எவ்விஷயத்தில் தர்க்கித்துக் கொண்டிருக்கிறார்களோ அவற்றில் பெரும்பாலானவற்றை அவர்களுக்கு விவரித்துக் கூறுகிறது". (அந் நம்லு : 76). அல்லாஹ்வுடன், அவனது மார்க்கம், கூலிகளுடன் தொடர்பான உண்மைகளை அறியும் விடயத்தில் மக்களுக்கு ஆதாரமாக அமையக்கூடிய பல சான்றுகள், அத்தாட்சிகளை உள்ளடக்கியுள்ளது. அல்லாஹ் கூறுகின்றான் : "இன்னும், இந்த குர்ஆனில் மனிதர்களுக்காக எல்லாவித உதாரணங்களையும், அவர்கள் சிந்தித்துப் பார்ப்பதற்காக நாம் திடமாக எடுத்துக் கூறியுள்ளோம்". (அஸ்ஸுமர் : 27). மேலும் அல்லாஹ் கூறினான் : "அனைத்தையும் தெளிவுபடுத்தக் கூடியதாகவும், நேர்வழியாகவும், அருளாகவும், முஸ்லிம்களுக்கு நன்மாராயமாகவும் நாம் இவ்வேதத்தை உம்மீது இறக்கி வைத்துள்ளோம்". (அந்நஹ்லு : 89).

பல மில்லியன் மக்கள் தடுமாறிய பல முக்கிய வினாக்களுக்கு அல்குர்ஆன் பதிலளிக்கின்றது. வானங்கள், பூமியை அல்லாஹ் எவ்வாறு படைத்தான் என்பதை அல்குர்ஆன் விளக்குகின்றது. அல்லாஹ் கூறுகின்றான் : "(ஆரம்பத்தில்) வானம் (என்றும்) பூமி (என்றும் தனித்தனியாக) இல்லாமல் இருந்ததை நாமே பிரித்தமைத்தோம், நீரைக் கொண்டு உயிருள்ள ஒவ்வொன்றையும் (வாழ்ந்திருக்கச்) செய்தோம் என்பதையும் இந்நிராகரிப்பவர்கள் பார்க்கவில்லையா? ஆகவே, இவர்கள் நம்பிக்கை கொள்ள மாட்டார்களா?". (அல்அன்பியா.ஃ : 30). மனிதனை அல்லாஹ் எவ்வாறு படைத்தான் என்பதையும் அல்குர்ஆன் விளக்குகின்றது. அல்லாஹ் கூறுகின்றான் : "மனிதர்களே! (மறுமையில் உங்களுக்கு உயிர் கொடுத்து) எழுப்புவதைப் பற்றி நீங்கள் சந்தேகம் கொண்டால், (உங்களை முதலில் எவ்வாறு படைத்தோம் என்பதைக் கவனியுங்கள்.) நிச்சயமாக நாம் உங்களை (உங்கள் மூலப் பிதாவாகிய ஆதமை) மண்ணில் இருந்து (படைத்துப்) பின்னர் இந்திரியத் துளியிலிருந்து, பின்னர் அதை ஓர் இரத்தக் கட்டியாகவும், பின்னர் (அதை) குறை வடிவ அல்லது முழு வடிவ மாமிசப் பிண்டமாகவும் (நாம் உற்பத்தி செய்கிறோம். நம் வல்லமையை) உங்களுக்குத் தெளிவாக்கும் பொருட்டே (இவ்வாறு படிப்படியாகப் பல மாறுதல்களை அடைய) ஒரு குறிப்பிட்ட காலம் வரை தங்கி இருக்கும்படி செய்கிறோம். பின்னர், உங்களைச் சிசுக்களாக வெளிப்படுத்தி நீங்கள் உங்கள் வாலிபத்தை அடையும்படிச் செய்கிறோம். (இதற்கிடையில்) இறந்துவிடுபவர்களும் உங்களில் பலர் இருக்கின்றனர். (அல்லது வாழ்ந்து)

அனைத்தையும் அறிந்த பின்னர் ஒன்றுமே அறியாதவர்களைப்போல் ஆகிவிடக்கூடிய தள்ளாத வயது வரை விட்டு வைக்கப்படுபவர்களும் உங்களில் இருக்கின்றனர். (மனிதனே!) பூமி (புற்பூண்டு ஏதுமின்றி) வறண்டு இருப்பதை நீ காணவில்லையா? அதன் மீது நாம் மழையை பொழியச் செய்தால், அது பசுமையாகி வளர்ந்து அழகான பற்பல வகை (ஜோடி ஜோடி)யான உயர்ந்த புற்பூண்டுகளை முளைப்பிக்கிறது". (ஹஜ் : 5). மனிதன் இறுதி முடிவு என்ன? இவ்வுலக வாழ்வின் பின் நல்லவர், தீயவனுக்குரிய கூலிகள் என்ன?- இது பற்றிய ஆதாரங்கள் 20ம் இலக்கத்தில் கூறப்பட்டு விட்டது- இவ்வுலகம் இயற்கையாக உருவானதா? அல்லது உயர்ந்த ஓர் இலக்கிற்காக உருவாக்கப்பட்டதா? போன்ற கேள்விகளுகும் அல்குர்ஆன் பதில்ளிக்கின்றது. அல்லாஹ் கூறினான் : "வானங்கள், பூமியினுடைய ஆட்சியையும் அல்லாஹ் படைத்திருக்கும் மற்ற பொருள்களையும் அவர்கள் பார்க்கவில்லையா? அவர்களுடைய (மரண) தவணை நெருங்கி இருக்கக் கூடும் என்பதையும் (அவர்கள் எண்ணவில்லையா?) இவ்வேதத்திற்குப் பின்னர் எதைத்தான் அவர்கள் நம்பிக்கை கொள்வார்கள்". (அல்அ◌ஃராப் : 185). மேலும் அல்லாஹ் கூறினான் : "நாம் உங்களை படைத்ததெல்லாம் வீணுக்காக என்றும், நீங்கள் நம்மிடம் கொண்டு வரப்பட மாட்டீர்கள் என்றும் எண்ணிக் கொண்டிருந்தீர்களா?" (என்று கேட்பான்.)". (அல்மு◌ஃமினூன் : 115).

அல்குர்ஆன், அது இறங்கிய மூலமொழியிலேயே இன்றுவரை பாதுகாக்கப்பட்டுள்ளது. அல்லாஹ் கூறுகின்றான் : "நிச்சயமாக இந்த வேதத்தை நாமே இறக்கினோம், இன்னும் இதனை நாமே பாதுகாப்போம்". (அல்ஹிஜ்ர் : 9). அதிலிருந்து ஓர் எழுத்துக் கூட குறையவில்லை. அதில் முரண்பாடோ, குறையோ, மாற்றங்களோ அறவே நடக்க முடியாத சாத்தியமற்றதாகும். அல்லாஹ் கூறுகின்றான் : "இந்த குர்ஆனை அவர்கள் சிந்தித்துணர வேண்டாமா? இது அல்லாஹ் அல்லாதவரிடமிருந்து வந்திருந்தால் இதில் பல (தவறுகளையும்) முரண்பாடுகளை(யும்) அவர்கள் கண்டிருப்பார்கள்". (அந்நிஸா◌ஃ : 82). இது அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டுள்ளது. இது மகத்தான அற்புதமான ஒரு வேதமாகும். இதனை ஓதவோ, கேட்கவோ, அல்லது இதன் மொழிபெயர்ப்பை வாசிக்கவோ மிக உகந்த நூலாகும். அதேபோன்று தான் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய வழிமுறை, போதனைகள், சரிதை, அனைத்தும் நம்பத்தகுந்த உறுதியான அறிவிப்பாளர் வரிசைத் தொடர் மூலம் அறிவிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டுள்ளன. அவை முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பேசிய அரபுமொழியிலேயே அச்சிடப்பட்டும், பல மொழிகளுக்கு மொழிமாற்றம் செய்யப்பட்டும் உள்ளன. அல்குர்ஆனும் நபிமொழிகளும் (ஸுன்னா) தான் இஸ்லாமியப் போதனைகள், சட்டதிட்டங்களின் பிரதான மூலாதாரமாகும். இஸ்லாமியப் போதனைகள் முஸ்லிம்களின் செயற்பாட்டிலிருந்து எடுக்கப்படமாட்டாது. மாறாக அல்குர்ஆன், ஸுன்னாவிலிருந்துதான் எடுக்கப்படுகின்றன.குர்ஆனைப் பற்றி அல்லாஹ் கூறும்போது : "நிச்சயமாக எவர்கள் இக்குர்ஆன் தம்மிடம் வந்த போது நிராகரித்தோர்களோ அவர்கள் (தண்டிக்கப்படுவார்கள்.) நிச்சயமாக இது கண்ணியமான வேதமாகும். இதற்கு முன்பும் இதற்கு பின்பும் பொய் இதனிடத்தில் வராது. (இது) புகழுக்குரியவனான ஞானமிக்கவினடமிருந்து இறக்கப்பட்டதாகும்". (◌ஃபுஸ்ஸிலத் : 41, 42). ஸுன்னாவும் அல்லாஹ்விடமிருந்து வந்த இறைச்செய்தி என்பதைப் பற்றி பின்வருமாறு கூறுகின்றான் : "இத்தூதர் எதை உங்களுக்கு வழங்கினாரோ அதை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். அவர் எதை உங்களுக்குத் தடுத்தாரோ (அதை விட்டும்) விலகிக் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் தண்டிப்பதில் கடுமையானவன்". (அல்ஹஷ்ர் : 7).

# 29. பெற்றோருக்கு- அவர்கள் முஸ்லிமல்லாதவர்களாக இருந்தாலும்- உபகாரம் செய்யுமாறும், பிள்ளைகளை சிறந்த முறையில் வளர்க்குமாறும் இஸ்லாம் ஏவுகின்றது.

பெற்றோருக்கு உபகாரம் செய்வதை இஸ்லாம் ஏவுகின்றது. அல்லாஹ் கூறுகின்றான் : "(நபியே!) உமது இறைவன் தன்னைத் தவிர (மற்றெவரையும்) வணங்கக் கூடாதென்று (கட்டளையிட்டிருப்பதுடன்) தாய் தந்தைக்கு உபகாரம் புரியும் படியும் கட்டளையிட்டிருக்கிறான். உம்மிடம் இருக்கும் அவர்களில் ஒருவரோ அல்லது இருவருமோ முதுமையை அடைந்து விட்டபோதிலும் அவர்களை விரட்டவும்

வேண்டாம்; அவர்களை (நிந்தனையாகச்) ‘சீ’ என்றும் சொல்லவும் வேண்டாம். அவர்களிடம் (எதைக் கூறியபோதிலும்) மிக்க மரியாதையாக(வும் அன்பாகவுமே) பேசுவீராக". (அல்இஸ்ராஃ : 23). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : “தனது தாய் தந்தைக்கு உபகாரம் புரியும் படி மனிதனுக்கு நாம் நல்லுபதேசம் செய்தோம். அவனுடைய தாய் துன்பத்தின் மேல் துன்பத்தை அனுபவித்து(க் கர்ப்பத்தில்) அவனைச் சுமந்து கொண்டலைந்தாள். (பிறந்த) பிறகும் இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னரே அவனுக்குப் பால் மறக்கடித்தாள். ஆகவே, நீ எனக்கும் நன்றி செலுத்து; உன் தாய் தந்தைக்கும் நன்றி செலுத்து. முடிவில் நீ நம்மிடமே வந்து சேர வேண்டியதிருக்கிறது". (லுக்மான் : 14). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "மனிதன் தன் தாய் தந்தைக்கு உபகாரம் புரியும் படி நாம் அவனுக்கு நல்லுபதேசம் செய்தோம். அவனுடைய தாய், சிரமத்துடனேயே அவனை (கர்ப்பத்தில்) சுமந்திருந்து சிரமத்துடனேயே பிரசவிக்கிறாள். அவள் கர்ப்பமானதிலிருந்து, இவன் பால்குடி மறக்கும் வரை, முப்பது மாதங்கள் (மிக்க சிரமத்துடன்) செல்கின்றன. இவன் வாலிபமாகி நாற்பது வயதையடைந்தால் “என் இறைவனே! நீ என் மீதும், என் தாய் தந்தை மீதும் புரிந்த அருளுக்காக உனக்கு நான் நன்றி செலுத்தி, உன் திருப்தியை அடையக்கூடிய நற்செயல்களைச் செய்யும்படி(யான நல்லறிவை) நீ எனக்குத் தந்தருள்வாயாக! எனக்கு உதவியாக இருக்கும்படி என் குடும்பத்தை சீர்திருத்திவை. நிச்சயமாக நான் உன்னிடம் பாவமன்னிப்புக் கோரி மீண்டு விட்டேன். (உனக்கு) முற்றிலும் வழிபட்டவர்களில் நானும் ஒருவன்" என்று கூறுவான்". (அல்அஹ்காப் : 15). அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு கூறுகின்றார் :நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஒருவர் வந்து, 'இறைத்தூதர் அவர்களே! நான் அழகிய முறையில் உறவாடுவதற்கு மிகவும் அருகதையானவர் யார்?' என்று கேட்டார். நபியவர்கள், 'உன் தாய்' என்றார்கள். அவர், 'பிறகு யார்?' என்று கேட்டார். நபியவர்கள், 'உன் தாய்' என்றார்கள். அவர், 'பிறகு யார்?' என்றார். 'உன் தாய்' என்றார்கள். அவர், 'பிறகு யார்?' என்றார். அப்போது நபியவர்கள், 'பிறகு, உன் தந்தை' என்றார்கள். ஆதாரம் : புஹாரி (5971), முஸ்லிம் (2548)

பெற்றோரைக் கவனிப்பதற்கான இந்தக் கட்டளை முஸ்லிம், முஸ்லிமல்லாதோர் என்ற பாகுபாடின்றி அனைத்து பெற்றோர்களுக்குமானதாகும். அஸ்மா பின்த் அபீ பக்ர் ரலியல்லாஹு அன்ஹா கூறுகின்றார் : நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் குரைஷியருக்கும் இடையிலான ஹுதைபியா ஒப்பந்த காலத்தில் என் தாயார் ஆசையாக என்னிடம் வந்தார். (அப்போது அவர் இணைவைப்பவராக இருந்தார்.) நான் நபியவர்களிடம் '(என் தாயார் வந்துள்ளார்.) அவருடன் உறவைப் பேணிக் கொள்ளட்டுமா?' என்று கேட்டேன். நபியவர்கள், 'ஆம் பேணிக்கொள் ' என்று கூறினார்கள். ஆதாரம் : புஹாரி 5979. மாறாக பெற்றோர் பிள்ளையை இஸ்லாத்திலிருந்து நிராகரிப்பின் பால் திசைதிருப்ப முயற்சித்தாலும் அவ்விடயத்தில் மாத்திரம் அவர்களுக்குக் கட்டுப்படாமல் விசுவாசியாகவே இருந்து கொண்டு ஏனைய உலக விடயங்களில் கட்டுப்படுமாறே இஸ்லாம் பணித்திருக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான் : எனினும், (இறைவன் என்று) நீ அறிந்துகொள்ளாத ஒரு பொருளை எனக்கு இணைவைக்கும்படி அவர்கள் உன்னை நிர்ப்பந்தித்தால் (அவ்விஷயத்தில்) நீ அவர்களுக்கு கீழ்ப்படிய வேண்டாம். ஆயினும், இவ்வுலக விஷயத்தில் நீ அவர்களுக்கு (நீதமாக) உதவி செய்து (அன்பாக) நேசித்துவா. எவ்விஷயத்திலும் என்னையே நோக்கி நிற்பவர்களின் வழியை நீ பின்பற்றி நட. பின்னர், நீங்கள் அனைவரும் நம்மிடமே வரவேண்டியதிருக்கிறது. நீங்கள் செய்து கொண்டிருந்தவற்றைப் பற்றி அச்சமயம் நான் உங்களுக்கு அறிவுறுத்துவேன்" (என்று கூறினோம்). (லுக்மான் : 15).

இஸ்லாத்தை வெளிப்படையாக எதிர்க்கும் பரம விரோதி அல்லாத ஏனைய உறவினர், உறவினரல்லாத இணைவைப்பாளர்களுடன் அழகிய முறையில் நடப்பதை இஸ்லாம் தடுக்கவில்லை. அல்லாஹ் கூறுகின்றான் : "(நம்பிக்கையாளர்களே!) மார்க்க விஷயத்தில் உங்களுடன் எதிர்த்து போர் புரியாதவர்களுக்கும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாதவர்களுக்கும், நீங்கள் நன்மை செய்வதையும், அவர்களுடன் நீங்கள் நீதமாக நடந்து கொள்வதையும் அல்லாஹ் தடுக்கவில்லை. நிச்சயமாக அல்லாஹ் நீதிவான்களை நேசிப்பான்". (அல்மும்தஹினா : 8).

இஸ்லாம் பிள்ளைகள் விடயத்தில் கவனமெடுத்து அவர்களுக்குத் தேவையானதைப் போதிக்குமாறு பணிக்கின்றது. அவ்வாறு பிள்ளைக்குப் போதிக்க வேண்டிய மகத்தான விடயம் இறைவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளாகும். அதனையே நபியவர்கள் தனது சிறிய தந்தையின் மகனாகிய அப்துல்லாஹ் பின் அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்களுக்கு போதித்தார்கள் : "சிறுவனே! நான் சில அறிவுரைகளைக் கற்றுத் தருகின்றேன் அல்லாஹ் அதன் மூலம் உனக்குப் பயனளிக்கலாம்" என்று சொன்னார்கள்:

நான், ஆம் கற்றுத் தாருங்கள் என்றேன். அப்போது நபியவர்கள் : "நீ அல்லாஹ்வை பாதுகாத்துக்கொள். அவன் உன்னைப் பாதுகாப்பான். நீ அல்லாஹ்வை பாதுகாத்துக்கொள். அவனை உன் முன் கண்டுகொள்வாய். நீ செழிப்பாக இருக்கும் போது அல்லாஹ்வை நினைவு கூறு. கஷ்டத்தின் போது அவன் உன்னை நினைவுகூர்வான். நீ கேட்டால் அல்லாஹ்விடமே கேள். உதவி தேடினால் அல்லாஹ்விடமே தேடு" என்று கூறினார்கள்". ஆதாரம் : அஹ்மத் 4/ 287.

பிள்ளைகளுக்கு ஈருலகிலும் பயனளிப்பவற்றைக் கற்றுக் கொடுக்குமாறு அல்லாஹ் பெற்றோரைப் பணித்துள்ளான். அல்லாஹ் கூறுகின்றான் : "முஃமின்களே! உங்களையும், உங்கள் குடும்பத்தாரையும் (நரக) நெருப்பை விட்டுக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்; அதன் எரிபொருள் மனிதர்களும், கல்லுமேயாகும்; அதில் கடுமையான பலசாலிகளான மலக்குகள் (காவல்) இருக்கின்றனர், அல்லாஹ் அவர்களை ஏவி எதிலும் அவர்கள் மாறு செய்ய மாட்டார்கள், தாங்கள் ஏவப்பட்டபடியே அவர்கள் செய்து வருவார்கள்". (அத்தஹ்ரீம் : 6). மேற்கண்ட வசனத்திற்கு அலீ ரலியல்லாஹு அன்ஹு விளக்கமளிக்கும் போது "உங்களையும், உங்கள் குடும்பத்தாரையும் (நரக) நெருப்பை விட்டுக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்" என்ற வார்த்தையில்: "அவர்களை ஒழுக்கமூட்டுங்கள், அவர்களுக்குக் கற்றுக் கொடுங்கள்" என்று கூறினார்கள். நபியவர்கள் தொழுகையில் பயிற்சி பெருவதற்காக அதனைப் பிள்ளைக்குக் கற்றுக் கொடுக்குமாறு தந்தைக்குப் பணிந்துள்ளார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : "உங்கள் பிள்ளைகள் ஏழு வயதை அடையும் போது அவர்களைத் தொழும்படி ஏவுங்கள்". ஆதாரம் : அபூதாவூத் 495. மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் கூறினார்கள் : "நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளர்களாகும், ஒவ்வொருவரும் தமது பொறுப்பு பற்றி மறுமையில் வினவப்படுவீர்கள். தலைவர் பொறுப்பாளராவார், அவர் தனது பிரஜைகள் பற்றி வினவப்படுவார்.ஒரு ஆண் தனது வீட்டிற்குப் பொறுப்பாளராவார், அவர் தனது வீட்டார் பற்றி வினவப்படுவார். ஒருபெண் தனது கணவன் வீட்டிற்குப் பொறுப்பாளராவாள், அவள் தனது பொறுப்புப் பற்றி வினவப்படுவாள். பணியாள் தனது எஜமானின் சொத்துக்குப் பொறுப்பாளராவான், அவன் தனது பொறுப்புப் பற்றி வினவப்படுவான். எனவே நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளர்களாகும், ஒவ்வொருவரும் தமது பொறுப்பு பற்றி வினவப்படுவீர்கள்". ஆதாரம் : இப்னு ஹிப்பான் 4490.

மனைவி, பிள்ளைகளுக்கு செலவளிக்குமாறு இஸ்லாம் தந்தையைப் பணித்துள்ளது. இதுபற்றி 18ம் இலக்கத்தில் கூறப்பட்டுள்ளது. பிள்ளைகளுக்கு செலவளிப்பதன் சிறப்பை நபியவர்கள் பின்வருமாறு கூறினார்கள் : "ஒரு மனிதர் தம் குடும்பத்தாருக்காகச் செலவிடுகின்ற ஒரு பொற்காசும் (தீனார்), அல்லாஹ்வின் பாதையில் தமது வாகனத்திற்காகச் செலவிடுகின்ற ஒரு பொற்காசும், அல்லாஹ்வின் பாதையில் தம் நண்பர்களுக்காகச் செலவிடுகின்ற ஒரு பொற்காசுமே அவர் செலவிடுகின்ற பொற்காசுகளிலேயே சிறந்ததாகும்". அறிவிப்பாளர்களில் ஒருவரான அபூ கிலாபா (ரஹ்) அவர்கள், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் குடும்பத்தாருக்குச் செலவிடுவதையே ஆரம்பமாகக் கூறினார்கள்" என்று கூறிவிட்டு, "தம் சின்னஞ்சிறிய பிள்ளைகளுக்குச் செலவிடுகின்றவரைவிட அதிக நற்பலன் அடைந்துகொள்ளும் மனிதர் யார்? (ஏனெனில்) அவர்தம் பிள்ளைகளைச் சுய மரியாதையோடு வாழச்செய்கிறார். அல்லது அவர் மூலம் அல்லாஹ் அவர்களுக்கு உதவி, அவர்களைத் தன்னிறைவுடன் வாழச்செய்கிறான்" என்றும் கூறினார்கள்". ஆதாரம் : முஸ்லிம் 994.

# 30. எதிரிகளுடன் கூட இஸ்லாம் சொல், செயல்களில் நீதமாக நடக்கப் பணிக்கின்றது.

அல்லாஹ் தனது அடியார்களுக்கு மத்தியில் அவனது செயல்கள், நிர்வாகத்தில் நீதி நேர்மையைத் தன்னகத்தே கொண்டவன். அவன் ஏவிய, விலக்கிய, படைத்த, நிர்ணயித்த அனைத்து விடயங்களிலும் நீதமான நேரான வழியிலேயே இருக்கின்றான். அல்லாஹ் கூறுகின்றான் : "நிச்சயமாக (உண்மையாக) வணங்கப்படத் தகுதியானவன் தன்னைத் தவிர வேறு யாருமில்லை என்று நீதியை நிலைநாட்டியவனாக அல்லாஹ் சாட்சி கூறுகிறான். மேலும் வானவர்களும் அறிவுடையோரும் (சாட்சி கூறுகின்றனர்.உண்மையாக) வணங்கப்படத் தகுதியானவன் அவனைத் தவிர வேறு யாருமில்லை. அவன் யாவற்றையும் மிகைத்தவனும், ஞானமிக்கவனும் ஆவான்". (ஆல இம்ரான் : 18). அல்லாஹ் நீதத்தையே ஏவுகின்றான். அவன் கூறுகின்றான் : "எனது

இரட்சகன் நீதத்தையே ஏவியுள்ளான்' என (நபியே!) நீர் கூறுவீராக!". (அல்அஃராப் : 29). அனைத்து நபிமார்கள், இறைத்தூதர்களும் நீதத்தையே கொண்டுவந்தனர். அல்லாஹ் கூறுகின்றான் : "நிச்சயமாக நாம் எமது தூதர்களைத் தெளிவான சான்றுகளுடன் அனுப்பினோம். அவர்களுடன் வேதத்தையும், மனிதர்கள் நீதியை நிலைநாட்டுவதற்காக தராசையும் இறக்கினோம்". (அல்ஹதீத் : 25). இங்கு தராசு என்பது சொல், செயல்களில் நீதமாக நடப்பதையே குறிக்கின்றது.

எதிரிகளுடன் கூட இஸ்லாம் சொல், செயல்களில் நீதமாக நடக்கப் பணிக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான் : "நம்பிக்கையாளர்களே! நீங்கள் நீதத்தின் மீதே உறுதியாக நிலைத்திருங்கள். (நீங்கள் சாட்சி கூறினால் அது) உங்களுக்கோ, உங்கள் தாய், தந்தைக்கோ அல்லது உங்கள் உறவினர்களுக்கோ பாதகமாக இருந்தபோதிலும் அல்லாஹ்வுக்காக (உண்மையையே) சாட்சி கூறுபவர்களாக இருங்கள். (நீங்கள் யாருக்காக சாட்சி கூறுகிறீர்களோ) அவர் பணக்காரராயினும் ஏழையாயினும் (உண்மையையே கூறுங்கள். ஏனென்றால்) அல்லாஹ் அவ்விருவருக்குமே (உதவி செய்ய) மிகத் தகுதியானவன். ஆகவே, நீங்கள் (உங்கள்) ஆசை (அபிலாஷை)களைப் பின்பற்றி வரம்பு மீறாதீர்கள்! (பரிவு அல்லது குரோதத்தை முன்னிட்டு) நீங்கள் தவறாக (சாட்சி) கூறினாலும் அல்லது (சாட்சி) கூற மறுத்தாலும் நிச்சயமாக அல்லாஹ் உங்கள் (இத்தவறான) செயலை நன்கறிந்தவனாக இருக்கிறான்". (அந்நிஸாஃ : 135). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "மஸ்ஜிதுல் ஹராமுக்குச் செல்லவிடாது உங்களைத் தடுத்த ஒரு கூட்டத்தினர் மீதுள்ள வெறுப்பு (அவர்கள் மீது) வரம்பு மீறுவதற்கு உங்களைத் தூண்டவேண்டாம். நன்மை செய்வதிலும், (அல்லாஹ்வை) அஞ்சி நடப்பதிலும் ஒருவருக்கொருவர் உதவியாக இருந்து கொள்ளுங்கள். மேலும் பாவம் செய்வதிலும், வரம்பு மீறுவதிலும் ஒருவருக்கொருவர் உதவியாக இருக்காதீர்கள். அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் தண்டிப்பதில் கடுமையானவன்". (அல்மாஇதா: 2). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வுக்காக நீதிவான்களாக நீதத்திற்கு சாட்சி சொல்பவர்களாக இருங்கள்.ஒரு வகுப்பார் மீதுள்ள வெறுப்பு அவர்களுக்கு அநியாயம் செய்யும்படி உங்களைத் தூண்டாதிருக்கட்டும்.(பகைமை இருந்தாலும்) நீங்கள் நீதியே செலுத்துங்கள்.அதுதான் இறையச்சத்திற்கு மிக நெருங்கியது (அல் மாஇதா: 8). தனக்கோ, தனது பெற்றோர், உறவினருக்கோ எதிராக இருந்தாலும் உண்மையே போசுமாறும், உண்மை சாட்சியமே வழங்குமாறும், நண்பர், எதிரி அனைவருடனும் நீதமாக நடக்குமாறும் வந்துள் போதனையை இன்றுள்ள சிவில் சட்டங்களிலோ பிறமதங்களிலோ நீர் கண்டுள்ளீரா?

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிள்ளைகளுக்கு மத்தியிலும் நீதம் செலுத்துவதை ஏவியுள்ளார்கள். ஆமிர் பின் ஷர்ஹபீல் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறியதாவது: நுஃமான் பின் பஷீர் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் மிம்பரின் மீது நின்று கொண்டு, என் தந்தை அன்பளிப்பு ஒன்றை எனக்குக் கொடுத்தார். என் தாயார் அம்ரா பின்த்து ரவாஹா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் என் தந்தையிடம், நீங்கள் இதற்கு அல்லாஹ்வின் தூதரை சாட்சியாக ஆக்காதவரை நான் இதை ஒப்புக் கொள்ள மாட்டேன் என்று கூறினார்கள். என் தந்தை அல்லாஹ்வின் தூதரிடம் சென்று, அல்லாஹ்வின் தூதரே! நான் அம்ரா பின்த்து ரவாஹாவின் வாயிலாக, எனக்குப் பிறந்த என் மகனுக்கு அன்பளிப்பு ஒன்றைக் கொடுத்தேன், அவள் (என் மனைவி) தங்களை சாட்சியாக ஆக்கும் படி எனக்குக் கட்டளையிட்டாள் என்று கூறினார். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், உங்கள் மற்ற பிள்ளைகளுக்கும் இதே போன்று கொடுத்துள்ளீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு என் தந்தை, இல்லை என்று பதிலளித்தார். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அவ்வாறெனில் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். உங்கள் பிள்ளைகளிடையே நீதி செலுத்துங்கள் என்று கூறினார்கள். இதைக் கேட்ட என் தந்தை உடனே திரும்பி வந்து, தனது அன்பளிப்பை ரத்து செய்தார். ஆதாரம் : புஹாரி 2587.

ஏனெனில் மக்களுடைய, நாட்டுடைய விடயங்கள் நீதமின்றி நிலைபெற மாட்டாது.நீதம் இல்லாவிடில் மக்கள் தமது மார்க்கம், உயிர், சந்ததி, மானம், உடமைகள், தாய்நாடு என்பவற்றில் அச்சமற்று இருக்க மாட்டார்கள். இதனால்தான் மக்காவில் காபிர்கள் முஸ்லிம்களுக்கு நெருக்கடி கொடுத்த போது அவர்களுக்கு எத்யோப்பிய நாட்டிற்கு இடம்பெயர்ந்து செல்லுமாறு நபியவர்கள் பணித்தார்கள். அங்கே நீதமான ஒரு மன்னர் உள்ளார். அவரிடத்தில் யாரும் அநீதியிழைக்கப்பட மாட்டார்கள் என்பதையே அந்நாட்டைத் தேர்வு செய்ததற்கான காரணமாக நபியவர்கள் கூறினார்கள்.

## 31. அனைத்துப் படைப்பினங்களுக்கும் உபகாரம் செய்யுமாறு இஸ்லாம் ஏவுவதுடன், நல்ல குணங்கள், அழகிய செயற்பாடுகளின் பக்கமும் அழைக்கின்றது.

இஸ்லாம் அனைத்துப் படைப்பினங்களுக்கும் உபகாரம் செய்யுமாறு ஏவுகின்றது. அல்லாஹ் கூறுகின்றான் : "நிச்சயமாக அல்லாஹ் நீதியையும், உபகாரம் செய்வதையும், நெருங்கிய உறவினர்களுக்கு வழங்குவதையும் ஏவுகின்றான்". (அந் நஹ்லு: 90). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "அவர்கள் செல்வ நிலைமையிலும், வறுமை நிலைமையிலும் தானம் செய்து கொண்டே இருப்பார்கள். கோபத்தை விழுங்கிவிடுவார்கள். மனிதர்(களின் குற்றங்)களை மன்னித்துவிடுவார்கள். அல்லாஹ் (இத்தகைய) அழகிய குணமுடையவர்களை நேசிக்கிறான்". (ஆல இம்ரான் : 134). மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "நிச்சயமாக அல்லாஹ், செய்வனவற்றை திருந்தச் செய்யும்படி பணித்திருக்கின்றான். ஆகவே நீங்கள் கொன்றால்,அழகிய முறையில் கொல்லுங்கள். நீங்கள் அறுத்தால் அழகிய முறையில் அறுங்கள். உங்களில் ஒவ்வொருவரும் தங்களது கத்தியை கூர்மையாக வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் அறுக்கும் மிருகங்களின் கஷ்டங்களை எளிதாக்குங்கள் (குறையுங்கள்)". ஆதாரம் : முஸ்லிம் 1955.

இஸ்லாம் நல்ல குணங்கள், அழகிய செயற்பாடுகளின் பக்கமும் அழைக்கின்றது. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய பண்புகளைப் பற்றி முன்னைய வேதங்களில் கூறப்பட்டுள்ளதை அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் : "(ஆகவே, அவர்களில்) எவர்கள் எழுதப் படிக்கத் தெரியாத (நம்) தூதராகிய இந்த நபியைப் பின்பற்றுகிறார்களோ அவர்கள் தங்களிடமுள்ள தௌறாத்திலும், இன்ஜீலிலும் இவருடைய பெயர் எழுதப்பட்டிருப்பதைக் காண்பார்கள். (இத்தூதரோ) அவர்களை நன்மையான காரியங்களைச் செய்யும்படி ஏவி, பாவமான காரியங்களிலிருந்து விலக்குவார். நல்லவற்றையே அவர்களுக்கு ஆகுமாக்கி வைப்பார். கெட்டவற்றை அவர்களுக்குத் தடுத்து விடுவார். மேலும், அவர்களது சுமையையும் அவர்கள் மீதிருந்த (கடினமான சட்ட) விலங்குகளையும் (இறைவனின் அனுமதி கொண்டு) நீக்கிவிடுவார். ஆகவே, எவர்கள் அவரை உண்மையாகவே நம்பிக்கை கொண்டு, அவரை பலப்படுத்தி அவருக்கு உதவி செய்து, அவருக்கு இறக்கப்பட்ட பிரகாசமான (இவ்வேதத்)தைப் பின்பற்றுகிறார்களோ அவர்கள்தான் வெற்றி பெற்றவர்கள்". (அல் அஃராப் : 157). மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "ஆயிஷா! அல்லாஹ் மென்மையானவன். மென்மையான போக்கையே அவன் விரும்புகிறான். வன்மைக்கும் பிறவற்றுக்கும் வழங்காததையெல்லாம் அவன் மென்மைக்கு வழங்குகிறான்" என்று கூறினார்கள். ஆதாரம் : முஸ்லிம் 2593. மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "(பெற்றெடுத்த) தாய்மார்களுக்குத் துன்பம் தருவதையும், பெண் குழந்தைகளை உயிருடன் புதைப்பதையும் (நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ள பிற மனிதர்களின் உரிமைகளை) நிறைவேற்றாமலிருப்பதையும் பிறரின் செல்வத்தை (அநியாயமாக) அபகரித்துக் கொள்வதையும் தேவையற்ற வீண் பேச்சகள் பேசுவதையும் அதிகமாக கேள்விகள் கேட்பதையும், செல்வத்தை வீணாக்குவதையும் நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு ஹராமாக (விலக்கப்பட்டதாக) ஆக்கியுள்ளான்". ஆதாரம் : புஹாரி 2408. மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "நீங்கள் இறைநம்பிக்கை கொள்ளாதவரையில் சொர்க்கத்தில் நுழைய முடியாது.நீங்கள் ஒருவரை ஒருவர் நேசிக்காதவரை (முழுமையான) இறைநம்பிக்கையாளராக முடியாது. ஒன்றை உங்களுக்கு நான் அறிவிக்கட்டுமா? அதை நீங்கள் செயல்படுத்தினால் ஒருவரை ஒருவர் நேசம் கொள்ளலாம்.உங்களிடையே ஸலாத்தைப் பரப்புங்கள்". ஆதாரம் : முஸ்லிம் 54.

## 32.இஸ்லாம் உண்மை, அமானிதங்களை நிறைவேற்றல், பத்திணித்தனம், வெட்கம், வீரம், தான, தர்மம், தேவையுடையோருக்கு

# உதவுதல், துயர் நீக்குதல், பசித்தவருக்கு உணவளித்தல், அயலவர்களுடன் அழகாக நடத்தல், உறவுகளுடன் சேர்ந்து நடத்தல், ஜீவகாரூண்யம் போன்ற பல நல்ல பண்புகளை ஏவுகின்றது.

இஸ்லாம் நல்ல பண்புகளை ஏவுகின்றது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "நற்குணங்களைப் பூரணப்படுத்தவே நான் அனுப்பப்பட்டுள்ளேன்". ஆதாரம் : ஸஹீஹுல் அதபில் முஃப்ரத் : 207. மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "எனக்கு மிக நேசத்திற்குரியவரும், மறுமையில் எனக்கு மிக நெருக்கமாக இருப்பவரும் யாரெனில் உங்களில் நற்குணமுடையோரே. மேலும் எனக்கு மிக வெறுப்புக்குரியவரும், மறுமையில் எனக்கு மிகத் தொலைவில் இருப்பவரும் யாரெனில் தேவையின்றி, பேணுதலின்றி அளவுக்கதிகமாகப் பேசுவோரும், பெருமையடிப்போரும் ஆவர்". ஆதாரம் : அஹ்மத்: 17732, ஸில்ஸிலா ஸஹீஹா 791. "ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கெட்ட மனிதராகவோ,கெட்ட பேச்சுக்கள் பேசுகின்றவராகவோ இருக்கவில்லை.மேலும் "உங்களில் சிறந்தவர் உங்களில் நற் பண்புடையவரே " என்று நபியவர்கள் சொல்வார்கள்" என அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னுல்ஆஸ் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஆதாரம் : புஹாரி 3559. பொதுவாக இஸ்லாம் நல்ல குணங்களையும் அழகிய செயல்களையும் தூண்டக்கூடிய மார்க்கம் என்பதற்கான பல இறைவசனங்களும், நபிமொழிகளும் உள்ளன.

இஸ்லாம் ஏவும் பண்புகளில் உண்மையும் ஒன்றாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "நீங்கள் உண்மையே பேசுங்கள், ஏனெனில் உண்மை நன்மைக்கு வழிகாட்டும். நன்மை சொர்க்கத்திற்கு வழிகாட்டும். இறுதியில் அல்லாஹ்விடம் "வாய்மையாளர்" (ஸித்தீக்) எனப் பதிவு செய்யப்படும் வரை ஓர் அடியார் உண்மையைத் தேர்ந்தெடுத்துப் பேசிக்கொண்டே இருப்பார்". ஆதாரம் : முஸ்லிம் 2607.

இஸ்லாம் ஏவும் பண்புகளில் அமானிதங்களை நிறைவேற்றுவதும் ஒன்றாகும். அல்லாஹ் கூறுகின்றான் : "அமானிதங்களை அதற்குரியவர்களிடம் ஒப்படைத்து விடும்படி அல்லாஹ் உங்களுக்கு ஏவுகின்றான்". (அந்நிஸாஃ : 58).

இஸ்லாம் ஏவும் பண்புகளில் பத்திணித் தனமும் ஒன்றாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "மூன்று நபர்களுக்கு உதவுவதை அல்லாஹ் தன் மீதே கடமையாக்கிக் கொண்டுள்ளான்" என்று கூறிவிட்டு அம்மூவரில் பத்திணித் தனத்தை நாடி திருமணம் செய்தவரையும் கூறினார்கள். ஆதாரம் : திர்மிதீ 1655. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு பிரார்த்திப்பார்கள் : "இறைவா! உன்னிடம் நேர்வழியையும், இறையச்சத்தையும், பத்திணித் தனத்தையும், போதுமென்ற மனதையும் கேட்கிறேன்". ஆதாரம் : முஸ்லிம் 2721.

இஸ்லாம் ஏவும் பண்புகளில் வெட்கமும் ஒன்றாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "வெட்கம் நலவையே கொண்டுவரும்". ஆதாரம் : புஹாரி 6117. மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "ஒவ்வொரு மதத்திற்கும் ஒரு குணமுள்ளது. இஸ்லாத்தின் குணம் வெட்கமாகும்". ஆதாரம் : இமாம் பைஹகியின் ஷுஅபுல் ஈமான் 6/ 2619.

இஸ்லாம் ஏவும் பண்புகளில் வீரமும் ஒன்றாகும். அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள் : நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்களில் மிக அழகானவர்களாகவும், வீரமிக்கவர்களாகவும், கொடை வள்ளலாகவும் இருந்தார்கள். மதீனாவாசிகள் ஒரு முறை பாரிய சப்தம் ஒன்று கேட்டதும் பதறிப்போனார்கள். நபியவர்கள்தான் அவ்விடத்திற்கு முதலில் குதிரையில் சென்றார்கள். ஆதாரம் : புஹாரி 2820. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கோழைத்தனத்திலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுவார்கள் : "இறைவா! கோழைத் தனத்திலிருந்து உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்" ஆதாரம் : புஹாரி 6374.

இஸ்லாம் ஏவும் பண்புகளில் கொடையும் ஒன்றாகும். அல்லாஹ் கூறுகின்றான் : "(நபியே!) அல்லாஹ்வுடைய பாதையில் தங்கள் பொருள்களைச் செலவு செய்கிறவர்களுடைய (பொருள்களின்) உதாரணம், ஒரு வித்தின் உதாரணத்தை ஒத்திருக்கிறது. அ(ந்த வித்)து ஏழு கதிர்களைத் தந்தது. ஒவ்வொரு கதிரிலும் நூறு

வித்துக்கள் (ஆக, எழுநூறு வித்துக்கள் அந்த ஒரு வித்திலிருந்து) உற்பத்தியாயின. அல்லாஹ், தான் விரும்பியவர்களுக்கு (இதை மேலும்,) இரட்டிப்பாக்குகிறான். ஏனெனில், அல்லாஹ் (வழங்குவதில்) மிக விசாலமானவன், நன்கறிந்தவன்". (அல் பகரா : 261). தயாளத் தன்மையும் நபியவர்களுடைய குணங்களில் உள்ளதாகும். இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் கூறுகின்றார்கள் : "நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்களுக்கு நல்லதை வாரி வழங்குபவர்களாக இருந்தார்கள். ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் ரமழான் மாதத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைச் சந்திக்கும் வேளையில் நபியவர்கள் அதிகமதிகம் வாரி வாரி வழங்குவார்கள். ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் ரமழானின் ஒவ்வொரு இரவும் - ரமழான் முடியும்வரை - நபியவர்களைச் சந்திப்பார். நபியவர்கள் ஜிப்ரீலிடம் குர்ஆனை ஓதிக் காட்டுவார்கள். ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் தம்மைச் சந்திக்கும்போது மழைக்காற்றை விட அதிகமாக நபியவர்கள் வாரி வழங்குவார்கள்". ஆதாரம் : புஹாரி 1902.

தேவையுடையோருக்கு உதவுதல், துயர் நீக்குதல், பசித்தவருக்கு உணவளித்தல், அயலவர்களுடன் அழகாக நடத்தல், உறவுகளுடன் சேர்ந்து நடத்தல், ஜீவகாருண்யம் போன்ற பல நல்ல பண்புகளையும் இஸ்லாம் ஏவுகின்றது. "இஸ்லாத்தில் சிறந்தது எது? என ஒரு மனிதர் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வினவினார்.அதற்கு நபியவர்கள் "நீங்கள் மற்றவர்களுக்கு உணவளிப்பதுவும்,மேலும் நீங்கள் அறிந்தவர்களுக்கும் அறியாதவர்களுக்கும் ஸலாம் சொல்வதுமாகும்" என்றார்கள்" என அப்துல்லாஹ் இப்னு அம்ரு இப்னுல் ஆஸ் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஆதாரம் : புஹாரி 12. மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "ஒரு மனிதர் பாதையில் நடந்து சென்று கொண்டிருக்கும் போது தாகம் எடுத்தது. அப்போது ஒரு கிணற்றைக் கண்டு அதில் இறங்கி நீர் அருந்தினார். வெளியே வந்ததும் ஒரு நாய் தாகத்தின் காரணமாக நாவை வெளியே போட்டு, மண்ணை உண்டு கொண்டிருந்ததைக் கண்டார். எனக்குத் தாகம் ஏற்பட்டதைப் போன்றே இந்நாய்க்கும் கடுமையான தாகம் ஏற்பட்டுள்ளது எனக் கூறி, மீண்டும் கிணற்றினுள் இறங்கி தனது பாதணியில் நீர் நிரப்பி நாயின் வாயில் வைத்துப் புகட்டினார். அல்லாஹ் அவருக்கு நன்றி செலுத்தி, அவருடைய பாவங்களை மன்னித்து விட்டான்". அப்போது தோழர்கள் "கால்நடைகளிலும் எமக்குக் கூலி உள்ளதா?" என வினவ, "ஆம், ஈரமான, ஈரலுள்ள உயிரினம் ஒவ்வொன்றிலும் கூலியுள்ளது" என்றார்கள். ஆதாரம் : இப்னு ஹிப்பான் 544. மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "விதவை, ஏழைகளைப் பராமரிப்பவன் அல்லாஹ்வின் பாதையில் போரிடுபவன் அல்லது இரவில் நின்று வணங்கி, பகலில் நோன்பு நோற்பவனைப் போன்றாகும்". ஆதாரம் : புஹாரி 5353.

உறவினர்களின் உரிமைகளை இஸ்லாம் வலியுறுத்துவதுடன், அவர்களுடன் சேர்ந்து நடக்குமாறு கட்டாயப்படுத்தவும் செய்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான் : "நம்பிக்கையாளர்களுக்கு அவர்களுடைய உயிர்களைவிட (நம் தூதரான) நபிதான் மிக்க மேலானவர். அவருடைய மனைவிகளோ அந்நம்பிக்கையாளர்களுக்குத் தாய்மார்கள் ஆவார்கள். நம்பிக்கையாளர்களையும், ஹிஜ்ரத்துச் செய்தவர்களையும் விட இரத்த உறவுகளே (சொத்துப் பங்கீட்டில்) அல்லாஹ்வுடைய வேதத்திலுள்ளபடி அவர்களில் சிலர் சிலருக்கு முன்னுரிமையுடையவர்களாக ஆவார்கள். எனினும், உங்கள் நண்பர்களில் எவருக்கும் நீங்கள் (ஏதும் கொடுத்து) நன்றி செய்தாலே தவிர. இது (லவ்ஹுல் மஹ்ஃபூழ் எனும்) ஏட்டில் எழுதப்பட்டதாக இருக்கிறது". (அல் அஹ்ஸாப் : 6). உறவினர்களைத் துண்டிப்பதை எச்சரித்து, அதனை பூமியில் குழப்பம் விளைவிப்பதுடன் சேர்த்துள்ளது. அல்லாஹ் கூறுகின்றான் : "(நயவஞ்சகர்களே!) நீங்கள் (போருக்கு வராது) விலகிக் கொண்டதன் பின்னர், நீங்கள் பூமியில் சென்று விஷமம் (கலகம்) செய்து உங்கள் இரத்த உறவுகளை துண்டித்துவிடப் பார்க்கிறீர்களா? இத்தகையவர்களை அல்லாஹ் சபித்து, அவர்களைச் செவிடர்களாக்கி, அவர்களுடைய பார்வையையும் போக்கி குருடர்களாக்கி விட்டான்". (முஹம்மத் : 22, 23). "உறவுகளை முறிப்பவன் சுவனம் நுழைய மாட்டான்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள். ஆதாரம் : முஸ்லிம் 2556. அவசியம் சேர்ந்து நடக்க வேண்டிய உறவினர்கள் : தாய், தந்தை, சகோதர, சகோதரிகள், தந்தையின் சகோதர, சகோதரிகள், தாயின் சகோதர, சகோதரிகள் ஆவர்.

அயலவர் காபிராக இருந்தாலும் அவர்களுக்குரிய கடமையை இஸ்லாம் வலியுறுத்துகின்றது. "அல்லாஹ் ஒருவனையே வணங்குங்கள். அவனுக்கு எதையும் இணையாக்காதீர்கள். தாய், தந்தைக்கு உபகாரம் புரியுங்கள். (அவ்வாறே) உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், அண்டை வீட்டிலுள்ள உறவினர்களுக்கும், அந்நிய அண்டை வீட்டாருக்கும், (எப்பொழுதும்) உங்களுடன்

இருக்கக்கூடிய நண்பர்களுக்கும், பயணிகளுக்கும், உங்களிடம் உள்ள அடிமைகளுக்கும், (அன்புடன் உபகாரம் புரியுங்கள்). எவன் கர்வம் கொண்டவனாக, பெருமை அடிப்பவனாக இருக்கிறானோ அவனை நிச்சயமாக அல்லாஹ் நேசிப்பதில்லை". (அந் நிஸாஃ : 36). மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "அயலவரை எனக்கு வாரிசுக்காரராக ஆக்கி விடுவாரோ என நான் எண்ணுமளவிற்கு ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் இவர்களைப் பற்றி எனக்கு உபதேசித்துக் கொண்டே இருந்தார்கள்". ஸஹீஹ் அபூ தாவூத் 5152.

# 33. உணவு, பானங்களில் இஸ்லாம் சுத்தமான, முறையாகப் பெற்றுக்கொள்ளப்பட்டதை அனுமதித்துள்ளது. உள்ளம், உடல், உறைவிடம் அனைத்தையும் சுத்தமாக வைக்கும் படி ஏவுகின்றது. இதனால்தான் ஏனைய நபிமார்கள் ஏவியதைப் போன்று திருமணத்தை இஸ்லாமும் அனுமதித்துள்ளது. அவர்கள் அனைத்து நல்லவற்றையும் ஏவுவார்கள்.

உணவு, பானங்களில் இஸ்லாம் சுத்தமான, முறையாகப் பெற்றுக்கொள்ளப்பட்டதை அனுமதித்துள்ளது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "அல்லாஹ் தூயவன்,அவன் தூய்மையானதையே ஏற்றுக் கொள்வான். அல்லாஹ் தனது தூதர்களிடம் எதைச் செய்யும்படி பணித்தானோ, அதையே நம்பிக்கையாளர்களையும் செய்யும்படி கட்டளையிட்டுள்ளான். "தூதர்களே! நல்ல பொருள்களிலிருந்தே நீங்கள் உண்ணுங்கள்; (ஸாலிஹான) நல்லமல்களை செய்யுங்கள்; நிச்சயமாக நீங்கள் செய்பவற்றை நான் நன்கு அறிபவன்"(முஃமினூன் : 51)"நம்பிக்கை கொண்டவர்களே! நாம் உங்களுக்கு அளித்துள்ளவற்றில் தூய்மையானவற்றையே உண்ணுங்கள்; நீங்கள் அல்லாஹ்வையே வணங்குபவர்களாக இருப்பீர்களாயின், அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தி வாருங்கள்" (அல்பகரா : 172).என்றும் கூறியுள்ளான். பின்னர் நபி (ஸல்) அவர்கள் நீண்ட பிரயாணம் செய்யும், தலைவிரி கோலமாக, மாசுபடிந்தவராக இருக்கும் ஒரு மனிதரைக் கூறினார்கள். அவர் தனது கரங்களை வானத்தை நோக்கி உயர்த்தி இறைவனே இறைவனே!" என கதறுகிறார். ஆனால் அவரது உணவு ஹராமானதாக இருக்கின்றது,அவர் அருந்தும் பானம் ஹராமானதாக இருக்கின்றது.அவரது உடை ஹராமானதாக இருக்கின்றது.அவரது மொத்த வாழ்க்கையே ஹராமான வழியில் தான் இருக்கின்றது.இந்த நிலையில் எவ்வாறு அவருக்கு பதிலளிக்கப்படும்?" ஆதாரம் : முஸ்லிம் 1015. மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "(நபியே!) அல்லாஹ் தன் அடியார்களுக்காக அளித்திருக்கும் (ஆடை) அலங்காரத்தையும், நல்ல (மேலான) உணவையும் (ஆகாதவை என்று) தடுப்பவர் யார்?" எனக் கேட்டு, "அது இவ்வுலகத்தில் நம்பிக்கை கொண்டவர்களுக்கு(ம் ஆகுமானதே! எனினும்) மறுமை நாளில் (அவர்களுக்கு மட்டுமே) சொந்தமானது" என்று கூறுவீராக. அறியக்கூடிய மக்களுக்கு (நமது) வசனங்களை இவ்வாறு விவரிக்கிறோம்". (அல்அஃராப் : 32).

இஸ்லாம் உள்ளம், உடல், உறைவிடம் அனைத்தையும் சுத்தமாக வைக்கும் படி ஏவுகின்றது. இதனால்தான் ஏனைய நபிமார்கள் ஏவியதைப் போன்று திருமணத்தை இஸ்லாமும் அனுமதித்துள்ளது. அவர்கள் அனைத்து நல்லவற்றையும் ஏவுவார்கள். அல்லாஹ் கூறுகின்றான் : "உங்களிலிருந்தே உங்கள் மனைவிகளை அல்லாஹ் படைக்கிறான். உங்கள் மனைவிகளிலிருந்து சந்ததிகளையும், பேரன் பேத்திகளையும் படைக்கின்றான். உங்களுக்கு நல்ல உணவுகளை வழங்குகிறான். மேலும், (இப்படியிருக்க) அவர்கள் (தாங்களாகக் கற்பனை செய்து கொண்ட) பொய்யானவற்றை நம்பிக்கை கொண்டு அல்லாஹ்வின் அருட்கொடைகளை நிராகரிக்கின்றனரா?"

(அந்நஹ்லு : 72). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "இன்னும் உமது ஆடைகளைத் தூய்மைப்படுத்துவீராக. மேலும் அசுத்தத்தை வெறுப்பீராக". (அல் முத்தஸ்ஸிர் : 4, 5). மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "உள்ளத்தில் அணுவளவேனும் பெருமையிருப்பவர் சுவனம் நுழைய மாட்டார்". ஒரு மனிதர் 'தனது ஆடையும், பாதணியும் அழகாக இருக்க வேண்டுமென் விரும்புகிறார்' என ஒருவர் கூற, நபியவர்கள் "நிச்சயமாக அல்லாஹ் அழகானவன், அவன் அழகை விரும்புகின்றான். பெருமை என்பது சத்தியத்தை ஏற்க மறுப்பதும், மக்களை இழிவாகக் கருதுவதுமே" எனக் கூறினார்கள்". ஆதாரம் : முஸ்லிம் 91.

# **34.** அல்லாஹ்விற்கு இணைவைத்தல், இறைநிராகரிப்பு, சிலை வணக்கம், அல்லாஹ்வின் மீது இட்டுக்கட்டுதல், குழந்தைக் கொலை, எக்குற்றுமும் செய்யாதவர்களைக் கொலைசெய்தல், குழப்பம் விளைவித்தல் (அச்சுறுத்தல், மன்கொள்ளை), சூனியம், உள்ரங்க மற்றும் வெளிரங்க மானக்கேடானவை, விபச்சாரம், ஓரினச்சேர்க்கை போன்ற அடிப்படைப் பாவங்களை இஸ்லாம் தடை செய்துள்ளது. மேலும் வட்டி, இறந்த பிராணிகள், சிலைகளுக்காக அறுக்கப்பட்டவை, பன்றி இறைச்சி இன்னும் அனைத்து வித அசுத்தங்களையும் உண்ணுவதைத் தடுத்துள்ளது. மேலும் அநாதைகளின் சொத்துக்களை சுரண்டுதல், அளவை நிறுவையில் மோசடி, உறவினர்களைத் துண்டித்து நடத்தல் போன்ற பாவங்களையும் தடுத்துள்ளது. இப்பாவங்களைத் தடுப்பதில் அனைத்து நபிமார்களும் ஏகோபித்துள்ளனர்.

அல்லாஹ்விற்கு இணைவைத்தல், இறைநிராகரிப்பு, சிலை வணக்கம், அல்லாஹ்வின் மீது இட்டுக்கட்டுதல், குழந்தைக் கொலை போன்ற அடிப்படைப் பாவங்களை இஸ்லாம் தடை செய்துள்ளது. அல்லாஹ் கூறுகின்றான் : "வாருங்கள்! உங்கள் இறைவன் உங்கள் மீது விலக்கியிருப்பவற்றையும் (ஏவியிருப்பவற்றையும்) நான் ஓதிக் காண்பிக்கிறேன்; எப்பொருளையும் அவனுக்கு இணையாக வைக்காதீர்கள்; பெற்றோர்களுக்கு நன்மை செய்யுங்கள்; வறுமைக்குப் பயந்து உங்கள் குழந்தைகளைக் கொல்லாதீர்கள் - ஏனெனில் உங்களுக்கும், அவர்களுக்கும் நாமே உணவளிக்கின்றோம்; வெளிப்டையான

இரகசியமான மானக்கேடான காரியங்களை நீங்கள் நெருங்காதீர்கள்; அல்லாஹ் தடுத்துள்ள எந்த ஓர் ஆத்மாவையும் நியாயமான காரணமின்றி - கொலை செய்யாதீர்கள் - இவற்றை நீங்கள் உணர்ந்து கொள்வதற்காக (இறைவன்) உங்களுக்கு (இவ்வாறு) போதிக்கின்றான். அநாதையின் பொருளின் பக்கம் அவன் பிராயத்தை அடையும் வரையில் அழகான முறையிலன்றி நீங்கள் நெருங்காதீர்கள்; அளவையும், நிறுவையையும் நீதத்தைக் கொண்டு நிரப்பமாக்குங்கள்; நாம் எந்த ஆத்மாவையும் அதன் சக்திக்கு மீறி கஷ்டப்படுத்துவதில்லை. நீங்கள் பேசும்பொழுது அதனால் பாதிக்கப்படுபவர் நெருங்கிய உறவினராக இருந்த போதிலும் - நியாயமே பேசுங்கள்; அல்லாஹ்வுக்கு (நீங்கள் கொடுத்த) உறுதி மொழியை நிறைவேற்றுங்கள். நீங்கள் நினைவு (கூர்ந்து நடந்து) கொள்ளும் பொருட்டே அல்லாஹ் உங்களுக்கு (இவ்வாறு) போதிக்கிறான்". (அல் அன்ஆம் : 151, 152). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "(நபியே!) கூறுவீராக: “நிச்சயமாக என் இறைவன் (ஹராம் என்று) தடை செய்திருப்பதெல்லாம்: பகிரங்கமாகவோ, இரகசியமாகவோ செய்யப்படும் மானக்கேடான காரியங்களையும், மற்ற பாவங்களையும், நியாயமின்றி ஒருவர் மீது (ஒருவர்) கொடுமை செய்வதையும், அல்லாஹ் எதற்கு ஆதாரம் இறக்கவில்லையோ அதை அல்லாஹ்வுக்கு இணையாக்குவதையும், நீங்கள் அறியாதவற்றை அல்லாஹ்வின் மீது (பொய்) கூறுவதையும்தான் (அல்லாஹ் தடுத்திருக்கிறான்)". (அல் அ.ஃராப் : 33).

முறையின்றி கொல்லக் கூடாதென புனிதப்படுத்தப்பட்ட உயிரைக் கொலைசெய்வதை இஸ்லாம் தடுத்துள்ளது. அல்லாஹ் கூறுகின்றான் : "(கொலையை) அல்லாஹ் விலக்கியிருக்க நீங்கள் எந்த மனிதனையும் நியாயமான காரணமின்றிக் கொலை செய்து விடாதீர்கள்; எவரேனும் அநியாயமாகக் கொலை செய்யப்பட்டு விட்டால், அவருடைய வாரிசுக்கு (பதிலுக்கு பதில் செய்யவோ அல்லது மன்னிக்கவோ) நாம் அதிகாரம் கொடுத்திருக்கிறோம்; ஆனால் கொலையி(ன் மூலம் பதில் செய்வதி)ல் வரம்பு கடந்து விடக் கூடாது நிச்சயமாக கொலையுண்டவரின் வாரிசு (நீதியைக் கொண்டு) உதவி செய்யப்பட்டவராவார்". (அல் இஸ்ரா.ஃ : 33). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "அவர்கள் அல்லாஹ்வுடன் வேறொரு கடவுளை அழைக்க மாட்டார்கள். (கொலை செய்யக் கூடாதென்று) அல்லாஹ் தடுத்திருக்கும் எம்மனிதனையும் அவர்கள் நியாயமின்றிக் கொலை செய்ய மாட்டார்கள்; விபசாரமும் செய்ய மாட்டார்கள். ஆகவே, எவனேனும் இத்தகைய தீய காரியங்களைச் செய்ய முற்பட்டால், அவன் (அதற்குரிய) தண்டனையை அடைய வேண்டியதுதான்". (அல் ஃபுர்கான் : 68).

(அச்சுறுத்தல், மன்கொள்ளை போன்ற செயல்களால்) குழப்பம் விளைவிப்பதை இஸ்லாம் தடுத்துள்ளது. அல்லாஹ் கூறுகின்றான் : "பூமியில் சீர்திருத்தம் ஏற்பட்ட பின் அதில் நீங்கள் குழப்பம் விளைவிக்காதீர்கள்". (அல் அ.ஃராப் : 56). ஷுஐப் அலைஹிஸ்ஸலாம் தனது சமூகத்திற்குக் கூறிய செய்தியை அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் : “என் மக்களே! அல்லாஹ் ஒருவனையே வணங்குங்கள். அவனைத் தவிர உங்களுக்கு வணக்கத்திற்குரிய வேறு இறைவனில்லை. உங்கள் இறைவனிடமிருந்து நிச்சயமாக உங்களுக்குத் தெளிவான அத்தாட்சி வந்திருக்கிறது. ஆகவே, அளவை முழுமையாக அளந்து எடையை சரியாக நிறுங்கள். (நீங்கள் கொடுக்க வேண்டிய) மனிதர்களுடைய பொருள்களில் எதையும் குறைத்து விடாதீர்கள். பூமியில் (சமாதானமும் அமைதியும் ஏற்பட்டு) சீர்திருந்திய பின்னர் அதில் குழப்பமும் கலகமும் செய்யாதீர்கள். மெய்யாகவே நீங்கள் (என் வார்த்தையை) நம்புபவர்களாக இருந்தால் இவைதான் உங்களுக்கு நன்மை பயக்கும்" என்று கூறினார். (அல் அ.ஃராப் : 85)

சூனியத்தையும் இஸ்லாம் தடைசெய்துள்ளது. அல்லாஹ் கூறுகின்றான் : "இன்னும், உம் வலது கையில் இருப்பதை நீர் கீழே எறியும்; அவர்கள் செய்த (சூனியங்கள் யா)வற்றையும் அது விழுங்கி விடும்; அவர்கள் செய்தது சூனியக்காரனின் சூழ்ச்சியே ஆகும்; ஆகவே சூனியக்காரன் எங்கு சென்றாலும் வெற்றி பெற மாட்டான்" (என்றும் கூறினோம்)". (தாஹா : 69). மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "'பேரழிவை ஏற்படுத்தும் ஏழு பெரும் பாவங்களைத் தவிர்த்து விடுங்கள்' என்று கூறினார்கள். மக்கள், 'இறைத்தூதர் அவர்களே! அவை யாவை?' என்று கேட்டார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பது, சூனியம் செய்வது, முறையின்றி கொல்லக் கூடாதென அல்லாஹ் புனிதப்படுத்திய உயிரைக் கொல்வது, வட்டியைப் புசிப்பது, அநாதைகளின் செல்வத்தை உண்பது, போரின்போது புறமுதுகிட்டு ஓடுவது, இறைநம்பிக்கை கொண்ட அப்பாவிகளான பத்தினிப் பெண்களின் மீது அவதூறு கூறுவது ஆகியவையே (அந்தப் பெரும்பாவங்கள்)' என்று கூறினார்கள்". ஆதாரம் : புஹாரி 6857.

பகிரங்கமாகவோ மற்றும் இரகசியமாகவோ செய்யப்படும் மானக்கேடானவை, விபச்சாரம், ஓரினச்சேர்க்கை போன்ற அடிப்படைப் பாவங்களை இஸ்லாம் தடை

செய்துள்ளது. இதற்கான ஆதாரங்கள் இந்த இலக்கத்தின் ஆரம்பத்தில் கூறப்பட்டுள்ளன. மேலும் இஸ்லாம் வட்டியையும் தடுத்துள்ளது. அல்லாஹ் கூறுகின்றான் : "நம்பிக்கையாளர்களே! நீங்கள் (உண்மையாகவே) நம்பிக்கையாளர்களாக இருந்தால் அல்லாஹ்வுக்குப் பயந்து வட்டியில் (இதுவரை வாங்கியது போக) மீதமிருப்பதை (வாங்காமல்) விட்டுவிடுங்கள். இப்படி நீங்கள் நடக்காவிட்டால் அல்லாஹ்வுடனும் அவனுடைய தூதருடனும் போர் செய்யத் தயாராகி விடுங்கள். ஆயினும், நீங்கள் (வட்டி வாங்கியது பற்றி மனம் வருந்தி திருந்தி) பாவமன்னிப்பு கோரினால், உங்கள் பொருள்களின் அசல் தொகைகள் உங்களுக்கு உண்டு. (எவரும் அதை எடுத்துக்கொண்டு) உங்களுக்கு அநியாயம் செய்துவிட முடியாது. (அவ்வாறே) நீங்களும் (வட்டி வாங்கி) அநியாயம் செய்தவர்களாக மாட்டீர்கள்!". (அல் பகரா : 278, 279). வட்டிக்குப் போர்ப்பிரகடனம் செய்ததைப் போன்று அல்லாஹ் வேறு எந்த பாவத்திற்கும் எச்சரிக்கை செய்யவில்லை. ஏனெனில் வட்டியால் மதம், நாடு, பொருளாதாரம், உயிர் அனைத்தும் சீர்கெட்டுப் போகின்றன.

இஸ்லாம் இறந்த பிராணிகள், சிலைகளுக்காக அறுக்கப்பட்டவை, பன்றியிறைச்சி ஆகியவற்றையும் தடுத்துள்ளது. அல்லாஹ் கூறுகின்றான் : "தானாகச் செத்ததும், இரத்தமும், பன்றியின் மாமிசமும், அல்லாஹ் அல்லாதோர்க்கு அறுக்கப்பட்டவையும் உங்களுக்குத் தடைசெய்யப்பட்டுள்ளன. மேலும் கழுத்து நெரிக்கப்பட்டுச் செத்தது, அடிபட்டுச் செத்தது, உயரத்தில் இருந்து வீழ்ந்து செத்தது, கொம்பால் குத்தப்பட்டுச் செத்தது, வனவிலங்கு கடித்துச் செத்தது ஆகியவையும் (தடைசெய்யப்பட்டுள்ளன. இவற்றில் உயிருடன் கண்டு) முறைப்படி நீங்கள் அறுத்தவற்றைத் தவிர. மேலும்(பிற வணக்கம் செய்வதற்காகச்) சின்னங்கள் வைக்கப் பெற்ற இடங்களில் அறுக்கப்பட்டவையும்;, அம்புகள் மூலம் நீங்கள் குறி கேட்பதும் (உங்களுக்கு விலக்கப்பட்டுள்ளன) - இவையாவும் (பெரும்) பாவங்களாகும்". (அல் மாஇதா : 3).

மது அருந்துவதையும் இதர அனைத்து அசுத்தமான, தீங்கிழைக்கக்கூடிய பானங்களையும் இஸ்லாம் தடை செய்துள்ளது. அல்லாஹ் கூறுகின்றான் : "நம்பிக்கையாளர்களே! நிச்சயமாக மது, சூதாட்டம், சிலை வணக்கம், அம்பெறிந்து குறி கேட்பது ஆகிய இவை ஷைத்தானுடைய அருவருக்கத்தக்க வேலைகளில் உள்ளவையாகும். ஆகவே, நீங்கள் வெற்றியடைவதற்காக இவற்றில் இருந்து நீங்கள் விலகிக்கொள்ளுங்கள். மதுவாலும் சூதாட்டத்தாலும் உங்களுக்கிடையில் பகைமையையும் பொறாமையையும் உண்டுபண்ணி அல்லாஹ்வின் ஞாபகத்திலிருந்தும், தொழுகையிலிருந்தும் உங்களைத் தடுத்து விடவுமே நிச்சயமாக ஷைத்தான் விரும்புகிறான். (ஆகவே, அவற்றிலிருந்து) நீங்கள் விலகிக் கொள்வீர்களா?". (அல் மாஇதா : 90, 91). தீங்கிழைப்பதைத் தடுப்பது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய பண்புகளில் உள்ளதென தௌராத்தில் கூறப்பட்ட செய்தியை அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ளதாக 31ம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அல்லாஹ் கூறுகின்றான் : "(ஆகவே, அவர்களில்) எவர்கள் எழுதப் படிக்கத் தெரியாத (நம்) தூதராகிய இந்த நபியைப் பின்பற்றுகிறார்களோ அவர்கள் தங்களிடமுள்ள தௌறாத்திலும், இன்ஜீலிலும் இவருடைய பெயர் எழுதப்பட்டிருப்பதைக் காண்பார்கள். (இத்தூதரோ) அவர்களை நன்மையான காரியங்களைச் செய்யும்படி ஏவி, பாவமான காரியங்களிலிருந்து விலக்குவார். நல்லவற்றையே அவர்களுக்கு ஆகுமாக்கி வைப்பார். கெட்டவற்றை அவர்களுக்குத் தடுத்து விடுவார். மேலும், அவர்களது சுமையையும் அவர்கள் மீதிருந்த (கடினமான சட்ட) விலங்குகளையும் (இறைவனின் அனுமதி கொண்டு) நீக்கிவிடுவார். ஆகவே, எவர்கள் அவரை உண்மையாகவே நம்பிக்கை கொண்டு, அவரை பலப்படுத்தி அவருக்கு உதவி செய்து, அவருக்கு இறக்கப்பட்ட பிரகாசமான (இவ்வேதத்)தைப் பின்பற்றுகிறார்களோ அவர்கள்தான் வெற்றி பெற்றவர்கள்". (அல் அஃராப் : 157).

அநாதைகளின் சொத்துக்களை சுரண்டுவதையும் இஸ்லாம் தடுத்துள்ளது. அல்லாஹ் கூறுகின்றான் : "நீங்கள் அநாதைகளின் பொருள்களை (அவர்கள் பருவமடைந்த பின் குறைவின்றி) அவர்களுக்குக் கொடுத்து விடுங்கள். (அதிலுள்ள) நல்லதுக்குப் பதிலாகக் கெட்டதை மாற்றி விடாதீர்கள். அவர்களுடைய பொருள்களை உங்கள் பொருள்களுடன் சேர்த்து விழுங்கி விடாதீர்கள். நிச்சயமாக இது பெரும் பாவமாகும்". (அந் நிஸாஃ : 2). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "எவர்கள் அநாதைகளின் பொருள்களை அநியாயமாக விழுங்குகிறார்களோ அவர்கள் தங்கள் வயிற்றில் நிச்சயமாக நெருப்பையே கொட்டிக் கொள்கிறார்கள். பின்னர் (மறுமையில்) கொழுந்துவிட்டெரியும் நெருப்பில் புகுவார்கள்". (அந் நிஸாஃ : 10).

அளவை, நிறுவையில் மோசடி செய்வதையும் இஸ்லாம் தடுத்துள்ளது. அல்லாஹ் கூறுகின்றான் : "அளவை, நிறுவையில் மோசடி செய்பவர்களுக்குக் கேடுதான். அவர்கள்

மனிதர்களிடம் அளந்து வாங்கினால், நிறைய அளந்து கொள்கின்றனர். மற்றவர்களுக்கு அவர்கள் அளந்து கொடுத்தாலும் அல்லது நிறுத்துக் கொடுத்தாலும் குறைத்து (அவர்களை நஷ்டப்படுத்தி) விடுகின்றனர். நிச்சயமாக அவர்கள் (உயிர் கொடுத்து) எழுப்பப் படுவார்கள் என்பதை அவர்கள் நம்பவில்லையா?". (அல் முத஼ப்பிபீன் : _1-4).
இரத்த உறவைத் துண்டிப்பதையும் இஸ்லாம் தடுத்துள்ளது. 31ம் இலக்கத்தில் இதற்கான ஆதாரங்கள் கூறப்பட்டுள்ளன. அனைத்து நபிமார்களும் இறைத்தூதர்களும் மேற்கண்ட அனைத்தும் தடைசெய்யப்பட்ட பாவங்கள் என்பதில் ஏகோபித்துள்ளனர்

# 35. பொய், மேசடி, ஒப்பந்தங்களை முறித்தல், துரோகம், ஏமாற்று, பொறாமை, தீய தந்திரம், திருட்டு, அத்துமீறல், அநீதி போன்ற அனைத்து தீய குணங்களையும் இஸ்லாம் தடுக்கின்றது.

இஸ்லாம் பொதுவாகவே தீய குணங்களைத் தடுக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான் : "(பெருமையோடு) உன் முகத்தை மனிதர்களை விட்டும் திருப்பிக் கொள்ளாதே! பூமியில் பெருமையாகவும் நடக்காதே! அகப்பெருமைக்காரர், ஆணவங் கொண்டோர் எவரையும் நிச்சயமாக அல்லாஹ் நேசிக்க மாட்டான்". (லுக்மான் : 18). நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் கூறினார்கள்: "எனக்கு மிக நேசத்திற்குரியவரும், மறுமையில் எனக்கு மிக நெருக்கமாக இருப்பவரும் யாரெனில் உங்களில் நற்குணமுடையோரே. மேலும் எனக்கு மிக வெறுப்புக்குரியவரும், மறுமையில் எனக்கு மிகத் தொலைவில் இருப்பவரும் யாரெனில் தேவையின்றி, பேணுதலின்றி அளவுக்கதிகமாகப் பேசுவோரும், பெருமையடிப்போரும் ஆவர்". ஆதாரம் : அஹ்மத் (12498), ஸில்ஸிலா ஸஹீஹா (791).
இஸ்லாம் சொல், செயலில் பொய்யைத் தடுக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான் : "எவன் வரம்பு மீறி, பொய்ப்பிக்கின்றானோ அவனை நிச்சயமாக அல்லாஹ் நேர்வழியில் செலுத்த மாட்டான்". (g஼காபிர் : 28). மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "பொய்யை உங்களுக்கு எச்சரிக்கிறேன், ஏனெனில் பொய் பாவத்திற்க்கு வழிகாட்டும். பாவம் நரகிற்கு வழிகாட்டும். இறுதியில் அல்லாஹ்விடம் "பொய்யர்" (கஸ்ஸாப்) எனப் பதிவு செய்யப்படும் வரை ஓர் அடியார் பொய்யைத் தேர்ந்தெடுத்துப் பேசிக்கொண்டே இருப்பார்". ஆதாரம் : முஸ்லிம் 2607. மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "நயவஞ்சகனின் அடையாளம் மூன்றாகும். அவன் பேசினால் பொய் பேசுவான், வாக்களித்தால் மாறு செய்வான், நம்பப்பட்டால் துரோகம் இழைப்பான்". ஆதாரம் : புஹாரி 6095.
இஸ்லாம் மோசடியைத் தடுக்கின்றது. சந்தையில் உணவுக் குவியலொன்றுக்கு அருகில் நடந்து சென்ற நபியவர்கள், அதனுள் கையை நுழைத்துப் பார்த்த போது ஈரலிப்பு இருப்பதை அவதானித்து, "என்ன இது?" என உரியவரிடம் வினவினார்கள். "மழையினால் ஏற்பட்டது அல்லாஹ்வின் தூதரே" என அவர் பதிலளித்தார். அப்போது "மக்கள் பார்க்க அதனை குவியலில் மேலே வைத்திருக்கக் கூடாதா? யார் மோசடி செய்கின்றாரோ அவர் எம்மைச் சார்ந்தவர் அல்ல" என நபியவர்கள் கூறிய செய்தி நபிமொழியில் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆதாரம் : முஸ்லிம் 102.
ஒப்பந்தங்களை முறித்தல், துரோகம், ஏமாற்று என்பவற்றையும் இஸ்லாம் தடைசெய்துள்ளது. அல்லாஹ் கூறுகின்றான் : "நம்பிக்கையாளர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கும், (அவனுடைய) தூதருக்கும் மோசம் செய்யாதீர்கள். தவிர, நீங்கள் (செய்வது அநியாயம் என) அறிந்து கொண்டே உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அமானிதங்களுக்கு மோசம் செய்யாதீர்கள்". (அன்஼பால் : 27) மேலும் அல்லாஹ் கூறினான் : "அவர்கள் எத்தகையோரென்றால் அல்லாஹ்விடம் செய்த வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்றுவார்கள்; இன்னும் (தாம் செய்த) உடன்படிக்கையை முறித்து விடவும் மாட்டார்கள்". (அர்ர஼த் : 20). ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனது படைகளை வழியனுப்பும் போது பின்வருமாறு கூறுவார்கள் : “நீங்கள் அறப்போர் புரியுங்கள்; போர்ச் செல்வங்களில் கையாடல் செய்யாதீர்கள்; ஒப்பந்தங்களை முறிக்காதீர்கள்; சித்திரவதை செய்யாதீர்கள்; குழந்தைகளைக் கொல்லாதீர்கள்”. ஆதாரம் : முஸ்லிம் 1731. மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "நான்கு பண்புகள் எவனிடம் உள்ளனவோ அவன் வடிகட்டிய முனா஼பிக் ஆவான். அவற்றில் ஏதேனும் ஒன்று யாரிடமேனும் இருந்தால் அதை விட்டொழிக்கும் வரை

நயவஞ்சகத்தின் ஒரு பண்பு அவனிடம் இருந்து கொண்டே இருக்கும். நம்பினால் துரோகம் செய்வான்;. பேசினால் பொய்யே பேசுவான்.; ஒப்பந்தம் செய்தால் அதை மீறுவான்;. விவாதம் புரிந்தால் நேர்மை தவறிப் பேசுவான்". ஆதாரம் : புஹாரி 34.

இஸ்லாம் பொறாமையையும் தடுக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான் : "அல்லாஹ் மனிதர்களில் சிலருக்கு தன் அருளை வழங்கியுள்ளதைப் பற்றி இவர்கள் பொறாமை கொள்கின்றார்களா? நிச்சயமாக நாம் இப்ராஹீமுடைய சந்ததிகளுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கொடுத்து, அத்துடன் மாபெரும் அரசாங்கத்தையும் அவர்களுக்குக் கொடுத்தோம்". (அந்நிஸா.ஃ : 54). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "வேதத்தையுடையவர்களில் பெரும்பாலானவர்கள் நம்பிக்கையாளர்களாகிய உங்களை நிராகரிப்பவர்களாக மாற்றிவிட வேண்டுமே! என்று விரும்புகிறார்கள். அவர்களுக்கு உண்மை (இன்னதெனத்) தெளிவாகத் தெரிந்த பின்னும் இவ்வாறு அவர்கள் விரும்புவதன் காரணமெல்லாம் அவர்களுக்கு (உங்கள் மீது)ள்ள பொறாமைதான். ஆகவே, அல்லாஹ்வுடைய (மற்றொரு) கட்டளை வரும்வரை (அவர்களை) நீங்கள் மன்னித்தும் புறக்கணித்தும் வாருங்கள். நிச்சயமாக அல்லாஹ் அனைத்தின் மீதும் மிகவும் பேராற்றலுடையவன் ஆவான்". (அல் பகரா : 109). மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "உங்களுக்கு முன்னுள்ள சமுதாயத்தினரின் நோய் உங்கள் மத்தியிலும் ஊடுருவியுள்ளது : பொறாமை, குரோதமே அவையாகும். குரோதம்தான் அழிக்கக் கூடியது. அது அழிப்பது முடியையல்ல, மார்க்கத்தையாகும். என் உயிர் எவன் கைவசமுள்ளதோ அந்த அல்லாஹ்வின் மீது சத்தியமாக நீங்கள் இறைநம்பிக்கை கொள்ளாதவரையில் சொர்க்கத்தில் நுழைய முடியாது.நீங்கள் ஒருவரை ஒருவர் நேசிக்காதவரை (முழுமையான) இறைநம்பிக்கையாளராக முடியாது. அவற்றை உறுதிப்படுத்தும் ஒன்றை உங்களுக்கு நான் அறிவிக்கட்டுமா? உங்களிடையே ஸலாத்தைப் பரப்புங்கள்". ஆதாரம் : திர்மிதீ 2510.

இஸ்லாம் தீய தந்திரங்களையும் தடுக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான் : "இவ்வாறே, ஒவ்வொரு ஊரிலும் ஆங்காங்குள்ள பாவிகளை நாம் தலைவர்களாக்கி இருக்கிறோம். அங்கு அவர்கள் சூழ்ச்சி செய்து கொண்டிருப்பார்கள். எனினும், அவர்கள் தங்களுக்கே தவிர, (மற்றெவருக்கும்) சூழ்ச்சி செய்துவிட முடியாது. (இதை) அவர்கள் உணர்ந்து கொள்ளமாட்டார்கள்". (அல்அன்ஆம் : 123). யூதர்கள் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கொல்ல முயற்சித்து, தந்திரம் செய்த போது, அல்லாஹ் அவர்களுக்குத் தந்திரம் செய்ததாகக் கூறி, தீய சூழ்ச்சி அதற்குரியவர்களையே சூழ்ந்து கொள்ளும் என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளான். அல்லாஹ் கூறுகின்றான் : "அவர்களில் பலர் (தம்மை) நிராகரிப்பதை ஈஸா உணர்ந்த பொழுது (அவர்களை நோக்கி) "அல்லாஹ்வுக்காக எனக்கு உதவி செய்பவர் யார்?" எனக் கேட்டார். (அதற்கு) அவருடைய தோழர்கள் "நாங்கள் அல்லாஹ்வுக்காக (உங்களுக்கு) உதவி செய்கிறோம். மெய்யாகவே! அல்லாஹ்வை நாங்கள் நம்பிக்கை கொள்கிறோம். (ஆதலால்,) நிச்சயமாக நாங்கள் (முஸ்லிம்கள்) முற்றிலும் அவனுக்கு வழிப்பட்டோம் என்பதாக நீர் சாட்சி கூறுவீராக' என்று கூறினார்கள். "எங்கள் இறைவனே! நீ இறக்கிய(வேதத்)தை நாங்கள் நம்புகிறோம். (உன்) இத்தூதரையும் நாங்கள் பின்பற்றி நடக்கிறோம். ஆதலால், (அவரை) உண்மைப்படுத்தியவர்களுடன் எங்களையும் நீ பதிவு செய்து கொள்வாயாக!" (என்றும் அந்தத் தோழர்கள் பிரார்த்தித்தனர்.) (ஈஸாவை நிராகரித்த) அவர்கள் (அவரைக் கொலை செய்ய) சதி செய்தார்கள். அல்லாஹ் (அவர்களுக்குச்) சதி செய்து விட்டான். அல்லாஹ், சதி செய்பவர்களில் மிக மேலான(சதி செய்ப)வன். (ஈஸாவை நோக்கி) அல்லாஹ் கூறியதை (அவர்களுக்கு) ஞாபகப்படுத்துவீராக!: "ஈஸாவே நிச்சயமாக நான் உமக்கு (உமது) ஆயுளை முழுமைப்படுத்துவேன். உம்மை நம்மளவில் உயர்த்திக்கொள்வேன். நிராகரிப்பவர்களி(ன் அவதூறி)லிருந்து உங்களைப் பரிசுத்தமாக்கிவைப்பேன். உங்களைப் பின்பற்றுபவர்களை நிராகரிப்பவர்களை விட இறுதி நாள்வரை மேலாக்கியும் வைப்பேன்" (என்று கூறி, ஈஸாவே! அந்நிராகரிப்பவர்களை நோக்கி, நான் கூறியதாக நீர் கூறுவீராக: "அல்லாஹ்வாகிய) என்னிடமே நீங்கள் மீண்டும் வருவீர்கள். நீங்கள் தர்க்கித்துக் கொண்டிருப்பவற்றைப் பற்றி (அந்நேரத்தில்) நான் உங்களுக்கிடையில் தீர்ப்பளிப்பேன்" (என்றும் கூறினான்.)". (ஆலஇம்ரான் : 52- 55). ஸாலிஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களை அச்சமூகம் கொலை செய்ய கடும் சூழ்ச்சி செய்த போது அல்லாஹ்வும் அச்சமூகத்திற்க்கு சூழ்ச்சி செய்து பூண்டோடு அவர்களை அழித்த செய்தியை பின்வருமாறு கூறுகின்றான் : "அவர்கள் (ஸாலிஹாகிய) அவரையும் அவருடைய குடும்பத்தையும் இரவோடு இரவாக நாம் அழித்து விடுவோம். (இதை ஒருவரிடமும் கூறுவதில்லை என்று) நாம் நமக்குள்ளாக அல்லாஹ் மீது சத்தியம் செய்துகொண்டு அவருடைய சொந்தக்காரர்களிடம், " அவர் வெட்டுப்பட்ட இடத்திற்கு நாங்கள் வரவேயில்லை. நிச்சயமாக நாங்கள் உண்மையே சொல்லுகிறோம்" என்று நாம் கூறிவிடலாம் என்று

கூறிக் கொண்டார்கள்". (இவ்வாறு) அவர்கள் கடும் சூழ்ச்சி செய்தார்கள். நாமும் கடும் சூழ்ச்சி செய்தோம். அவர்கள் அதை உணர்ந்துகொள்ள முடியவில்லை. ஆகவே, அவர்களுடைய சூழ்ச்சியின் முடிவு எவ்வாறு ஆயிற்று என்பதை (நபியே!) நீர் கவனித்துப் பார்ப்பீராக. நிச்சயமாக நாம் அவர்களையும் அவர்களுடைய மக்கள் அனைவரையும் அழித்துவிட்டோம்". (அந்நம்லு : 49- 51).
இஸ்லாம் திருட்டையும் தடுக்கின்றது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "விபசாரம் புரிகிறவன் விபசாரம் புரியும்போது இறைநம்பிக்கையாளனாக இருந்தபடி விபசாரம் புரிவதில்லை. (திருடன்) திருடும்போது இறைநம்பிக்கையாளனாக இருந்தபடி திருடுவதில்லை. (மது அருந்துபவன்) மது அருந்தும்போது இறைநம்பிக்கையாளனாக இருந்தபடி மது அருந்துவதில்லை. மனம் வருந்தி பாவமன்னிப்புக் கோருதல் பின்னர்தான் ஏற்படுகிறது". ஆதாரம் : புஹாரி 6810.
இஸ்லாம் அக்கிரமம் புரிதலையும் தடுக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான் : "(நம்பிக்கையாளர்களே!) நீங்கள் நீதி செலுத்தும் படியாகவும், நன்மை செய்யும்படியாகவும், உறவினர்களுக்கு(ப் பொருள்) கொடுத்து உதவி செய்யும்படியாகவும் நிச்சயமாக அல்லாஹ் (உங்களை) ஏவுகிறான். மானக்கேடான காரியங்கள், பாவம், அக்கிரமம் ஆகியவற்றிலிருந்து (உங்களை) அவன் தடுக்கிறான். நீங்கள் நல்லுணர்வு பெறுவதற்காக அவன் உங்களுக்கு (இப்படி) நல்லுபதேசம் செய்கிறான்". (அந்நஹ்லு: 90). மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "நீங்கள் ஒருவர் இன்னொருவருக்கு அக்கிரமம் செய்யாமலும்,ஒருவர் இன்னொருவர் மீது தற் பெருமை கொள்ளாமலும் இருக்கும் பொருட்டு நீங்கள் பணிவாக நடந்து கொள்ளுங்கள்,என்று நிச்சயமாக எனக்கு அல்லாஹ் வஹி அருளினான்". ஸஹீஹ் அபூ தாவூத் 4895.
இஸ்லாம் அநீதியையும் தடுக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான் : "அநியாயக்காரர்களை அல்லாஹ் நேசிப்பதில்லை". (ஆல இம்ரான் : 57). மேலும் அல்லாஹ் கூறினான் : "நிச்சயமாக அநியாயக்காரர்கள் வெற்றிபெற மாட்டார்கள்". (அல்அன்ஆம் : 21). மேலும் அல்லாஹ் கூறினான் : "அநியாயக்காரர்களுக்கு அல்லாஹ் நோவினை தரும் வேதனையைத் தயார் படுத்தியுள்ளான்". (அல்இன்ஸான் : 31). மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "மூன்று நபர்களுடைய பிரார்த்தனை தட்டப்படமாட்டாது. நீதமான ஆட்சியாளர், நோன்பாளி நோன்பு திறக்கும் வரை, அநீதியிழைக்கப் பட்டவனின் பிரார்த்தனை ஒரு மேகத்தில் சுமந்து செல்லப்பட்டு வானங்களின் கதவுகள் திறக்கப்படும், கண்ணியமிக்க அல்லாஹ் கூறுவான் : எனது கண்ணியத்தின் மீது ஆணையாக, சிறிது காலம் சென்றாயினும் நிச்சயம் உனக்கு நான் உதவுவேன்". ஆதாரம் : முஸ்லிம் 2749 (சிறு மாற்றங்களுடன்), திர்மிதீ 2526 (சிறு மாற்றங்களுடன்), அஹ்மத் 8043 (இவ்வார்த்தை அவருக்குரியது). நபியவர்கள் முஆத் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை யமன் தேசத்திற்கு அனுப்பும் போது கூறியவற்றில் பின்வரும் வார்த்தையும் உள்ளது : "அநீதியிழைக்கப்பட்டவனின் பிரார்த்தனையை நீ அஞ்சிக் கொள், ஏனெனில் அதற்கும் அல்லாஹ்வுக்கும் இடையில் எத்திரையும் கிடையாது". ஆதாரம் : புஹாரி 1496. மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "யார் ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு அநீதியிழைக்கிறாரோ, அல்லது அவரது கொடுப்பனவிலிருந்து குறைக்கிறாரோ, அல்லது சக்திக்கு மேலால் சிரமப்படுத்துகிறாரோ, அல்லது விருப்பமின்றி அவருடைய உடமையிலிருந்து ஏதாவது எடுக்கிறாரோ அவருக்கெதிராக மறுமையில் நான் வாதாட நிற்பேன்". ஆதாரம் : அபூ தாவூத் 3052. எனவே நீர் அவதானித்தது போன்று இஸ்லாம் அனைத்து தீய குணங்களையும், அநீதமான செயற்பாடுகளையும் முற்றாகத் தடுக்கின்றது.

# 36. வட்டி, பாதிப்பு, ஏமாற்று, அநீதி, மோசடி கலந்த கொடுக்கல் வாங்கலையும், தனிநபர் மற்றும் சமூகத்தைப் பேரழிவிற்கோ, பெரும் பாதிப்பிற்கோ இட்டுச்செல்லும் வியாபார முறைகளையும் இஸ்லாம் தடுக்கின்றது.

வட்டி, பாதிப்பு, ஏமாற்று, அநீதி, மோசடி கலந்த கொடுக்கல் வாங்கலையும், தனிநபர் மற்றும் சமூகத்தைப் பேரழிவிற்கோ, பெரும் பாதிப்பிற்கோ இட்டுச்செல்லும் வியாபார முறைகளையும் இஸ்லாம் தடுக்கின்றது. வட்டி, அநீதி, மோசடி, குழப்பம் விளைவித்தல்

போன்றன தடுக்கப்பட்டவை என்பதற்கான பல இறைவசனங்களும் நபிமொழிகளும் இதன் ஆரம்பப் பகுதியிலே கூறப்பட்டு விட்டன. அல்லாஹ் கூறுகின்றான் : "எவர்கள் நம்பிக்கை கொண்ட ஆண்களையும் பெண்களையும் அவர்கள் செய்யாத குற்றத்தை(ச் செய்ததாக)க் கூறித் துன்புறுத்துகிறார்களோ அவர்கள், நிச்சயமாக (பெரும்) அவதூற்றையும் பகிரங்கமான பாவத்தையுமே சுமந்து கொள்கின்றனர்". (அல்அஹ்ஸாப் : 58). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "எவர் நன்மைகள் செய்கிறாரோ, அது அவருக்கே நன்று. எவர் பாவம் செய்கிறாரோ, அது அவருக்கே கேடாகும். உமது இறைவன் (தன்) அடியார்கள் எவருக்கும் அறவே தீங்கு செய்வதில்லை. (அவர்கள்தான் தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொள்கின்றனர்.)". (ஃபுஸ்ஸிலத் : 46). "தீங்கிழைக்கவும் கூடாது, தீங்கிற்குப் பழி வாங்கவும் கூடாது" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தீர்ப்புச் செய்ததாக நபிமொழியில் இடம்பெற்றுள்ளது. ஸுனன் தாரகுத்னீ 3079. மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்புகிறவர் பேசினால் நல்லதைப் பேசட்டும். அல்லது மௌனித்திருக்கட்டும். அல்லாஹ்வையும் இறுதிநாளையும் நம்புகிறவர் தனது அயல் வீட்டாரை கண்ணியப்படுத்தட்டும். அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்புகிறவர் தனது விருந்தினரை கண்ணியப்படுத்தட்டும்". ஆதாரம் : புஹாரி 6018, முஸ்லிம் 47. மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "(முன்னொரு சமுதாயத்தைச் சேர்ந்த) பெண்ணொருத்தி ஒரு பூனை(க்குத் துன்பம் தந்த) விஷயத்தில் வேதனைப்படுத்தப்பட்டாள். அந்தப் பூனையை அது பசியால் துடித்துச் சாகும் வரை அவள் அடைத்து வைத்திருந்தாள். அதற்கு அவள் உணவு, பானம் கொடுக்கவுமில்லை, பூமியிலுள்ள பூச்சி, புழுக்களைத் தானாகத் தேடி உண்ண அதனை விடுவிக்கவும் இல்லை. அதன் காரணத்தால் அவள் நரகத்தில் புகுந்தாள்". ஆதாரம் : புஹாரி 3482. ஒரு பூனையைத் துன்புறுத்தியவளுக்கே இத்தண்டனை எனின் மனிதர்களைத் துன்புறுத்துபவர்கள் எம்மாத்திரம். இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் கூறுகின்றாகள் : நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மின்பருக்கு ஏறி உயர்ந்த சப்தத்தில் அழைத்துப் பின்வருமாறு கூறினார்கள் : "உள்ளத்தில் விசுவாசம் நுழையாமல் நாவினால் மாத்திரம் விசுவாசித்த மக்களே! நீங்கள் முஸ்லிம்களைப் பற்றிப் புறம் பேசாதீர்கள். அவர்களது குறைகளைத் துருவாதீர்கள். யார் முஸ்லிம்களுடைய குறைகளைத் துருவுகின்றாரோ அவருடைய குறையை அல்லாஹ் துருவ ஆரம்பித்து விடுவான். அல்லாஹ் யாருடைய குறையைத் துருவ ஆரம்பித்தானோ அவன் தனது வீட்டிலிருந்தாலும் அவனை மானபங்கப்படுத்தாமல் விடமாட்டான்". ஒரு நாள் இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் கஃபாவைப் பார்த்து : "நீ எவ்வளவு கண்ணியமாக இருக்கின்றாய்!, உனது புனிதத்தன்மை எவ்வளவு மகத்தானது!, ஆனாலும் ஒரு விசுவாசி உன்னை விட அல்லாஹ்விடத்தில் மகத்தானவன்" என்று கூறினார்கள். ஆதாரம் : திர்மிதீ 2032, இப்னு ஹிப்பான் 5763. மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்புகிறவர் தனது அயல் வீட்டாரை நோவினைப் படுத்தாமல் இருக்கட்டும். அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்புகிறவர் தனது விருந்தினரை கண்ணியப்படுத்தட்டும். அல்லாஹ்வையும் இறுதிநாளையும் நம்புகிறவர் பேசினால் நல்லதைப் பேசட்டும். அல்லது மௌனித்திருக்கட்டும்". ஆதாரம் : புஹாரி 6018. "எனது உம்மத்திலே அனைத்தையும் இழந்த வங்குரோத்துக்காரன் (நஷ்டவாளி) யாரென்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தோழர்களிடம் கேட்டார்கள். அதற்கவர்கள் எங்களில் வங்குரோத்துக்காரன் என்பவன் எந்த நாணயமோ பொருளோ இல்லாதவன் என்றார்கள். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மறுமையில் தொழுகை நோன்பு ஸகாத் என்பவற்றோடு வந்தாலும் இவனை ஏசியவனாக, அவனை அவதூறு சொன்னவனாக, இவனது சொத்துக்களை உண்டவனாக, இவனது இரத்தத்தை சிந்தச் செய்தவனாக, அவனை அடித்தவனாக வருபவனாவான்.அவனது நன்மைகளிலிருந்து இவனுக்குக் கொடுக்கப்படும். அவனது நன்மைகளிலிருந்தும் மற்றவனுக்கு கொடுக்கப்படும். அவனது நன்மைகள் கொடுத்து முடிந்து விட்டால் மற்றவர்களின் பாவங்களிலிருந்து எடுத்து இவனிலே போடப்பட்டு. அவன் நரகிலே வீசப்படுவான் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூஹுரைரா றழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள். ஆதாரம் : முஸ்லிம் 2581, திர்மிதீ 2418, அஹ்மத் 8029 (இவ்வார்த்தை அவருக்குரியது).

மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "பாதையில் மக்களுக்கு இடையூறாக ஒரு மரக்கிளை இருந்தது. ஒரு மனிதர் அதனை அப்புறப்படுத்தினார். அதனால் அவர் சுவர்க்கம் நுழைவிக்கப்பட்டார்". ஆதாரம் : புஹாரி 652 (இதே கருத்தில்), முஸ்லிம் 2749 (சிறு மாற்றங்களுடன்), இப்னுமாஜா 3682, அஹ்மத்10432 (இவ்வார்த்தை இவ்விருவருக்குமுரியது). பாதையிலிருந்து நோவினை

தருவதை நீக்கும் செயல் சுவனத்தில் நுழைவிக்கின்றது எனின் மக்களையும் அவர்களுடைய வாழ்க்கையையும் வீணடிப்போரின் நிலை என்ன?

# இஸ்லாம் புத்தியைப் பாதுகாத்து, மதுப் பாவணை போன்ற அதனைப் பேதலிக்கக் கூடிய அனைத்தையும் தடுத்துள்ளது. புத்தியின் தரத்தை உயர்த்தி, சட்டதிட்டங்கள் விதியாவதற்கான பிராதன நிபந்தனையாக அதனை வைத்துள்ளதுடன், சிலைவணக்கம், மூடநம்பிக்கைகளை விட்டும் அதனை விடுவித்துள்ளது. இஸ்லாத்தில் குறிப்பிட்ட ஒரு சாரார்க்கென எந்த இரகசியமோ, சட்டதிட்டமோ இல்லை. இதன் அனைத்து சட்டதிட்டங்களும் சரியான அறிவுக்கு எட்டக்கூடியனவாகவே உள்ளன. அவை நீதத்திற்கும், ஞானத்திற்கும் உடன்பட்டதாகவே இருக்கின்றன.

இஸ்லாம் புத்தியைப் பாதுகாத்து அதன் தரத்தை உயர்த்தியுள்ளது. அல்லாஹ் கூறுகின்றான் : "செவி, பார்வை, உள்ளம் ஆகிய அனைத்துமே விசாரிக்கப்படுபவையாகும்". (அல்இஸ்ரா.ஃ: 36). தனது புத்தியைப் பாதுகாப்பது மனிதனுக்கு அவசியமாகும். இதனால்தான் இஸ்லாம் மது, போதை வஸ்துக்களைத் முற்றாகத் தடுத்துள்ளது. 34ம் இலக்கத்தில் மது தடுக்கப்பட்டது (ஹராம்) என்பது பற்றிக் கூறப்பட்டுள்ளது. அல்குர்ஆனின் பல வசனங்கள் பின்வருமாறு முடிகின்றது : "நீங்கள் விளங்கிக் கொள்வதற்காக". (அல்பகரா : 242). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "இவ்வுலக வாழ்க்கை விளையாட்டும் கேளிக்கையுமே தவிர வேறில்லை! எனினும் இறையச்சமுடையவர்களுக்கு நிச்சயமாக மறுமையின் வாழ்க்கையே மிக மேலானது. (இவ்வளவுகூட) நீங்கள் அறிந்து கொள்ள வேண்டாமா?" (அல்அன்ஆம்: 32). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "(அரபிகளே!) நீங்கள் நன்கறிந்து கொள்வதற்காக குர்ஆன் என்னும் இவ்வேதத்தை நிச்சயமாக நாமே அரபி மொழியில் இறக்கி வைத்தோம்". (யூஸுஃப்: 2). நேர்வழி, ஞானத்தின் மூலம் புத்தியுள்ளவர்களைத் தவிர வேறு யாரும் பயனடைய மாட்டார்களென அல்லாஹ் தெளிவுபடுத்திக் கூறுகின்றான் : "(அல்லாஹ்) தான் விரும்பியவர்களுக்கே 'ஹிக்மா' (ஞானம், நுண்ணறி)வை கொடுக்கிறான். ஆதலால், எவர் ஹிக்மாவைக் கொடுக்கப் பெறுகிறாரோ அவர் நிச்சயமாக பல நன்மைகளைப் பெற்றுவிடுவார். ஆயினும் (இந்த நுண்ணறிவு, ஞானத்தைக்கொண்டு) புத்திசாலிகளைத் தவிர (மற்றெவரும்) உணர்வு பெற மாட்டார்கள்". (அல்பகரா : 269).

இதனால்தான் இஸ்லாம் சட்டதிட்டங்கள் விதியாவதற்கான பிராதன நிபந்தனையாக புத்தி, பகுத்தறிவை வைத்துள்ளது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "மூன்று பேரை விட்டும் பேனா உயர்த்தப்பட்டு விட்டது, தூங்கியவன் விழிக்கும் வரை, சிறுபிள்ளை பருவமடையும் வரை, பைத்தியகாரன் புத்தி தெளியும் வரை". இது போன்ற வார்த்தையில் இமாம் புஹாரி (5269) அறிவிப்பாளர் வரிசையின்றி செய்வினை வாக்கியமாக அறிவித்துள்ளார்கள். முழு அறிவிப்பாளர் வரிசையுடன் பின்வருவோர் அறிவித்துள்ளனர் : அபூதாவூத் 4402 (இந்த வார்த்தை இவருக்குரியது), திர்மிதீ 1423, நஸாஈயின் ஸுனன் அல்குப்ரா 7346, அஹ்மத் 956 (சிறு மாற்றத்துடன்), இப்னு மாஜா.ஃ 2042 (சுருக்கமாக). சிலைவணக்கம், மூடநம்பிக்கைகளை விட்டும் அதனை

விடுவித்துள்ளது. பழைய மூடநம்பிக்கைகளைப் பற்றிக் கொண்டு அல்லாஹ்விடமிருந்து வந்த சத்தியத்தை மறுத்த சமூகங்களைப் பற்றி பின்வருமாறு கூறுகின்றான் : "இவ்வாறே, உங்களுக்கு முன்னரும் எச்சரிக்கும் தூதரை ஓர் ஊராரிடம் நாம் அனுப்பிவைத்தால், அங்குள்ள தலைவர்கள் "நாங்கள் எங்கள் மூதாதைகளை ஒரு வழியில் கண்டோம்; அவர்களின் அடிச்சுவடுகளையே நாங்கள் பின்பற்றிச் செல்வோம்" என்று கூறாமல் இருக்கவில்லை". (அஸ்ஸுஃக்ருப் : 23). இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் தனது சமூகத்திற்குக் கூறிய செய்தியை அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான். : "நீங்கள் வழிபாடு செய்து கொண்டிருக்கும் இந்த சிலைகள் என்ன? (என்று கேட்ட போது) அவர்கள் "எங்கள் மூதாதைகள் இவற்றை வணங்கிக் கொண்டிருக்க நாங்கள் கண்டோம். (ஆதலால் நாங்களும் அவற்றை வணங்குகிறோம்)" என்று கூறினார்கள்". (அல்அன்பியாஃ: 52, 53). இஸ்லாம் வந்து மக்களை சிலை வணக்கத்தை விடும்படியும், தந்தை, பாட்டன் என மூதாதையர்களிடமிருந்து பெற்ற மூட நம்பிக்கைகளைக் களையுமாறும், இறைத்தூதர்களுடைய வழியைப் பின்தொடருமாறும் பணித்தது. இஸ்லாத்தில் குறிப்பிட்ட ஒரு சாரார்க்கென எந்த இரகசியமோ, சட்டதிட்டமோ இல்லை. அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம்- இவர் நபியவர்களின் சிற்றப்பாவின் மகனும், மருமகனும் ஆவார்-, "நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உங்களிடம் மட்டும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் விஷயத்தை (இரகசியமாகச்) சொன்னார்களா?" என்று கேட்கப்பட்டது. அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், "அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்கள் அனைவருக்கும் பொதுவாகச் சொல்லாத எந்த விஷயத்தையும் எங்களிடம் தனிப்பட்ட முறையில் (இரகசியமாகச்) சொல்லவில்லை; இதோ இந்த வாளுறையில் இருப்பதைத் தவிர" என்று கூறிவிட்டு, ஓர் ஏட்டை வெளியில் எடுத்தார்கள். அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது: அல்லாஹ் அல்லாத மற்றவர் பெயரில் (பிராணியை) அறுத்தவனை அல்லாஹ் சபிக்கின்றான். பூமியின் அடையாளச் சின்னங்களைத் திருடியவனை அல்லாஹ் சபிக்கின்றான். தன் தந்தையைச் சபித்தவனை அல்லாஹ் சபிக்கின்றான். (மார்க்கத்தில் இல்லாத) புதுமைகளை (மார்க்கத்தின் பெயரால்) ஏற்படுத்தியவனுக்கு அடைக்கலம் அளித்தவனை அல்லாஹ் சபிக்கின்றான். ஆதாரம் : முஸ்லிம் 1978. இஸ்லாத்தின் அனைத்து சட்டதிட்டங்களும் சரியான அறிவுக்கு எட்டக்கூடியனவாகவே உள்ளன. அவை நீதத்திற்கும், ஞனத்திற்கும் உடன்பட்டதாகவே இருக்கின்றன.

## **38.** அசத்திய மதங்களைப் பின்பற்றுவோர் அவற்றிலுள்ள முரண்பாடுகள், பகுத்தறிவு ஏற்றுக்கொள்ளாத விடயங்களை முழுமையாக விளங்கிக் கொள்ளாவிடன் அம்மதங்களின் போதகர்கள் இம்மக்களிடம் மதம் என்பது பகுத்தறிவையும் தாண்டிய ஒன்று, மதத்தை முழுமையக விளங்குவதில் புத்திக்கு எப்பங்கும் இல்லை என்ற எண்ணத்தை விதைத்து விடுவார்கள். ஆனால் இஸ்லாமோ புத்திக்கு சரியான பாதையை ஒளிமயமாக்கிக் கொடுக்கும் பிரகாசமாகவே மதத்தைப் பார்க்கின்றது. மனிதர்கள் பகுத்தறிவைத் துறந்து தம்மைப் பின்பற்ற வேண்டும் என்றே அசத்திய

மதங்களைச் சார்ந்தோர் விரும்புகின்றனர். ஆனால் இஸ்லாமோ ஒவ்வொன்றையும் உரிய முறையில் அறிவதற்காக மனிதனிடம் அறிவுக்கண்ணைத் திறக்கவே விரும்புகின்றது.

அசத்திய மதங்களைப் பின்பற்றுவோர் அவற்றிலுள்ள முரண்பாடுகள், பகுத்தறிவு ஏற்றுக்கொள்ளாத விடயங்களை முழுமையாக விளங்கிக் கொள்ளாவிடன் அம்மதங்கின் போதகர்கள் இம்மக்களிடம் மதம் என்பது பகுத்தறிவையும் தாண்டிய ஒன்று, மதத்தை முழுமையக விளங்குவதில் புத்திக்கு எப்பங்கும் இல்லை என்ற எண்ணத்தை விதைத்து விடுவார்கள். ஆனால் இஸ்லாமோ புத்திக்கு சரியான பாதையை ஒளிமயமாக்கிக் கொடுக்கும் பிரகாசமாகவே மதத்தைப் பார்க்கின்றது. மனிதர்கள் பகுத்தறிவைத் துறந்து தம்மைப் பின்பற்ற வேண்டும் என்றே அசத்திய மதங்களைச் சார்ந்தோர் விரும்புகின்றனர். ஆனால் இஸ்லாமோ ஒவ்வொன்றையும் உரிய முறையில் ஆராய்ந்து, சிந்தித்து, அறிவதற்காக மனிதனிடம் அறிவைத் திறக்கவே விரும்புகின்றது. அல்லாஹ் கூறுகின்றான் : "(நபியே!) இவ்வாறே உமக்கு நம் கட்டளையை வஹியின் மூலமாக அறிவிக்கிறோம். (இதற்கு முன்னர்) நீர் வேதம் இன்னதென்றும், நம்பிக்கை இன்னதென்றும் அறிந்தவராக இருக்கவில்லை. ஆயினும், (இந்த வேதத்தை உமக்கு நாம் வஹி மூலம் அறிவித்து) அதை ஒளியாகவும் ஆக்கி, நம் அடியார்களில் நாம் விரும்பியவர்களுக்கு அதைக் கொண்டு நேரான வழியைக் காண்பிக்கிறோம். (நபியே!) நிச்சயமாக நீர் (அதன் மூலம் மக்களுக்கு) நேரான வழியைக் காண்பிக்கிறீர்". (அஷ் ஷூரா: 52). இறைச்செய்தியானது ஆரோக்கியமான அறிவை அவை அறிந்து, நம்பிக்கை கொள்ள விரும்பும் உண்மைகளின் பால் வழிகாட்டக்கூடியளவு சான்றுகளையும், ஆதாரங்களையும் உள்ளடக்கியுள்ளது. அல்லாஹ் கூறுகின்றான் : "மனிதர்களே! உங்கள் இறைவனிடமிருந்து (போதுமான) அத்தாட்சி நிச்சயமாக உங்களிடம் வந்திருக்கின்றது. (அவருடன்) மிகத்தெளிவான (வேதமென்னும்) ஒளியை நாம் உங்களுக்கு இறக்கியிருக்கிறோம்". (அந்நிஸா.ஃ : 174). மனிதன் நேர்வழி, அறிவு, யதார்த்தம் ஆகிய ஒளியில் வாழ்வதையே அல்லாஹ் விரும்புகின்றான். ஆனால் அவனல்லாமல் வணங்கப்படும் தாகூத் மற்றும் ஷைத்தான்களோ மனிதன் இறைநிராகரிப்பு, மடமை,வழிகேட்டில் நிலைத்திருப்பதையே விரும்புகின்றனர். அல்லாஹ் கூறுகின்றான் : "அல்லாஹ் நம்பிக்கையாளர்களின் பாதுகாவலன் ஆவான். அவன் அவர்களை இருள்களிலிருந்து வெளியேற்றி ஒளியின் பக்கம் செலுத்துகிறான். ஆனால், நிராகரிப்பவர்களுக்கோ அவர்களின் பாதுகாவலர்கள் ஷைத்தான்கள்தான். அவை அவர்களை ஒளியிலிருந்து நீக்கி இருள்களின் பால் செலுத்துகின்றன. அவர்கள் நரகவாசிகள். மேலும், அவர்கள் அதில் நிரந்தரமாக தங்கி விடுவார்கள்". (அல்பகரா : 257).

## **39.** இஸ்லாம் சரியான விஞ்ஞானத்தை மதிக்கிறது, மனோ இச்சைக்கு அப்பாற்பட்ட அறிவியல் ஆய்வை ஊக்கப்படுத்துகின்றது. எம்மிலும், எம்மைச் சூழவுள்ள பிரபஞ்சத்திலும் நோட்டமிட்டு, ஆய்வுசெய்ய அழைக்கின்றது. மேற்கண்ட அமைப்பில் விஞ்ஞானத்தில் எட்டப்படும் சரியான அறிவியல் முடிவுகள் ஒரு போதும் இஸ்லாத்திற்கு முரண்படமாட்டாது.

இஸ்லாம் சரியானை (விஞ்ஞான) அறிவை மதிக்கிறது. அல்லாஹ் கூறுகின்றான் : "உங்களில் நம்பிக்கை கொண்டோருக்கும், கல்வி வழங்கப்பட்டோருக்கும் அல்லாஹ் பல தகுதிகளை உயர்த்துவான். நீங்கள் செய்வதை அல்லாஹ் நன்கறிந்தவன்". (அல்முஜாதலா: 11). ஓரிறைக்கொள்கைக்கான பாரிய சாட்சியத்தில் அல்லாஹ், மற்றும் வானவர்களுடைய சாட்சியங்களுடன் அறிஞர்களின் சாட்சியத்தையும் இணைத்திருக்கின்றான். அல்லாஹ் கூறுகின்றான் : "நிச்சயமாக (உண்மையாக) வணங்கப்படத் தகுதியானவன் தன்னைத் தவிர வேறு யாருமில்லை என்று நீதியை நிலைநாட்டியவனாக அல்லாஹ் சாட்சி கூறுகிறான். மேலும் வானவர்களும் அறிவுடையோரும் (சாட்சி கூறுகின்றனர்.உண்மையாக) வணங்கப்படத் தகுதியானவன் அவனைத் தவிர வேறு யாருமில்லை. அவன் யாவற்றையும் மிகைத்தவனும், ஞானமிக்கவனும் ஆவான்". (ஆல இம்ரான் : 18) இது இஸ்லாத்தில் அறிஞர்களுக்கு இருக்கும் இடத்தைத் தெளிவுபடுத்துகின்றது. அறிவைத் தவிர வேறதெனையும் அதிகப்படுத்தித் தருமாறு அல்லாஹ் நபியவர்களுக்குக் கட்டளையிடவில்லை. அவன் கூறுகின்றான் : "'இறைவா எனக்கு அறிவை அதிகப்படுத்துவாயாக' என்று நபியே நீர் கூறுவீராக". (தாஹா : 114). மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "யார் அறிவைத் தேடி ஒரு பாதையில் செல்கின்றாரோ அவருக்கு அல்லாஹ் சுவனத்தின் பாதையை இலகுவாக்குகின்றான், மேலும் வானவர்கள் அறிவைத் தேடுபவனைப் பொருந்திக் கொண்டதன் காரணமாக தமது இறக்கைகளைத் தாழ்த்துகின்றனர். நீரில் வாழும் மீன்கள் உட்பட வானம், பூமியிலுள்ள அனைவரும் அறிவைத் தேடுபவனுக்காகப் பாவமன்னிப்புத் தேடுகின்றனர். ஏனைய நட்சத்திரங்களை விட சந்திரனுக்கு இருக்கும் சிறப்பைப் போன்றுதான் வணக்கசாலியை விட அறிஞருக்கு இருக்கும் சிறப்பாகும். நிச்சயமாக அறிஞர்கள் நபிமார்களின் வாரிசுக்காரர்களாகும். நிச்சயமாக நபிமார்கள் தங்கக் காசுகளையோ, வெள்ளிக்காசுகளையோ விட்டுச் செல்ல வில்லை. மாறாக அறிவையே விட்டுச் சென்றுள்ளனர். அதனை எடுப்பவர் நிரப்பமாகவே எடுக்கட்டும்". ஆதாரம்: அபூதாவூத் 3641, திர்மிதீ 2682, இப்னு மாஜா஼ 2042 (இந்த வார்த்தை இவருக்குரியது).

எம்மிலும், எம்மைச் சூழவுள்ள பிரபஞ்சத்திலும் நோட்டமிட்டு, ஆய்வுசெய்ய இஸ்லாம் ஊக்கப் படுத்துகின்றது. அல்லாஹ் கூறுகின்றான் : "நிச்சயமாக இவ்வேதம் உண்மையானதுதான் என்று அவர்களுக்குத் தெளிவாகும் பொருட்டு, நம் அத்தாட்சிகளை (உலகத்தின்) பல பாகங்களிலும் காண்பிப்பதுடன், அவர்களுக்குள்ளாகவும் அதிசீக்கிரத்தில் நாம் (நமது அத்தாட்சிகளைக்) காண்பிப்போம். (நபியே!) உமது இறைவன் நிச்சயமாக அனைத்தையும் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பது (உமக்கு) போதாதா?". (அல் ஃபுஸ்ஸிலத் : 53). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "வானங்கள், பூமியினுடைய ஆட்சியையும் அல்லாஹ் படைத்திருக்கும் மற்ற பொருள்களையும் அவர்கள் பார்க்கவில்லையா? அவர்களுடைய (மரண) தவணை நெருங்கி இருக்கக் கூடும் என்பதையும் (அவர்கள் எண்ணவில்லையா?) இவ்வேதத்திற்குப் பின்னர் எதைத்தான் அவர்கள் நம்பிக்கை கொள்வார்கள்". (அல்அஃராப் : 185). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "இவர்கள் பூமியில் சுற்றித்திரிய வேண்டாமா? அவ்வாறாயின், இவர்களுக்கு முன்னிருந்த (நிராகரிப்ப)வர்களின் முடிவு எவ்வாறாயிற்று என்பதைக் கண்டு கொள்வார்கள். (முன்னிருந்த) அவர்கள் இவர்களைவிட பலசாலிகளாகவும், இவர்கள் எவ்வளவு பூமியை அபிவிருத்தி செய்தார்களோ அதைவிட அதிகமாக பூமிகளைப் பண்படுத்தி அபிவிருத்தி செய்தவர்களாகவும் இருந்தார்கள். (இந்நிலைமையில்) அவர்களிடம் அவர்களுக்கு அனுப்பப்பட்ட தூதர்கள் தெளிவான அத்தாட்சிகளைக் கொண்டு வந்தார்கள். அல்லாஹ் அவர்களுக்குத் தீங்கிழைக்கவில்லை. எனினும், அவர்கள் (அந்நபிமார்களைப் பொய்யாக்கித்) தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்டனர்". (அர்ரூம் : 9).

மேற்கண்ட அமைப்பில் விஞ்ஞானத்தில் எட்டப்படும் சரியான அறிவியல் முடிவுகள் ஒரு போதும் இஸ்லாத்திற்கு முரண்படமாட்டாது. நாம் ஓர் உதாரணம் கூறகின்றோம். அது பற்றி 1400 வருடங்களுக்கு முன்னால் அல்குர்ஆன் ஆழமான விவரங்களைக் கூறியுள்ளது. ஆனால் அண்மைக் காலத்தில்தான் விஞ்ஞானம் அதனை அறிந்து கொண்டது. அந்த விஞ்ஞான முடிவும் கூட அல்குர்ஆனிற்கு உடன்பாடாகத் தான் வந்தது. அதுதான் தாயின் கருவறையில் சிசுவின் வளர்ச்சி பற்றியது. அல்லாஹ் கூறுகின்றான் : "நிச்சயமாக (ஆரம்பத்தில் முதல்) மனிதனை களிமண்ணின் மூலச்சத்திலிருந்து படைத்தோம். பின்னர், அதை நாம் இந்திரியமாக்கி ஒரு பத்திரமான இடத்தில் வைத்தோம். பின்னர், அந்த இந்திரியத்தை (ஒட்டிக்கொள்ளும்) இரத்தக் கட்டியாக ஆக்கினோம். பின்னர், அவ் இரத்தக் கட்டியை சிறிய சதைத் துண்டாக ஆக்கினோம். பின்னர், அந்த சிறிய சதைத் துண்டில் எலும்புகளை உருவாக்கினோம், அடுத்து

அவ்வெலும்புகளுக்கு மேல் சதையை அமைத்தோம். பின்னர், அதை வேறு ஒரு படைப்பாக (முழு மனிதனாக) உருவாக்கினோம். படைப்பவர்களிலெல்லாம் மிக்க அழகானவனான அந்த அல்லாஹ் மிக பாக்கியம் பொருந்தியவன்". (அல்மு.ஃமினூன் : 12,14)

# 40.அல்லாஹ்வை விசுவாசித்து, அவனுக்குக் கட்டுப்பட்டு, அவனது தூதர்களை உண்மைப் படுத்தியவர்களிடம் இருந்து மாத்திரமே அல்லாஹ் நற்செயல்களை ஏற்று, அதற்கு மறுமையில் கூலி வழங்குவான். வணக்கங்களில் அவன் மார்க்கமாக அறிமுகப்படுத்தியதை மாத்திரமே ஏற்பான். மனிதன் அல்லாஹ்வை மறுத்துக் கொண்டு அவன் பிரதிபலன் தர வேண்டுமென எவ்வாறு எதிர் பார்க்கலாம்?. அனைத்து நபிமார்களையும் விசுவாசித்து முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் விசுவாசிக்கும் வரை அல்லாஹ் யாருடைய ஈமானையும் (விசுவாசம்) ஏற்க மாட்டான்.

அல்லாஹ்வை விசுவாசித்து, அவனுக்குக் கட்டுப்பட்டு, அவனது தூதர்களை உண்மைப் படுத்தியவர்களிடம் இருந்து மாத்திரமே அல்லாஹ் நற்செயல்களை ஏற்று, அதற்கு மறுமையில் கூலி வழங்குவான். அல்லாஹ் கூறுகின்றான் : "எவர்கள், (மறுமையைப் புறக்கணித்துவிட்டு) இம்மையை மட்டும் விரும்புகிறார்களோ அவர்களில் நாம் நாடியவர்களுக்கு நாம் நாடியதை இம்மையிலேயே கொடுத்து விடுகிறோம். பின்னர், மறுமையில் நரகத்தைத்தான் அவர்களுக்கு தயார்படுத்தி வைத்திருக்கிறோம். அவர்கள் நிந்திக்கப்பட்டவர்களாகவும், சபிக்கப்பட்டவர்களாகவும் அதில் நுழைவார்கள். எவர்கள் மறுமையை விரும்பி அதற்காகப் பெரும் முயற்சியையும் எடுத்துக் கொண்டு நம்பிக்கை கொண்டவர்களாகவும் இருக்கிறார்களோ, அவர்களின் முயற்சி நன்றி பாராட்டப்படத்தக்கவையாகும்". (அல்இஸ்ரா.ஃ : 18,19). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "ஆகவே, (இவர்களில்) எவர்கள் நம்பிக்கைகொண்டு நற்செயல்களைச் செய்கிறார்களோ அவர்களுடைய முயற்சி நிராகரிக்கப்பட மாட்டாது. நிச்சயமாக நாம் அவற்றைப் பதிவு செய்து வருகிறோம்". (அல்அன்பியா.ஃ : 94). வணக்கங்களில் அவன் மார்க்கமாக அறிமுகப்படுத்தியதை மாத்திரமே ஏற்பான். அல்லாஹ் கூறுகின்றான் : "தமது இறைவனின் சந்திப்பை எதிர்பார்ப்பவர் நல்லறத்தைச் செய்யட்டும்! தமது இறை வணக்கத்தில் எவரையும் இணைகற்பிக்காது இருக்கட்டும்" (அல்கஹ்.ஃப் : 110). அல்லாஹ் மார்க்கமாக அறிமுகப்படுத்தியதை அவனுக்காக என்ற உளத்தூய்மையுடன், அல்லாஹ்வை விசுவாசித்து, அவனது அனைத்து நபிமார்கள், தூதர்களையும் விசுவாசித்த நிலையில் செய்யும் போது தான் அது நற்செயலாக ஆகின்றது என்பதைத் தெளிவு படுத்தியுள்ளான். இவ்வாறில்லாமல் செய்யப்படும் செயல்களைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றான் : "மேலும் அவர்கள் செய்து கொண்டிருந்த செயலின் பக்கம் நாம் வந்து பரத்தப்பட்ட புழுதியாக அதை நாம் ஆக்கி விடுவோம்". (அல் .ஃபுர்கான் : 23). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "அந்நாளில், சில முகங்கள் இழிவடைந்து இருக்கும்.

அவை தீமையில் உறுதியாக நின்று செயற்பட்டவையாகும். அவை கொழுந்து விட்டெரியும் நெருப்பில் நுழையும்". (அல் gஃகாஷியா : 2- 4). இந்த முகங்கள் கடுமையாக செயற்பட்டு, களைப்படைந்து இருக்கின்ற அதேவேளை இழிவடைந்தும் இருக்கும். அல்லாஹ்வின் நேர்வழியின்றி செயற்பட்டதால் அவற்றின் தங்குமிடத்தை நரகமாக ஆக்கிவிட்டான். ஏனெனில் இவை அல்லாஹ் மார்க்கமாக்கிய முறையில் செயல்கள் புரிய வில்லை. மாறாக தவறான வணக்கங்களைச் செய்து, அசத்திய மார்க்கங்களை உருவாக்கும் வழிகெட்ட தலைவர்களைப் பின்துயர்ந்தன. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காட்டிய பிரகாரம் செய்யப்படுபவையே அல்லாஹ்விடத்தில் ஏற்கப்படும் நற்செயலாகும்.மனிதன் அல்லாஹ்வை மறுத்துக் கொண்டு அவன் பிரதிபலன் தர வேண்டுமென எவ்வாறு எதிர் பார்க்கலாம்??.

அனைத்து நபிமார்களையும் விசுவாசித்து, முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் விசுவாசிக்கும் வரை அல்லாஹ் யாருடைய ஈமானையும் (விசுவாசம்) ஏற்க மாட்டான். 20ம் இலக்கத்தில் இதுபற்றிய சில ஆதாரங்களை முன்வைத்தோம். மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "(மனிதர்களே! நம்) தூதர், தம் இறைவனிடமிருந்து தமக்கு அருளப்பட்ட (வேதத்)தை மெய்யாகவே நம்பிக்கை கொள்கிறார். (அவ்வாறே மற்ற) நம்பிக்கையாளர்களும் (நம்பிக்கை கொள்கின்றனர். இவர்கள்) அனைவரும் அல்லாஹ்வையும், அவனுடைய வானவர்களையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும் நம்பிக்கை கொள்கின்றனர். தவிர, "அவனுடைய தூதர்களில் எவரையும் (தூதர் அல்ல என்று) நாங்கள் பிரித்து (நிராகரித்து)விட மாட்டோம்" என்றும், "(இறைவனே! உன் வேத வசனங்களை) நாங்கள் செவியுற்றோம். (உன் கட்டளைக்கு) நாங்கள் கீழ்ப்படிந்தோம். எங்கள் இறைவனே! நாங்கள் உனது மன்னிப்பைக் கோருகிறோம். உன்னிடம்தான் நாங்கள் சேர வேண்டியதிருக்கிறது" என்றும் கூறுகிறார்கள்". (அல்பகரா : 285). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "நம்பிக்கையாளர்களே! நீங்கள் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும், அவன் தன்தூதர் மீது அருளிய இவ்வேதத்தையும், இதற்கு முன்னர் அவன் அருளிய வேதங்களையும் நம்பிக்கை கொள்ளுங்கள். எவன் அல்லாஹ்வையும், அவனுடைய வானவர்களையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும், இறுதி நாளையும் நிராகரிக்கிறானோ அவன் நிச்சயமாக வெகு தூரமான வழிகேட்டில்தான் செல்கிறான்". (அந்நிஸாஃ : 136). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "நான் உங்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் அருளிய பின் உங்களிடம் இருப்பதை மெய்ப்பிக்கும் ஒரு ரஸூல் (இறைதூதர்) உங்களிடம் வந்தால், 'அவரை நீங்கள் ஈமான் கொண்டு அவருக்கு நீங்கள் உதவி செய்வீர்களா?' என அல்லாஹ் நபிமார்களிடம் உறுதிமொழி வாங்கி, நீங்கள் இதை ஏற்றுக் கொண்டு எனது பலமான உடன்படிக்கையை எடுத்துக் கொண்டீர்களா? எனக் கேட்ட போது, 'நாம் ஏற்றுக் கொண்டோம்' என அவர்கள் கூறினர். அ(தற்க)வன், 'நீங்களே (இதற்கு) சாட்சியாக இருங்கள். உங்களுடன் நானும் சாட்சியாளர்களில் உள்ளவனாவேன்' என்று கூறியதை எண்ணிப் பாருங்கள்". (ஆல இம்ரான் : 81).

# **41.** அனைத்து இறைச்செய்திகளுடைய நோக்கமும் அந்த சத்தியமார்க்கம் மனிதனை உயர்நிலைக்குக் கொண்டு சென்று, படைத்துப் பரிபாலிக்கும் இரட்சகளுக்குத் தூய்மையான அடியானக மாறிடவும், பிறமனிதனுக்கோ, அற்பப்பொருளுக்கோ, மூடநம்பிக்கைக்கோ அடிமையாவதில் இருந்து விடுதலை அளிப்பதாகும். நீர் அவதானிப்பதைப் போன்று தான் இஸ்லாம் ஒரு போதும்

தனிநபர்ளை பரிசுத்தப்படுத்தி, அவர்களின் தரத்தைவிட உயர்த்தி, இரட்சகர்களாக, கடவுள்களாக ஆக்கிவிடுவதில்லை.

அனைத்து இறைச்செய்திகளுடைய நோக்கமும் அந்த சத்தியமார்க்கம் மனிதனை உயர்நிலைக்குக் கொண்டு சென்று, படைத்துப் பரிபாலிக்கும் இரட்சகளுக்குத் தூய்மையான அடியானாக மாறிடவும், பிறமனிதனுக்கோ, அற்பப்பொருளுக்கோ, மூடநம்பிக்கைக்கோ அடிமையாவதில் இருந்து விடுதலை அளிப்பதாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : "பொற்காசு, வெள்ளிக்காசு, குஞ்சம் உள்ள (ஆடம்பர) ஆடை, சதுரக் கம்பளி ஆடை ஆகியவற்றுக்கு அடிமையாகிவிட்டவன் துர்பாக்கியவான் ஆவான். அவனுக்கு (செல்வம்) வழங்கப்பட்டால் திருப்தியடைவான். (செல்வம்) வழங்கப்படாவிட்டால் அதிருப்தியடைவான்". ஆதாரம் : புஹாரி 6435. சாதாரண ஒரு மனிதன் அல்லாஹ்வுக்கு மாத்திரம் தான் முழுமையாக அடிபணிவான். செல்வமோ, அந்தஸ்தோ, பதவியோ,கோத்திரமோ அவனை அடிமைப்படுத்தி விடமாட்டாது. பின்வரும் சம்பவத்தில் மக்கள் இறைத்தூது வருமுன் எவ்வாறு இருந்தார்கள்? அத்தூது வந்ததன் பின்னர் எவ்வாறு மாறினார்கள்? எனபதை வாசகர்கள் புரிந்து கொள்ளலாம்.

ஆரம்ப முஸ்லிம்கள் எதியோபியாவிற்கு நாடுதுறந்து சென்ற போது அப்போதைய எதியோப்பிய மன்னர் நஜாஷீ அவர்களிடம் பின்வருமாறு கேட்டார் : "உங்களது இனத்தை விட்டுப் பிரிந்து எனது மார்க்கத்தையும் மற்றவர்களின் மார்க்கத்தையும் ஏற்றுக் கொள்ளாமல் புதுமையான மார்க்கத்தை ஏற்றிருக்கிறீர்களே! அது என்ன மார்க்கம்?" அப்போது ஜஃபர் பின் அபீ தாலிப் ரலியல்லாஹு அன்ஹு பின்வருமாறு கூறினார் : "அரசே! நாங்கள் அறியாமைக் காலத்தில் இருந்தோம்; சிலைகளை வணங்கினோம்; இறந்த பிராணிகளைச் சாப்பிட்டோம்; மானக்கேடான காரியங்களைச் செய்தோம்; உறவுகளைத் துண்டித்து அண்டை வீட்டாருக்கு கெடுதிகள் விளைவித்து வந்தோம்; எங்களிலுள்ள எளியோரை வலியோர் விழுங்கி வந்தனர் (அழித்து வந்தனர்.) இப்படியே நாங்கள் வாழ்ந்து வரும்போதுதான் எங்களில் உள்ள ஒருவரையே அல்லாஹ் எங்களுக்குத் தூதராக அனுப்பினான். அவரின் வம்சத்தையும், அவர் உண்மையாளர், நம்பகத்தன்மை மிக்கவர், மிக ஒழுக்கசீலர் என்பதையும் நாங்கள் நன்கு அறிவோம். நாங்கள் அல்லாஹ் ஒருவனையே வணங்க வேண்டும்; நாங்களும் எங்களது மூதாதையர்களும் வணங்கி வந்த கற்சிலைகள், புனிதஸ்தலங்கள் போன்றவற்றிலிருந்து நாங்கள் விலக வேண்டும்; உண்மையே உரைக்க வேண்டும்; அமானிதத்தை நிறைவேற்ற வேண்டும்; உறவினர்களோடு சேர்ந்து வாழவேண்டும்; அண்டை வீட்டாருடன் அழகிய முறையில் நடந்து கொள்ள வேண்டும்; அல்லாஹ் தடைசெய்தவற்றையும், கொலைக் குற்றங்களையும் விட்டு விலகிவிடவேண்டும் என அத்தூதர் எங்களுக்குக் கட்டளையிட்டார். மேலும் மானக்கேடானவைகள், பொய் பேசுதல், அனாதையின் சொத்தை அபகரித்தல், பத்தினியான பெண்கள்மீது அவதூறு போன்றவற்றிலிருந்து எங்களைத் தடுத்தார். அல்லாஹ் ஒருவனையே வணங்க வேண்டும்; அவனுக்கு இணைவைக்கக் கூடாது, தொழ வேண்டும்; ஏழை வரி (ஸகாத்து) கொடுக்க வேண்டும்; நோன்பு நோற்க வேண்டும் என்றும் அத்தூதர் எங்களுக்கு கட்டளையிட்டார் (ஜஃபர் இன்னும் பல இஸ்லாமிய கடமைகளைப் பற்றிய விவரங்களை கூறினார்.) நாங்கள் அவரை உண்மையாளராக நம்பினோம்; அவரை விசுவாசித்தோம்; அவர் எங்களுக்கு அறிமுகப்படுத்திய அல்லாஹ்வின் மார்க்கத்தை பின்பற்றினோம்; அல்லாஹ் ஒருவனையே வணங்க ஆரம்பித்தோம்; அவனுக்கு இணை வைப்பதை விட்டுவிட்டோம்; அவன் எங்களுக்கு விலக்கியதிலிருந்து விலகிக் கொண்டோம்; அவன் எங்களுக்கு ஆகுமாக்கியதை அப்படியே ஏற்றுக் கொண்டோம்". ஆதாரம்: அஹ்மத் 1740 (சிறு மாற்றத்துடன்), அபூ நுஐம் தனது ஹில்யதுல் அவ்லியா எனும் நூலில் 1/ 115 (சுருக்கமாக). நீர் அவதானிப்பதைப் போன்று தான் இஸ்லாம் ஒரு போதும் தனிநபர்ளை பரிசுத்தப்படுத்தி, அவர்களின் தரத்தைவிட உயர்த்தி, இரட்சகர்களாக, கடவுள்களாக ஆக்கிவிடுவதில்லை. அல்லாஹ் கூறினான் : "'வேதத்தை உடையவர்களே! நாம் அல்லாஹ்வைத் தவிர வேறொன்றையும் வணங்கமாட்டோம். நாம் அவனுக்கு எதையும் இணையாக்கமாட்டோம். நம்மில் ஒருவரும் அல்லாஹ்வைத் தவிர எவரையும் இறைவனாக எடுத்துக் கொள்ளமாட்டோம்' என்ற எங்களுக்கும் உங்களுக்குமிடையில் சரியானதொரு கொள்கையின் பக்கம் வாருங்கள் என்று (நபியே) நீர் கூறுங்கள்! எனினும் அவர்கள் புறக்கணித்தால் 'நிச்சயமாக நாங்கள் முஸ்லிம்கள் என்பதற்கு நீங்கள்

சாட்சியாக இருங்கள்' என்று நீங்கள் கூறுங்கள்". (ஆல இம்ரான் : 64). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "'வானவர்களையும், நபிமார்களையும் தெய்வங்களாக எடுத்துக் கொள்ளுங்கள்' என்றும் அவர் உங்களுக்குக் கட்டளையிடமாட்டார். இறைவன் ஒருவனையே நீங்கள் அங்கீகரித்த பின்னர் (அவனை) நிராகரிக்கும்படி அவர் உங்களை ஏவுவாரா?". (ஆல இம்ரான் : 80). மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "கிறிஸ்தவர்கள் மர்யமின் மகனை (ஈஸாவை) அளவுகடந்து உயர்த்தியதைப் போன்று நீங்கள் என்னை உயர்த்திட வேண்டாம். நானோ அல்லாஹ்வின் அடியானாகத் தான் உள்ளேன். எனவே அல்லாஹ்வின் அடியாரும் அவனது தூதரும் எனக் கூறுங்கள்". ஆதாரம் : புஹாரி 3445.

# 42. இஸ்லாத்தில் அல்லாஹ் பாவமீட்சி பெறுவதை மார்க்கமாக்கி இருக்கின்றான். இது மனிதன் பாவங்களை களைந்து, தனது இரட்சகனிடம் மீள்வதைக் குறிக்கின்றது. இஸ்லாம் அதற்கு முன்னுள்ள பாவங்களை அழித்து விடுகின்றது. பாவமீட்சி (தௌபா) அதற்கு முன்னுள்ள பாவங்களை அழித்து விடுகின்றது. எனவே பிற மனிதர்கள் முன்னிலையில் தனது பாவங்களை ஒப்புவிக்க எத்தேவையும் இல்லை.

இஸ்லாத்தில் அல்லாஹ் பாவமீட்சி பெறுவதை மார்க்கமாக்கி இருக்கின்றான். இது மனிதன் பாவங்களை களைந்து, தனது இரட்சகனிடம் மீள்வதைக் குறிக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான் : "விசுவாசிகளே! நீங்கள் வெற்றி பெறுவதற்காக அனைவரும் அல்லாஹ்விடம் பாவமீட்சி பெற்று மீளுங்கள்". (அந்நூர் : 31). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "நிச்சயமாக, அல்லாஹ் தன் அடியார்களின் மன்னிப்புக் கோருதலை அங்கீகரிக்கிறான் என்பதையும், தர்மங்களை அவனே எடுத்துக் கொள்கிறான் என்பதையும், நிச்சயமாக அல்லாஹ் பாவங்களை மன்னித்துக் கருணை காட்டுபவன் என்பதையும் அவர்கள் அறியவில்லையா?". (அத்தௌபா : 104). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "அவன்தான் தன் அடியார்களின் மன்னிப்புக்கோரலை அங்கீகரித்துக் குற்றங்களையும் மன்னித்து விடுகிறான். நீங்கள் செய்பவற்றையும் அவன் நன்கறிகிறான்". (அஷ் ஷூரா : 25). மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "ஒரு மனிதன் (பயணத்தினிடையே ஓய்வெடுப்பதற்காக) ஆபத்துகள் நிறைந்த (வறண்ட) பாலைவனத்தில் (இறங்கி) உறங்கினான். அவனுடன் அவனது வாகன(மான ஒட்டக)மும் இருந்தது. அதில் அவனுடைய உணவும் நீரும் இருந்தன. அவன் (உறங்கிவிட்டு) விழித்தெழுந்தபோது, அவனது ஒட்டகம் (தப்பியோடிப்) போயிருந்தது. அவன் அதைத் தேடிச் சென்றபோது, அவனுக்குக் கடுமையான தாகம் ஏற்பட்டது. அவன், "நான் முன்பிருந்த இடத்திற்கே திரும்பிச் சென்று சாகும்வரை உறங்கப்போகிறேன்" என்று கூறியபடி (அங்கு திரும்பிச் சென்று) தனது முன்னங்கையில் தலை வைத்துச் சாகும்வரை உறங்கப் போனான். பிறகு (திடீரென) அவன் விழித்துப் பார்த்த போது, அவனுக்கருகில் அவனது ஒட்டகம் இருந்தது. அதில் அவனது பயண உணவும் நீரும் இருந்தன. அப்போது அவன் தனது ஒட்டகத்தாலும் உணவாலும் அடைகின்ற மகிழ்ச்சியைவிட,இறைநம்பிக்கையுள்ள அடியார் பாவமன்னிப்புக் கோரி மீட்சி பெறுவதால் அல்லாஹ் அதிகம் மகிழ்கின்றான்". ஆதாரம் : முஸ்லிம் 2744.

இஸ்லாம் அதற்கு முன்னுள்ள பாவங்களை அழித்து விடுகின்றது. பாவமீட்சி (தௌபா) அதற்கு முன்னுள்ள பாவங்களை அழித்து விடுகின்றது. அல்லாஹ் கூறுகின்றான் : "நிராகரிப்போருக்கு (நபியே!) நீர் கூறும்; இனியேனும் அவர்கள் (தமது விரோதப் போக்கை விட்டும்) விலகிக் கொள்வார்களானால், (அவர்கள்) முன்பு செய்த (குற்றங்கள்) அவர்களுக்கு மன்னிக்கப்படும். அவர்கள் மீண்டும் தொடர்வார்களானால்,

முன்சென்றோரின் வழிமுறை (இவர்கள் விடயத்திலும்) நடந்தேறும்". (அல்அன்ஃபால் : 38). கிறிஸ்தவர்களையும் அல்லாஹ் பாவமீட்சியின் பக்கம் அழைக்கின்றான் : "இவர்கள் அல்லாஹ்வின் பக்கம் திரும்பி, அவனிடம் தங்கள் குற்றத்தை மன்னிக்கப் பிரார்த்திக்க மாட்டார்களா? அல்லாஹ்வோ, மிக மன்னிப்பவன் மிகக் கருணையுடையவன் ஆவான்". (அல்மாஇதா : 74). பாவிகள் அனைவரையும் அல்லாஹ் தௌபாவின் பால் ஊக்கப்படுத்தியுள்ளான். அவன் கூறுகின்றான் : "தமக்கு எதிராக வரம்பு மீறிய எனது அடியார்களே! அல்லாஹ்வின் அருளில் நம்பிக்கையிழந்து விடாதீர்கள்! பாவங்கள் அனைத்தையும் அல்லாஹ் மன்னிப்பான். அவன் மன்னிப்பவன்; நிகரற்ற அன்புடையோன் என்று (அல்லாஹ் கூறுவதைத்) தெரிவிப்பீராக!". (அஸ்ஸுமர் : 53). அம்ரு பின் ஆஸ் ரலியல்லாஹு அன்ஹு இஸ்லாத்தில் நுழைய எத்தனித்த போது அவரது இஸ்லாத்திற்கு முன் செய்த பாவங்கள் மன்னிக்கப்பட மாட்டாதோ என அஞ்சினார்கள். அச்சம்பவத்தை அவரே பின்வருமாறு அறிவிக்கின்றார் : "எனது உள்ளத்தில் அல்லாஹ் இஸ்லாத்தின் ஒளியைப் போட்ட நேரத்தில் நபியவர்களிடம் உறுதிமொழி வழங்கச் சென்றேன். அன்னாரும் தனது கையை என் பக்கம் நீட்டினார்கள். நான் "அல்லாஹ்வின் தூதரே எனது முன்னைய பாவங்களை மன்னிக்கும் வரை நான் உங்களுக்கு உறுதிமொழி வழங்கமாட்டேன்" என்றேன். அப்போது நபியவர்கள் என்னிடம் : "அம்ரே! ஹிஜ்ரத் பயணம் அதற்கு முன்னுள்ள பாவங்களை அழித்து விடும் என்பது உனக்குத் தெரியாதா?, இஸ்லாம் அதற்கு முன்னுள்ள பாவத்தை மன்னித்து விடும் என்பது உனக்குத் தெரியாதா?" எனக் கேட்டார்கள்". ஆதாரம்: முஸ்லிம் 121 (நீண்ட நபிமொழின் ஒரு பகுதியாக இதே போன்ற கருத்தில் கூறியுள்ளார்), அஹ்மத் 17827 (இவ்வார்த்தை இவருக்குரியது).

# 43. இஸ்லாத்தில் அல்லாஹ்வுக்கும் மனிதனுக்கும் இடையிலான தொடர்பு நேரடியானதாகும். இருவருக்கும் இடையில் மத்திமமோ,தரகர்த் தேவையோ இராது. மனிதனை இறைவனாகவோ, அல்லது அவனது பரிபாலணம், இறைமையில் பங்குதாரர்களாகவோ ஆக்குவதை இஸ்லாம் அறவே தடுக்கின்றது.

இஸ்லாத்தில் பிற மனிதர்கள் முன்னிலையில் தனது பாவங்களை ஒப்புவிக்க எத்தேவையும் இல்லை. மேலும் இஸ்லாத்தில் அல்லாஹ்வுக்கும் மனிதனுக்கும் இடையிலான தொடர்பு நேரடியானதாகும். இருவருக்கும் இடையில் மத்திமமோ,தரகர்த் தேவையோ இராது. 42ம் இலக்கத்தில் கூறப்பப்பட்டவாறு அல்லாஹ் அனைத்து மக்களையும் தௌபாச் செய்ய அழைப்பு விடுத்ததைப் போன்று நபிமார்களையோ, வானவர்களையோ அவனுக்கும் மனிதனுக்கும் இடையில் தரகராக எடுப்பதையும் அனைவருக்கும் தடுத்துள்ளான். அல்லாஹ் கூறுகின்றான் : "'வானவர்களையும், நபிமார்களையும் தெய்வங்களாக எடுத்துக் கொள்ளுங்கள்' என்றும் அவர் உங்களுக்குக் கட்டளையிடமாட்டார். இறைவன் ஒருவனையே நீங்கள் அங்கீகரித்த பின்னர் (அவனை) நிராகரிக்கும்படி அவர் உங்களை ஏவுவாரா?". (ஆல இம்ரான் : 80). நீர் அவதானிப்பது போன்று தான் இஸ்லாம் மனிதனை இறைவனாகவோ, அல்லது அவனது பரிபாலணம், இறைமையில் பங்குதாரர்களாகவோ ஆக்குவதை அறவே தடுக்கின்றது. கிறிஸ்தவர்களைப் பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் : "இவர்கள் அல்லாஹ்வைத் தவிர்த்து தங்கள் பாதிரிகளையும், சந்நியாசிகளையும், மர்யமுடைய மகன் மஸீஹையும், (தங்கள்) கடவுள்களாக எடுத்துக் கொண்டிருக்கின்றனர். எனினும், வணக்கத்திற்குரிய ஒரே ஓர் இறைவனைத் தவிர மற்றெவரையும் வணங்கக் கூடாதென்றே இவர்கள் அனைவரும் ஏவப்பட்டு இருக்கின்றனர். வணக்கத்திற்குரிய இறைவன் அவனைத் தவிர (வேறெவனும்) இல்லை. அவர்கள் இணைவைக்கும் இவற்றைவிட்டு அவன் மிகவும் பரிசுத்தமானவன்". (அத்தௌபா : 31). அல்லாஹ் தனக்கும் மனிதர்களுக்கும் இடையில் தரகர்களை எடுத்துக் கொண்டதற்காக

காபிர்களைக் கண்டிக்கின்றான். அவன் கூறுகின்றான் : "தூய மார்க்கம் அல்லாஹ் ஒருவனுக்கே சொந்தமானதாகும். எவர்கள் அல்லாஹ் அல்லாதவற்றை, தங்களுக்குப் பாதுகாவலர்களாக எடுத்துக் கொண்டிருக்கிறார்களோ அவர்கள், "அத்தெய்வங்கள் எங்களை அல்லாஹ்வுக்கு மிக்க சமீபமாக்கி வைக்கும் என்பதற்காகவே தவிர நாம் இவற்றை வணங்கவில்லை" (என்று கூறுகின்றனர்). அவர்கள் தர்க்கித்துக் கொண்டிருக்கும் இவ்விஷயத்தைப் பற்றி, அல்லாஹ் (மறுமையில்) அவர்களுக்கிடையில் தீர்ப்பளிப்பான். நிச்சயமாக அல்லாஹ் (இத்தகைய) பொய்யர்களையும், (மனமுரண்டாக) நிராகரிப்பவர்களையும் நேரான வழியில் செலுத்துவதில்லை". (அஸ்ஸுமர் : 3). சிலைகள் தம்மை அல்லாஹ்விடம் நெருக்கி வைக்கும் என்பதற்காகவே அறியாமைக்கால சிலை வணங்கிகள் அல்லாஹ்வுக்கும் அவர்களுக்குமிடையில் தரகர்களை எடுத்துக் கொண்டதாக அல்லாஹ் தெளிவுபடுத்துகின்றான்.

நபிமார்கள், வானவர்களையே தனக்கும் அடியார்களுக்கும் இடையில் உதவியாளர்களாக, தரகர்களாக எடுப்பதை அல்லாஹ் தடுத்துள்ளான் எனில் ஏனையோரை எவ்வாறு எடுக்க முடியும்?. அதுவும் நபிமார்கள், இறைத்தூதர்களே அல்லாஹ்வை நெருங்க விரையும் போது அவர்களை எவ்வாறு தரகர்களாக எடுக்க முடியும்? அவர்களின் நிலை பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் : "அவர்கள் நன்மைகளை நோக்கி விரைந்து செல்வோராகவும், ஆர்வத்துடனும் அச்சத்துடனும் நம்மிடம் பிரார்த்திப்போராகவும் இருந்தனர். நமக்குப் பணிவோராகவும் இருந்தனர்". (அல் அன்பியா: : 90). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "இவர்கள் யாரை பிரார்த்தித்து அழைக்கிறார்களோ அவர்களுமோ தங்கள் இறைவனிடம் தங்களில் மிக நெருக்கமானவராக யார் ஆகமுடியும் என்பதற்காக நன்மை செய்வதையே ஆசை வைத்துக்கொண்டும், அவனுடைய அருளையே எதிர்பார்த்து அவனுடைய வேதனைக்குப் பயந்து கொண்டும் இருக்கிறார்கள். ஏனென்றால், நிச்சயமாக உமது இறைவனின் வேதனையோ, மிக மிக பயப்படக்கூடியதே!". (அல்இஸ்ரா: : 57). அதாவது அல்லாஹ் அல்லாது நீங்கள் அழைக்கும் நபிமார்கள், நல்லடியார்களே அல்லாஹ்வை நெருங்கும் வழிகளைச் செய்கின்றனர், அவனுடைய அருளையே எதிர்பார்த்து அவனுடைய வேதனைக்குப் பயந்து கொண்டும் இருக்கிறார்கள். அல்லாஹ்வின்றி இவர்கள் எவ்வாறு அழைக்கப்படப் போகின்றார்கள்?

# **44.** இந்நூலின் இறுதியில், வெவ்வேறு கால மக்கள், இனங்கள் மற்றும் நாடுகள், ஏன் ஒட்டுமொத்த மனித சமூகமும் கூட அவர்களின் கருத்துக்கள் மற்றும் நோக்கங்களில் வேறுபடுகின்றன, அவற்றின் சூழல்களிலும் செயல்களிலும் வேறுபடுகின்றன, எனவே அச்சமூகத்தை வழிநடத்த வேண்டிய அவசியம் உள்ளது, அதை ஒன்றாக இணைக்கும் ஒரு அமைப்பு மற்றும் அதைப் பாதுகாக்கும் ஒரு ஆட்சியாளர் அவசியமாகின்றது என்பதை நாம் நினைவுகூர்வோம். அப்பொறுப்பை அல்லாஹ்வின் இறைச்செய்தி மூலம் இறைத்தூதர்கள் மேற்கொண்டு வந்தனர்.

மக்களுக்கு நல்ல, சரியான வழியினைக் காண்பித்தனர். அல்லாஹ்வின் சட்டத்தின் கீழ் அவர்களை ஒன்று சேர்த்தனர். சத்தியத்தைக் கொண்டு அவர்களுக்கு மத்தியில் தீர்ப்பு வழங்கினர். அச்சமூகம் இத்தூதர்களுக்கு பதிலளித்த அளவுக்கேற்பவும், இறைத்தூதுகளுக்கு நெருக்கமான காலத்தின் அளவுக்கேற்பவும் அம்மக்களுடைய நிலைகள் சீரானதாக இருந்தது. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடை தூதுத்துவத்தின் மூலம் அல்லாஹ் இறைத் தூதுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தான். இவ் இறுதித் தூதினை நிலைத்திருக்கச் செய்து, மக்களுக்கு இதனை நேர்வழியாகவும், கருணையாகவும், ஒளியாகவும், அல்லாஹ்விடம் செல்லும் வழியாகவும் ஆக்கி வைத்துள்ளான்.

இந்நூலின் இறுதியில், வெவ்வேறு கால மக்கள், இனங்கள் மற்றும் நாடுகள், ஏன் ஒட்டுமொத்த மனித சமூகமும் கூட அவர்களின் கருத்துக்கள் மற்றும் நோக்கங்களில் வேறுபடுகின்றன, அவற்றின் சூழல்களிலும் செயல்களிலும் வேறுபடுகின்றன, எனவே அச்சமூகத்தை வழிநடத்த வேண்டிய அவசியம் உள்ளது, அதை ஒன்றாக இணைக்கும் ஒரு அமைப்பு மற்றும் அதைப் பாதுகாக்கும் ஒரு ஆட்சியாளர் அவசியமாகின்றது என்பதை நாம் நினைவுகூர்வோம். அப்பொறுப்பை அல்லாஹ்வின் இறைச்செய்தி மூலம் இறைத்தூதர்கள் மேற்கொண்டு வந்தனர். மக்களுக்கு நல்ல, சரியான வழியினைக் காண்பித்தனர். அல்லாஹ்வின் சட்டத்தின் கீழ் அவர்களை ஒன்று சேர்த்தனர். சத்தியத்தைக் கொண்டு அவர்களுக்கு மத்தியில் தீர்ப்பு வழங்கினர். அச்சமூகம் இத்தூதர்களுக்கு பதிலளித்த அளவுக்கேற்பவும், இறைத்தூதுகளுக்கு நெருக்கமான காலத்தின் அளவுக்கேற்பவும் அம்மக்களுடைய நிலைகள் சீரானதாக இருந்தது. வழிகேடு அதிகமாகி, அறியாமை பரவிய போது அல்லாஹ் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை மக்களை இறைநிராகரிப்பு, அறியாமையிலிருந்து இறைநம்பிக்கை, நேர்வழியின் பால் வெளியேற்ற சத்திய மார்க்கம், நேர்வழியைக் கொடுத்து அனுப்பினான்.

**45.** இதனால் மனிதா! உன்னை பழைய மரபுகள், பழக்க வழக்கங்களை விட்டுவிட்டு, அல்லாஹ்வுக்காக உண்மையாக

நிலைத்திருக்கவும், மரணத்தின் பின் நீ உன் இரட்சகனிடம் தான் மீள்வாய் என்பதை அறிந்து கொள்ளவும், உன்னிலும் உனது சுற்றுச்சூழலிலும் (உள்ள அல்லாஹ்வின் வல்லமைகள் பற்றி) சிந்திக்கவும் அழைக்கிறேன். எனவே நீ இஸ்லாத்தை ஏற்றுவிடு, ஈருலகிலும் வெற்றியடைவாய். இஸ்லாத்தினுள் நுழைய விரும்பினால் நீ செய்ய வேண்டியது இவை மாத்திரம்தான் : உண்மையாக வணங்கப்படத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை, முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அல்லாஹ்வுடைய தூதர் என்பதை ஏற்று சாட்சி கூறுதல், அவனன்றி வணங்கப்படும் அத்துனை கடவுள்களையும் மறுத்தல், மறுமையில் மண்ணறையிலுள்ளவர்களை நிச்சயமாக அல்லாஹ் எழுப்புவான், விசாரணை, கூலி வழங்கல் என்பன உண்மை என நம்பிக்கை கொள்ளல். இவற்றை நீ ஏற்றால் நீ முஸ்லிமாக மாறிவிட்டாய். அதன் பின் தொழுகை, ஸகாத், நோன்பு, வசதியிருந்தால் ஹஜ் ஆகியவற்றை அல்லாஹ் காட்டிய பிரகாரம் நிறைவேற்றி அவனை வணங்குதல் வேண்டும்.

இதனால் மனிதா! உன்னை பழைய மரபுகள், பழக்க வழக்கங்களை விட்டுவிட்டு, அல்லாஹ்வுக்காக உண்மையாக நிலைத்திருக்க அழைக்கிறேன். அல்லாஹ்வும் தனது வசனத்தில் உன்னை அழைத்துள்ளான் : "‘நான் உங்களுக்கு உபதேசிப்பதெல்லாம் ஒரே ஒரு விஷயம்தான். நீங்கள் ஒவ்வொருவராகவோ, இரண்டிரண்டு பேர்களாகவோ அல்லாஹ்வுக்காகச் சிறிது பொறுத்திருந்து, பின்னர் (உங்களுக்குள்) ஆலோசித்துப்

பாருங்கள். உங்கள் சிநேகிதராகிய எனக்கு எத்தகைய பைத்தியமும் இல்லை. (நான் உங்களுக்குக்) கடினமான வேதனை வருவதற்கு முன்னர் (அதைப் பற்றி) அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவனே தவிர வேறில்லை.' என்று (நபியே!) கூறுவீராக". (அஸ்ஸபஃ : 46). மரணத்தின் பின் நீ உன் இரட்சகனிடம் தான் மீள்வாய் என்பதை அறிந்து கொள்ளவும் உன்னை அழைக்கிறேன். அல்லாஹ் கூறுகின்றான் : "இன்னும் நிச்சயமாக மனிதனுக்கு அவன் செய்த செயலைத் தவிர வேறொன்றும் கிடைக்காது. மேலும் நிச்சயமாக அவனது முயற்சி விரைவில் அவனுக்குக் காண்பிக்கப் படும். பின்னர் அதற்குரிய நிறைவான கூலி அவனுக்கு வழங்கப்படும். நிச்சயமாக இறுதியில் சென்றடைவது உமது இறைவனிடம்தான்". (அந்நஜ்ம் : 39- 42). உன்னிலும் உனது சுற்றுச்சூழலிலும் (உள்ள அல்லாஹ்வின் வல்லமைகளைப் பற்றி) சிந்திக்கவும் அழைக்கிறேன். அல்லாஹ் கூறுகின்றான் : "வானங்கள், பூமியினுடைய ஆட்சியையும் அல்லாஹ் படைத்திருக்கும் மற்ற பொருள்களையும் அவர்கள் பார்க்கவில்லையா? அவர்களுடைய (மரண) தவணை நெருங்கி இருக்கக் கூடும் என்பதையும் (அவர்கள் எண்ணவில்லையா?) இவ்வேதத்திற்குப் பின்னர் எதைத்தான் அவர்கள் நம்பிக்கை கொள்வார்கள்". (அல்அஃராப் : 185).

எனவே நீ இஸ்லாத்தை ஏற்றுவிடு, ஈருலகிலும் வெற்றியடைவாய். இஸ்லாத்தினுள் நுழைய விரும்பினால் நீ செய்ய வேண்டியது இவை மாத்திரம்தான் : உண்மையாக வணங்கப்படத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை, முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அல்லாஹ்வுடைய தூதர் என்பதை ஏற்று சாட்சி கூறுதல். நபியவர்கள் முஆத் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை இஸ்லாத்தின் தூதரக யமன் தேசத்திற்கு அனுப்பும் போது கூறியவற்றில் பின்வரும் வார்த்தையும் உள்ளது : "நீர் வேதக்காரர்கள் வாழும் சமூகத்திற்குச் செல்கின்றீர். 'உண்மையாக வணங்கப்படத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, நான் அல்லாஹ்வின் தூதர்' என்ற உறுதிமொழியின் பால் அவர்களை அழையுங்கள், அதற்கு அவர்கள் கட்டுப்பட்டால் அல்லாஹ் அவர்களுக்கு தினமும் ஐவேளைத் தொழுகைகளை அவர்களுக்கு விதியாக்கியுள்ளான் என்பதை அறிவியும். அதற்கும் அவர்கள் கட்டுப்பட்டால் அவர்களில் செல்வந்தர்களிடம் பெற்று, ஏழைகளுக்கு வழங்குவதற்காக செல்வத்தில் அல்லாஹ் ஸகாதை கடமையாக்கியுள்ளான் என்பதை அறிவியும். அவர்கள் இதற்கும் (இசைந்து) உமக்குக் கட்டுப்பட்டால் அவர்களின் பொருட்களில் சிறந்த வற்றை வசூலிப்பது குறித்து உம்மை எச்சரிக்கிறேன். அநீதி இழைக்கப்பட்டவனின் பிரார்த்தனைக்கு பயந்து கொள்ளும். ஏனெனில் அவனுக்கும் இறைவனுக்கும் மத்தியில் எந்தத் திரையுமில்லை." என்றார்கள். ஆதாரம் : முஸ்லிம் 19. மேலும் அல்லாஹ்வன்றி வணங்கப்படும் அத்துனை கடவுள்களையும் மறுத்தல். இவ்வாறு அல்லாஹ்வன்றி வணங்கப்படும் அத்துனை கடவுள்களையும் மறுப்பதுதான் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் மார்க்கமாகும். அல்லாஹ் கூறுகின்றான் : "'உங்களை விட்டும், அல்லாஹ்வையன்றி எதனை வணங்குகிறீர்களோ அதை விட்டும் நாங்கள் விலகியவர்கள். உங்களை மறுக்கிறோம். அல்லாஹ்வை மட்டும் நீங்கள் நம்பிக்கை கொள்ளும் வரை எங்களுக்கும், உங்களுக்குமிடையே பகைமையும் வெறுப்பும் என்றென்றும் ஏற்பட்டு விட்டது' என்று கூறிய விஷயத்தில் இப்ராஹீமிடமும், அவருடன் இருந்தோரிடமும் உங்களுக்கு அழகிய முன்மாதிரி இருக்கிறது". (அல்மும்தஹினா : 4). மறுமையில் மண்ணறையிலுள்ளவர்களை நிச்சயமாக அல்லாஹ் எழுப்புவான் என நம்பிக்கை கொள்ளல். அல்லாஹ் கூறுகின்றான் : "நிச்சயமாக அல்லாஹ்தான் உண்மையான இறைவன். நிச்சயமாக அவன் மரணித்தவர்களை உயிர் கொடுத்து எழுப்புவான். நிச்சயமாக அவன் அனைத்தின் மீதும் பேராற்றல் உடையவன் என்பதற்கு இதுவே போதுமான (அத்தாட்சியாக இருக்கிற)து. விசாரணைக் காலம் நிச்சயமாக வரக்கூடியது. அதில் சந்தேகமேயில்லை. (அந்நாளில்) சமாதிகளில் (புதைந்து) கிடப்பவர்களை நிச்சயமாக அல்லாஹ் (உயிர் கொடுத்து) எழுப்புவான்". (அல்ஹஜ் : 6,7). மேலும் விசாரணை, கூலி வழங்கல் என்பன உண்மை என நம்பிக்கை கொள்ளல். அல்லாஹ் கூறுகின்றான் : "வானங்களையும் பூமியையும் அல்லாஹ் தக்க காரணத்தின் மீதே படைத்திருக்கிறான். ஆகவே, (அவர்களில் உள்ள) ஒவ்வொரு ஆத்மாவுக்கும் அவற்றின் செயலுக்குத்தக்க கூலியே கொடுக்கப்படும். அவை (அணுவளவும்) அநியாயம் செய்யப்பட மாட்டாது". (அல்ஜாஸியா : 22)

இவற்றை நீ ஏற்றால் நீ முஸ்லிமாக மாறிவிட்டாய். அதன் பின் தொழுகை, ஸகாத், நோன்பு, வசதியிருந்தால் ஹஜ் ஆகியவற்றை அல்லாஹ் காட்டிய பிரகாரம் நிறைவேற்றி அவனை வணங்குதல் வேண்டும்.

1441-11-19 அன்று எழுதப்பட்ட பிரதி

ஆக்கம் / பேராசிரியர் முஹம்மத் பின் அப்துல்லாஹ் அஸ்ஸுஹைம்

இஸ்லாமிய கற்கைகள் பிரிவில் முன்னால் அகீதாப் பாடப் பேராசிரியர்
கல்வி பீடம்- மன்னர் ஸுஊத் பல்கலைக்கழகம்
ரியாத்- ஸவூதி அரேபியா

இஸ்லாம்

அல்குர்ஆன், ஸுன்னாவின் ஒளியில் இஸ்லாம் ஓர் அறிமுகம்.

1. இஸ்லாம் தான் அனைத்து மக்களுக்குமான அல்லாஹ்வின் தூதாகும், இது அவனது தூதுத்துவங்களின் முத்திரையாக, நிரந்தரமான இறைத்தூதாக உள்ளது :

2. இஸ்லாம் குறிப்பிட்ட ஒரு இனத்திற்கோ, சமூகத்திற்கோ உரிய ஒரு மார்க்கமல்ல. மாறாக அது அனைத்து மக்களுக்குமான அல்லாஹ்வின் மார்க்கமாகும் :

3. முன்னைய சமூகங்களுக்கு அனுப்பப்பட்ட நபிமார்கள், இறைத்தூதர்களுடைய தூதுத்துவங்களைப் பரிபூரணப் படுத்த வந்த இறைத்தூதே இஸ்லாமாகும்.

4. நபிமார்களின் அடிப்படை மார்க்கம் ஒன்றே, கிளைச் சட்டங்கள் தான் வேறுபடுகின்றன;

5. நூஹ், இப்ராஹீம், மூஸா, ஸுலைமான், தாவூத், ஈஸா அலைஹிமுஸ்ஸலாம் போன்ற அனைத்து நபிமார்களும் அழைப்பு விடுத்த : படைப்பாளன், வாழ்வாதாரமளிப்பவன், உயிரகொடுப்பவன், மரணிக்கச் செய்பவன், மற்றும் மன்னருக்கெல்லாம் மன்னராகிய அந்த அல்லாஹ்தான் உண்மையான இரட்சகன் என நம்பிக்கை கொள்வதின் பக்கமே இஸ்லாமும் அழைக்கின்றது. அவன்தான் அனைத்து விடயங்களையும் நிர்வகிக்கக் கூடிய கருணையாளன், இரக்கமுள்ளவன்

6. அல்லாஹ்தான் உண்மையான படைப்பாளன், கூடவே யாரும் வணங்கப்படாமல், தனித்து வணங்கப்படத் தகுதியானவன் அவன் ஒருவன் மாத்திரமே.

7. இப்பிரபஞ்சத்தில் நாம் காணக்கூடிய, காணாத அனைத்தையும் படைத்தவன் அல்லாஹ்தான். அவனன்றி அனைத்தும் அவனால் படைக்கப்பட்டவையே. வானங்களையும் பூமியையும் ஆறு நாட்களில் அவன் படைத்தான்.

8. அல்லாஹ்வின் அதிகாரம், படைப்பாற்றல், நிர்வகித்தல், அவனை வணங்குதல் இவை எதிலும் அவனுக்கு நிகரேதும் இல்லை.

9. அல்லாஹ் எவரையும் பெறவுமில்லை, எவருக்கும் பிறக்கவும் இல்லை. அவனுக்கு நிகராகவோ, அவனைப் போன்றோ யாருமில்லை.

அல்லாஹ் எப்பொருளிலும் இறங்க மாட்டான். தனது படைப்பினங்களில் எந்த உடலிலும் சங்கமிக்க மாட்டான் :

11. அல்லாஹ் தனது அடியார்களுடன் கருணையுள்ளவன், இரக்கமுள்ளவன். இதனால்தான் தூதர்களை அனுப்பி, அவர்களுக்கு வேதங்களையும் அருளியுள்ளான்.

12. அல்லாஹ் ஒருவன்தான் படைத்துப் பரிபாலித்து கருணை காட்டுபவன். அவன் மாத்திரம்தான் படைப்பினங்கள் மறுமையில் மண்ணறைகளை விட்டும் எழுப்பப்படும் போது அவர்களை விசாரணை செய்யக்கூடியவன். ஒவ்வொருவரும் செய்த நலவு, கெடுதிகளுக்கேற்ப கூலி வழங்குவான். எனவே, அவனை விசுவாசித்த நிலையில் நல்லறங்கள் புரிந்தோருக்கு நிலையான இன்பங்கள் உண்டு. அவனை மறுத்து, தீமைகள் செய்தவனுக்கு மறுமையில் பாரிய வேதனை உண்டு.

13. அல்லாஹ் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை மண்ணினால் படைத்து, அவருக்குப் பின் அவரது சந்ததிகள் பெருகுமாறு செய்துள்ளான். அனைத்து மனிதர்களும் அவர்களது அடிப்படையில் சமமானவர்களே. இறையச்சம் ஒன்றைத் தவிர வேறு எவ்விதத்திலும் ஓர் இனத்தை விட மற்ற இனத்திற்கோ, ஒரு சமூகத்தை விட மற்ற சமூகத்திற்கோ எவ்வித சிறப்பும் கிடையாது.

14. பிறக்கும் அனைத்துப் பிள்ளைகளும் ஓரிறைக் கொள்கையை ஏற்கும் சுபாவத்துடனேயே பிறக்கின்றன.

15. மனிதர்கள் யாரும் பிறக்கும் போதே தவறிழைத்தவர்களாகவோ, பிறரின் தவறுக்கு வாரிசுக் காரராகவோ பிறப்பதில்லை :

16. மனிதர்களைப் படைத்ததன் பிரதான நோக்கம் அல்லாஹ்வை மாத்திரம் வணங்குவதாகும் :

17. இஸ்லாம் மனிதனை -ஆண், பெண் அனைவரையும்- கண்ணியப்படுத்தி, அவனது அனைத்து உரிமைகளையும் பொறுப்பேற்றுள்ளது. அவனது சுயவிருப்புக்கள், செயற்பாடுகள், நடவடிக்கைகளுக்கு அவனையே பொறுப்பாக்கியுள்ளது. தனக்கோ, பிறருக்கோ ஏற்படுத்தும் எந்தத் தீங்கிற்கும் அவனையே பொறுப்பாக்கியுள்ளது.

18. நற்செயல், பொறுப்பு, கூலி, நன்மைகளில் இஸ்லாம் ஆண், பெண் இரு பாலரையும் சமமாகவே வைத்துள்ளது.

19. இஸ்லாம் பெண்களை கௌரவப்படுத்தி, அவர்களை ஆண்களுடைய உடன்பிறந்த சகோதரிகளைப் போன்று ஆக்கியுள்ளது. வசதியிருக்கும் போது அவர்களுக்கு செலவளிப்பதைக் கடமையாக்கியுள்ளது. எனவே பெண்பிள்ளைக்குத் தந்தையும், தாய்க்கு பருவமடைந்த வசதியுள்ள மகனும், மனைவிக்கு கணவனும் செலவு செய்தல் அவசியமாகும்.

20. மரணம் ஒரு நிரந்தரமான அழிவல்ல, மாறாக அது செயல் உலகிலிருந்து கூலி வழங்கும் உலகிற்கான ஒரு நகர்வாகும். மரணம் உடல், உயிர் இரண்டையும் ஆட்கொள்கின்றது. உயிரின் மரணம் என்பது அவ்வுயிர் உடலை விட்டும் பிரிவதாகும். பின்பு மறுமையில் மீளெழுப்பட்டதும் அதே உடலுக்குஅது மீண்டுவிடும். மரணத்தின் பின் அவ் உயிர் இன்னொரு உடலுக்கு நகர மாட்டாது, இவ்வுலகிலேயே பிறிதொரு உடலில் மறு ஜென்மமெடுக்கவும் மாட்டாது.
21. இறைநம்பிக்கையின் பிரதான அம்சங்களை விசுவாசிக்கும் படி இஸ்லாம் அழைக்கின்றது. அவை : அல்லாஹ்வை விசுவாசித்தல், அவனது வானவர்களை விசுவாசித்தல், தௌராத், இன்ஜீல், ஸபூர்- (இவை மாற்றப்பட முன்னால்), குர்ஆன் போன்ற வேதங்களை விசுவாசித்தல், இறுதித் தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கடைசி தூதர்என்பது உட்பட அனைத்து நபிமார்கள், இறைத்தூதர்களை விசுவாசித்தல், மறுமை நாளை விசுவாசித்தல், விதியை விசுவாசித்தல். மறுமையில்லாமல் இவ்வுலக வாழ்க்கைதான் இறுதி முடிவென்றால் வாழ்க்கை வெறும் வீணாகவும், விளையாட்டாகவும் தான் இருக்கும் என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.
22. நபிமார்கள் தாம் எத்திவைக்கும் பிரச்சாரத்தில் தவறிழைக்க மாட்டார்கள். அதேபோன்று பகுத்தறிவுக்கோ, நல்ல பண்பாடுகளுக்கோ முரண்பாடாக நடப்பதிலிருந்தும் பாதுகாக்கப்பட்டவர்கள். அல்லாஹ்வுடைய கட்டளைகளை மக்களுக்கு எத்திவைக்க அவர்களே நியமிக்கப்பட்டுள்ளனர். நபிமார்களுக்கு அல்லாஹ்வின் பரிபாலனத் தன்மையிலோ, இறைத்தன்மையிலோ எவ்விதப் பங்குமில்லை. மாறாக அல்லாஹ்அவர்களுக்கு தனது தூதுத்துவம் மூலம் இறைச்செய்தியை அறிவிக்கின்றான் என்பதைத் தவிர அவர்களும் ஏனையோரைப் போன்ற மனிதர்கள்தான்.
23. இஸ்லாம் பிரதான அடிப்படை வணக்கங்கள் மூலம் அல்லாஹ்வை மாத்திரம் வணங்குவதன் பால் அழைக்கின்றது. அவை : 1.தொழுகை; இது தினமும் ஐவேளை நிறைவேற்றப்படும். நிலை, ருகூஃ, ஸுஜுத், அல்லாஹ்வை நினைவுகூர்தல், பிரார்த்தனை அனைத்தையும் உள்ளடக்கியுள்ள ஒரு வணக்கமாகும். வறியவர், செல்வந்தர், தலைவர், பிரஜை அனைவரும் ஒரே வரிசையில் நின்று தொழுகை நிறைவேற்றுவதால் இன, நிற, தராதர வேறுபாடுகள் நீங்குகின்றன. 2. ஸகாத், இது அல்லாஹ் விதித்த நிபந்தனைகள், அளவீடுகளுக்கமைய செல்வந்தர்கள் ஏழைகள் மற்றும் தேவையுடையவர்களுக்கு வருடத்தில் ஒரு தடவை வழங்க வேண்டிய சிறிய ஒரு தொகைப்பணமாகும். 3. நோன்பு, இது ரமழான் மாதத்தில் பகல்வேளையில் குறிப்பிட்ட சில செயல்களைத் தவிர்ந்து கொள்ளல். இது உள்ளத்தில் கட்டுப்பாடு, பொறுமை ஆகியவற்றை வளர்க்கின்றது. 4. ஹஜ், இது உடல், பொருளாதார ரீதியில் சக்திபெற்ற ஒருவர் வாழ்நாளில் ஒரு தடவை புனித மக்காச் சென்று குறிப்பிட்ட சில வணக்கங்களை நிறைவேற்றுவதாகும். இந்த ஹஜ் வணக்கத்திலும் அல்லாஹ்வை முன்னோக்குவதில் அனைத்து வர்க்கத்தினரும் சமமாகவே இருப்பதுடன் பிரிவினை, தராதர வேற்றுமைகள் நீங்கி விடுகின்றன.
24. இஸ்லாத்தில் வணக்க வழிபாடுகள் தனித்து விளங்குவதற்கான பிரதான அடையாளம் என்னவெனில் அவ்வணக்கங்களின் செயல்முறைகள், நிறைவேற்றும் நேரங்கள், நிபந்தனைகள் அனைத்தும் அல்லாஹ் நிர்ணயித்து, அவனது தூதர் எத்திவைத்தவையாகும். அவற்றில் இன்று வரை கூட்டல், குறைத்தல் மூலம் எவ்வித மனிதத் தலையீடுகளும் இல்லை. இப்பிரதான வணக்கங்களின் பால் அனைத்து நபிமார்களும் அழைப்பு விடுத்துள்ளனர்.
25. இஸ்லாத்தின் இறைத்தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இஸ்மாஈல் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் சந்ததியில் தோன்றிய அப்துல்லாஹ்வின் புதல்வர் ஆவார். கி. பி. 571ம் ஆண்டு மக்காவில் பிறந்து, அங்கேயே நபியாகவும் அனுப்பப்பட்டு, மதீனாவிற்கு இடம்பெயர்ந்து சென்றார்கள். சிலைவணக்க வழிபாடுகளில் தனது சமூகத்துடன் பங்கெடுக்கவில்லை, எனினும் நல்ல பணிகளில் அவர்களுடன் பங்கெடுப்பார்கள். நபித்துவத்திற்கு முன்னரே நற்குணங்களுடையவராகத் திகழ்ந்தார்கள். அச்சமூகம் இவர்களை நம்பிக்கையாளர் என்று கூட அழைத்தனர். அன்னாரது 40வது வயதில் அல்லாஹ் நபியாக அனுப்பி, பாரிய அற்புதங்களைக் கொடுத்து அன்னாரை வலுப்படுத்தினான். அவற்றில் மிக மகத்தானது அல்குர்ஆனாகும். இதுதான் நபிமார்களுக்கு வழங்கப்பட்ட அத்தாட்சிகளில் மகத்தானதும், இன்றுவரை நிலைத்திருப்பதுமாகும். அல்லாஹ் அவனது மார்க்கத்தைப் பூரணப்படுத்திய பின், நபியவர்களும் அதனைப் பூரணமாக எத்திவைத்ததும் தனது 63வது வயதில் மதீனாவில் மரணித்து அங்கேயே அடக்கம் செய்யப்பட்டார்கள். முஹம்மத் ஸல்லல்லாஹு

அலைஹி வஸல்லம் அவர்கள் தான் அனைத்து நபிமார்களுக்கும் முத்திரையாக உள்ளார்கள். சிலைவணக்கம், இறைநிராகரிப்பு, அறியாமை போன்ற இருள்களிலிருந்து ஓரிறைக் கொள்கை, இறைநம்பிக்கையின்பால் மக்களை வெளியேற்றுவதற்காக அல்லாஹ் அன்னாருக்கு நேர்வழியையும், சத்திய மார்க்கத்தையும் கொடுத்து அனுப்பினான். தனது அனுமதியின் பிரகாரம்தான் அன்னாரை தன்பால் அழைப்பதற்கு அனுப்பியதாக அவனே சாட்சி கூறியுள்ளான்.

26. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கொண்டு வந்த இஸ்லாமிய சட்டதிட்டங்கள்தான் இறுதி இறைத்தூதாகவும், இறைச் சட்டமாகவும் உள்ளது. இது பரிபூரணமானதாகவும், மக்களின் ஈருலகத் தேவைகளுக்கு உகந்ததாகவும் உள்ளது. முதற்தரமாக இது மக்களின் மார்க்கம், உயிர், புத்தி, சந்ததி என்பவற்றைப் பாதுகாக்கின்றது. முன்னைய ஷரீஅத் சட்டங்கள் ஒன்றையொன்று மாற்றியதைப் போன்று இந்த ஷரீஅத் முன்னைய அனைத்து ஷரீஅத்தையும் மாற்றியமைத்து விட்டது.

27. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கொண்டு வந்த இஸ்லாத்தைத் தவிர வேறு எந்த மார்க்கத்தையும் அல்லாஹ் ஏற்கமாட்டான். இஸ்லாம் அல்லாத மார்க்கத்தை யார் பின்பற்றுகின்றாரோ அது அவரிடம் இருந்து ஏற்கப்பட மாட்டாது.

28. புனித அல்குர்ஆன் அல்லாஹ் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இறக்கிய வேதமாகும். இது படைத்துப் பரிபாலிக்கும் இரட்சகனின் பேச்சாகும். இது போன்ற ஒன்றையோ, அல்லது இதிலுள்ள அத்தியாயத்தைப் போன்ற ஒன்றையோ கொண்டு வரும்படி அல்லாஹ் மனிதர்களுக்கும் ஜின்களுக்கும் சவால் விட்டுள்ளான். அச்சவால் இன்றுவரை இருந்து கொண்டுதான் உள்ளது. பல மில்லியன் மக்கள் தடுமாறிய பல முக்கிய வினாக்களுக்கு அல்குர்ஆன் பதிலளிக்கின்றது. இதன் மூலமொழி அரபியிலேயே ஓர் எழுத்துக்கூட குறையாமல் இன்றுவரை இது பாதுகாக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றது. இது அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டுள்ளது. இது மகத்தான அற்புதமான ஒரு வேதமாகும். இதனையோ, இதன் மொழிபெயர்ப்பையோ வாசிக்க மிக உகந்த நூலாகும். அதேபோன்று தான் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய வழிமுறை, போதனைகள், சரிதை, அனைத்தும் நம்பத்தகுந்த உறுதியான அறிவிப்பாளர் வரிசைத் தொடர் மூலம் அறிவிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டுள்ளன. அவை முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பேசிய அரபுமொழியிலேயே அச்சிடப்பட்டும், பல மொழிகளுக்கு மொழிமாற்றம் செய்யப்பட்டும் உள்ளன. அல்குர்ஆனும் நபிமொழிகளும் (ஸூன்னா) தான் இஸ்லாமியப் போதனைகள், சட்டதிட்டங்களின் பிரதான மூலாதாரமாகும். இஸ்லாமியப் போதனைகள் முஸ்லிம்களின் செயற்பாட்டிலிருந்து எடுக்கப்படமாட்டாது. மாறாக அல்குர்ஆன், ஸுன்னாவிலிருந்துதான் எடுக்கப்படுகின்றன.

29. பெற்றோருக்கு- அவர்கள் முஸ்லிமல்லாதவர்களாக இருந்தாலும்- உபகாரம் செய்யுமாறும், பிள்ளைகளை சிறந்த முறையில் வளர்க்குமாறும் இஸ்லாம் ஏவுகின்றது.

30. எதிரிகளுடன் கூட இஸ்லாம் சொல், செயல்களில் நீதமாக நடக்கப் பணிக்கின்றது.

31. அனைத்துப் படைப்பினங்களுக்கும் உபகாரம் செய்யுமாறு இஸ்லாம் ஏவுவதுடன், நல்ல குணங்கள், அழகிய செயற்பாடுகளின் பக்கமும் அழைக்கின்றது.

32.இஸ்லாம் உண்மை, அமானிதங்களை நிறைவேற்றல், பத்திணித்தனம், வெட்கம், வீரம், தான, தர்மம், தேவையுடையோருக்கு உதவுதல், துயர் நீக்குதல், பசித்தவருக்கு உணவளித்தல், அயலவர்களுடன் அழகாக நடத்தல், உறவுகளுடன் சேர்ந்து நடத்தல், ஜீவகாருண்யம் போன்ற பல நல்ல பண்புகளை ஏவுகின்றது.

33. உணவு, பானங்களில் இஸ்லாம் சுத்தமான, முறையாகப் பெற்றுக்கொள்ளப்பட்டதை அனுமதித்துள்ளது. உள்ளம், உடல், உறைவிடம் அனைத்தையும் சுத்தமாக வைக்கும் படி ஏவுகின்றது. இதனால்தான் ஏனைய நபிமார்கள் ஏவியதைப் போன்று திருமணத்தை இஸ்லாமும் அனுமதித்துள்ளது. அவர்கள் அனைத்து நல்லவற்றையும் ஏவுவார்கள்.

34. அல்லாஹ்விற்கு இணைவைத்தல், இறைநிராகரிப்பு, சிலை வணக்கம், அல்லாஹ்வின் மீது இட்டுக்கட்டுதல், குழந்தைக் கொலை, எக்குற்றமும் செய்யாதவர்களைக் கொலைசெய்தல், குழப்பம் விளைவித்தல் (அச்சுறுத்தல், மன்கொள்ளை), சூனியம், உள்ரங்க மற்றும் வெளிரங்க மானக்கேடானவை, விபச்சாரம், ஓரினச்சேர்க்கை போன்ற அடிப்படைப் பாவங்களை இஸ்லாம் தடை செய்துள்ளது. மேலும் வட்டி, இறந்த பிராணிகள், சிலைகளுக்காக அறுக்கப்பட்டவை, பன்றி இறைச்சி இன்னும் அனைத்து வித அசுத்தங்களையும் உண்ணுவதைத் தடுத்துள்ளது. மேலும் அநாதைகளின் சொத்துக்களை சுரண்டுதல், அளவை நிறுவையில் மோசடி,

உறவினர்களைத் துண்டித்து நடத்தல் போன்ற பாவங்களையும் தடுத்துள்ளது. இப்பாவங்களைத் தடுப்பதில் அனைத்து நபிமார்களும் ஏகோபித்துள்ளனர்.
35. பொய், மோசடி, ஒப்பந்தங்களை முறித்தல், துரோகம், ஏமாற்று, பொறாமை, தீய தந்திரம், திருட்டு, அத்துமீறல், அநீதி போன்ற அனைத்து தீய குணங்களையும் இஸ்லாம் தடுக்கின்றது.
36. வட்டி, பாதிப்பு, ஏமாற்று, அநீதி, மோசடி கலந்த கொடுக்கல் வாங்கலையும், தனிநபர் மற்றும் சமூகத்தைப் பேரழிவிற்கோ, பெரும் பாதிப்பிற்கோ இட்டுச்செல்லும் வியாபார முறைகளையும் இஸ்லாம் தடுக்கின்றது.
இஸ்லாம் புத்தியைப் பாதுகாத்து, மதுப் பாவனை போன்ற அதனைப் பேதலிக்கக் கூடிய அனைத்தையும் தடுத்துள்ளது. புத்தியின் தரத்தை உயர்த்தி, சட்டதிட்டங்கள் விதியாவதற்கான பிராதன நிபந்தனையாக அதனை வைத்துள்ளதுடன், சிலைவணக்கம், மூடநம்பிக்கைகளை விட்டும் அதனை விடுவித்துள்ளது. இஸ்லாத்தில் குறிப்பிட்ட ஒரு சாரார்க்கென எந்த இரகசியமோ, சட்டதிட்டமோ இல்லை. இதன் அனைத்து சட்டதிட்டங்களும் சரியான அறிவுக்கு எட்டக்கூடியனவாகவே உள்ளன. அவை நீதத்திற்கும், ஞானத்திற்கும் உடன்பட்டதாகவே இருக்கின்றன.
38. அசத்திய மதங்களைப் பின்பற்றுவோர் அவற்றிலுள்ள முரண்பாடுகள், பகுத்தறிவு ஏற்றுக்கொள்ளாத விடயங்களை முழுமையாக விளங்கிக் கொள்ளாவிடன் அம்மதங்களின் போதகர்கள் இம்மக்களிடம் மதம் என்பது பகுத்தறிவையும் தாண்டிய ஒன்று, மதத்தை முழுமையக விளங்குவதில் புத்திக்கு எப்பங்கும் இல்லை என்ற எண்ணத்தை விதைத்து விடுவார்கள். ஆனால் இஸ்லாமோ புத்திக்கு சரியான பாதையை ஒளிமயமாக்கிக் கொடுக்கும் பிரகாசமாகவே மதத்தைப் பார்க்கின்றது. மனிதர்கள் பகுத்தறிவைத் துறந்து தம்மைப் பின்பற்ற வேண்டும் என்றே அசத்திய மதங்களைச் சார்ந்தோர் விரும்புகின்றனர். ஆனால் இஸ்லாமோ ஒவ்வொன்றையும் உரிய முறையில் அறிவதற்காக மனிதனிடம் அறிவுக்கண்ணைத் திறக்கவே விரும்புகின்றது.
39. இஸ்லாம் சரியான விஞ்ஞானத்தை மதிக்கிறது, மனோ இச்சைக்கு அப்பாற்பட்ட அறிவியல் ஆய்வை ஊக்கப்படுத்துகின்றது. எம்மிலும், எம்மைச் சூழவுள்ள பிரபஞ்சத்திலும் நோட்டமிட்டு, ஆய்வுசெய்ய அழைக்கின்றது. மேற்கண்ட அமைப்பில் விஞ்ஞானத்தில் எட்டப்படும் சரியான அறிவியல் முடிவுகள் ஒரு போதும் இஸ்லாத்திற்கு முரண்படமாட்டாது.
40.அல்லாஹ்வை விசுவாசித்து, அவனுக்குக் கட்டுப்பட்டு, அவனது தூதர்களை உண்மைப் படுத்தியவர்களிடம் இருந்து மாத்திரமே அல்லாஹ் நற்செயல்களை ஏற்று, அதற்கு மறுமையில் கூலி வழங்குவான். வணக்கங்களில் அவன் மார்க்கமாக அறிமுகப்படுத்தியதை மாத்திரமே ஏற்பான். மனிதன் அல்லாஹ்வை மறுத்துக் கொண்டு அவன் பிரதிபலன் தர வேண்டுமென எவ்வாறு எதிர் பார்க்கலாம்?. அனைத்து நபிமார்களையும் விசுவாசித்து முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் விசுவாசிக்கும் வரை அல்லாஹ் யாருடைய ஈமானையும் (விசுவாசம்) ஏற்க மாட்டான்.
41. அனைத்து இறைச்செய்திகளுடைய நோக்கமும் அந்த சத்தியமார்க்கம் மனிதனை உயர்நிலைக்குக் கொண்டு சென்று, படைத்துப் பரிபாலிக்கும் இரட்சகளுக்குத் தூய்மையான அடியானக மாறிடவும், பிறமனிதனுக்கோ, அற்பப்பொருளுக்கோ, மூடநம்பிக்கைக்கோ அடிமையாவதில் இருந்து விடுதலை அளிப்பதாகும். நீர் அவதானிப்பதைப் போன்று தான் இஸ்லாம் ஒரு போதும் தனிநபர்ளை பரிசுத்தப்படுத்தி, அவர்களின் தரத்தைவிட உயர்த்தி, இரட்சகர்களாக, கடவுள்களாக ஆக்கிவிடுவதில்லை.
42. இஸ்லாத்தில் அல்லாஹ் பாவமீட்சி பெறுவதை மார்க்கமாக்கி இருக்கின்றான். இது மனிதன் பாவங்களை களைந்து, தனது இரட்சகனிடம் மீள்வதைக் குறிக்கின்றது. இஸ்லாம் அதற்கு முன்னுள்ள பாவங்களை அழித்து விடுகின்றது. பாவமீட்சி (தௌபா) அதற்கு முன்னுள்ள பாவங்களை அழித்து விடுகின்றது. எனவே பிற மனிதர்கள் முன்னிலையில் தனது பாவங்களை ஒப்புவிக்க எத்தேவையும் இல்லை.
43. இஸ்லாத்தில் அல்லாஹ்வுக்கும் மனிதனுக்கும் இடையிலான தொடர்பு நேரடியானதாகும். இருவருக்கும் இடையில் மத்திமமோ,தரகர்த் தேவையோ இராது. மனிதனை இறைவனாகவோ, அல்லது அவனது பரிபாலணம், இறைமையில் பங்குதாரர்களாகவோ ஆக்குவதை இஸ்லாம் அறவே தடுக்கின்றது.
44. இந்நூலின் இறுதியில், வெவ்வேறு கால மக்கள், இனங்கள் மற்றும் நாடுகள், ஏன் ஒட்டுமொத்த மனித சமூகமும் கூட அவர்களின் கருத்துக்கள் மற்றும் நோக்கங்களில் வேறுபடுகின்றன, அவற்றின் சூழல்களிலும் செயல்களிலும் வேறுபடுகின்றன, எனவே அச்சமூகத்தை வழிநடத்த வேண்டிய அவசியம் உள்ளது, அதை ஒன்றாக இணைக்கும் ஒரு அமைப்பு மற்றும் அதைப் பாதுகாக்கும் ஒரு ஆட்சியாளர் அவசியமாகின்றது

என்பதை நாம் நினைவுகூர்வோம். அப்பொறுப்பை அல்லாஹ்வின் இறைச்செய்தி மூலம் இறைத்தூதர்கள் மேற்கொண்டு வந்தனர். மக்களுக்கு நல்ல, சரியான வழியினைக் காண்பித்தனர். அல்லாஹ்வின் சட்டத்தின் கீழ் அவர்களை ஒன்று சேர்த்தனர். சத்தியத்தைக் கொண்டு அவர்களுக்கு மத்தியில் தீர்ப்பு வழங்கினர். அச்சமூகம் இத்தூதர்களுக்கு பதிலளித்த அளவுக்கேற்பவும், இறைத்தூதுகளுக்கு நெருக்கமான காலத்தின் அளவுக்கேற்பவும் அம்மக்களுடைய நிலைகள் சீரானதாக இருந்தது. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடை தூதுத்துவத்தின் மூலம் அல்லாஹ் இறைத் தூதுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தான். இவ் இறுதித் தூதினை நிலைத்திருக்கச் செய்து, மக்களுக்கு இதனை நேர்வழியாகவும், கருணையாகவும், ஒளியாகவும், அல்லாஹ்விடம் செல்லும் வழியாகவும் ஆக்கி வைத்துள்ளான்.

45. இதனால் மனிதா! உன்னை பழைய மரபுகள், பழக்க வழக்கங்களை விட்டுவிட்டு, அல்லாஹ்வுக்காக உண்மையாக நிலைத்திருக்கவும், மரணத்தின் பின் நீ உன் இரட்சகனிடம் தான் மீள்வாய் என்பதை அறிந்து கொள்ளவும், உன்னிலும் உனது சுற்றுச்சூழலிலும் (உள்ள அல்லாஹ்வின் வல்லமைகள் பற்றி) சிந்திக்கவும் அழைக்கிறேன். எனவே நீ இஸ்லாத்தை ஏற்றுவிடு, ஈருலகிலும் வெற்றியடைவாய். இஸ்லாத்தினுள் நுழைய விரும்பினால் நீ செய்ய வேண்டியது இவை மாத்திரம்தான் : உண்மையாக வணங்கப்படத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை, முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அல்லாஹ்வுடைய தூதர் என்பதை ஏற்று சாட்சி கூறுதல், அவனன்றி வணங்கப்படும் அத்துனை கடவுள்களையும் மறுத்தல், மறுமையில் மண்ணறையிலுள்ளவர்களை நிச்சயமாக அல்லாஹ் எழுப்புவான், விசாரணை, கூலி வழங்கல் என்பன உண்மை என நம்பிக்கை கொள்ளல். இவற்றை நீ ஏற்றால் நீ முஸ்லிமாக மாறிவிட்டாய். அதன் பின் தொழுகை, ஸகாத், நோன்பு, வசதியிருந்தால் ஹஜ் ஆகியவற்றை அல்லாஹ் காட்டிய பிரகாரம் நிறைவேற்றி அவனை வணங்குதல் வேண்டும்.